# உயிர் துடிக்கும் ஓசை நீ

அமுதவல்லி கல்யாணசுந்தரம்



# உயிர் துடிக்கும் ஓசை நீ!

## 1

'குள்ள குள்ளனை, குண்டு வயிறனை

வெள்ளிக் கொம்பனை விநாயகனை தொழுவோம்...'

என்று தன் நெற்றியில் பிஞ்சு விரல்களால் லேசாகக் குட்டி, அங்கே இருந்த பெரிய பித்தளை விநாயகர் சிலையில் முன்பு தோப்புக் கரணம் போட்டபடி, தன் மழலை மொழியில் விநாயகர் துதியை பாடிய பிருந்தாவின் அழகைக் கண்கள் பனிக்கப் பார்த்துக் கொண்டு இருந்தாள் வானதி.

வானதி இருபத்தி மூன்று வயது நிரம்பிய பூம்பாவை. அழகு நிலவென இருந்த முகத்தை சோகம் மெல்லிய

மேகமாக மூடி முகத்தின் அழகை குறைக்க முயன்று தோற்றுக் கொண்டு இருந்தது.

வானதியின் கண்கள் எதிரே இருந்த விநாயகர் விக்கிரகத்தைத் தாண்டி, முழு பக்க சுவரில் முக்கால் வாசியை மறைத்து தன் செல்வச் செழிப்பைப் பறை சாற்றி இருந்த பெல்ஜியம் கண்ணாடி வழியாக தூரத்தில் தெரிந்த கடலை வெறித்தது.

பெசண்ட் நகரில் கடற்கரைச் சாலையில் இருந்த பங்களாவில் முதல் மாடியில் இருந்த அந்த ஹாலின் அழகை வர்ணிக்க வார்த்தைகளைத் தேட வேண்டும்.

போக்குவரத்து இல்லாத இரவு நேரத்தில், பௌர்ணமி இரவில், கடற்கரையில் வெள்ளை நுரையுடன் ஓடி வரும் அலைகளைப் பார்ப்பது மட்டும் இல்லாமல், அதன் ஆர வாரத்தை கேட்கவும் கூடிய தூரத்தில் இருந்தது அந்த மாளிகை.

'தாயின் மடியில்...' என்ற பெயரில் நடைபெறும் இந்த மழலையர் பள்ளி அவளின் துயரத்தைத் துடைக்க முயன்று கொண்டு இருக்கிறது. அது வருமானத்துக்கு உதவுகிறது என்பதைவிட, மன ஆறுதலுக்கு உதவுகிறது. இரண்டு வயது பிருந்தா உள்ளிட்ட அதே வயதில், கொஞ்சம் முன்னும் பின்னுமாக இருக்கக் கூடிய எட்டு குழந்தைகள் அங்கே இருந்தனர்.

இறைவணக்கம் முடிந்ததும், அந்த பெரிய ஹாலில் சிதறி தங்களுக்குப் பிடித்த வேலைகளில் ஈடுபட்டனர். சிலர் படம் வரைய, சிலர் பந்தின் பின்னால் ஓட சிலர் காய்கறிகள் பழங்களின் படங்களைத் தொட்டுத் தடவிக் கொண்டு இருந்தனர். அவர்களை புன்னகையுடன்



பார்த்துக் கொண்டு இருந்தவளின் கவனத்தை 'வானதி..' என்ற மென்மையான கஸ்தூரியின் குரல் கலைத்தது.

''உன்னைப் பார்க்க விவேக் நாராயணன் என்று ஒருத்தர் வந்து இருக்கிறார். கீழே உட்கார வச்சுட்டு வந்து இருக்கேன்.''

''கேள்விப்பட்ட பெயரா இல்லையே? யார் என்று கேட்டீங்களா?''

''டி.வி. காரங்களா இருக்கும் என்று நினைக்கிறேன். கழுத்தில் கேமரா இருந்தது.''

''சரி இதோ வருகிறேன் என்று சொல்லுங்க'' என்று அவரை அனுப்பி விட்டு, தன் அறைக்குச் சென்று, சில நிமிடங்கள் கண்ணாடி முன் நின்று இலக்கில்லாமல் வெறித்து விட்டு, முகத்தில் ஒரு புன்னகையை பூசியபடி வெளியே வந்த வானதி திகைத்தாள்.

அந்த ஹாலின் ஒரு பக்க கண்ணாடி சுவரில் சாய்ந்து நின்று கடற்கரையை பார்த்துக் கொண்டு இருந்தான் அவன். ஆறு அடிக்கும் அதிகமாக வளர்ந்து இருப் பானோ?

அடர்ந்த நீல நிற ஜீன்ஸ். டக் பண்ணாத பளீர் வெள்ளை ஷார்ட் ஸ்லீவ் ஷர்ட். கழுத்தில் விலை உயர்ந்த கேமரா. அழுத்தி வாரினாலும் படிய மறுத்து சிலும்பி நிற்கும் ஆழ்ந்த கருப்பில் ஆன கேசம். அவன் நின்ற தோற்றம் மனத்தில் பதிந்தது. ஆனாலும் அவள் அழைக்காமலே அவனாக இந்த மழலையர் பள்ளிக்கு வந்த விதம் எரிச்சலை மூட்டியது.

''ஹலோ மிஸ்டர், யார் நீங்க? இங்கே என்ன பண்றீங்க?''

“உங்க அம்மா கேட்ட கேள்விகளுக்கு பதில் சொல்லிய பிறகு, அடிப்படைக் கேள்வியான யார் நீ-ல இருந்து விசாரணையை ஆரம்பிக்கறீங்க? வீட்டுக்கு வரும் விருந்தாளியை இப்படி தான் வரவேற்பீங்களா?” என்றவன் குரலில் கடுமை இருந்தது.

“விருந்தோம்பல் நாகரீகம் பற்றி இவ்வளவு பேசும் நபர், வீட்டு மனிதர்கள் இருக்கும் அறைக்குள் அழைப்பும் அனுமதியும் இன்றி வருவானேன்?” என்ற எதிர் கேள்வி வானதியிடம் இருந்து சுள்ளென்று வந்தது.

“நான் சிவில் இஞ்சினியர் இல்லை தான்! ஆனால் எனக்குத் தெரிந்த கட்டிடக் கலை வரலாற்றில், இப்படி முப்பதடி நீளமும் பதினைந்து அடி அகலமும் இருக்கும். இந்த மாதிரியான ஒரு இடத்தை, ‘அறை’ என்ற விளக்கத்தில் வைப்பது ரொம்ப சிரமம்” என்றவன் கண்கள் அந்த ஹாலின் விஸ்தாரத்தை அளந்து காட்ட அதன் பிரமாண்டம் வானதிக்கு இன்னும் கூடித் தெரிந்தது.

“மிஸ்டர்...”

“விவேக்! விவேக் நாராயணன், உங்க அம்மா சொல்லவில்லை?”

“நீங்க யாராக இருந்தாலும் சரி, கீழே ஹால் சோபாவில் போய் உட்காருங்க. நான் அங்கே வந்து பேசுகிறேன்” என்று கை காட்ட அவன் சின்ன தோள் குலுக்கலுடன், கீழே சென்றான்.

யார் இவன்? சொந்தக்காரனாக இருப்பானோ? இதற்கு முன்னால் பார்த்த நினைவே இல்லையே? இப்படி திமிராகப் பேசுகிறானே? எதற்காக வந்து



இருப்பான்? அவள் தன்னை சமப்படுத்த எடுத்துக் கொண்ட சில நிமிடங்களில், கஸ்தூரி மீண்டும் வந்தார்.

“அவர் மேலே வந்ததை நான் கவனிக்கலை வானதி. நான் அனுப்பலை. கொஞ்சம் பார்த்துப் பேசு” என்று அம்மா மன்னிப்பு கோர, அவள் எரிச்சலை மறைக்காத பாவனையில் தலை அசைத்தாள்.

அவளின் வருகையை பார்த்தபடி அமர்ந்து இருந்தவன் செதுக்கி வைத்த கருங்கல் சிலையாக அதே இடத்தில் இருக்க, அவள் கரம் குவித்தாள். “வணக்கம். நான் வானதி. நீங்க என்ன விஷயமா பார்க்க வந்து இருக்கீங்க என்று சீக்கிரமா, சுருக்கமா சொன்னீங்க என்றால் ரொம்ப நல்லா இருக்கும்.”

“நீங்க எங்கேயாவது வெளியே போறீங்களா?”

“இல்லை.”

“மழலையர் பள்ளியைப் பார்த்துக் கொள்ள ஆயா இருக்காங்க தானே?”

“ஆமா!”

“என்னைத் தவிர வேறு யாராவது விருந்தினர் வந்து இருக்காங்களா?”

“இது உங்களுக்குத் தேவை இல்லாத விஷயம். அதை ஏன் நீங்க கேட்கறீங்க?”

“எனக்காக மதிய உணவு உங்க கையால் சமைத்து போடுகிறேன் என்று எனக்கு வாக்கு கொடுத்து இருக்கீங்களா?” என்ற கேள்வியில் எரிச்சலுடன் எழுந்து விட்டாள்.

“மிஸ்டர்...”

"கூல் டவுன் வானதி எந்த வேலையுமே இல்லாமல் வெட்டியா இருக்கும். நீங்க சீக்கிரம் சொல்லு. சீக்கிரம் சொல்லு" என்று நச்சரித்தால், ஒரு செய்தி சானலில், இரவு ஒன்பது மணி செய்தி விவாதத்தை நடத்தும் எனக்கு எவ்வளவு வேலை இருக்கும் என்று யோசிச்சு பாருங்க?" என்று சொல்ல வானதியின் உள்ளம் கொதி நிலையை அடைந்தது. அவளின் சிவந்த முகத்தைப் பார்த்து 'அதிகம் பேசி விட்டோமோ?' என்று ஒரு கணம் நினைத்தாலும் உடனே பாவனையை மாற்றிக் கொண்டான்.

"ஹேய் ரிலாக்ஸ்! எதுக்கு இவ்வளவு கோபம்?" என்று சொல்லியும் அவளின் வேக மூச்சுக்கள் அடங்க வில்லை.

"ஆன்ட்டி. ஏதாவது குடிக்க சீக்கிரம் எடுத்துட்டு வாங்க" என்ற பதட்டமான விவேக்கின் குரலில் கஸ்தூரி வேகமாக வெளியே வர, வானதியின் கோபம் மேலும் கூடியது.

"நீங்க தொலைக்காட்சியில், செய்தித் துறையில் இருந்தால், யார் வீட்டிலும் எந்த நேரத்திலும் நுழைந்து லைவ் ஷோ நடத்த உங்களுக்கு அதிகாரம் இல்லை மிஸ்டர் விவேக். இது என் வீடு. இங்கே வந்து என் அம்மாவை அதிகாரம் பண்ணும் உரிமை உங்களுக்கு யார் கொடுத்தது? ஏதாவது விஷயம் இருந்தால் சொல்லுங்க. அப்படி இல்லை என்றால் இடத்தைக் காலி பண்ணுங்க" என்று மிரட்டலாகச் சொல்ல அவன் வலது உதட்டோரம் சுருங்கி விரிந்ததைத் தவிர அவன் முகத்தில் பிரதிபலிப்பு எதுவும் இல்லை.



சிரிக்கின்றானா? அதுவும் நக்கலாக? யார் இவன்? இங்கே எதற்கு வந்து இருக்கிறான் என்ற கேள்வி மூளையைப் பிராண்டியது.

"நீங்க உங்க எல்லையை அடிக்கடித் தாண்டுறீங்க. யார் நீங்க?"

"உங்களுக்கு என்ன அம்னீசியாவா? அடிக்கடி இதே கேள்வியை கேட்கறீங்க. என் பேர் விவேக். விவேக் நாராயணன். பாரத் தர்ஷன் தொலைக்காட்சியில் 'நியூஸ் அட் 9' என்ற செய்தி விவாத நிகழ்ச்சியை ஆங்கிலத்தில் தொகுத்து வழங்கிக் கொண்டு இருந்தேன். நீங்க பார்த்ததில்லையா?"

"நான் ஹிந்தி ப்ரோக்ராம் பார்ப்பது இல்லை."

"நான் தொகுத்து வழங்கியது ஆங்கிலச் செய்தி."

"நான் தொலைக்காட்சி பார்ப்பதில்லை. அதிலும் செய்திகள் நிச்சயம் பார்க்க மாட்டேன். தப்பித் தவறிப் பார்த்தாலும் அதில் உங்க முகம் வந்து விட்டால் உடனே தொலைக்காட்சி பெட்டியை அணைத்து விடுவேன். போதுமா?" என்று எரிச்சலுடன் அவள் சொல்ல அவன் அதை ரசித்துச் சிரித்தான்.

"துன்பங்கள் ஒன்றுடன் நிற்பதில்லை என்பது இதுதான் போல. உங்க துன்பமும் தொடர்ந்து வரு கிறது."

"வாட் டூ யூ மீன்..."

"என் முகத்திலேயே விழிக்கக் கூடாது என்று நினைக்கும் உங்க எண்ணம் இந்த ஜென்மத்தில் நிறை வேறப் போவதில்லை."

"ஏன்?"

"ஏன் என்றால் என்ன பதில் சொல்வது? ஒவ்வொரு நாளையும் நீ என் முகத்தில் குட்மார்னிங் சொல்லி விழித்து, இரவில் குட் நைட் சொல்லி படுக்கப் போகும் வரை என் முகத்தைத் தவிர்க்க முடியாது என்று சொல்கிறேன்..."

"ஹலோ! முதலில் மரியாதையா பேசுங்க. நீங்க என்ன கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில் இருந்து தப்பித்து வந்த நோயாளியா?" என்று கேட்க அவன் அதையும் ரசித்து சிரித்தான்.

"நல்ல கவுண்டர் அட்டாக் இது. உன்னை... ப்ச்! சாரி... உங்களைப் பார்த்தால் முகத்தில் ஒரு சோர்வு தெரியுது. இன்னும் சாப்பிடலை போல? மேலே பேசுவதற்கு முன்னால் வயிற்றுக்கு ஈய வேண்டும் வானதி."

"எங்க வீட்டில் நான் சாப்பிட நீங்கள் என்ன ரெகமென்டேஷன் பண்ணுவது?"

"இல்லை மிஸ் வானதி, உங்க வீட்டில் நான் சாப்பிட உங்களை பரிந்துரை செய்ய சொல்லிக் கேட்கறேன். உங்களிடம் பதிலுக்கு பதில் பேச வேண்டும் என்றால், டிபன் உள்ளே போனால் தான் வேலைக்கு ஆகும். வாங்க முதலில் சாப்பிடலாம். அப்புறம் விவாதத்தைத் தொடரலாம்" என்று நடந்தவனை அவனின் பாக்கெட்டில் இருந்த அலைபேசி அழைத்தது.

'அம்மா இங்கே வா வா ஆசை முத்தம் தா தா' என்ற அந்த பாடல் ஒலி அவளை அசைத்துப் பார்த்தது! அந்த ரிங் டோனில் திகைத்து அவனையே வெறித்துப்



பார்த்தாள் வானதி. இதென்ன மழலையர் பாட்டினை ரிங் டோனாக வைத்து இருக்கிறான்? யார் இவன் என்ற கேள்வி நூறாவது முறையாகத் தோன்றியது.

'எக்ஸ்கியூஸ் மீ' என்று அவளிடம் மன்னிப்பு கோரிய படி அதற்கு பதில் அளிக்க பக்கவாட்டு ஜன்னலின் அருகே சென்றவனை திகைப்புடன் பார்த்து நின்றாள் வானதி.

## 2

சரியாக சாப்பிடப் போகும் நேரத்தில் அம்மாவிடம் இருந்து வந்த அழைப்பைக் கண்டதும் விவேக்கிற்கு சிரிப்பு வந்தது 'குட்மார்னிங்மா, என்ன இவ்வளவு சீக்கிரம் போன் பண்ணிட்டீங்க?'' என்று விசாரிக்க எதிர் முனையில் கௌசல்யா சிரித்தார்.

''குரலில் ஏகப்பட்ட குதூகலம் இருக்கே விவேக்? மருமகள் செம கவனிப்போ?'' என்று கௌசல்யா விசாரிக்க, அவன் ஓரக்கண்ணால் வானதியை ஆராய்ந்தபடி பொங்கிய சிரிப்பை அடக்கினான்.

''ஆமா! உருட்டுக் கட்டை கவனிப்பு ஒன்று தான் பாக்கி. கொஞ்ச நேரம் போய் இருந்தால் அதையும் வாங்கி இருப்பேன்'' என்று சொல்ல கௌசல்யாவின் சிரிப்பு மேலும் பலமானது.

''பெரிய இவன் மாதிரி நானே பார்த்துக்கறேன் என்று சொன்னாய். உனக்கு வேணும்! நானே கூட வந்து

மரியாதையா அறிமுகப்படுத்தி இருந்தால், இயல்பாகப் பழகி இருப்பாள்.''

''நீங்க சொல்லி, உங்களுக்காக ஒரு பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்க முடியாது. அந்த பெண்ணுக்கு என்னைப் பிடிக்கணும். அதுவும் என்னை எனக்காக மட்டும் பிடிக்கணும். நான் பார்க்கிற வேலையோ, வேறு எந்த ஒரு விஷயமுமே என்னைக் கல்யாணம் பண்ண ஒரு தூண்டுகோலாக இருக்கக் கூடாது. அப்படி ஏதாவது ஒரு வெளி காரணியினால் என்னை...''

''ஷப்பா! டிவி.யில உன்னை வேலைக்குச் சேர்த்து விட்டாலும் விட்டேன். எப்ப பார்த்தாலும் கிடைச்சது மைக், என்று பக்கம் பக்கமா டயலாக் பேசுவதே உனக்கு வேலையா போச்சு. அவளைப் பார்த்துப் பேசினாயா இல்லையா?''

''நீங்க என்னை டி.வி. வேலைக்குச் சேர்த்து விட்டீங்களா? நல்ல ஜோக் இது. நான் மும்பை கிளம்பும் போது மூக்கால் அழுது வீட்டையும், கோவை மாநகரத்தையும், வெள்ளக் காடாக்கி விட்டு, இப்ப பேச்சை பாரேன்! மூன்று வருஷம் முன்பு நடந்ததை எல்லாம் நான் மறந்து இருப்பேன் என்று நினைத்தீர்களா? விவேக்குக்கு எந்த விஷயமும் மறக்காது. நான் வீட்டுக்குப் போன பிறகு கூப்பிடுகிறேன். அப்ப உங்க கேள்விகளை வச்சுக்கோங்க. இப்ப சமத்தா போனை. வைங்க பார்ப்போம்.''

''ஒரு நிமிஷம் இன்னும் வானதி வீட்டில் இருந்து கிளம்பலையா?''

''இன்னும் அரை மணி நேரம் ஆகும். அதுவரை என்னைத் தொந்தரவு பண்ண வேண்டாம்.''



''ஆமா! இவர் சிவ பூஜை பண்ணப் போகிறார். அதை நான் கரடியா வந்து கெடுக்கப் போகிறேன். வாங்கப் போறது உருட்டுக் கட்டையில அடி. இதில் நான் போன் பண்ணி காப்பாற்றினேன் என்று சொல்றதை விட்டுட்டு பேச்சை பாரேன்'' என்று அவர் நீட்ட அவன் சிரிப்போடு போனை வைத்தான்.

அம்மா என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று ஒவ்வொரு மகனும் ஏங்கக் கூடிய ஒரு தாய். அவனுடைய நட்பு வட்டாரத்தில் அவனுக்கு ஒரு ஹீரோ இமேஜ் உருவாகக் காரணம் கௌசல்யா.

பத்து வயது வரை தனக்கு சமமாக விளையாடுவார். சுவையாக சமைப்பார். மதிய உணவுக்கு நண்பர்களுக்கு இடை அடிதடி நடக்கும். பத்தில் இருந்து இருபது வரை அவன் கல்வியில் தேவையான அனைத்தையும் தேடித் தந்தார். உடலின் மாற்றங்களில் தந்தையை விட அனுசரணையாக இருந்தார்.

இருபதுக்குப் பிறகு நட்பு தொடர்கிறது. இந்த ஐந்து ஆண்டுகளில் அவன் மூன்று வேலை பார்த்து ராஜினாமா செய்து விட்டான். இலக்கில்லாமல் சுற்றாதே. ஒரு துறையைத் தேர்ந்தெடு.' என்று அப்பா சொன்னாலும், அம்மா சொன்னதில்லை. அவன் மேல் அவ்வளவு நம்பிக்கை! இப்போதும் வானதியைப் பற்றி கோடி காட்டி தன் விருப்பத்தைச் சொன்னது கௌசல்யா தான். ஆனால் முடிவு மகனிடம் விட்டு விட்டார்.

இங்கே வந்து, நிலவொளியில் பால்கனியில் நின்று சுடலை வெறித்துக் கொண்டு இருந்த வானதியைப் பார்த்த அடுத்த வினாடி, 'உன் எதிர்காலம் நான் தான்'

என்று அவன் முடிவு செய்து விட்டான். அம்மாவுடன் விவேக் கொஞ்சி கொண்டு இருந்தபோது உள்ளே கஸ்தூரியிடம் வானதி விசாரணை நடத்திக் கொண்டு இருந்தாள்.

''இவ்வளவு பழங்கள் இருக்கே? யார் கொண்டு வந்தா?''

''அந்த தம்பி தான் கொண்டு வந்தது...''

இவன் உரிமையாகப் பேசுவதைப் பார்த்தால் உறவு மாதிரி தோன்றுகிறது. அப்பா இறந்த வீட்டில் பார்த்ததாக நினைவில்லையே? அதற்கு வராமல் இருக்க முடியுமா? ஒரு வேளை வந்து நான் பார்க்கவில்லையா?

''அம்மா! அப்பா இறந்த போது இவன்... இவர்... வந்து இருந்தாரா? நீங்க பார்த்தீங்களா?'' என்று கேட்க மறுப்பாக தலை அசைத்தார்.

''இல்லை. ஏன் கேட்கிறாய்?''

''ரொம்ப உரிமை எடுத்தது போலத் தோன்றுகிறதே? சொந்தமாக இருக்குமோ என்று நினைத்தேன். அப்படி இல்லை என்றால் தொந்தரவு செய்கிறார் என்று போலீசில் புகார் கொடுக்கலாமா?''

''வேண்டாம்மா. அவசரப்பட்டு எதுவும் செய்து விடாதே. அந்த தம்பியைப் பார்த்தால் அப்படி வில்லங்கமான ஆள் மாதிரி தெரியலை'' என்று அவசரமாக இடையிட்ட தாயை வியப்புடன் பார்த்தாள்.

''உங்க அப்பா சாவதற்கு முன்பு, கோவையில் ஒரு மாப்பிள்ளை பார்த்து இருப்பதாக சொல்லி இருந்தார். அவராக இருக்கலாமோ என்னவோ? எதற்கும் தன்மையாகவே பேசு...''



''எனக்கு யாரையும் கல்யாணம் பண்ணி கொள்ளும் உத்தேசம் இல்லை என்று உங்களுக்கு எத்தனை தடவை சொல்றது?''

''எனக்குத் தெரியும் வானதி. ஆனால் அவங்களுக்குத் தெரியாது இல்லையா?''

''இப்பவே போய் அவரிடம் சொல்லிடுங்க...''

''அவர் கல்யாணப் பேச்சை ஆரம்பித்தால் கட்டாயம் உன் மனசில் என்ன இருக்கு என்பதை உடைத்துச் சொல்கிறேன். ஆனால் டி.வி. ரிப்போர்ட்டர் என்று தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டு இருக்கும் ஒருவரிடம் போய், உனக்கு என் பெண்ணைத் தர முடியாது என்று நானாகச் சொன்னால் என்னை லூசு மாதிரி பார்க்க மாட்டாரா வானதி?'' என்று சொல்லும்போதே அவன் வரும் அரவம் கேட்க இருவரும் பேச்சை நிறுத்தினார்கள்.

''ஹேய் என்ன இவ்வளவு அமைதியா இருக்கீங்க? சாப்பிடலாமா? செம பசி. நான் வீட்டுச் சாப்பாடு சாப்பிட்டு மூன்று வருஷம் ஆகுது'' என்று மேஜையில் அமர, அவனை முறைத்தாள்.

முகத்தில் நிரந்தரமாக இருந்த புன்னகை, இடது தாவங்கட்டையில் சின்னதாக ஒரு தழும்பு. சிறு வயதில் எங்கே இருந்தாவது குதித்து விளையாடி அடிபட்டு இருக்க வேண்டும். மாங்காய் திருடி இருப்பானோ என்ற எண்ணம் வந்ததுமே அதுவரை பொங்கிய எரிச்சலை மீறி புன்னகை வந்தது.

''என்ன பாஸ் மார்க் கூட வாங்கவில்லையா? இவ்வளவு சோகமா தலையை உலுக்குறீங்க? கொஞ்ச

கிரேஸ் மார்க் போட்டு பாஸ் பண்ணிடுங்க. ப்ளீஸ்'' என்று கண்களைச் சுருக்கி விவேக் கேட்ட உடனே, இதழ்களில் எட்டிப் பார்த்த அந்த சின்ன புன்னகை இருந்த இடம் தெரியாமல் காணாமல் போனது.

''எதுக்கு கிரேஸ் மார்க் கேட்கணும்? முயற்சி பண்ணித் தகுதியை உயர்த்தி ஜெயிக்கணும். உங்களைப் பற்றி எந்த தகவலும் சொல்றதா தெரியலை. நானே கண்டு பிடிக்கிறேன். இப்ப சாப்பிடலாம் வாங்க.''

''நான் ஏற்கனவே மேஜையில் தான் இருக்கிறேன். நீங்க தான் தள்ளி இருக்கீங்க. நீங்க வாங்க'' என்று அழைக்க அவள் எதிரே வந்து அமர்ந்தாள்.

''நாங்க இரண்டு பேர் மட்டும் தான் என்பதால் இங்கே சமையல் பெரிசா நடக்காது. இட்லி சாம்பார் மட்டும் தான்.''

''இனிமேல் விதம் விதமா சமைக்கச் சொல்லிடலாம். நான் நல்ல சாப்பாட்டு ராமன். எங்க அம்மா என் நாக்கை நல்லா வளர்த்து வச்சு இருக்காங்க...''

''அது மட்டும் தான் வளர்த்து வச்சு இருக்காங்க'' என்று முனலாகச் சொன்னான்.

''எதுவா இருந்தாலும் சத்தமா பேசணும். நான் தப்பா எடுத்துக் கொள்ள மாட்டேன்.''

''ஒண்ணும் இல்லை.''

''ஓகே, பரவாயில்லை. இட்லிக்கு சாம்பார் மட்டும் தானா? கொஞ்சம் தேங்காய் சட்னி, அத்துடன் நல்லெண்ணெய் குழைத்த மிளகாய்ப் பொடி கிடைக்குமா?'' என்று கேட்டவனை விசித்திரமாகப் பார்த்தாள் வானதி.



யார் வீட்டில் உட்கார்ந்து கொண்டு உணவுக்கு இப்படி சட்டமாக அதிகாரம் செய்கிறான்? அவன் முகத்தில் தெரிந்த கடுமையைப்பார்த்ததும், கஸ்தூரி பதற, அவன் இருவரையும் மாறி மாறிப் பார்த்தான்.

''சாரி வானதி. சிரமம் என்றால் ஓகே. இருப்பதை வைத்து அட்ஜஸ்ட் பண்ணிக்கறேன்...'' என்று விவேக் சொல்ல வானதியின் முகத்தில் இருந்த கடுமை மறைந்து இளக்கம் தோன்றியது.

இரண்டு மாதங்களுக்குப் பிறகு இவளின் முகத்தில் கொஞ்சமே கொஞ்சம் தெளிவு வந்து இருக்கிறது. மழலையர் பள்ளிக்கு வரும் குழந்தைகளைப் பார்த்தால் கொஞ்சம் சிரிப்பு வரும். குழந்தை இல்லாத ஒருவரைப் பார்த்து அவள் புன்னகை செய்வதும், வீட்டினர் அல்லாத ஒருவரிடம் சாதாரணமாகப் பேசுவதும் இது தான் முதல் முறை.

''அதுக்கென்ன தம்பி, சட்னி அரைக்க கொஞ்சம் டைம் ஆகும். பொடி இருக்கு எடுத்துட்டு வருகிறேன்'' என்று அவசரமாக உள்ளே சென்றவர் இட்லி பொடியுடன் வர அவன் நாக்கை சப்புக் கொட்டிக் கொண்டு சாப்பிட்டான்.

''பொடி சூப்பரா இருக்கு. எங்க அம்மா தோசை ஊற்றினால், லேசா இழைத்து, அதில் மிளகாய்ப் பொடியை லேசா பட்டும் படாமல் தூவி, நெய்யை உருக்கி ஊற்றி சும்மா மொறு மொறுவென்று பொன் நிறத்தில் செஞ்சு தருவாங்க பாருங்க ஹய்யோ...'' என்று அவன் ரசனையோடு சொன்ன அழகை திகைப்புடன் பார்த்துக் கொண்டு இருந்தாள் வானதி.

அடுத்த மூன்று நிமிடங்களில், அவன் தட்டில் இருந்த இட்லிகளை சாப்பிட்டு முடிக்கும் முன்பே, அவன் கேட்ட அந்த முறுகலான பொடி தூவிய நெய் தோசையை, கஸ்தூரி கொண்டு வந்து வைக்க வானதி, விவேக் இருவரின் கண்களும் விரிந்தது.

''வாவ்! சூப்பர் ஆன்ட்டி நீங்க'' என்று விவேக் நாக்கை சப்பு கொட்ட, வானதியின் முகம் திகைப்பைக் காட்டியது.

''வானதி, நீயும் பாதி எடுத்துக் கொள். ஆன்ட்டி தோசை கொண்டு வருவதைப் பற்றி சொல்லாததால் நான் புல்லா சாப்பிட்டு விட்டேன். நீ பாதி எடுத்துக் கொள்கிறாயா?''

''வேண்டாம்'' என்று எரிச்சலுடன் சொல்ல அவன் தோளைக் குலுக்கினான்.

''சரி விடு, நானே சாப்பிடுகிறேன். கூட பதினைந்து நிமிடம் ட்ரெட் மில்லில் ஓடினால் போச்சு. பார்க்கும் போதே எச்சில் ஊறுது'' என்று உண்டு முடித்து எழ, மணக்க மணக்க பில்டர் காபியை கொண்டு வந்து வைத்தார் கஸ்தூரி. ஹாலில் தொலைபேசி அழைக்க அதை எடுக்க நகர்ந்தாள் வானதி.

''நான் கோவையில் இருந்து வேணி பேசுகிறேன். கஸ்தூரி இருக்காங்களா?

''அம்மா வேலையா இருக்காங்க. நீங்க...''

''நான் உன் அத்தை கண்ணு. என் பையன் பிரசாத்தை உனக்கு கட்டி வைக்க உங்க அப்பா என்னிடம் ஜாதகம் கொடுத்து பேச்சு வார்த்தை நடத்தினார். கல்யாணம்



முடிப்பதற்கு முன்னே போய் சேர்ந்து விட்டாரே?'' என்ற அவரின் உரிமை பேச்சில் அவள் குழம்பி நின்றாள். இது என்ன புது கதை?

''அவர் ஆரம்பித்து வைத்த நல்ல விஷயத்தை நாங்க விடுவதாக இல்லை. அவரே இல்லை என்றாலும், உன்னை என் பையனுக்குக் கல்யாணம் பண்ணி வைக்க முடிவு பண்ணி விட்டேன். வரும் புதன்கிழமை நாள் நல்லா இருக்கு. நான், என் பையன். எங்க வீட்டுக்காரர் மூன்று பேரும் சென்னைக்கு வரோம். முகூர்த்த நாள் குறித்து விடலாம்.''

''உங்க பையன் பேர் என்ன சொன்னீங்க...?''

''பிரசாத்...''

அப்பா பார்த்ததாக அம்மா சொன்ன 'அந்த மாப் பிள்ளை' பிரசாத் என்றால் இந்த விவேக் யார்? இவன் எங்கிருந்து எதற்காக இங்கே வந்தான்? இவனுக்கு என்ன வேண்டும்? இவன் நல்லவனா? கெட்டவனா? மீண்டும் ஆரம்பித்த இடத்திலேயே வந்து நின்ற வானதிக்கு கண்களை கட்டியது.

## 3

உணவறைக்குத் திரும்பி வந்த வானதியின் முகத்தில், சற்று முன் இருந்த அமைதியும், புன்னகையும் காணாமல் போய், அந்த இடத்தை யோசனை பிடித்து இருந்தது.

''போனில் யாரும்மா?'' என்ற தாயின் கேள்விக்கு, ''நீங்க கொஞ்சம் முன்னாடி சொன்ன, உங்களுக்கு ரொம்ப வேண்டியவங்க தான் கோவையில் இருந்து பேசினாங்க. அடுத்த புதன்கிழமை இங்கே வீட்டுக்கு வராங்களாம்...'' என்று சொன்னதும் அவர் முகத்தில் பதட்டம் வந்தது.

''மணி பத்தாச்சே? டிபனுக்கு தாங்க்ஸ் ஆன்ட்டி பத்தரைக்கு எனக்கு ஒரு முக்கியமான வேலை தேனாம்பேட்டையில் இருக்கு'' என்று கைகடிகாரத்தைத் திருப்பி மணி பார்த்த விவேக் கிளம்ப, அவள் சொடக்கிட்டு நிறுத்தினாள்.

''இங்கே நெய் தோசை சாப்பிடுவதற்கா வந்தீங்க? சாப்பிட்ட உடனே கிளம்புகிறேன் என்று சொல்றீங்க? இன்னும் நீங்க என்ன விஷயமா என்னைத் தேடி வந்தீங்க என்று சொல்லவே இல்லை மிஸ்டர் விவேக்...''

''சாரி! அவசரமாகக் கிளம்ப வேண்டும். இருபது நாட்களுக்கு முன்பே வாங்கிய அனுமதி. சந்திக்கப் போகும் நபரும் பிசியானவர். இந்த அவசரத்தில் இப்போ பேச முடியாது. நாலு மணிக்கு சந்திக்கிறேன். பை...'' என்று கிளம்ப, கஸ்தூரி, வானதி இருவரும் திகைப்புடன் பார்த்தனர்.

புயல் மாதிரி வந்தான்! வீட்டுக்குள் நுழைந்து நாக்கை சப்பு கொட்டி சாப்பிட்டான். ஒன்றுமே சொல்லாமல் கிளம்பி விட்டானே? அவன் போகும் திசையையே முறைத்துப் பார்த்துக் கொண்டு இருந்த மகளை கஸ்தூரியின் கேள்வி இங்கே இழுத்து வந்தது.



''போனில் யார் என்று கேட்டேனே?''

''கோவையில் இருந்து வேணி என்று யாரோ பேசினாங்க. அவங்க பையனுக்கு உங்க பெண்ணைக் கல்யாணம் பண்ணி வச்சு உங்க சம்பந்தியாகப் போறாங்களாம்...'' என்ற வானதியின் குரலில் இருந்த எரிச்சலையும் கோபத்தையும் பார்த்துப் பதறினார் கஸ்தூரி.

''என்னடி சொல்ற...?'' என்று அவசரமாகக் கேட்ட கஸ்தூரியின் குரலில் அதிர்ச்சி இருந்தது.

''அவங்க மூன்று பேரும் வரும் புதன்கிழமை நம்ம வீட்டுக்கு வராங்களாம்...''

''எ..து..க்..கு..?''

''கல்யாணம் நிச்சயம் பண்ண என்று சொன்னாங்க. வீட்டுக்கு வரும் விருந்தாளி அவமானப்பட வேண்டாம் என்று நீங்க நினைத்தால், அவங்களுக்கு போன் பண்ணி வர வேண்டாம் என்று சொல்லிடுங்க. நீங்க சொல்லவில்லை என்றாலும் எனக்குக் கவலை இல்லை. அன்று நான் வீட்டில் இருக்க மாட்டேன்'' என்று அழுத்தமான குரலில் சொல்லி விட்டு தன் அறைக்குச் செல்ல, அவர் பெருமூச்சு விட்டார்.

மறுப்பை உடனே அந்த வரனுக்குச் சொல்ல வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது.

ஒரு பக்கம் அந்த வரனை வேண்டாம் என்று மகள் சொல்வது மனதின் ஓரம் மகிழ்ச்சியை தந்தாலும், இப்படியே இருந்து விட்டால், இன்னும் எத்தனை நாட்கள் தனியாக அவள் இருக்க முடியும் என்ற வருத்தமும் கூடவே வந்தது. உடனே தொலைபேசியில் வேணியை அழைத்தார்.

''பெண்ணுக்கு என்னை தனியாக விட்டுவிட்டுக் கோவை வந்து வசிப்பதில் இஷ்டம் இல்லை. அதனால்...'' என்று நாசூக்காக கஸ்தூரி பேச ஆரம்பிக்கும் முன்பே அவர் சிரித்தார்.

''கல்யாணம் முடிந்தால் பிரசாத்தும் உங்க வீட்டோடு வந்து இருப்பான் அண்ணி அதற்கு நீங்க கவலைப்பட வேண்டாம்...'' என்று எதிர்முனையில் பதில் வந்ததும் கஸ்தூரிக்கு மூச்சு நின்று விடும்போல இருந்தது. என்ன கொடுமை இது?

''வருடம் கழியும் வரை திருமணம் செய்ய வேண் டாம் என்று பொண்ணு சொல்கிறாள். அதுவரை உங்க பையன் காத்திருக்க வேண்டாமே'' என்று மீண்டும் மறுக்க முயன்றார் கஸ்தூரி.

''இரண்டு மாசம் ஓடி விட்டது. இன்னும் பத்து மாசம் தானே? இப்ப கல்யாணம் பண்ணி வச்சால் பத்தாவது மாசம் உங்க பொண்ணு வயிற்றில் அண்ணனே பிள் ளையா சிங்கக் குட்டி மாதிரி வந்து பிறப்பார் அண்ணி'' என்று அவர் கஸ்தூரியை கரைக்கவே முயன்றார்.

நாசூக்கான மறுப்பை அவர் புரிந்து கொள்ளப் போவதில்லை என்பது உறுதியாக. ''இவன் நல்லவன் தானா என்ற என் சந்தேகத்தைத் தீர்த்து வைப்பதற்காக ஒரு சின்ன பொய் சொல்லப் போகிறேன் என்னை மன்னித்து விடுங்க'' என்று கணவனிடம் மானசீகமாக மன்னிப்பு கோரினார் கஸ்தூரி.

''நீங்க இவ்வளவு அக்கறையுடன் பேசுவதால் உங்களிடம் மட்டும் ஒரு உண்மையைச் சொல்கிறேன். மனசு நிறைய ஆசை இருந்தாலும், இப்ப பெண்ணுக்கு



நல்லபடியா கல்யாணம் பண்ணி வைக்க என்னிடம் வசதி இல்லை'' என்று கஸ்தூரி ஆரம்பிக்க, எதிர்முனை ஆட்டம் கண்டது.

''சென்னை பட்டணத்துல கடல் பக்கத்துல பங்களா இருக்கு. அப்புறம் என்ன குறைச்சல்?''

''அப்படிதான் நானும் இத்தனை நாள் நினைத்து இருந்தேன். ஆனால் அது எங்க மாமனார் வாங்கிய வீடாம். அவர் சொத்தில் பாதி பங்கும் எனக்கும் இருக்கு என்று மதுரையில் இருக்கும் என் நாத்தனார் கேஸ் போட்டு இருக்காங்க...'' என்று வராத கண்ணீரைத் துடைத்தபடி அவர் சொல்ல அந்த நேரம் அருகே வந்த வானதி அவரை ஆத்திரமாகப் பார்த்தாள்.

''என் நாத்தனார் போன் நம்பர் தரேன். நீங்களே பேசி நான் சொல்வது உண்மை தானே என்று தெரிந்து கொள்ளுங்க. அப்புறம் நல்லா யோசிச்சுட்டு, என் பெண் மட்டும் உங்களுக்குப் போதும் என்று தோன்றினால் சொல்லுங்க. நான் என் பெண்ணை திருமணத்துக்கு சம்மதிக்க வைக்கிறேன்'' என்று முடித்துவிட்டு மகளிடம் திரும்பினார்.

எதிர்முனையில் பேசிய குரலில், முதல் பாதிப் பேச்சில் இருந்த உற்சாகமும், அன்பும், பின் பாதியில் இல்லை என்பதை உணர்ந்த கஸ்தூரி திருப்தியுடன் போனை வைத்தார்.

''எதுக்கு இப்ப தேவை இல்லாமல் அத்தை பேரை டேமேஜ் பண்றீங்க?''

''நீதானே அவங்களை வர வேண்டாம் என்று சொன்னாய்? நான் எந்த அர்த்தத்தில் சொன்னேன்

என்பது அவளுக்குப் புரியும். நீ கவலைப்படாதே. ஆமா நீ எங்கே கிளம்பிட்ட?''

''நான் கமிஷனர் அலுவலகம் போய் வருகிறேன்...''

''கமிஷனர் ஆபீஸில் என்ன வேலை உனக்கு?''

''பாலசந்தர் அங்கிளை பார்த்து விட்டு வருகிறேன்...''

''பாலா அண்ணாவையா? எதுக்கு?'' என்றவரின் கேள்வியில் உச்ச பட்ச அதிர்ச்சி இருக்க, அவள் அலட்சியமாக தோளைக் குலுக்கினாள்.

''வசதியாக இருப்பவர்கள் என்பதாலும், தனியாக இரு பெண்கள் மட்டும் வசிக்கிறார்கள் என்பதாலும், சில பல தொல்லைகள், வருகிறது. அது என்ன என்று விசாரித்து உரிய நடவடிக்கை எடுங்க என்று புகார் கொடுத்து விட்டு வருகிறேன்...'' என்று அழுத்தமான குரலில் ஒவ்வொரு வார்த்தையையும் சொல்ல கஸ்தூரி பதறினார்.

''எதற்காக தேவை இல்லாமல் ஒருத்தர் மேலே புகார் கொடுக்க வேண்டும்? அவர் உன்னை என்ன செய்தார்?''

''எதற்காக ஒருத்தர் தேவை இல்லாமல் கையில் கேமராவுடன் என்னுடைய மழலையர் பள்ளிக்கு, முன் அனுமதி இன்றி வர வேண்டும்? அவருக்கு ஏன் தேவையே இல்லாமல் நீங்க மேஜையில் சட்டமாக உட்கார வைத்து நெய் தோசை சுட்டுப் போட வேண்டும்? முக்கியமான வேலையாக உன்னைப் பார்க்க வந்தேன் என்று கதை சொன்ன நபர் சாப்பாடு முடிந்த உடனே ஏன் கிளம்ப வேண்டும்? யார் இந்த விவேக் என்ற என் கேள்விக்கு நீங்க ஏன் தேவையே இல்லாமல் அப்பா



பார்த்த மாப்பிள்ளையாக இருக்கலாம், பேர் எனக்கு தெரியலை என்று சொல்ல வேண்டும்?''

''அது வந்து...''

''வேண்டாம்மா. நீங்க எனக்கு விளக்கம் சொல்கிறேன் என்று மேலும் பொய் சொல்ல வேண்டாம். நான் காவல் துறை மூலமே தெரிந்து கொள்கிறேன். அவன் பேர், ஊர், வேலை சொன்னதாக சொன்ன இடம், இந்த மூன்று தகவல் இருக்கு. இதைச் சொன்னால் சில மணி நேரத்தில் அவன் ஜாதகமே என்னிடம் வந்து விடும்'' என்று சொல்லி விட்டு வெளியேறினாள்.

குடும்ப நண்பரான பாலசந்தரை சந்தித்து, தன் சந்தேகத்தை சொல்லாமல், 'விவேக் நாராயணன்' என்ற பெயரில், குறிப்பிட்ட தொலைக்காட்சியில் யாரேனும் வேலை செய்கிறார்களா என்ற தகவலை உறுதி செய்ய சொல்ல அவருக்கு வியப்பு வந்தது.

''இதை சொல்ல நீயே நேரில் வரணுமா? ஒரு போன் பண்ணினால் போதாதா? யார் இந்த பையன்? உனக்கு கஸ்தூரி பார்த்து இருக்கும் மாப்பிள்ளையா?'' என்ற கேள்விக்கு பதில் சொல்லாமல் சமாளித்தாள்.

பதினைந்து நிமிடத்தில் இன்டர்நெட்டில் தொலைக்காட்சி நிறுவனத்தின் தொலைபேசி எண்ணைக் கண்டு பிடித்து, மகாராஷ்டிர காவல் துறையின் மூலமே, தொலைக்காட்சி நிறுவனத்தின் தலைமை பொறுப்பில் இருக்கும் அதிகாரியிடம் ரகசியமாக விசாரிக்க அவர் தன் கணினியில் இருந்த விபரங்களை நிமிடத்தில் சரி பார்த்து, 'விவேக் நாராயணன்' என்ற பெயரில், செய்தி தொகுப்பாளராக யாரும் பணி புரியவில்லை என்ற

தகவல் பாலசந்தரை அதிர வைத்தாலும் வானதியை அது அசைக்கவில்லை.

"அப்படி யாரும் அங்கே இல்லையாமே? நேரில் ஆள் அனுப்பி விசாரிக்கச் சொல்லட்டுமா?" என்று கேட்க அவள் மறுப்பாக தலை அசைத்தாள்.

"நேரில் போக தேவை இல்லை அங்கிள். இன்று மாலை நாலு மணிக்கு பெசன்ட் நகர் பகுதி ஆபீசர் யாரையாவது எங்க வீட்டுக்கு, வரச் சொல்ல முடியுமா?"

"சொல்லலாம்மா. ஆனால் எதுக்கு?"

"நாலு மணிக்கு என்னை வீட்டில் சந்திக்க வருகிறேன் என்று சொல்லிச் சென்று இருக்கிறான். அவனை எங்க வீட்டிலேயே பிடித்து விடலாம். பொய்யான பேர், இல்லாத வேலை, இதைச் சொல்லி, எங்க வீட்டுக்குள் வந்து நடு வீட்டில் உட்கார்ந்து டிபன் சாப்பிட்டு விட்டு ஒருத்தன் ப்ரீயா இந்த உலகத்தில் உலவலாமா? அவனை ஒரு வழி பண்ண வேண்டாம்?"

"இதை ஏன்மா நீ முதலில் சொல்லலை...?"

"அவன் பிராட் என்பது என் சந்தேகம் அங்கிள். அதில் உண்மை இருக்கா இல்லையா என்பதை தெரிந்து கொள்ளாமல் எப்படி புகார் கொடுப்பது? நீங்க எங்க வீட்டுக்கு மப்டியில் உயர் அதிகாரி யாரையாவது மாலை நாலு மணிக்கு வரச் சொல்லுங்க..." என்று எழுத்துப்பூர்வமான புகாரை அளித்துவிட்டு, வீடு வந்தபோது, மணி இரண்டு. செக்யூரிட்டி கேட்டைத் திறக்க காத்திருந்த நிமிடத்தில் வானதியின் பார்வையில் பட்ட காட்சி திகைக்க வைத்தது.



அவர்கள் வீட்டை ஒட்டினாற் போல இருந்த அடுக்கு குடியிருப்பு வளாகத்தில், பைக்கை நிறுத்தி, மார்பின் குறுக்கே ஓடிய அந்த கேமராவுடன், கலைந்த தலையை கைகளால் சீர் செய்துவிட்டு, குளிர் கண்ணாடியைக் கழட்டி பாக்கெட்டில் வைத்தபடி நடந்து சென்றது சாட்சாத் விவேக் தான்!

## 4

விவேக்கை பற்றி குடும்ப நண்பரான காவல் அதிகாரி மூலமாக துப்பறிந்து வருகிறேன் என்று சொல்லி விட்டுக் கிளம்பிய வானதியை கவலையுடன் பார்த்த கஸ்தூரிக்கு அடுத்து என்ன செய்வது என்று புரியவில்லை.

தெரு முனை காம்பவுண்ட் சுவரில் இருக்கும் பிள்ளையாருக்கு 108 சிதறு தேங்காய் உடைக்கிறேன் என்பதில் ஆரம்பித்து, மதுரைக்கு அருகே உள்ள குல தெய்வத்திற்கு வெள்ளிக் காப்பு வாங்கி சாத்துவது வரை, ஊரில் உள்ள தெய்வங்கள் எல்லாவற்றிற்கும் சிறியதும் பெரியதுமான வேண்டுதல்களை வைத்தபடி, சமையலை கவனித்தார்.

கவலையுடன் வாசலுக்கும் வீட்டுக்கும் நடை பழகிக் கொண்டு இருந்த கஸ்தூரியின் பொறுமைக்கு ஒரு எல்லை வந்தபோது, மகளின் முகம் பிரகாசமாக இல்லை.

''வா, சாப்பிடலாம்...''

''போன வேலை என்ன ஆச்சு என்று கேட்க மாட் டீங்களா?''

''உன் முகத்தைப் பார்த்தால் ரொம்ப களைப்பா இருக்கு. முதலில் சாப்பிடு.''

''சாப்பிடுவது இருக்கட்டும். காலையில் அவன் உங் களிடம் பணி புரியும் இடம் குறித்த அடையாள அட்டை ஏதாவது காட்டினானா?''

''அடையாள அட்டை எல்லாம் நான் பார்க்கலை வானதி. பார்க்கத் தோன்றவில்லை. அது இப்ப என்ன பண்ணனும்?'' என்றவரின் குரலில் தடுமாற்றமும், ஏன் கேட்கிறாள் என்ற சந்தேகமும் இருந்தது.

''என்னிடம் நீங்க அப்படிச் சொல்லவில்லையே?''

''என்னைக் குற்றவாளி மாதிரி நிற்க வைத்து விசா ரிக்கிறாய் நான் உன் அம்மா. அது நினைவில் இருக்கா? அவன் பொய் சொல்ல என்ன அவசியம்?''

''காலையில் வீட்டுக்கு வந்தவன் ஒரு பிராட்! நான் சொல்றதை நம்பாமல், இன்னிக்குக் காலையில் பார்த்த எவனோ ஒருத்தனுக்கு நீங்க சப்போர்ட் பண்ணி பேசினால் என்ன அர்த்தம்? மும்பை டி.வி. ஸ்டேஷனில் வேலை பார்ப்பதா சொல்லி ஏமாற்றி இருக்கான்...''

''இப்ப அங்கே வேலை செய்யலை என்று சொன் னாங்களா? வேலையே செய்யலை என்று சொன்னாங் களா. சரியா சொல்லு.''

''அவன் அங்கே வேலை பார்க்கவில்லை என்பதை நான் சொன்ன பிறகும், அவனுக்கு சாதகமா உங்களால் எப்படிப் பேச முடியுது? அவனை போலீசில் பிடிக்கக் கொடுக்கிறேன். அவனுக்குச் சொல்லி இங்கே வரவிடாமல் பண்ணி விடலாம் என்று புத்திசாலி தனமா ப்ளான் போடாதீங்க. அவன் பக்கத்து ப்ளாட்ல தான் குடி இருக்கான் என்ற விஷயம் எனக்குத் தெரியும்'' என்று சொல்லிவிட்டு தன் அறைக்குச் சென்ற மகளை திகைப்புடன் பார்த்தார்.



'என்ன நடக்குமோ?' என்ற பதைப்புடன் கஸ்தூரியும், 'வரட்டும் அவன்' என்ற பொறுமலோடு வானதியும், காத்திருந்த அந்த நாலு மணி அளவில் இனிப்புடன் உற்சாகமாக வந்த விவேக்கின் முகம் மலர்ந்து இருந்தது.

''ஹாய் ஆன்ட்டி! ஸ்வீட் எடுத்துக்கோங்க. நான் இன்று ரொம்ப சந்தோஷமாக இருக்கேன்'' என்று வந்த விவேக்கைக் கண்டதும் மலர்ந்த புன்னகையைக் கட்டுப்படுத்துவது, கஸ்தூரிக்குச் சிரமமாக இருந்தது. பார்வை மாடிக்கு பாய்ந்து மீள அவன் புன்னகை செய் தான்.

''எல்லா அம்மாக்களும் ஒரே மாதிரி ஆன்ட்டி. தனக்கு ஒரு விஷயம் கிடைக்கும் என்றால் அது தனக்கு முன் னால் தன் பிள்ளைகளுக்கு கிடைக்கணும் என்று நினைக் கறீங்க. பாருங்க. கிரேட் நான் உங்க பெண்ணுக்கு ஸ்வீட் கொடுத்து விட்டு அப்புறமா உங்களுக்கு தருகிறேன்...'' என்று மாடிப் படிகளை இரண்டு இரண்டாக தாவி ஏற, கஸ்தூரிக்கு பயம் பிடித்துக் கொண்டது.

கீழே உற்சாகமாக ஒலித்த பேச்சுக் குரலைக் கேட்டு வெளியே வந்த வானதி, மாடிப்படிகள் முடியும் இடத்தில் நின்று இருக்க, ''கும்பிடப் போன தெய்வம்

குறுக்கே வந்து நிற்குதே? நல்ல சகுனம்'' என்று புன்னகை செய்ய அவள் முறைத்தாள்.

''என்ன தூங்கிட்டு இருந்தீங்களா? நான் விவேக் காலையில் பார்த்தோமே? ஒரே தோசையை ரெண்டு பேரும் சாப்பிடலாமா என்று கூட கேட்டேனே'' என்றதும் அவள் கண்களில் ஒரு கோபம் மின்னி மறைந்தது.

''இந்த கோபம் கண்ணில் வந்ததும் நீங்க முழித்துக் கொண்டு தான் இருக்கீங்க என்பது உறுதி ஆகி விட்டது. உங்களுக்கு ஸ்வீட் கொடுக்க ஆவலுடன் ஓடி வந்து இருக்கேனே? என்ன குட் நியூஸ் என்று விசாரித்து இருக்க வேண்டாமா? எதற்காக இவ்வளவு அவசரமாக ஓடி வந்தேன் என்று கேட்கவே இல்லையே?''

''என்ன குட் நியூஸ்?'' என்றவளின் குரலில் இருந்த ஏளனம் அவனை எட்டியதாகத் தெரியவில்லை.

''நான் ஸ்வீட் எடுத்து வந்த விஷயத்தைச் சொல்வதற்கு முன்னால் வேற ஒரு முக்கியமான விஷயத்தை உங்களிடம் சொல்ல வேண்டும். கடவுள் எல்லா இடத்திலும் தான் இருக்க முடியாது என்பதற்காக அன்னையைப் படைத்தான். எங்க அம்மா அந்த மாதிரி என்ற பெருமை எனக்கு உண்டு. இன்று உங்க அம்மாவைப் பார்த்த பின்பு, எல்லா அம்மாக்களும் அந்த மாதிரி தான் என்ற அரிய உண்மை புரிந்தது'' என்று சொன்ன அந்த பாவனையில் சில கணங்கள் திகைத்தாலும், விரைவிலேயே தன் உணர்வுக்கு வந்தாள்.

''எங்க அம்மாவுக்கு ஐஸ் வைப்பதை விட்டு விட்டு உருப்படியா ஏதாவது விஷயம் இருந்தால் சொல்லுங்க...'' என்று கடினமான குரலில் சொன்னவள்



ஹாலில் இருந்த ஒற்றை சோபாவில் அதிகாரத் தோரணையுடன் அமர்ந்தாள்.

''இப்படி கழுத்தைப் பிடிச்சு வெளியே தள்ளத் துடிக்கிறீங்க? நான் உங்களுக்கு ரெண்டு குட் நியூஸ் சொல்ல வந்தேன் தெரியுமா?'' என்று இன்னொரு சோபாவில் அமர்ந்து குறை படிக்க அவளுக்கு இரத்த அழுத்தம் எகிறியது.

''தெரிந்து கொள்ள எனக்கு இஷ்டம் இல்லை. ஆனால் அதுக்கு முன்னாடி நீங்க அவசரமா தெரிந்து கொள்ள வேண்டிய முக்கியமான விஷயம் ஒன்று இருக்கு'' என்றதும், சீட்டின் நுனிக்கு வந்து அவள் புறமாகக் குனிந்தான்.

''சொல்லுங்க, கேட்க நான் எப்போதுமே ரெடி?''

இருவருக்கும் இடையே இருந்த இடைவெளியை குறைத்து அவள் புறம் சரிந்து அவன் சொன்ன விதத்திலும், உடல் அசைவுகளில் தெரிந்த அலட்சியமும் அவளின் கோபத்தைத் தூண்டியது. 'என்னமா நடிக்கிறடா?' என்று அவன் தலை முடியைப் பிடித்து உலுக்க வேண்டும் போலத் தோன்றிய உணர்வைக் கட்டுப்படுத்த சிரமப்பட்டாள் வானதி.

''நீங்க வெளியாள் என்பதை மறந்து 'பொசுக் பொசுக்' என்று மாடிக்கு வருவதை நிறுத்திக்கோங்க. இதை நீங்க சொல்லணும்மா'' என்றவளின் பார்வை அம்மாவைச் சுட்டெரித்தது.

''ஒரு கப் காபி'' என்று கஸ்தூரியைப் பார்த்து, விரல்களால் ஜாடை காட்டி, உதட்டசைவில் விவேக் சொல்ல அவர் மகளின் முகத்தைப் பார்த்தார்.

அம்மாவின் பார்வை தன் முகத்தைத் தாண்டியும் பாய்வதைக் கண்டு வானதி திரும்ப விவேக் மாட்டிக் கொண்டாலும் சிரித்தான்.

"உங்க பொண்ணு என்ன விருந்தோம்பல் தெரியாதவங்களா? மேலே வரக் கூடாது என்று தான் சொன்னாங்க. வீட்டுக்கு வரக் கூடாது என்று சொல்லலை. காபி கொடுத்தால் ஒன்றும் சொல்ல மாட்டாங்க. தைரியமா போங்க..." என்று அவள் முறைத்தாள்.

"என்னவோ இரண்டு முக்கியமான விஷயம் சொல்லணும் என்று சொன்னீங்களே? அப்படி ஏதாவது இருந்தால், அதைச் சொல்லுங்க."

"இப்ப காபி உள்ளே போகாமல் ஒரு விஷயமும் வெளியே வராது. வெயிட் ப்ளீஸ்..." என்று சோபாவில் சாய்ந்து வசதியாக அமர, அவளுக்கு எரிச்சல் வந்தது. அங்கிள் சொன்ன ஏ.சி.பி. வர இன்னும் சில நிமிடங்கள் ஆனால், இவன் கிளம்பி விடக்கூடாதே என்ற எண்ணத்தில் பேச்சைத் தொடர்ந்தாள்.

"மும்பையில நீங்க வேலை செய்தபோது எங்கே தங்கி இருந்தீங்க?"

"பாந்த்ரா ஏரியாவில் மெரைன் டவர்ஸ் என்ற பில்டிங்கில் இருந்தேன். ஏன் கேட்கறீங்க?"

"வீடு தேடி வந்து இருக்கீங்க. உங்களிடம் சில விபரங்கள் கேட்கக் கூடாதா?"

"நீங்க கேட்கணும். நான் சொல்லணும் என்று தான் காத்திருக்கிறேன். மும்பையில் என்ன இடங்கள் பார்க்கலாம், எந்த ஓட்டலில் என்ன ஸ்பெஷல் டிஷ் கிடைக்கும்?" என்று புன்னகையுடன் விளக்கம் சொல்ல



ஆரம்பிக்க அவளால் நடிப்பிற்காகக் கூட சிரிப்பைப் பிடித்து வைத்திருக்க முடியவில்லை.

"உங்க பெற்றோர் எங்கே இருக்காங்க?" என்று எரிச்சலை அடக்க முயன்றபடி அவள் கேட்க அவன் முகம் மேலும் மலர்ந்தது.

"காலையில் பேசியதற்கும் இப்ப பேசுவதற்கும் எவ்வளவு வித்தியாசம்?" என்று உற்சாகமாக ஆரம்பிக்க, காபி ட்ரேயுடன் வந்தார் கஸ்தூரி.

"ரொம்பப் பசிக்குது, டிபன் சாப்பிட்டு காபி குடித்து விட்டு உங்க கேள்விகளுக்கு பதில் சொல்கிறேன் ஓகே?" என்று அவளிடம் கொஞ்சலாகச் சொன்னவன் முறுக்கை எடுத்துக் கடிக்க ஆரம்பித்தான்.

அவனையே பார்த்தபடி, நடு நடுவே அலைபேசியில் குறுஞ்செய்தி அனுப்பவும், வாசலின் புறம் கண்களைச் செலுத்தவும் மறக்கவில்லை வானதி.

'கஸ்தூரியிடம் கை முறுக்கு சுற்றத் தெரியுமா? பாசி பருப்பில் சாஃப்டா ஒரு உருண்டை நெய் மணக்க எங்க அம்மா செய்வாங்க. பேர் தெரியலை. அது பண்ணத் தெரியுமா?" என்று சிறந்த சாப்பாட்டு ராமனாக விளங்க தகுதி பெற்றவன் என்று நிருபிக்கும் வகையில் பல நூறு கேள்விகளை கேட்டு, சில முறுக்குகளை நொறுக்கி, காபி குடித்து, வானதியின் கேள்விகளுக்கு பதில் சொல்ல நான் தயார் என்று சொல்லித் திரும்பும்போது, அவள் புன்னகையுடன் எழுந்து வாசலுக்குச் சென்றாள்.

"வாங்க மிஸ்டர் சதீஷ் தவன்! நீங்க வருவீங்க என்று அங்கிள் சொன்னாங்க" என்று வரவேற்ற வானதியைப் பார்த்துத் திகைத்து நின்றார் கஸ்தூரி.

"வனி, என்ன எது என்று இன்னும் அந்த தம்பியிடம் வாய் வார்த்தையாகக் கூட விசாரிக்காமல் எதற்கு இப்படி போலீசை வீட்டுக்கு வர வைத்து இருக்கிறாய்?" என்று சன்ன குரலில் அதட்ட, அவள் புன்னகை செய்தாள்.

"நாம் விசாரிப்பதை விட இவர் காவல் நிலைத்துக்கு அழைத்துச் சென்று விசாரித்தால் உண்மை எளிதில் வெளிவரும் அம்மா" என்று சொல்ல விவேக் மூவ ரையும் மாறி மாறிப் பார்த்தான்.

"இவர்தான் எங்க வீட்டுக்கு அடிக்கடி வந்து, அதி காரமாக பேசித் தொந்தரவு கொடுத்துக் கொண்டே இருக்கிறார். விசாரிங்க" என்று விவேக்கைக் காட்டியதும் அருகே வந்தார்.

"என்ன மிஸ்டர்? எங்கே இருந்து வருகிறாய்?"

"மும்பையில் இருந்து..." என்று சொல்லி முடிக்கும் முன்பே அவன் வயிற்றில் ஒரு குத்து விழுந்தது.

"ஏன் சார் அடிக்கறீங்க?" என்ற அவனின் முனகல் குரல் கேட்டதும் மஞ்சரிக்குள் ஒரு சிலிர்ப்பு ஓடியது.

ஹையோ! அடி பலமா? இங்கே வைத்து ஏன் விசாரிக் கிறார் என்ற பதட்டம் தோன்றியது. "சார், ஸ்டேஷனுக்கு அழைத்துப்போய்..." என்று அவள் சொல்ல வருவதை கவனிக்காமல் அவரின் அடுத்த கேள்வி தொடர்ந்தது.

"அங்கே என்ன பண்ணிட்டு இருந்த?"

"பாரத் தர்ஷன் தொலைக்காட்சியில் நியூஸ் அட் 9..." அவன் வார்த்தையை முடிப்பதற்கு முன்பே அவன் வயிற்றில் அடுத்த குத்து விழுந்தது.

"சார்! எதுக்கு அடிக்கிறீங்க? நான் மீடியாவில் இருக்கிறேன். முதலில் என்னைக் குற்றவாளி மாதிரி ஏன்



விசாரிக்கிறீங்க? என் மேலே உங்களிடம் யார் என்ன புகார் சொன்னாங்க? அந்த விபரம் சொல்லிட்டு அடிங்க சார். எஃப்.ஐ.ஆர். போட்டாச்சா?" என்றவன் குரலில் அதிகாரம் இருந்தது.

"நான் சொல்கிறேன். சதி செய்தல், அறியாதவர் களின் வீட்டுக்குள் அத்து மீறி நுழைந்து, பொய் சொல்லுதல், ஏமாற்றுதல், ஆகிய குற்றங்களுக்காக நான் தான் உங்க மீது புகார் கொடுத்து இருக்கிறேன்..." என்று தீர்க்கமான குரலில் சொன்ன வானதி காவல் துறை அதிகாரியின் புறம் திரும்பினாள்.

"இங்கே விசாரிக்க வேண்டாம். ஸ்டேஷன் அழைத்துச் சென்று விடுங்க ப்ளீஸ்..." என்று கரம் குவித்துச் சொல்ல, 'சதீஷ் தவன்' என்று அழைக்கப்பட்ட காவல் துறை உயர் அலுவலர், அவனின் கைப் பற்றி இழுத்துச் சென்றார்.

"வானதி. உனக்கு என்ன ஆச்சு? ஏன் இப்படிச் செய் கிறாய்? போலீசில் பிடித்துக் கொடுக்கும் அளவுக்கு அந்த பிள்ளை என்ன தப்பு பண்ணுச்சு? குடி போதை யில் உன் கை பிடித்து இழுத்ததா? உன் சொத்து வேண் டும் என்று மிரட்டியதா?"

"அம்மா, தப்பு பண்றவங்களுக்கு சப்போர்ட் பண்ண நினைக்காதீங்க."

"என்ன தப்பு பண்ணினான் அவன்? நாலு இட்லியும் ரெண்டு காபியும் கேட்டதற்காகவா போலீசில் பிடித்துக் கொடுத்தாய்? இந்த அளவுக்குக் கல் நெஞ்சுக் காரியா, உன்னை வளர்த்து இருக்கேன் என்று எதிர்பார்க்கலை. நீ என்ன செய்தாலும் தட்டிக் கேட்க ஆள் இல்லை என்று

நினைத்துக் கொண்டு இஷ்டத்திற்கு ஆடுகிறாய். மனசே ஆறவில்லை'' என்று சொல்லி விட்டு பூஜை அறைக்குள் சென்று கண்ணீர் மல்க கண் மூடி நின்றார் கஸ்தூரி.

கஸ்தூரியின் பேச்சில், சில நிமிடங்கள் ஹாலில் உறைந்து நின்று இருந்த வானதி சிலைக்கு உயிர் வந்ததும், மாடிப் படிகளில் ஏறியவளின் கால்கள் தானாக பெல்ஜியம் கண்ணாடி வழியாகத் தெரிந்த கடலுக்குச் சென்றது. சில நிமிடங்கள் ஆர்ப்பரித்த கடலை வேடிக்கை பார்த்ததும் மனதில் இதமான அமைதி பரவ, தன் அறைக்குள் உள்ளே செல்ல திரும்பினாள்.

அப்போது பார்வையில், அடுத்த கட்டிடத்தின் இரண்டாவது மாடியில் இருந்த வீட்டின் பால்கனியில், பிரம்பு நாற்காலிகளில் அமர்ந்து 'சதீஷ் தவனும், விவேக் நாராயணனும்' ஏதோ பானம் அருந்திக் கொண்டு இருந்த காட்சி கண்ணில் பட உச்ச பட்சமாக அதிர்ந்தாள் வானதி.



# 5

வானதி தன்னை கவனித்து விட்டாள் என்பதை உணர்ந்த விவேக்கின் புன்னகை மேலும் விரிந்தது. அதைப் பார்த்ததும் சதீஷ் தவன் அவன் பார்வை சென்ற இடத்தை நோக்கி திரும்ப முற்படுகையில் அவசரமாக அவன் கன்னத்தைப் பிடித்துத் தடுத்து நிறுத்தி சிரித்தான் விவேக்.



''ஹேய் சட்டென்று திரும்பாதே! அவள் வந்து விட்டாள்'' என்று ஹிந்தியில் உரையாடலைத் தொடர அவன் முகமும் மலர்ந்தது.

''ரியலி, என்ன செய்கிறாள்?''

''கோபமாக முறைக்கலாம். நான் என்ன பைனாகுலரிலா பார்க்கிறேன். ஒரு ஊகம் தான்...''

''விளக்கம் எல்லாம் நல்லா தான் கொடுக்கிறாய். ஆனால் ஏதாவது ஒரு ஸ்டேஜில் அவளிடம் அமர்ந்து பேச வேண்டும். அப்பதான் இலக்கை அடைய முடியும்.''

''நான் பேசுவதைக் கேட்கும் மன நிலைக்கு அவளைத் தயார் செய்வது தான் என்னுடைய இப்போதைய நோக்கம்...''

''இப்பவே பேசினால் என்ன ஆகும்?''

''இப்பவே பேசினால் எதிர்மறை பதில் வருவது நிச்சயம். நான் யார் என்று தெரிந்து கொள்ள வேண்டும் என்ற வேகம் வெறியாக அவளுக்குள் எழ வேண்டும். அப்போதுதான்...'' என்று அவன் விளக்கம் சொல்லிக் கொண்டு இருக்கும்போதே மறுப்பாக தலை அசைத்தான் சதீஷ் தவன்.

''நீ தேவை இல்லாத ரிஸ்க் எடுக்கிறாய். உன் ப்ளான் வொர்க் அவுட் ஆகும் என்று நினைக்கிறாயா?''

''நிச்சயம் ஆகும்...''

''ஓவர் கான்பிடன்ஸ் உடம்புக்கு ஆகாது ப்ரதர்'' என்று சொல்லி முடிக்கும் முன்பே அவன் சப்தமாகச் சிரித்தான்.

''இல்லை, இது கான்பிடன்ஸ் மட்டும் தான். வேண்டுமானால் ஒரு டெஸ்ட் வைத்து பார்த்து விடுவோம்.

சரியா? இன்னும் ஐந்து நிமிடங்களுக்குள் உன் கமிஷனரிடம் இருந்து உனக்கு போன் வரும். ரெடியா இரு'' என்று நம்பிக்கையுடன் சொல்ல, அவன் சிரித்தான்.

''வானதி நம்மைச் சேர்த்துப் பார்த்து இருக்கிறாள் என்பதை வைத்து ரெண்டும் ரெண்டும் நாலு என்று கணக்குப் போடுகிறாய்...''

''நான் போடுவது சரியான கணக்கா இல்லையா? அதைச் சொல்லு. நான் சொன்ன மாதிரி இன்னும் ஐந்தே நிமிடத்தில், போன் வந்தால், என் பிளானும் வேலை செய்யும்'' என்று விவேக் உறுதி அளிக்க மறுப்பாக தலை அசைத்தான் சதீஷ்.

இருவரும் விவாதம் செய்து கொண்டு இருந்தபோது சதீஷின் அலைபேசி ஒலி எழுப்பி, அது கமிஷனரின் அழைப்பு என்று சொல்ல இருவரும் ஒரே நேரத்தில் வெடித்துச் சிரித்ததைப் பார்த்த வானதியின் மனமோ கொதித்தது.

* * *

அம்மாவின் கோபத்துடன் கண்ணீரையும் சேர்த்து பார்த்த வானதிக்கு, மனம் ஒரு நிலையில் இல்லை. தான் செய்தது சரி தான் என்ற எண்ணமும், கூடவே தன் தாயின் வருத்தம் ஏற்படுத்திய வலியுமாக ஹாலில் இருந்து மாடிக்கு, கனத்த இதயத்துடன் வந்து சேர்ந்தாள்.

கால்கள் தானாக கண்ணாடி சுவரின் அருகே சென்றது. அவளுக்கு நினைவு தெரிய ஆரம்பித்ததில் இருந்து பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாக அவளின்



சாதனைகளையும் சோதனைகளையும் பகிர்ந்து கொள்ளக் கூடிய அந்த இடம் அவள் மனதுக்கு நெருக்கமானது.

மனம் ஓரளவுக்கு கட்டுக்குள் வர, சுழன்ற பார்வை வட்டத்தில் அருகே இருந்த அந்த அடுக்கு மாடி குடியிருப்பின் பால்கனியில் தெரிந்த 'அந்த காட்சி' அவளை கொதிக்க வைத்தது.

என்ன அநியாயம்? ஏ.சி.பி. என்று சொல்லி உள்ளே வந்தவன் இவனோடு ஜோடி போட்டு பால்கனியில் உட்கார்ந்து காபி குடித்துக் கொண்டு இருக்கின்றானே? அவனது தொப்பி இல்லாத தோற்றம், அவன் அமர்ந்து இருந்த முறையுமே இவன் விவேக்குடன் நிறைய நாட்கள் பழகியன், நெருக்கமான தொடர்பு உடையவன் என்று அடித்துச் சொன்னது.

அதற்கு மேல் விவேக் நின்று இருந்த தோரணை எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றியது. இடது கையால் தலையைக் கோதியபடி, பால்கனி சுவற்றில் ஒரு காலை மடித்து நிறுத்தி, ஸ்டைலாக கோப்பையை அவன் பிடித்து இருந்த பாவனை, மலர்ந்த முகத்துடன் அவன் பேசிக் கொண்டு இருந்த தோரணை, இரண்டுமே அவனுக்கு எந்தப் பதட்டமும் இல்லை. வெகு நாள் நெருங்கிப் பழகிய ஒருவனோடு, ரசனையுடன் எதையோ பகிர்ந்து கொண்டு இருக்கிறான் என்று சொன்னது.

சுர்ரென்று கோபம் ஏற, அவசரமாக அலைபேசியில் பாலசந்தரை அழைத்தாள் வானதி. ''அங்கிள் நான் வானதி பேசுகிறேன். இப்ப நீங்க ப்ரீயா? ஒரு இரண்டு நிமிஷம் பேசலாமா?'' என்று கேட்டவளின் குரலில்

எரிமலை வெடித்த குழம்பின் சூடு இருக்க அவர் குழம்பினார்.

"சொல்லும்மா, என்ன விஷயம்?"

"எங்க வீட்டுக்கு நாலு மணிக்கு ஒரு 'நல்ல ஆபீசரை' அனுப்புங்க என்று சொன்னேனே..." என்று ஆரம்பிக்கும் முன்பே இடையிட்டார்.

"அடையார் ஏ.சி.பி. சதீஷ் தவன் சொல்லி இருந்தேனே. வரலையா?" என்று அவர் கேட்க பல்லைக் கடித்தாள்.

"வந்தார் வந்தார்..."

"அதை ஏன் இழுத்த மாதிரி சொல்கிறாய்? என்ன ஆச்சு?"

"ஒரு உயர்ந்த பதவியில் இருக்கும் காவல்துறை அதிகாரியை குறை சொல்ல எனக்கு இஷ்டம் இல்லை. ஆனால் அவர் செய்யும் காரியம் சொல்லிக் கொள்வது மாதிரி இல்லை. யார் மீது புகார் கொடுத்தேனோ, அவருடைய வீட்டின் பால்கனியில் அமர்ந்து, புகார் கொடுத்த நபருடன் சேர்ந்து சாப்பிட்டபடி கதை அளந்து கொண்டு இருக்கிறார்."

"அவன் ரொம்ப நேர்மையான ஆபீசர். உயர் அதிகாரி ஆனாலும் சரி, அரசியல்வாதி ஆனாலும் சரி, யாரை யுமே சட்டையே செய்ய மாட்டான்..."

"அதிகாரத்திற்கு பணியாமல் இருப்பதாகக் காட்டிக் கொண்டு பணத்திற்கு பணியலாம் அல்லவா?" என்று வானதி முடிக்கும் முன்பே அவரின் குரல் வேகமாக வெளி வந்தது.



"நோ வானதி, சர்வீசுக்கு வந்த மூன்று வருஷத்தில் ஏழு முறை மாற்றல் ஆகி இருக்கிறான் என்றால் அவ னைப் பற்றி நீ தெரிந்து கொள்ளலாம். ஒரு இடத்தில் அவனுடைய அதிகபட்ச சர்வீஸ் எட்டு மாதங்கள் மட்டுமே. தமிழ்நாடு கூட கிடையாது. மகாராஷ்ட்ராவில் இருந்து வந்தவன். உயர்ந்த கொள்கையோடு இருப் பவன். அபாண்டமாகப் பேசாதே..."

"அங்கிள், யாரையும் குறை சொல்லணும் என்பது என் நோக்கம் கிடையாது. ஆனால் பிராட் என்று நீங்க சொன்ன ஒரு ஆளுடன் அவருக்கு என்ன உறவு இருக்க முடியும்?"

"தெரியலைம்மா. ஆனால் அவன் நல்லவன். அதை என்னால் நிச்சயமா சொல்ல முடியும். அதனால் தானே நானே உங்க அம்மாவிடம் கூட அவனை உனக்குப் பார்க்கச் சொல்லி..."

"அங்கிள்... போதும்..."

"சரி விடு. உனக்குப் பிடிக்காத எதுவும் நடக்காது. நான் அவனிடம் என்ன விஷயம் என்று விசாரித்துவிட்டுச் சொல்கிறேன். மனசை போட்டுக் குழப்பிக் கொள்ளாமல் இரு" என்று ஆறுதல் சொல்லிவிட்டு அவர் போனை வைத்த பிறகும் வானதியின் மனம் ஆறவில்லை.

'அம்மா' என்று அவள் அலறியது அடுத்த கட்டிடத் திற்கே கேட்டு இருக்கும்போது கீழே இருந்த கஸ்தூரிக்கு கேட்காமல் இருக்குமா?

"எதுவா இருந்தாலும் இங்கே வந்து பேசு. என்னால் படி ஏறி இப்ப வர முடியாது" என்ற அம்மாவின் பதில்

முடியும் முன்பே அவள் கீழே பூஜை அறையில் அம்மாவின் முன்பு நின்று இருந்தாள்.

"அடையார் ஏ.சி.பி.யை உங்களுக்கு ஏற்கனவே தெரியுமா?"

"இப்ப கொஞ்ச நேரம் முன்பு வந்த தம்பி தானே? தெரியும்."

"எப்படித் தெரியும்?"

"பாலா அண்ணன் அறிமுகப்படுத்தி வச்சாங்க. இரண்டு மூன்று முறை நம் வீட்டுக்கு வந்து இருக்கிறார். நான் உன் அம்மா வானதி. எனக்கு வயது ஐம்பதைத் தாண்டுது. நீ எனக்கு ஒரே பெண். எனக்குப் பிறகு உன் நிலை என்ன என்று எனக்குக் கவலை வராதா? அதைத் தீர்க்க வழி தேட மாட்டேனா?"

"அப்படித் தேடிக் கண்டு பிடித்த வழி தான் இந்த சுயம்வரமா?"

"சுயம்வரமா? என்ன உளறுகிறாய் வானதி...?"

"காலையில் ஒருவன் நேரில், ஒருவன் போனில், மாலையில் வேறு ஒருவன் நேரில், இந்த அழகில், இருவரும் ஒருவரை ஒருவர் தெரிஞ்சவங்க போல. ரொம்ப நல்லா இருக்கும்மா உங்க ப்ளான்..." என்றவளின் குரலில் கோபம் கொந்தளித்தது.

"வாய்க்கு வந்தபடி பேசாதே வானதி. விவேக்கும் அந்த ஏ.சி.பி.யும் நண்பர்களா? அதெல்லாம் எனக்குத் தெரியாது. நான் யாரையும் ப்ளான் பண்ணி வரச் சொல்லவில்லை..."

"என்ன விளையாடுறீங்களா?"



"நான் விளையாடலை. அந்த ஏ.சி.பி.யை வரச் சொன்னது நீ. அவரிடம் விவேக்கைப் பிடித்துப் போகச் சொன்னது நீ. எதுக்கு என்னிடம் வந்து கூப்பாடு போடுகிறாய்?" என்றவரின் குரலில் அவளுக்குக் கொஞ்சமும் குறையாத கோபம் கொப்பளிக்க அவளின் குரல் வலிமை இழந்தது.

"விவேக்கை உங்களுக்கு ஏற்கனவே தெரியும். அப்படித்தானே?"

"ஆமா! தெரியும்..."

"எப்படித் தெரியும்?"

"உங்க அத்தை சொல்லி தெரியும்."

"அவங்களுக்கு எப்படித் தெரியும்?"

"சென்னையில் ஒரு வேலையா என் தோழியின் மகன் வருகிறான் அவனுக்கு வீடு பார்க்க, செட்டில் ஆக கொஞ்சம் உதவி பண்ணுங்க என்று சொன்னாள்."

"அத்தை ஏன் என்னிடம் சொல்லவில்லை?"

"நீ தான் வெளி உலகத் தொடர்பே வேண்டாம் என்று முதல் மாடியிலேயே குடி இருக்கிறாயே? உங்க அத்தையுடன் நீ பேசி ஆறு மாசம் ஆகப் போகிறது. பிறகு எப்படிச் சொல்வாள்?"

"அவர் என்ன செய்கிறார் என்று சொல்லவில்லையா?"

"நான் கேட்கவில்லை..."

"ஏன்...?"

"நான் மனிதர்களை நம்புபவள். அனாவசியமாக சந்தேகப்படத் தெரியாது. சொன்னது என் கணவருடன்

பிறந்தவள். தூண்டி துருவ எனக்கு அவசியம் இல்லை. அவளின் தோழி, எனக்கும் தோழி, தோழியின் மகன் எனக்கும் மகன் மாதிரி.''

''இதை ஏன் என்னிடம் முன்பே சொல்லவில்லை? இன்று காலையில் பாலா அங்கிளை பார்க்கப் போகும் முன்பு சொல்லி இருக்கலாமே?''

''நீ என்னிடம் கேட்டு, நான் சொல்லவில்லையா வானதி?''

''அம்மா! இது விதண்டாவாதம்...''

''எது விதண்டாவாதம் வானதி?'' என்ற தாயின் கூர்மையான பார்வையை நேராகச் சந்திக்க முடிய வில்லை.

''அம்மா! நாலு நாளுக்கு ஒரு பையனாக அறிமுகம் செய்து வைத்து இவன் எப்படி? அவன் எப்படி? என்று கேட்டுக் கொண்டு இருந்தால் நான் எப்படி உங்களிடம் சாதாரணமாகப் பேச முடியும்? இப்ப சொல்லுங்க. அவர் என்ன செய்கிறார்? மும்பையில் நியூஸ் சேனலில் வேலை செய்யவில்லை என்று போலீசில் சொன்னார் களே? உங்களுக்கு அவரைப் பற்றி என்ன தெரியும்?''

''காலையில் உன்னிடம் சொன்ன தகவல் தான் எனக்குத் தெரியும் வானதி.

''பொய் சொல்றீங்க...''

''பொய் சொல்ல வேண்டிய அவசியம் எனக்கில்லை. நான் இந்த சென்னை எல்லையை விட்டுத் தாண்டி வெளியூர் போய் இருக்கிறேனா? அவராக சொன்னதை விடக் கூடுதல் தகவல் எனக்கு எப்படித் தெரியும்?''



''அப்ப இப்பவே அத்தைக்கு போன் பண்ணி கேளுங்க...''

''என்ன கேட்கணும்?''

''அவர் எங்கே வேலை செய்கிறார் என்று.''

''அதைத் தெரிந்து கொண்டு நீ என்ன செய்யப் போகிறாய்?'' என்று கஸ்தூரி கேட்ட கேள்விக்கு பதில் சொல்லத் தெரியாமல் வானதி திகைத்து நிற்க, வாசலில் அழைப்பு மணி ஒலித்தது. அவன் மீண்டும் வந்து விட்டானா? எரிச்சலுடன் திரும்பிப் பார்த்தாள்.

வாசலில் அவளுடைய மழலையர் பள்ளியில் இருக் கும் குழந்தை பிருந்தாவுடன், அவளின் தாய் நின்று இருந்தாள். அவசரமாக தங்களின் உணர்வுகளை ஓரம் கட்டிவிட்டு அவர்களை உள்ளே அழைத்தனர்.

''வா வா, பிருந்தா செல்லம், என்னக்கா இந்த நேரத்தில் வந்து இருக்கீங்க?'' என்று இருவரையும் வரவேற்ற வானதியைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

''நல்லா இருக்கியா வானதி. இப்ப எல்லாம் உன்னை சபாவில் பார்க்கவே முடியவில்லையே? எல்லாவற் றையும் மறந்து விட்டாயா வானதி?'' என்று சொல்ல அவள் அவசரமாகப் பேச்சை மாற்றினாள்.

''அக்கா பிருந்தா செம ஸ்மார்ட். எல்லா ரெண்டு வயசு குழந்தைகளும் ஆங்கிலத்தில் பா பா ப்ளாக் ஷீப்பும், ட்விங்கிள் ட்விங்கிள் லிட்டில் ஸ்டாரும் தான் பாடிக்கிட்டு இருக்கும். ஆனால் உங்க பொண்ணு. அம்மா இங்கே வா வா என்று தமிழ் பாட்டு பாடுகிறாள். யார் சொல்லிக் கொடுத்தது?'' என்று பாராட்ட அவளும் அதில் மூழ்கி, தான் ஆரம்பித்த பேச்சை மறந்தாள்.

''அது சம்பந்தமா விசாரிக்க தான் வந்தேன். அலுவலகத்தில் இருந்து வீட்டுக்கு வந்து ஒரு காபி குடிக்கக் கூட விடவில்லை. வீ என் அங்கிளைப் பார்க்கணும் என்று ஒரே அடம்'' என்றதும் அதிர்ச்சியுடன் அவள் அம்மாவைத் திரும்பிப் பார்த்தாள்.

''யார் அவர் வானதி? எங்கே இருக்கிறார்? உங்க வீட்டுக்கு வந்த கெஸ்டா? சொந்தக்காரரா? இப்ப இருக்கிறாரா? பார்க்கலாமா? நீயும் பிருந்தாவும் இருந்த அழகான போட்டோ அவர் மொபைலில் பார்த்தாளாமே?'

கேள்விகள் மேலும் மேலும் அலை அலையாகத் தொடர்ந்து வர, அந்தக் கடைசி கேள்வியில் அதிர்ச்சியில் சிலையாகிப் போனாள் வானதி.

## 6

'நீயும் பிருந்தாவும் இருந்த போட்டோ விவேக்கின் மொபைலில் இருந்ததை, பிருந்தா பார்த்து இருக்கிறாள்' என்று அவள் சொன்ன செய்தி வானதியை நிலை குலைய வைத்தது. மூன்று வயது நிரம்பாத ஒரு சின்னக் குழந்தைக்குத் தெரிந்த ஒரு விஷயம் தனக்குத் தெரியவில்லை.

பிருந்தாவும் அவனும் எங்கே பார்த்து எப்படிப் பழகினார்கள்? ஒரே நாளில் இவ்வளவு தூரம் பழகி அவள் மனதில் இடம் பிடிக்க முடியுமா? இன்று



காலையில் அவன் இங்கே இருந்த ஒரு மணி நேரமும் தானும் கூடவே இருந்தோமே? ஏற்கனவே பழக்கம் என்றால் அது எப்படி சாத்தியம்? அவன் இந்த வீட்டிற்கு ஏற்கனவே பலமுறை வந்து போய் இருக்கின்றானா என்ற கேள்வி தோன்ற, அவளுக்கு கண்களை இருட்டிக் கொண்டு வந்தது.

தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது? யார் இவன்? இவனுக்கு தன் அம்மா உட்பட இன்னும் எத்தனை பேர் கூட்டாளிகள்? மகளின் முகத்தில் மாறி மாறித் தோன்றிய உணர்வுகளைப் பார்த்ததுமே அவள் இப்போதைக்குப் பேச மாட்டாள் என்று கஸ்தூரிக்குத் தோன்றி விட்டது.

''உட்காருங்க பிருந்தாம்மா. என்ன சாப்பிடுறீங்க?'' என்று சூழலை சகஜமாக்க, கஸ்தூரி விசாரித்ததும், தன் சிந்தனையில் இருந்து மீண்டு வெளியே வந்தாள் வானதி.

''அதெல்லாம் வேண்டாங்க. பிருந்தா கேட்கும் அந்த வீ.என். அங்கிளை கண்ணில் காட்டினால் போதும். அவர் இங்கே இருக்கிறாரா?''

''இல்லைக்கா, அவர் இங்கே இல்லை...'' என்று விளக்கம் சொல்வதற்கு முன்பே பிருந்தாவின் மழலை வெளிப்பட்டது.

''அங்கிள் மேலே...'' என்று மாடியை கை காட்டியபடி அம்மாவின் கையைப் பற்றி இழுக்க அவள் தர்ம சங்கடமாக புன்னகை செய்தாள்.

''இங்கே இல்லை என்றால் வெளியே சென்று இருக்கிறாரா? எப்போ வருவார்?'' என்ற அடுத்தடுத்த

கேள்விக்கு மகள் என்ன சொல்லப் போகிறாளோ என்ற பயத்தில், கஸ்தூரி அவசரமாக இடை புகுந்தார்.

''அவர் எங்களுக்குத் தூரத்துச் சொந்தக்காரர். இங்கே பக்கத்து பிளாட்டில் குடி இருக்கிறார். பி 23, பார்க்க வேண்டும் என்றால் நீங்க அங்கே போய் பாருங்க'' என்று அவர்களை மூட்டை கட்ட முயல, வானதி முறைத்தாள்.

''இல்லை. புதுசா இன்னொரு வீட்டுக்கு முன்னே பின்னே சொல்லாமல் போனால் நல்லா இருக்காது. நான் கிளம்புகிறேன்...'' என்று விடை பெறும் போதே அவரின் கைபிடியில் இருந்து விலகி ஓடி 'அங்கிள்...' என்ற உற்சாகக் கூச்சலுடன் ஓடி போய் அவன் கால் களை கட்டிக் கொண்டாள் பிருந்தா.

"ஹேய்! பார்பி டால், இந்நேரத்துல இங்கே என்ன பண்ணுகிறாய்?'' என்று விசாரித்தபடி அவளைத் தூக்கி கன்னத்தில் ஒரு முத்தம் வைத்தவன் முகம் மலர்ந்து இருந்தது.

''அங்கிள்... மம்மி...'' என்று விரலை அம்மாவை நோக்கி நீட்ட அவன் புன்னகை செய்தான்.

''உங்க பொண்ணு ரொம்ப ஸ்வீட் மேடம். ஒரு விஷயத்தை ஒரு செகண்ட் ஒரு தடவை பார்த்தால் மறப்பதே இல்லை தெரியுமா?'' என்று அவரிடம் பேசியவன் கண்கள் வானதியிடம் ஒரு முறை பாய்ந்து மீண்டது.

''ஹலோ சார். பிருந்தாவுக்கு வாய் ஓயாமல் உங் களைப் பற்றி தான் பேச்சு. சாரி, அதனால் தான் இந்த



நேரத்தில் உங்களைத் தொந்தரவு செய்ய வேண்டிய தாகப் போய் விட்டது.''

''தொந்தரவு எல்லாம் இல்லை. உங்களுக்கு ஆட் சேபணை இல்லை என்றால் எங்க வீடு பக்கத்தில தான் இருக்கு வாங்க. வரீங்களா பார்பி...?''

இல்லை, இன்னொரு நாள் வருகிறோம். இப்ப ''அவள் வரைந்த படத்தை உங்களிடம் காண்பிக்க வேண்டும் என்று அடம் பிடித்தாள். அதான்.''

''என்ன படம் வரைஞ்சீங்க பார்பி...'' என்று சிரிப் புடன் அவளிடம் விசாரித்தான்.

''மை நேம் இஸ் பிந்தா. பார்பி இல்ல'' என்று திருத்த அவன் சிரித்தான்.

பிருந்தா, அவளின் தாய், விவேக், மூவருமே நெடுநாள் பழகியவர்களைப் போல பேசிக் கொண்டு இருந்ததைப் பார்த்த வானதிக்கு மயக்கமே வரும் போல இருந்தது.

தான் வானதியின் வீட்டில் இருக்கிறோம் என்ப தையோ, சில நிமிடங்கள் முன்பு அவள் தன்னை காவல் துறையில் பிடித்துக் கொடுத்தாள் என்ற ஒரு எண் ணமோ அவன் முகத்திலும் செயல்களிலும் எட்டியும் பாராமல் இருப்பதை வானதியால் நம்பவே முடிய வில்லை.

என்ன மனிதன் இவன்? இப்படிக் கூட சொரணை இல்லாமல் ஒரு ஆள் இருக்க முடியுமா? ஆனால் அவளுடைய சிந்தனையை யாரும் அங்கே கண்டு கொள்ளவே இல்லை. உரையாடல் தொடர்ந்தது.

"நீ மற்றவர்களுக்கு எப்படி வேண்டுமானாலும் இருந்துக்கோ. எனக்கு நீ பார்பி தான்! என்ன படம் வரைஞ்சீங்க? எனக்கு சொல்லவே இல்லையே?"

"நான் பிங்க் கலர் ஸ்டார் வரைஞ்சு இருக்கேன்."

"பிங்க் ஸ்டார் சூப்பரா இருக்குடா செல்லம்."

சிறு குழந்தையிடம் மழலையில் பேசி, அவளைக் கொஞ்சி தாயுடன் வழி அனுப்பி விட்டு திரும்பிய விவேக்கின் முன்பு கோபம் கொப்பளிக்கும் கண்களுடன் நின்று இருந்தாள் வானதி. அவளிடம் ஒரு வார்த்தை கூட பேசாமல் வீட்டைவிட்டு வெளியேற, வானதிக்குக் கோபம் பொங்கியது. நாக்கைப் பிடுங்குவது போல நாலு கேள்வி கேட்காமல் விடுவதா என்ற கோபமும் போகாமல், அவனை அழைக்கவும் பிடிக்காமல், அவள் தடுமாற, வாசல் வரை சென்று விட்டு நிதானமாகத் திரும்பினான் விவேக்.

"கூப்பிட்டீங்களா? என்னவோ சொல்ல வர மாதிரி இருக்கே?" என்று புன்னகையுடன் கேட்க அவள் மேலும் கீழுமாக தலை அசைத்தாள்.

"எஸ். சொல்லுங்க மிஸ் வானதி."

"எல்லா போலீஸ்காரங்களும் உங்க பாக்கெட்டில் இருக்காங்க என்று நினைப்பா?" என்று கேட்டதும், சட்டென்று தன் பாக்கெட்டை விலக்கிப் பார்த்து விட்டு உதட்டைப் பிதுக்கி மறுப்பாக தலை அசைத்தான் விவேக்.

"கடவுளே" என்று எரிச்சலுடன் முனக அவன் சரியாகக் காதில் விழாதது போலத் தன் வலது கையைக்



காதில் குவித்து வைத்துக் கேட்பது போல பாவனை செய்து, "என்ன சொல்றீங்க? காது கேட்கலை. கொஞ்சம் சப்தமா பேசுறீங்களா?" என்றதும் அவளின் கோபம் ஏறியது.

"உங்க மொபைலில் என் போட்டோ இருக்கா?"

"இதோ என் மொபைல். நீங்களே செக் பண்ணிக்கோங்க. பாஸ்வேர்ட் எதுவும் கிடையாது" என்று அடுத்த வினாடியே அவன் அலைபேசியை நீட்ட அவள் குழம்பினாள். இதென்ன இவ்வளவு ஈசியாக மொபைலை எடுத்து நீட்டுகிறான்? படம் இல்லையா? இருந்து ஒருவேளை இப்போது அழித்து விட்டானா? அதனால் தான் தைரியமாக நீட்டுகிறானோ?

"தேவை இல்லை" என்று மறுத்தவளுக்கு அவன் நீட்டிய அலைபேசியை வாங்கப் பிடிக்கவில்லை.

"பின்னே பிருந்தாக்கு எப்படி உங்களைத் தெரியும்?"

"பிருந்தாம்மாவை எனக்கு நான் பிறந்த நாளில் இருந்தே தெரியும். ஆனால் அது உங்களுக்குத் தெரிய வாய்ப்பில்லை. நாம் இதற்கு முன்னால் அதிகம் சந்தித்ததே இல்லையே?"

"நான் சொன்னது பிருந்தா அம்மாவை இல்லை. பேபி பிருந்தா. நீங்க இந்த வீட்டுக்கு இதற்கு முன்னால் வந்து இருக்கீங்களா?"

"இரண்டு முறை வந்தேனா? காலையில் ஒரு முறை, இப்ப நாலு மணிக்கு ஒரு முறை..."

"ரொம்ப புத்திசாலி தனமா பேசுறதா நினைப்பா? நான் இன்று வந்ததைச் சொல்லவில்லை. இதற்கு

முன்னால் வந்து இருக்கீங்களா? பிருந்தா பேபியைத் தெரியுமா? அவளுக்கு பாட்டு சொல்லிக் கொடுத்தீங் களா என்று கேட்டேன்...''

''பேபி பிருந்தாவைத் தெரியும். அந்த பேபி பிருந் தாவை உனக்குப் பிடிப்பதற்குக் காரணமான மதுரையில் இருக்கும் உங்க அத்தை. பிருந்தாம்மாவையும் நல்லாத் தெரியும்'' என்று அழுத்திச் சொல்ல அவளின் முகம் நிறம் இழந்தது.

''ப்ருந்தாம்மா...? ஏ...ப்...ப...டி...? ஏன்...?''

தொண்டைக்குள் சிக்கிக் கொண்ட வார்த்தைகள் வெளியே வர முடியாமல் சிக்கித் தவிக்க, அவன் அவ ளின் அருகே வந்து, ஆள்காட்டி விரலால், முகவாயை நிமிர்த்தி கண்களுக்குள் ஊடுருவினான்.

''நீ பிறப்பதற்கு முன்பிருந்தே, எனக்கு ஆன்ட்டியாக இருந்தவர், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அன்னை யாகவும் ஆகிவிட்டார். அவருக்காக நான் என்ன வேண்டு மானாலும் செய்வேன். உன்னைத் திருமணம் செய்து கொள்வது உட்பட...'' என்று அழுத்தமான குரலில் சொல்லிவிட்டுத் திரும்பி நடந்தவனை திகைப்புடன் பார்த்துக் கொண்டே நின்றாள் வானதி.

''எங்கே வானதி அந்த தம்பி? இவ்வளவு நேரம் பேச்சு சப்தம் கேட்டுக் கொண்டு இருந்ததே? அவருக்கு குடிக்க ஜூஸ் எடுத்து வந்தேன்...'' என்ற விசாரணையுடன் வந்த அம்மாவைத் திரும்பி முறைத்தாள்.

''நீங்க எனக்கு அம்மாவா? அவருக்கு அம்மாவா?''

''எதுக்கு இந்த குதர்க்கமான கேள்வி?''



''கேட்கிற கேள்வி ஒன்றுக்குக் கூட நேரடியா பதில் சொல்வதில்லை. எதைக் கேட்டாலும் பதிலுக்கு இன்னொரு கேள்வி. இல்லை என்றால் புதிராக ஒரு பதில், யாரும்மா இவன்? இவனை எதற்காக அத்தை இங்கே அனுப்பி இருக்காங்க?'' என்று பொரிந்த வானதி, ''உன்னைத் திருமணம் செய்து கொள்வேன்'' என்று அவன் சொன்னதைச் சொல்லவில்லை.

வானதி சொன்னது காதிலே விழாதது போல, பூஜை அறைக்குள் நுழைய, ''உங்க கிட்டே தானே கேட்கிறேன். ஏதாவது பதில் சொல்றீங்களா?'' என்று மீண்டும் கேட் டாள்.

''தெரிந்தால்தான் சொல்ல முடியும் வானதி? என்ன பதில் சொல்லணும் இப்ப உனக்கு?''

''உங்களுக்குத் தெரியவில்லை என்றால் அத்தைக்குத் தெரிந்து இருக்குமே? போன் பண்ணி விசாரிங்க என்று சொல்வது காதில் விழலையா?''

''நீ சொல்வது என் காதில் விழுகிறது. ஆனால் நான் சொல்லும் பதில் தான் உன் மண்டையில் ஏறவில்லை. அத்தையிடம் பேச எனக்கு விஷயம் இல்லை. உனக்கு ஏதாவது வேண்டும் என்றால் நீயே கேட்டுக்கோ...''

''நான் அவங்களோடு பேசுவதில்லை என்று உங் களுக்குத் தெரியாதா?''

''அது உனக்கும் அவளுக்கும் இடையில் இருக்கும் பிரச்னை.''

''அம்மா.''

''சும்மா கத்தாதே. ஆறு மணி ஆகப் போகிறது. நான் விளக்கேற்றப் போகிறேன். உனக்கு விவேக் பற்றி

ஏதாவது கேட்க வேண்டும் என்றால் உங்க அத்தைக்கு போன் பண்ணி கேட்டுக்கோ. என்னை ஆளை விடு.''

அம்மாவின் பேச்சில் இருந்த உறுதியான தன்மையைப் பார்த்துவிட்டு, ''உன்னைத் திருமணம் செய்து கொள்வேன்'' என்று சவால் விடும் திமிர் பிடித்தவனை விட, அவளின் நன்மையை உயிராக நினைக்கும் அத்தையிடம் பேசுவதே மேல்' என்ற எண்ணத்துடன் தொலைபேசி நோக்கி நகர்ந்தாள்.

''ஹலோ யார் பேசறது?'' என்ற அத்தையின் குரலை நீண்ட நாட்களுக்குப் பிறகு கேட்டதும் கண்களில் நீர் துளிர்த்தது. ''அத்தை. நான் மதி பேசறேன்...'' என்றவளின் குரல் தொண்டையை விட்டு வெளியே வரவே இல்லை.

''ஹலோ, யாருன்னு கேட்கறேன் இல்ல? பதில் சொல்ல மாட்டியளோ? வாயில் என்ன கொழுக்கட்டையா இருக்கு?'' பிருந்தா அதட்ட வானதி என்ற சிலைக்கு உணர்வு வந்தது.

உயிரில் இருக்கும் சக்தியை எல்லாம் திரட்டி, ''அ..த்..தை..'' என்ற ஒற்றை வார்த்தையை அவள் சொல்லும் முன்பே தொலைபேசி வைக்கப்பட்டு இருந்தது.

## 7

தன் குரலைக் கேட்டதும் அத்தை தொலைபேசி இணைப்பைத் துண்டிக்கக் கூடும் என்பது தெரிந்து



இருந்ததால், அவளுக்கு அதிர்ச்சியோ, ஆச்சரியமோ இல்லை என்ற போதும், அந்த உதாசீனம் தந்த வலி, வானதியை மீண்டும் ஒருமுறை தாக்கியது.

'இதுதான் நிலைமை வேண்டும் என்றால் எடுத்துக்கோ, இல்லை என்றால் நடையைக் கட்டு' என்று அம்மா எப்போதுமே கறாராக இருப்பவர்!

ஆனால் அத்தை அப்படி இல்லை. கஸ்தூரிக்குச் சொல்லிக் கொள்ளும்படி பிறந்த வீடு இல்லாததும், பிருந்தாவுக்கு ஒரே மகன் என்று ஆகிப் போனதும், மட்டும் இல்லாமல் கஸ்தூரிக்கு பிரசவம் நடந்தபோது துணைக்கு வந்து இருந்தது பிருந்தா தான்.

தன்னை தரையில் நடக்கக் கூட விடாமல் உள்ளங்கையில் தாங்கியவர். பிறந்ததில் இருந்தே அவள் அத்தை செல்லம் தான்! அத்தைக்கு மட்டுமா? அத்தை பெற்ற அந்த அழகு மகனுக்கும் கூட தான்...!

வானதி, பிருந்தா அத்தையுடன் சாதாரணமாகப் பேசி ஆறு மாதங்களுக்கு மேலே இருக்கும். இரண்டு மாதங்களுக்கு முன்பு. அப்பாவின் மறைவின் போது அவர் அடித்து புரண்டு ஓடி வந்து இருந்த போதும், முதல் இரண்டு நாட்கள் மட்டுமே, ஆரம்ப கால கட்ட அதிர்ச்சியிலும், அழுகையிலும் வருத்தத்திலும் அவளிடம் பேசினார் பிருந்தா. அதன் பிறகு காரியம் முடியும் வரை இங்கே தங்கி இருந்தாலும், படிப் படியாகக் குறைந்து அவர்களுக்கு இடையே பேச்சு வார்த்தை நின்றே போனது.

அதற்குக் காரணம் அவர் இல்லை. அவள் தான்! அவளின் எடுத்தெறிந்த பேச்சு தான். அந்த குற்ற

உணர்வு வானதியின் மனதில் அழுத்தமாகப் பதிந்து இருந்ததாலேயே, பிருந்தா தொலைபேசி இணைப்பைத் துண்டித்ததைப் பற்றிக் கவலைப்படாமல் மீண்டும் அழைத்தாள்.

மீண்டும் மீண்டும் இணைப்பினைத் துண்டித்த போதும், விடாமல் முயன்ற வானதியின் ஆசை நான் காவது முயற்சியில் நிறைவேறியது. பிருந்தா அத்தை பேசவில்லை என்றாலும் இணைப்பு துண்டிக்கப்பட வில்லை.

''அத்தை, நீங்க பேசவில்லை என்றாலும் நான் பேசு வதைக் கேட்கறீங்க என்பதே எனக்கு சந்தோஷம்தான்...''

''அடி தங்கம்! நான் பேசுவதை விட பேசாமல் இருப்பது தான் உன் அடி மனசில் உறுத்திக் கொண்டே இருக்கும் என்பதால் தான் கண்ணு இப்படி பேசாமல் இருந்து உன்னையும் வாட்டி என்னையும் வதைத்துக் கொள்கிறேன்' என்று மனதுக்குள் புலம்பியபடி அமைதி காத்தார் பிருந்தா.

''நான் சொன்னது தப்பு தான் அத்தை! உங்களை அப்படிச் சொல்லி இருக்கக் கூடாது. என்னை மன்னிச் சுடுங்க. உங்களுக்கு என்னைத் திட்டவும் ஆலோசனை சொல்லவும், எல்லா உரிமையும் இருக்கு அத்தை. உங்களுக்கு மட்டும் தான் இருக்கு அத்தை...''

''.....''

''உங்களுக்கு பிள்ளை மேலே பாசமே இல்லை என்று நான் சொன்னது கொடுமையான அமிலத்திற்கு ஈடான வார்த்தைகள். அதை நான் உங்களைப் பார்த்துச் சொல்லி இருக்கக் கூடாது. நான் தப்பு பண்ணி விட்டேன்.''



''இன்னும் கோபம் குறையலையா அத்தை? என் படிப்பில் இருந்து, பிடித்த உடை, நகை பொழுது போக்கு என்று எல்லாவற்றையும் சொல்லாமலேயே என் மனசுக்குள் என்ன ஒளிஞ்சு இருக்கு என்று கண்டு பிடிக்க முடிந்த உங்களுக்கு. நான் உங்க குரலைக் கேட்கத் துடிப்பது புரியலையா?''

இந்தக் குரலைக் கேட்டால் உடைந்து விடுவோம். தன்னை மீறி பேசி விடுவோம் என்று அவளிடம் பேசாமலே பொழுதைத் தள்ளிய பிருந்தாவின் உள்ளம் உருகி, மௌன சிறையின் சுவர்கள் நொறுங்க ஆரம் பித்தது.

''நான் இவ்வளவு கெஞ்சியும் பேச முடியலையா அத்தை? என்னை மன்னிச்சுட்டேன் என்று ஒரே ஒரு வார்த்தை மட்டும் சொல்லிடுங்க அத்தை. அதுக்கு மேலே நான் உங்களைத் தொந்தரவு பண்ணலை. உங் களுக்கு எப்ப வசதி படுதோ, அப்போ பேசுங்க அத்தை.''

அவளைக் கட்டி அணைத்து உச்சி முகர்ந்து, தேற்றத் துடித்த மனதைச் சிரமப்பட்டு அடக்கியதனால் பிருந் தாவின் கண்களில் அருவி கொட்ட ஆரம்பித்தது. மருமகளின் துயரத்தைத் தாங்க முடியாமல் தவிக்கும் அத்தையின் தவிப்பு புரியாமல் வானதியின் பேச்சு தொடர்ந்தது.

''மதி என்று ஒரு வாட்டி சொல்லுங்க அத்தை. ப்ளீஸ்.. என்னால் முடியலை'' என்றவளின் குரலில் கெஞ்சலும் கொஞ்சலும், ஏக்கத்துடன் கலந்து இருக்க, அது அவர் உயிரை உலுக்கியது. அவள் கால் கூட தரையில் பாவாமல் தன் மருமகளை, உள்ளங்கையில் வைத்துத்

தாங்க வேண்டும் என்று எண்ணிய காலம் நினைவில் தோன்றியது.

வானதிக்காக, அவள் தன்னைத் தானே உள்ளே வைத்துப் பூட்டிக் கொண்ட சிறையில் இருந்து மீட்பதற்காக, அவளின் எதிர்காலம் சிறப்பாக அமைவதற்காக, என்று அத்தனை நாள் வீம்புக்காக இழுத்துப் போர்த்து வைத்து இருந்த பிருந்தாவின் கவசம் நொறுங்கி தூள் தூளானது.

''மதி, மதி கண்ணு! என்ன பேசுற நீ? உன்னை மன்னிக்குற அளவுக்கு நீ ஒரு தப்பும் பண்ணலை! நான் தான் ஒரு வேகத்தில் உன்னிடம் பேசாமலே இருந்து விட்டேன். இப்ப எதுக்கு அழற நீ?''

அத்தை தன்னிடம் பேசி விட்டார் என்றதை அறிந்ததும் கண்களில் இருந்து அருவி பிறக்க அவளுக்கு தொண்டை அடைத்துக் கொண்டது. ''அத்தை... நான் உங்களை உடனே பார்க்கணும்...'' என்று திக்கித் திணறி கேவலுடன் அவளின் குரல் வெளிவரத் துடித்துப் போய் விட்டார் பிருந்தா.

''மதி எதுக்கு கண்ணு அழற? அழக் கூடாது கண்ணு. செல்லம், கண்ணைத் துடை. நீ இங்கே அழுது கரையும் போது அங்கே உங்க அம்மா என்ன பண்ணிக் கொண்டு இருக்கிறாங்க?'' என்று அவளைத் தேற்ற முயல, அவளின் விசும்பல் மேலும் அதிகமானதே தவிர குறையவில்லை.

''மதி, இப்ப நான் சொல்வதைக் கேட்கப் போகிறாயா இல்லையா? கண்ணைத் துடை முதலில். நான் இன்று இரவே கிளம்பிச் சென்னைக்கு வருகிறேன். எதுவா இருந்தாலும் நேரில் பேசிக் கொள்ளலாம். சரியா...?''



''ம்ம்ம்...''

''என்ன திடீர் என்று இவ்வளவு அழுகை கண்ணு? என்ன ஆச்சு? யார் உன்னை என்ன சொன்னா? அண்ணி எதுவும் திட்டினாங்களா?''

''ம்ஹூம்...''

''அப்பா ஞாபகம் வந்துச்சா?''

''இல்லை...''

''விவேக் உன்னை எதுவும் சொன்னானா?'' என்ற அத்தையின் கேள்வியில் திடுக்கிட்டு நிமிர்ந்தாள். அவள் அத்தைக்கு எதற்காக போன் பண்ணினாள்? என்ன செய்து கொண்டு இருக்கிறாள்?

விவேக்! இவனை எப்படி அவள் இத்தனை நேரம் மறந்து போனாள்? அவன் யார் என்று கேட்டறிய தானே போன் பண்ணியது? அவனை ஏன் இங்கே அனுப்பினீர்கள் என்று சண்டை போடத் தானே அவள் அத்தையை அழைத்தாள்? ஆனால் அவனைப் பற்றி அத்தையாக நினைவு படுத்தும் வரை அவன் யார் என்பதை அறிந்து கொள்ளும் எண்ணமே தனக்கு வரவில்லையே? அதற்கு என்ன காரணம்?

''கண்ணு, மதி! மதி செல்லம். லைனில் இருக்கியா?''

''...''

''விவேக் உன்னை எதுவும் சொல்லிட்டா, அதை மனசுல வச்சுக்காதே மதி. விளையாட்டு பிள்ளை. வாய் ஜாலம் அதிகம். ஆனால் ரொம்ப நல்லவன்...''

தன்னை உயிராக மதிக்கும் அத்தை என்ற எண்ணத்தில் ஆரம்பத்தில் அவர் மீண்டும் மீண்டும்

இணைப்பைத் துண்டித்த போதும் பொறுமையாக பேசியவள், விவேக் நல்லவன் என்று அவர் சான்றிதழ் கொடுத்த நொடியில் வெடித்தாள்.

''யார் அவன்? அவன் நல்லவனா கெட்டவனா என் பதைப் பற்றி எனக்கென்ன வந்தது? அவனுக்கு ஏன் நீங் களும் உங்க அண்ணியும் இவ்வளவு வக்காலத்து வாங்கு றீங்க? உங்கள் ரெண்டு பேருக்குமே என்னைவிட அவன் முக்கியமா போய்ட்டான் இல்லை?'' என்று கோபத் துடன் பொரிந்து விட்டு போனை வைத்துவிடத் திகைத்து நின்றார் பிருந்தா.

எனக்குப் பிடித்தவர்கள் எல்லோருக்கும் நீயும் பிடித்த மானவனாக இருப்பது ஏன்? என்னை அணு அணுவாக சித்திரவதை செய்வதற்கென்றே வந்தாயா நீ? யாருடா நீ? எங்கிருந்து வந்தாய்? வானதியின் மனம் பொரும, கண்களில் இருந்து அவளின் கட்டுப்பாட்டையும் மீறி கண்ணீர் வழிய ஆரம்பித்தது.

* * *

மாலை ஆறு மணி அளவில் கோவையில் இருந்த கௌசல்யா, அலைபேசி அழைக்க கண்டு வந்து எடுத்தார். பழக்கப்பட்ட எண்ணாகவும் இருந்தது. நல்லாத் தெரிந்த நபர். யோசனையுடன் எடுத்தார் கௌசல்யா.

''ஹலோ ஆன்ட்டி. நான் சென்னையில் இருந்து சதீஷ் பேசறேன்'' என்று சொன்ன பிறகும் அவரால் கண்டு பிடிக்க முடியவில்லை.

குரலைப் பார்த்தால் சின்ன பையன் மாதிரி இருக்கு. விவேக்கின் நண்பனாக இருக்கலாம். ஆன்ட்டி என்று



இவ்வளவு உரிமையாக அழைக்கிறானே? வீடு வரை வந்து பழகி இருந்து தனக்கு நினைவு இல்லை என்றால் அவன் என்ன நினைப்பான்? அவசரமாக நினைவலை களில் சதீஷ் என்ற பெயரைத் தேட முயன்றபடி பேச்சை தொடர்ந்தார்.

''நல்லா இருக்கியா? பார்க்கவே முடியலை. கோயம் புத்தூர் பக்கம் வரலையா?''

''நான் வருவது இருக்கட்டும். நீங்க எப்போ சென் னைக்கு வரப் போறீங்க?''

''நான் இப்போ சென்னைக்கு வருவது சிரமம் ஆச்சே? ஏன் அப்படிக் கேட்கிறாய்? ஏதாவது விசேஷமா?'' என்று பேச்சைத் தொடர்ந்தபடி இன்னும் இவன் யார் என்று தெரியலையே? அடுத்த வரியிலும் கண்டு பிடிக்க வில்லை என்றால் கேட்டுவிட வேண்டியது தான் என்று மனதிற்குள் முடிவு செய்து கொண்டார் கௌசல்யா.

''கியா போல் ரஹ்தே ஆன்ட்டி! நீங்க உடனே இங்கே வாங்க. அப்ப தான் உங்க பையனுக்கு நல்ல படியா கல் யாணம் பண்ணி வைக்க முடியும்...'' என்ற வாசகத்தில் அவருக்குள் விளக்கெரிந்தது.

''ஹேய் ஜாங்கிரி பார்ட்டி! எப்ப சென்னைக்கு வந்தாய்?''

''என்ன ஆன்ட்டி திடீர் என்று குரலில் இவ்வளவு உற்சாகம்? ஜாங்கிரி பார்ட்டி என்று இப்ப தான் கண்டு பிடிச்சிங்களா? நான் சென்னைக்கு வந்து ஒரு வருஷம் இருக்குமே?''

''ம்ம்ம்! விவேக் அதைச் சொல்லலை. சரி விடு. நீ எப்படி இருக்கிறாய்? நீ எப்போ கல்யாணம் பண்ணிக்கப்

போகிறாய்? நான் பொண்ணு பார்க்கட்டுமா?'' என்று சமாளிக்க அவன் சிரித்தான்.

''ஆன்ட்டி, இவ்வளவு நேரம் நான் யார் என்றே தெரியாமல், குத்து மதிப்பா தான் பேசிட்டு இருந்தீங்களா?'' என்று சிரிக்க அந்தச் சிரிப்பில் அவரும் சேர்ந்து கொண்டார்.

''ஒன்னு பேரை முழுசா சொல்லி இருக்கணும். அது இல்லை மும்பையை கோர்த்து விட்டு இருக்கணும். அது இரண்டையும் செய்யாதது உன் தப்பு. ஆனே தெரியாமல் எப்படி பாலிஷ்டா பேசினேன் பார்த்தாயா?'' என்று கௌசல்யா சிரிக்க அவனும் மனம் விட்டுச் சிரித்தான்.

''உங்க பேச்சுத் திறமையை இன்னிக்கு நேற்றா பார்க்கிறேன்? மூன்று வருஷமா பார்க்கிறேனே? உங்க சாமர்த்தியம் யாருக்கு வரும் ஆன்ட்டி? பேச்சுத் திறமை விடுங்க. உங்க மன தைரியம் எனக்கு மறக்கவே மறக்காது. விவேக் ஹாஸ்டலில் இருந்தபோது...''

''என்ன சொல்றான் உன் ப்ரெண்ட்? கல்யாணம் பண்ணிக் கொள்ளும் ஐடியா இருக்கா இல்லையா?'' என்று கௌசல்யா இடைமிட அவன் புரிந்து கொண்டான். அவருக்கு அதை பற்றி பேச இஷ்டம் இல்லை. அவரின் உணர்வுகளுக்கு மரியாதை கொடுத்துப் பேச்சை மாற்றினான் சதீஷ்.

''இன்னிக்கு ஈவினிங் எதிர்பாராமல் ஒரு இக்கட்டான சூழலில் விவேக்கை சந்தித்தேன். ஒரு நிமிஷம் ரொம்ப சங்கடமா போச்சு. பிறகு சமாளித்தேன்.''

''என்ன சொல்ற சதீஷ்?''



''ஆன்ட்டி. உங்களுக்கு வானதி நினைவிருக்கா? வீ.என். வானதியை.''

''எனக்குத் தெரியாமல் உன் ப்ரெண்ட் ஒரு வேலை செய்வான் என்ற எண்ணம் உனக்கு இருக்கா சதீஷ்?''

''அப்படி இல்ல ஆன்ட்டி. வானதியைப் பற்றிய முழு விபரம் அவனுக்குத் தெரியுமா என்று எனக்குத் தெரியலை. அதான் உங்களிடம் பேச நினைத்தேன்.''

''வான்மதி பற்றியும், அவளின் கடந்த கால வாழ்க்கையில் இருந்த விஜய் உள்பட எல்லா விஷயமுமே எனக்கும் அவனுக்கும் தெரியும். இன்னிக்கு என்ன ஆச்சு? அதை சொல்லு.''

''ஓ! அப்ப ஓகே. ஆனால் வானதி பாவம் ஆன்ட்டி அவள் ஏற்கனவே நொந்து போய் இருக்கிறாள். என்ன தான் நோக்கம் நல்லது என்றாலும் இவன் அவங்களை டீஸ் பண்ணுறது கொஞ்சம் அதிகம் என்று நான் பீல் பண்றேன் ஆன்ட்டி. நான் சொன்னால் கண்டு கொள்ள மாட்டான். அதுக்காக தான் உங்களுக்கு போன் பண்ணினேன்...''

''விஷயத்தைச் சொல்லு.''

''அவங்களுக்குள் என்ன நடந்தது என்று தெரியலை. வானதி இன்று காலையில் போலீஸ் கமிஷனர் ஆபீஸ் சென்று அங்கே விவேக் பற்றி புகார் கொடுத்துட்டாங்க. கமிஷனர் என்னை விசாரிக்கப் போகச் சொன்னார். நான் இவன் என்று தெரியாமல் போனேன். அப்புறம் வெளியே அழைத்து வந்த பிறகு விஷயம் சொன்னான். நீங்க கிளம்பி வந்து சட்டு புட்டுன்னு பேசி முடிக்க வேண்டியது தானே ஆன்ட்டி?''

''இன்னும் பையனிடம் இருந்து பச்சை விளக்கு சிக்னல் வரலையேப்பா...?''

''நீங்க இப்படியே காத்திருந்தால், ஏற்கனவே திருமணத்தில் விருப்பம் இல்லாத பெண்ணிடம் இருந்து சிவப்பு விளக்கு வந்து விடப் போகுது. உடனே கிளம்பி வாங்க ஆன்ட்டி. நான் எல்லாருக்காகவும் தான் சொல்கிறேன்...'' என்று சொல்ல யோசனையுடன் சம்மதம் தெரிவித்தார் கௌசல்யா.

அன்று இரவே, மதுரையில் இருந்து கிளம்பிய பாண்டியன் எக்ஸ்பிரசில் பிருந்தாவும், சேரன் எக்ஸ் பிரசில் கௌசல்யாவும் கிளம்பி, மறுநாள் பொழுது விடியும் வேளையில், சென்னையில் அவரவரின் உறவு முன்பு நின்று ஆனந்த அதிர்ச்சி கொடுத்தனர்.

பிருந்தாவைப் பார்த்து கண்களை இமைக்க மறந்தாள் வானதி.

''ஆம் ஐ ட்ரீமிங்?'' என்று விழித்த விவேக், தாவி தன் தாயைக் கட்டிக் கொண்டான்.



## 8

காலையில் அழைப்பு மணி ஒலித்ததும், எப்போதும் பால் போடும் பையன், கொடுக்கும் அறிவிப்பு ஒலி என்று எண்ணி படுத்து இருந்த விவேக், மீண்டும் இருமுறை மணி ஒலித்தது, குழப்பத்துடன் வெளியே வந்தான்.



வாசலில் நின்ற அம்மாவைப் பார்த்ததும் தூக்கம் தொடர்கிறதோ, அம்மாவின் வருகை அதில் காணும் கனவோ என்ற சந்தேகத்துடன் இமை தட்டி விழித்தான். ''ம்மா, ஆம் ஐ ட்ரீமிங்?'' என்று வியப்புடன் கேட்க அவன் உச்சந்தலையில் ஒரு கொட்டு விழுந்தது.

''ஐந்தரை அடி உயரத்தில அறுபது கிலோ எடையில கண் முன்னால் வந்து நிக்குற என்னைப் பார்த்தால் உனக்கு கனவு மாதிரி இருக்கா?'' என்று கேட்டு விட்டு அவன் காதைப் பற்றி மேலும் முறுக்க, அவன் சன்னமாக அலறினான்.

''ம்மா... வலிக்குதும்மா. வந்ததும் வராமல் அரா ஜகத்தை ஆரம்பிச்சாச்சா? முதலில் ஒரு காபி போட்டு எடுத்துட்டு வாங்க. அப்புறமா உட்கார்ந்து எந்த கோட் டையைப் பிடிக்க இந்த திடீர் விஜயம் என்று கதை சொல்லுங்க'' என்று அடுக்களைக்குள் தள்ள, அவர் சட்டமாக சென்று சோபாவில் அமர்ந்தார்.

''நீ சொல்லி உன்னைப் பார்க்க நான் வரலை. உன் அம்மாவாகவும் இங்கே வரலை. நான் விருந்தாளி. அதனால் நீ போய் எனக்கு காபி எடுத்துட்டு வா. ஆனால் அடுப்படிக்குப் போவதற்கு முன்னால் முகம் கழுவிட்டு போ...''

''வர வர நீங்க என்னைப் பெற்றவங்களா, இல்லை மண்டபத்து வாலில் இருந்து தூக்கிட்டு வந்தவங்களா என்று சந்தேகம் வருது.''

''சும்மா நின்று வெட்டிக் கதை பேசாதே. போய் சீக்கிரம் காபி எடுத்துட்டு வா, போ'' என்று கேலியாகக் கை காட்ட, அவன் சிரிப்புடன் பார்த்தான்.

''இப்ப நான் போகணுமா...? வரணுமா?''

''கடி தாங்கலை. முதலில் போகணும். அப்புறம் காபி எடுத்துட்டு வரணும்'' என்று சிரிப்புடன் சொல்ல, அவன் சில நிமிடங்களில் இரண்டு காபியுடன் அருகே வந்தான்.

''நேற்று சதீஷ் பேசினானா?''

''சதீஷ்! யார் அது...?''

''நடிக்காதீங்க... எல்லாம் எனக்குத் தெரியும்...''

''எல்லாம் உனக்குத் தெரிந்தால் ஏன் மகனே என் னைக் கேள்வி கேட்கிறாய்?''

''அம்மா, விளையாட்டு போதும். என்ன திடீர் விஜயம் சொல்லுங்க...''

''அதேதான் நானும் சொல்ல நினைத்தேன். நீ ரொம்ப விளையாடுகிறாய். அதனால், உனக்கு ஒரு கால் கட்டு போடலாம் என்று கிளம்பி வந்தேன்...''

''நினைத்தேன். நான் சொன்ன பிறகு வந்தால் போதும் என்று சொல்லி விட்டு தானே வந்தேன். அப்புறம் இப்படி வந்து குதித்தால் என்ன அர்த்தம்?''

''இல்லை விவேக். இனிமேல் நான் ரிஸ்க் எடுக்கத் தயாராக இல்லை. உன் விளையாட்டு தனமும் சீண் டலும் போதும். பிருந்தாவும் இங்கே வந்தாச்சு. நான் இன் னிக்கு அவங்க வீட்டுக்குப் போய் அவங்க அம்மாவிடம் அவளையும் வைத்துக் கொண்டே, பெண் கேட்கப் போகிறேன்...''

''அவ்வளவு தூரம் வந்தாச்சா? அப்பா உடன் இருக்கத் தேவை இல்லையா?''



''அப்பாவிடம் நான் பேசி விட்டேன். இது ஒன்றும் இன்று எடுத்த முடிவு இல்லை. ஏற்கனவே எடுத்த முடிவைச் செயல்படுத்தப் போகிறேன்.''

''அப்பாவிடம் பேசி கிளியரன்ஸ் வாங்கி இருக்கீங்க. ஆனால் என்னிடம் ஒரு வார்த்தை கேட்கணும் என்று உங்களுக்குத் தோணலை இல்லை...''

''நீ என்ன சொல்வாய் என்று எனக்குத் தெரியாதா விவேக்?''

''இப்ப என்ன ஆச்சு என்று டென்ஷனா ராத்திரி யோட ராத்திரியா கிளம்பி ஓடி வந்தீங்க?''

''இன்னும் என்ன ஆக வேண்டும்? உன்னை ஜெயி லில் போடும் வரை என்னைக் காத்திருக்கச் சொல் கிறாயா?''

''அம்மா... அது...''

''நீ பேசாதே! இனிமேல் நீ என்ன சொன்னாலும் நான் கேட்பதாக இல்லை. எனக்கும் அவளைப் பிடிக்கும். அவள் மேல் அனுதாபம் உண்டு. ஆனால் அதற்காக காத்திருக்கும் உத்தேசம் இல்லை...''

''அம்மா, நாம் கல்யாணம் பற்றிய பேச்சை எடுக்கும் போது அவள் சின்ன மறுப்புகூட இல்லாமல் ஸ்மூத்தா அவள் சம்மதம் சொல்லணும் என்று...''

''உன்னை வேண்டாம் என்று அவள் சொன்னால், அவளை எப்படி வழிக்குக் கொண்டு வருவது என்று எனக்குத் தெரியும். உன்னைத் திருமணம் செய்து கொள்ளச் சம்மதம் என்று அவளை நான் சொல்ல வைக் கிறேன்...''

"இது நல்லா இருக்கே? எல்லா க்ரவுண்ட் வொர்க்கும் நாங்க பண்ணி வைத்தால், கடைசியில் குத்து விளக்கேற்றி கொண்டாடி, உங்களால் என்று கதை சொல்வதற்கா? தேவை இல்லை. நானே பார்த்துக் கொள்வேன்..."

"கிழிச்ச! நான் நல்ல நேரம் கூட பார்த்து வச்சாச்சு. காலை பதினோரு மணி. இப்ப கொஞ்ச நேரம் தூங்கப் போகிறேன். நீ வெளியே போவதென்றால் தாராளமா கிளம்பி போ. அஞ்சு தேங்காய், கொஞ்ச பழம், இனிப்பு பூ இதெல்லாம் வாங்கி வைத்து விட்டு நீ எங்கே வேண்டுமானாலும் போ. நானே பார்த்துக் கொள்கிறேன்."

"எல்லாம் அதிரடியா ப்ளான் பண்ணி விட்டு என்னை வெளியே துரத்தும் ஐடியா வேறே வச்சு இருக்கீங்களா? நான் எங்கேயும் போக மாட்டேன்."

"நல்லதா போச்சு. அழகா ட்ரெஸ் பண்ணிக் கொண்டு நீயும் என்னுடன் வா. பெண்ணை பேசி முடிவு பண்ணி விடலாம்" என்று சர்வ சாதாரணமாகச் சொன்ன தாயைப் பாக்க விவேக்கிற்குப் பெருமையாக இருந்தது.

* * *

முன்தினம் மாலையில் அத்தையுடன் கோபம் கொண்டு தொலைபேசியை வைத்த வானதி, இரவில், உணவை தவிர்க்க நினைத்து அம்மாவிடம் திட்டு வாங்கி, உண்டேன் என்று பேர் பண்ணி படுத்து, பழைய நினைவுகளில் உழன்று, அதிகாலை ஐந்து மணிக்கு



வெளியே வந்து தோட்டத்தில் உலாவிக் கொண்டு இருந்தாள்.

காம்பவுண்டில் இருந்த அந்த பெரிய இரும்பு கேட் சப்தமாக திறக்கப்படும் ஒலி கேட்டதும், இந்நேரத்தில் யார் வருவது என்ற சந்தேகத்தில் திரும்பிப் பார்த்தவளின் கண்கள் வெளியே தெறித்து விழும் அளவுக்குப் பெரிதானது.

"அத்தை..." குரல் தொண்டையை விட்டு வெளியே வர மறுத்தது. விழிகளை இமைக்க மறந்து அவரையே அவள் பார்த்துக் கொண்டு இருக்க கையில் இருந்த ஹோசில் இருந்து வழிந்த நீர் செடியை நனைத்து முடித்து வெள்ளமாகப் பெருக்கெடுத்து ஓட, அதைக் கண்ட பிருந்தா அவசரமாக அருகே வந்தார்.

"வீட்டுல என்ன வேலைக்கு ஆளா இல்லை? இந்த வேலை எல்லாம் நீ ஏன் செய்கிறாய்? எப்படி இளைத்துக் கருத்துப் போய் இருக்க? உடம்பைக் கவனித்துக் கொள்வது இல்லையா?" என்று கேள்விகளை அடுக்கியபடி குழாயை மூட தண்ணீர் வீணாவது நின்றது.

"அப்படியே பார்த்துக் கொண்டு நின்றால் எப்படி? இவ்வளவு தூரம் உன்னைப் பார்க்க வந்து இருக்கேன்? வா என்று ஒரு வார்த்தைக் கூப்பிட மாட்டியாக்கும்?" என்று பிருந்தா சீண்ட, வானதி சிலைக்கு உயிர் வந்தது.

"எங்க அத்தை என்னைப் பார்க்க ஊரில் இருந்து வந்தால், நாலு கால் பாய்ச்சலில் ஓடி வந்து, வரவேற்று இருப்பேன். ஆனால் எனக்கு அத்தை என்ற உறவை பேருக்கு மட்டும் வைத்துக் கொண்டு, சம்பந்தமே இல்லாத ஒரு ஆளுக்கு சகாயமா பேசினால் அவங்களை

எப்படி சந்தோஷமா வரவேற்க முடியும்?'' என்றவளின் குரலில், முன்தினம் மாலை, அவர் விவேக்கை நல்லவன் என்று சொன்னதன் கோபம் மிச்சம் இருந்தது.

''சம்பந்தம் இல்லாதவன் என்று எப்படிச் சொல்கிறாய் கண்ணு? எல்லோரும் சம்பந்தப்பட்டவுகதான். மனசுக்கு ரொம்பப் பிடிச்சவுக தான். ஆனாலும் நீயா அவனா என்ற கேள்வி வந்தால், பிருந்தா உடம்பில உசுரு இருக்க வரைக்கும், அது உன் பக்கம் தான் நிக்கும்'' என்று ஆவேசமாகச் சொன்னதும் அவளின் கோபம் இருந்த இடம் தெரியாமல் காணாமல் போனது.

''அப்படிச் சொல்லாதீங்க அத்தை. நீங்களும் உங்க பிள்ளை மாதிரியே என்னை பாதியில் ஏமாற்றிவிட்டு போகாமல், கடைசி வரை என் கூடவே இருக்கணும்...'' என்று கண்ணில் நீர் மல்க கதறியபடி ஓடி வந்து அவரை அணைத்துக் கொள்ள, அவளும் கையில் இருந்த பையை போட்டு விட்டு மருமகளை அணைத்து முதுகை வருடினார்.

''நான் ஒரு கூறு கெட்டவ. எந்த நேரத்தில் எதைப் பேசணும் என்று தெரியாமல்... ப்ச் விடு கண்ணு, நேரம் கெட்ட நேரத்தில் எதையோ உளறி விட்டேன்'' என்று அவளைத் தேற்ற முயன்றவரின் கண்களிலும் கண்ணீர் இருக்க வானதியின் அழுகை எப்படி நிற்கும்?

''ப்ச்! மதி. ராத்திரி ரயிலில் தூங்காமல் வந்தது தலை வலிக்குது. ஒரு வாய் காபி தண்ணி உள்ளே போனால் தான் உடம்பு சொன்னபடி கேட்கும். உள்ளே போகலாமா?'' என்று மார்பில் சாய்ந்து அழுது கொண்டு இருந்தவளை நிமிர்த்தி விசாரித்தவரின் குரல் நிதானத்துக்கு வந்து இருந்தது.



''ம்ம்ம், சரி அத்தை...'' என்ற முனகலுடன் விலக முயன்றவளின் கன்னம் தொட்டு வாஞ்சையுடன் வருடினார் பிருந்தா. இவளுடன் ஜோடி சேர்ந்து முகம் ஜொலிக்க நின்ற மகனின் நினைவும் மின்னி மறைந்தது. போனவன் போய் விட்டான். இருப்பவர்களுக்கு அல்லவா சிரமம்? தானாவது வாழ்ந்து முடித்தவர். இவள் இளம் குருத்து. தன் மகனை மறக்க முடியாமல் இவள் படும் அவஸ்தையும், இப்படி தனியாக நிற்பதும் நரக வேதனை அல்லவா?

''இவ்வளவு நேரம் வாசலில் நின்று பேசிக் கொண்டு இருக்கிறோமே? உங்க அம்மா எட்டிப் பார்த்தாங்களா பாரு?'' என்று முனகியபடி தன் பையுடன் உள்ளே நடந்தவரை பேச்சின்றி பின் தொடர்ந்தாள் வானதி.

பிருந்தாவை வரவேற்க வாசலுக்கு வந்த கஸ்தூரி, ''வா வா, திடு திப் என்று சொல்லாமல் கொள்ளாமல் வந்து இருக்க? அண்ணன் சுகமா?'' என்று வரவேற்க வானதி இருவரையும் மாறி மாறிப் பார்த்தாள்.

''என்ன கண்ணு அப்படிப் பார்க்கிற?''

''நீங்க வருவது அம்மாவுக்குத் தெரியாதாக்கும்?''

''ம்ஹூம்'' என்று சொல்ல ஆரம்பித்து விட்டு, அவளின் கூர்மையான பார்வையில் பேச்சை நிறுத்தினார்.

''தெரியும் கண்ணு. ஆனால் ரயிலில் ஏறி உட்கார்ந்த பிறகு தான் சொன்னேன். போக எதற்கு வந்தேன் என்றும் அண்ணிக்குத் தெரியாது.''

''எனக்குத் தெரியும்...''

''எதுக்கு வந்து இருக்கேன்? சொல்லு பார்ப்போம்...''

''நீங்க காபி குடிச்ச பிறகு அதைப் பற்றி நாம் பேசலாம்'' என்று பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டாலும், வானதியின் மனம் தவித்தது.

அத்தை எதற்கு வந்து இருக்கிறார் என்பது புரிந்த தாலேயே படபடப்பு கூடியது. அவளுக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்று எல்லோரும் சேர்ந்து திட்டமிடுவது அவளுக்குப் புரியாமல் இல்லை. ஆனால் அவளால் ஒரு இயல்பான திருமண வாழ்க்கையை வாழ முடியுமா?

தன் மனதை, பெற்ற தாயாலும், தாயை காட்டிலும் உயர்ந்த ஸ்தானத்தில் இருக்கும் அத்தையாலும் ஏன் புரிந்து கொள்ள முடியவில்லை?

காலை காபிக்குப் பிறகு, ஹாலில் தரையில் பிருந்தா அமர்ந்து இருக்க, அவர் மடியில் நீண்ட நாட்களுக்கு பிறகு சலுகையாக படுத்து இருந்த மருமகளின் தலையைக் கோதியபடி கனிவான குரலில் பேச ஆரம் பித்தார்.

''உன்னைக் கடைசி வரைக்கும் சிரிச்ச முகமா சந் தோஷமா பார்க்க தான் நாங்க எல்லோருமே உசுரை வச்சுக்கிட்டு இருக்கோம். எங்களுக்கு உன்னை விட்டா வேறு யார் இருக்கா சொல்லு? இந்த வம்சமே இந்த தலைமுறையோடு அழிந்து போக விட முடியுமா சொல்லு?'' என்ற பிருந்தாவின் கேள்வி முடியும் முன்பே அவரின் மடியில் இருந்து வேகமாக எழுந்த வானதி கண்களில் ஈரம் கசிந்தது.

''ப்ச்! நீ இப்படி பொசுக் பொசுக்குன்னு கண்ணுல தண்ணீர் வடிச்சால் எனக்கு நெஞ்சில் இரத்தம் வடியுது



தங்கம். போனவன் போய்ட்டான். அதை நினைச்சு கிட்டே இருக்கவங்க அவஸ்தைப் பட முடியுமா ராசாத்தி?'' என்று கண்களைத் துடைத்தபடி கேட்க அவள் மறுப்பாக தலை அசைத்தாள்.

''நீங்க கேட்கறது எல்லாமே என் மூளைக்குப் புரியுது அத்தை. ஆனால் மனசு கேட்க மாட்டேங்குதே? என் மனசு என்னிடம் இல்லையே அத்தை? நான் எப்படி அத்தை இன்னொரு பையனைக் கல்யாணம் பண்ணிக்க முடியும்?''

''உன் மனசு உன்னிடம் இல்லை என்பது தெரிஞ்ச ஒரு பையனை நீ கல்யாணம் பண்ணிக்கலாமே?''

''அது என்னால் முடியாது அத்தை...''

''இதுக்கு மேலே உன்னை நான் கல்யாணத்துக்கு வற்புறுத்தலை. இன்னிக்கு உன்னைப் பார்க்க, என் னுடைய சிநேகிதி ஒருத்தி வருகிறாள். அவள் முன்னாடி நீ அழுது வடியாமல் இருந்தால் போதும்'' என்று பேச்சை ஒதுக்கி அவளை தயார் படுத்தினார் பிருந்தா.

காலை பதினோரு மணி அளவில், கையில் பெரிய பையுடன், மங்கலான அரக்கு நிறத்தில் மெல்லிய சந்தன நிற ஜரிகை கரையிட்ட பட்டுப் புடவை அணிந்து, காது களில் வைரத்தோடு, அதற்கு சவால் விடும் பிரகாசத் துடன், எட்டு கல் பேசரி மூக்கில மின்ன, கனமான தாலிக் கொடியுடனும், கம்பீரமான நடையுடனும் உள்ளே நுழைந்த கௌசல்யாவைப் பார்த்ததும் வானதியின் நினைவலைகள் சுழன்றன.

இவரை அவள் பார்த்து இருக்கிறாள்! இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, தூத்துக்குடி அரசு

மருத்துவமனையில், கண்ணில் பொங்கி பெருகிய நீருடன் தன் கையில் முகம் புதைத்து நன்றி சொன்னவர், எங்கே இங்கே?

திகைப்புடன் அவள் பார்த்துக் கொண்டு இருக்கும் போதே சில வினாடிகள் இடைவெளியில் அவரின் பின்னால் வெள்ளை வேஷ்டி, வெள்ளை சட்டை அணிந்து மாப்பிள்ளை தோரணையுடன் பின்னால் வந்த விவேக்கைப் பார்த்ததும் புதிர் விலகியது.

இவன் இவரின் மகன்! கண்களை இருட்டிக் கொண்டு வர அப்படியே தலை சுற்றி சோபாவில் மயக்கமாக சரிந்தாள் வானதி.

## 9

கௌசல்யாவும் விவேக்கும் வானதியின் வீட்டுக்கு பதினோரு மணி அளவில், நுழையும் போதே, கஸ்தூரியும் பிருந்தாவும், ஹாலிலேயே காத்திருக்க, நிதானமாக இருப்பது போல காட்டிக் கொண்டு, டிவியை சேனல் மாற்றிக் கொண்டு இருந்த வானதிக்கும் உள்ளூர ஒரு பட-படப்பு இருக்கவே செய்தது.

''வாங்க வாங்க'' என்று எதிர்கொண்டு கஸ்தூரி வரவேற்கும்போது, பிருந்தா புன்னகையுடன் கூடிய ஒரு தலை அசைப்பை மட்டும் அவர்களுக்குக் கொடுத்து விட்டு அவசரமாக மருமகளின் புறம் திரும்பினார்.



''மதி, இவங்க கௌசல்யா'' என்று ஆரம்பித்த வினாடியிலேயே அவளின் முகம் கசங்கி தன் தலையைப் பிடித்தபடி சோபாவிலேயே மயங்கி சரிய, பதறி ஓடி வந்தார் பிருந்தா.

''மதி கண்ணு என்ன ஆச்சு?'' என்ற பிருந்தாவின் குரல் அங்கிருந்த மற்றவர்களையும் பரபரப்புக்கு உள்ளாக்க, ஒரே இடத்தில் குழுமினர்.

''தண்ணி எடுத்துட்டு வாங்க ஆன்ட்டி...'' என்று விவேக் கஸ்தூரியை விரட்ட, வினாடியில் அவள் முகத்தை தன் மடியில் பிருந்தா ஏந்தி இருக்க அருகே அமர்ந்த கௌசல்யா கஸ்தூரி கொண்டு வந்த தண்ணீரை அவளின் முகத்தில் தெளித்து வருட, அவளின் கண்கள் மெல்லத் திறந்தது. விழித்த கண்களில் முதலில் பட்டது நின்று கவலையுடன் தன்னைப் பார்த்துக் கொண்டு இருந்த விவேக்கின் முகமே!

அவளின் விழிகள் திறந்த வினாடியில் புன்னகை செய்து, ''இது தான் அழகில் மயங்கி விழுவதா?'' என்று கண் சிமிட்டிக் கேட்டான் விவேக்.

''டேய் சும்மா இருடா! நேரம் காலம் தெரியாமல் விளையாடிக் கொண்டு'' என்று கௌசல்யா அவனை அதட்ட, வேகமாக எழுந்த வானதி, அவனைப் பார்த்துக் கரம் குவித்தாள்.

''சாரி மிஸ்டர் விவேக், யார் என்று தெரியாமல், உங்களை நான் மரியாதைக் குறைவாகவும் தப்பாகவும் பேசி விட்டேன்'' என்று மன்னிப்புக் கோர அவன் தலையில் கை வைத்து அருகே இருந்த சோபாவில் அமர்ந்தான்.

''எல்லாம் போச்சு. நான் எது நடக்கக் கூடாது என்று நினைத்தேனோ, அது கரெக்டா நடந்து விட்டது. யார் உங்களை அவசரமா கோயம்புத்தூரில் இருந்து கட்டு சோறு கட்டிட்டு ராத்திரியோடு ராத்திரியா வரச் சொன்னது?'' என்று அம்மாவைக் குற்றம் சொல்ல, ''சும்மா இருடா'' என்று மகனை அதட்டி விட்டு வானதியின் புறம் திரும்பினார் கௌசல்யா.

''நீ எதுக்கும்மா இவனிடம் மன்னிப்பு கேட்கிறாய்? இவன் எந்த நேரத்தில் என்ன பேசுவான்? எப்படி எல்லாம் சிண்டு முடிவான் என்று எனக்கு நல்லாத் தெரியும். வார்த்தைகளில் வம்பு பண்ணுவதில் ஒண்ணாம் நம்பர் இவன் மேலே நீ கோபப்பட்டு ஏதாவது சொல்லி இருந்தால் கூட உன் மேல் தப்பிருக்காது. நான் உனக்கு தான் முழு சப்போர்ட்'' என்று அவசரமாகச் சொல்ல விவேக் முகவாயில் கை வைத்து வியப்பாகப் பார்த்தான்.

''அம்மாடியோவ்! பொய் சொன்ன வாய்க்கு போஜனமே கிடைக்காது. காலையில் ஆறு மணிக்கு இதே வாய் வேறே என்னவோ சொல்லுச்சே?''

''அது வானதியைப் பார்ப்பதற்கு முன்பு. இது வானதியைப் பார்த்த பின்பு.''

அம்மாவும் மகனும் பேசிக் கொள்ளும் அழகைப் பார்த்த வானதிக்கு மனதில் சாரல் அடித்தது. அவளுக்குத் தெரிந்த வரை எந்த அம்மா பிள்ளையும் இப்படி வம்பு பேசிக் கேட்டதே இல்லை.

அவளுக்கு எத்தனை பேரை தெரியும்? விஜய் மட்டும் தான். அவன் அத்தையிடம் மட்டும் இல்லை.



யாரிடமும் வம்பு பேசியதில்லை. அமைதியானவன். பிறருக்கு உதவக் காத்திருக்கும் அன்பானவன். மென்மையான மனம் படைத்தவன். வானதி விஜய் பற்றிய நினைவுகளில் மூழ்கிவிட கஸ்தூரி அவர்களுக்குச் சிற்றுண்டி எடுத்து வர அடுக்களைக்குள் சென்றுவிட, பிருந்தா தான் அவர்களின் உரையாடலில் இடை புகுந்தார்.

''கௌசி, அவன் பிறந்ததில் இருந்து இப்படி தானே காலம் காலமா வம்பு பண்ணிக் கொண்டு இருக்கிறாய். நீயும் உன் பையனும் அப்புறம் சண்டை போடலாம். முதலில் மதியை கவனி'' என்று பிருந்தா இடையிட்ட பிறகே அவர்களுக்கு இடையே நடந்த வாக்குவாதம் முடிவுக்கு வந்தது.

''உன்னை நான் அப்புறம் வைத்துக் கொள்கிறேன். வானதி, நீ இவனுக்கு சாரி சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. நான் உன் கட்சி. நாம் இருவரும் சேர்ந்து...''

''அம்மா, நீங்க எனக்கு எதிரா கட்சிக்கு ஆள் சேர்க்கறீங்க. சரி. ஆனால் அதுக்கு வானதி சரிப்பட மாட்டாள். அவள் ஏற்கனவே சாரி சொல்லி என் பக்கம் வந்து விட்டாளே? என்ன வானதி?'' என்று பேச்சைத் தொடர வானதி கண்களை இமை தட்டி விழித்தாள்.

''அவர் என்னை ஒன்றும் சொல்லவில்லை. நான் தான் அவரைப் பற்றி காவல் துறையில் புகார் கொடுக்கும் அளவுக்குச் சென்றேன்'' என்றவளின் முகம் வருத்தத்தைக் காட்டியது.

''எல்லாம் நல்லதுக்கு தான் வானதி. இத்தனை நாள் நானும் அவன் பேச்சைக் கேட்டுக் கொண்டு பேசாமல் இருந்தேன். ஆனால் நீ நேற்று செய்த வேலை தான் என்னை இங்கே இன்று வர வைத்து இருக்கிறது...''

''என்ன விஷயமா கௌசி வந்தாய்?'' என்று அறியாத பிள்ளை போல விசாரித்த பிருந்தாவைப் பார்த்துப் புன்னகை செய்தார் கௌசல்யா.

இருவரையும் மாறி மாறிப் பார்த்த அவர்கள் தன் மேல் வைத்து இருக்கும் பாசத்தை உணர முடிந்ததால், வான்மதிக்கு அத்தனை மன அழுத்தத்தையும் மீறி சின்னதாகப் புன்னகை மலர்ந்தது.

''உன்னிடம் ஏற்கனவே பேசியது தான் பிருந்தா. இவனுக்கு ஒரு கால் கட்டு போட்டு விட்டால் நான் நிம்மதியா கோவையில் இருக்கலாம். சென்னையில் இவன் செட்டில் ஆகணும் என்பதற்காக நான் எங்க வீட்டுக்காரரையும் அவர் தொழிலையும் விட்டுட்டு வர முடியுமா சொல்லு'' என்ற கௌசல்யாவின் கேள்விக்கு உடனே ஆமோதிப்பான பதில் பிருந்தாவிடம் இருந்து வந்தது.

''நல்ல காரியத்தை ஏன் தள்ளிப் போடுகிறாய்? உடனே ஒரு நல்ல பெண்ணா பார்த்துக் கல்யாணம் முடிக்க வேண்டியது தானே...?''

''அதுக்கு தான் இங்கே வந்து இருக்கேன். வானதியின் அப்பா, கோவையில் மாப்பிள்ளை பார்க்க வந்த போது எங்க வீட்டுக்கு வந்து இருந்தார். அந்த வரன் தகையவில்லை என்றால் என்ன? உங்க அண்ணியைக் கூப்பிடுங்க. நாங்க இருக்கிறோம். அடுத்த முகூர்த்தத்தி



லேயே கல்யாணத்தை நடத்தி விடலாம். எனக்கும் என் பையனுக்கும் பிடிச்சு இருக்கு'' என்று சர்வ சாதாரணமாக கௌசல்யா அணுகுண்டை கொளுத்திப் போட அங்கே மயான அமைதி வந்து சேர்ந்தது.

''வானதி... உன் சம்மதம் இல்லாமல் எதுவும் நடக்காது'' என்று நீண்ட அமைதியை விவேக் அவசரமாகக் கலைக்க, கௌசல்யாவின் பார்வை வானதியைத் தடவியது.

''துக்கம் நடந்த வீட்டில் உடனடியா ஒரு நல்ல விசேஷம், குறிப்பா கல்யாணம் நடந்தால் ரொம்ப நல்லது என்று எங்க அம்மா சொல்வாங்க'' என்று கௌசல்யா சொல்ல பிருந்தா அவசரமாக மருமகளைப் பார்வையிட்டார்.

''அவசரப் பட்டு எதுவும் சொல்லிடாதே மதி. நாம் அப்புறமா பேசிக்கலாம்'' என்று பிருந்தா மருமகளை சமாதானம் செய்து கொண்டு இருக்கும்போது, கௌசல்யா அவளை நெருங்கி முகத்தை ஒரு கையால் பற்றி நிமிர்த்தினார்.

''எனக்கு உன்னைப் பற்றி எல்லா விபரமும் தெரியும் வானதி. உன்னை விட ஒரு நல்ல பெண்ணை என்னால் தேட முடியும் என்று தோன்றவில்லை. எனக்கு உன்னைப் பிடிச்சு இருக்கு...''

''உங்களுக்குப் பிடிச்சால் போதுமா?''

பிருந்தாவின் கை அழுத்தத்தையும் மீறி, வார்த்தைகள் வானதியிடம் இருந்து வெளி வந்து விட சிற்றுண்டி தட்டுடன் அடுக்களைக்குள் இருந்து வந்த கஸ்தூரி முதல் முறையாக வாயைத் திறந்தார்.

''வானதி, வீடு தேடி வந்தவர்களிடம் இப்படி தான் நின்று கதை அடித்துக் கொண்டு இருப்பாயா? அவங் களுக்குச் சாப்பிட ஸ்நாக்ஸ், கொண்டு போய் கொடு'' என்று சாதாரண குரலில் சொல்வதுபோலத் தோன்றி னாலும், அதில் கண்டிப்பு இருந்தது.

முகத்தை இறுக்கத்துடன் வைத்துக் கொண்ட வானதி, அம்மாவின் பேச்சை மதித்து அருகே வந்து விட்டாலும், ''இந்த மாதிரி இரண்டு முறை என் வாயை மூடி விட்டால், நீங்க நினைப்பது நடந்து விடும் என்று கனவு காணாதீங்க. இப்ப இல்லாவிட்டால் இன்னும் அஞ்சு நிமிஷம் கழித்து, எனக்கு திருமணத்தில் ஆர்வம் இல்லை என்பதை சொல்லத் தான் போகிறேன்'' என்று கடுப்புடன் சொல்ல சிரிப்புடன் தலை அசைத்தார்.

''தாராளமா சொல்லு. ஆனால் அதை அங்கே யார் காது கொடுத்துக் கேட்கப் போறாங்க என்பது தான் தெரியலை...''

''நான் விவேக்கிடமே சொல்வேன்...'' என்று சொன்னதும் அவர் முகத்தில் இருந்த புன்னகை மேலும் பெரிதானது. ''பேசி பாரேன்'' என்று அனுமதி கொடுக்க அவள் விழித்தாள்.

இதென்ன அம்மா இப்படிச் சொல்கிறார்? அவன் எனக்கு இந்தக் கல்யாணத்தில் இஷ்டம் இல்லை என்று சொன்ன பிறகும் தன் கையை காலை கட்டி, கட்டாய தாலியா கட்டுவான்? அவசரமாகத் திரும்பி ஹாலில் அமர்ந்து இருந்தவனை ஆராய்ந்தாள்! முகத்தில் இலகு தன்மையும் புன்னகையும் இருந்தது. அப்படி எல்லாம் செய்ய மாட்டான் என்ற நம்பிக்கை தானாக எழுந்தது.



அம்மாவின் சொல்லை ஏற்று, சின்ன சிற்றுண்டி தட்டுகளில், இனிப்பும் காரமும் எடுத்து வைத்து வந்து கௌசல்யாவிடம் நீட்ட அவர் புன்னகையுடன் எடுத்துக் கொண்டார்.

''விவேக் நெய் முறுக்கு வச்சு இருக்காங்க. அவனுக்கு முறுக்குப் பிடிக்கும் என்பது உனக்கும் தெரிஞ்சு போச்சா? இப்படி வாய்க்கு ருசியா ஏதாவது சாப்பிடக் கொடுத்துக் கொண்டு இருந்தால் போதும். எதைப் பற்றியும் கவலையே இல்லை. ஏன் வானதி நிற்கிறாய் நீயும் உட்கார். உங்க எதிர்கால வாழ்க்கைப் பற்றிப் பேசப் போகிறோம்'' என்று கௌசல்யா சொல்ல, விவேக் சிரித்தான்.

''ஆன்ட்டி, அதற்கு முன்னாடி, நான் தனியா, விவே... உங்க பையனுடன் பேசணும். பேசட்டுமா...?'' என்று சொல்ல கௌசல்யாவும் பிருந்தாவும் தயங்கினாலும் விவேக் சந்தோஷமாகவே எழுந்தான்.

''அதற்கு முன்னால் நான் சொல்வதையும் கேட் டுட்டுப் போ. உங்க அப்பா உனக்கு கல்யாணத்துக்குப் பார்த்துக் கொண்டு இருக்கும்போதே எதிர்பாராமல் விதி வசத்தில் தவறிப் போய் விட்டார். உனக்கு ஒரு கல்யாணம் முடியும் வரை அவர் ஆத்மா கூட திருப்தி இல்லாமல் அலைந்து கொண்டு இருக்கும். நீ சரி சொன்னால், என் பையனுக்கே உன்னைத் திருமணம் செய்து கொள்கிறேன்.''

''அதே விஷயம் பற்றிய என் மனநிலையைச் சொல் வதற்கு தான் ஆன்ட்டி உங்க பையனை கூப்பிடுகிறேன். என்னுடன் தனியாக பேசினால், என் வாதத்தில்

இருக்கும் நியாயம் புரிந்து, உங்க பையன் முடிவு மாறிவிடும் என்று பயப்படுறீங்களா?'' என்று கேட்க கௌசல்யா தோளைக் குலுக்கினார்.

''என்னை விட அவனுக்கு தான் பிடிவாதம் ஜாஸ்தி. எஞ்சினியரிங் படிக்க மாட்டேன் என்று ஒற்றை காலில் நின்றவன். மும்பைக்கு வேலைக்கு அனுப்ப மாட்டேன் என்று நான் பிடிவாதம் பிடித்தபோது, உண்ணாவிரதம் இருந்து என் மனதை மாற்றியவன். என்னை தான் சுலபமாக வளைக்கலாம். நீ அவனிடம் பேசுகிறேன் என்கிறாய். ஓகே, குட் லக்'' என்று வாழ்த்துத் தெரிவிக்க, அவள் அவனைப் பார்த்தாள்.

''வாங்க...'' என்று ஒற்றைச் சொல்லுடன் மேலே சென்றவள் தனது ஆஸ்தான இடமான அந்த ஒரு பக்கக் கண்ணாடிச் சுவரின் அருகே நின்று எப்படி தன் மனதை இவனிடம் தெரிவிக்கலாம் என்று தனக்குள் வரிசை படுத்திக் கொண்டு இருக்க, அவன் சோபாவில் அமர்ந்து புன்னகை செய்தான்.

''உட்கார்ந்து பேசலாமா வானதி? நீ கேட்டு நான் சொல்லாமல் போன பதில்களை எல்லாம் இப்ப சொல்ல நான் தயாராக இருக்கேன். இரண்டு வாரம் முன்பு வரை மும்பையில்...'' என்று ஆரம்பிக்க, அவள் ஒரு கை உயர்த்தி தடுத்து நிறுத்தினாள்

''நீங்க யார், என்ன செய்றீங்க எதுவும் எனக்குத் தெரிய வேண்டாம். உங்களைத் திருமணம் செய்து கொள்ளும் எண்ணம் எனக்கு இல்லை...''

''இப்ப இல்லாமல் இருக்கலாம். எதிர்காலத்தில் வரலாம் இல்லையா?''



''வராது. இருநூறு சதவிகிதம் நிச்சயமா என்னால் சொல்ல முடியும்...'' என்று அவள் அழுத்தமாகச் சொல்ல அவன் சட்டென்று சப்தமாக சிரித்தான். எரிச்சலுடன், வானதி அவனை முறைக்க அவன் கை உயர்த்தினான்.

''பார்க்க பயமாக இருக்கு. ஆனால் சிரிக்காமலும் இருக்க முடியவில்லை'' என்று பயந்தவன் போல நடிக்க அவளின் முறைப்பு மேலும் கூடியது.

''எதுக்கு இப்படி பைத்தியம் மாதிரி சிரிக்கறீங்க?''

''நேற்று இதே இடத்திற்கு ஏன் வந்தாய், என்று கேட்டு கழுத்தைப் பிடித்துத் தள்ளாத குறையாக வெளியேற்றியபோது, இன்று தனியாகப் பேச வேண்டும் என்று என்னை அழைக்க வேண்டி வரும் என்று எதிர்பார்த்தாயா?'' என்று விசாரிக்க, அவள் கண்ணில் கனலுடன் அவனைப் பார்த்தாள்.

''நாளை என்ன நடக்கும் என்று நமக்குத் தெரியாது. அனால் அனாவசியமாக வார்த்தைகளை விடாதே வானதி...'' என்று அலட்சியமாகச் சொல்ல அவள் மேலும் பொங்கிப் பெருகிய கோபத்தைக் கட்டுப்படுத்த வழி தேடி, அவன் கைகளை உதறி விட்டு கண்ணாடி சுவரின் அருகே வந்து நின்றாள்.

''திட்டி முடிச்சாச்சா வானதி? ம்ஹூம் வான்மதி! இல்லை மதியே இருக்கட்டும். திட்டி முடிச்சாச்சா மதி?'' என்று அவளின் முன் நெற்றியில் புரண்ட குழற் கற்றையை ஒற்றை விரலால் ஒதுக்கி விசாரித்த விவேக்கின் முகம் அந்த வினாடியில் விஜயின் முகமாக தோன்றியது அவளுக்கு!

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, நான்மாடக் கூடல் என்று அழைக்கப்படும் மதுரை மாநகரின் ரயில் நிலையத்தில், அவன் தன்னை வரவேற்க வருவான் என்று எதிர்பார்த்து ஏமாந்த தருணத்தில், அவன் சொன்ன வார்த்தைகள்!

அந்த காட்சி கண் முன் படமாக விரிய அப்போது வானதி விவேக்கைப் பார்த்த பார்வையில் முழுக்க முழுக்க அன்பு மட்டுமே இருந்தது.

## 10

வான்மதியின் பார்வையிலும் பாவனையிலும் கனிவும் காதலும் நிரம்பி இருக்க ஒரு கணம் திகைத்த விவேக், அடுத்த கணம் தன்னை தானே சுதாரித்துக் கொண்டான். இந்த சூழலில் அவளிடம் கனிவாகப் பேசுவது அவளை ஏமாற்றுவதற்கு சமம்!

"ஹேய்! நீ என்ன விக்கிரமாதித்தன் பரம்பரையில் வந்தாயா? ஒரு நிமிஷம் கொதிக்கிறாய்! அடுத்த நிமிஷம் குளிர்கிறாய்! உன்னிடம் எப்படி பேசுவது என்று நான் தனியா நாசா ஆராய்ச்சி மையத்தில் போய் பயிற்சி எடுத்துக் கொண்டு வர வேண்டும் போல..." என்று கன்னத்தில் லேசாகத் தட்டி, கேலிக் குரலில் கேட்டதும் அவள் திகைத்தாள்.

"இந்த மாதிரி தேவை இல்லாமல் தொட்டுப் பேசுவது இதுவே கடைசி முறையாக இருக்கட்டும் மிஸ்டர்



விவேக்" என்று அவசரமாக அவன் கையைத் தட்டிச் சொல்லிவிட்டு சோபாவில் அமர்ந்தாள்.

"நீ அந்நியன் மாதிரி என்று நினைக்கிறேன். உனக்குள்ளே இருக்கும் இந்த சாப்ட் கேரக்டரை தூங்க விடாமல் வைத்துக் கொள்ள என்ன செய்ய வேண்டும் என்று சொல். எதுவானாலும் செய்கிறேன்" என்றபடி மீண்டும் அவளின் அருகே வந்து சோபாவில் அமர்ந்தான்.

"அது உங்களுக்குத் தேவை இல்லாத விஷயம் மிஸ்டர் விவேக்."

"நான் நீ வா என்று ஒருமையில் பேசிக் கொண்டு இருக்கிறேன். நீ என்னவோ மிஸ்டர் டாக்டர் என்று கதை சொல்லிக் கொண்டு இருக்கிறாய். நாம் கல்யாணம் பண்ணிக்கிறோமோ இல்லையோ, உன்னால் எனக்கு ஒரு பெரிய உதவி கிடைத்து இருக்கிறது. அதனால் கடைசி வரை நாம் நண்பர்கள், அதை மாற்ற முடியாது" என்று சொல்ல அவள் தேகம் சிலிர்த்து அடங்கியது.

"நான் என்ன செய்தேன்?"

"இன்றைக்கு நான் உன் முன்னால் நின்று சட்டமாக அதிகாரம் பண்ணி, கிண்டல் செய்து கொண்டு இருக்கிறேன் என்றால் அது நீ கொடுத்த இல்லை... உன் உயிரினும் மேலான விஜய் கொடுத்த பிச்சை..."

"இதுக்கு மேலே நீங்க எதுவும் பேசாதீங்க... என்னைத் தனியா விடுங்க... ப்ளீஸ்... போய்டுங்க... ப்ளீஸ்... ப்ளீஸ்... பளீஸ்..."

கைகள் குவிந்து இருக்க, கண்கள் கண்ணீரைப் பெருக்க, இதழ்கள் வார்த்தைகள் ஒவ்வொன்றையும் வெளியிடும் போதும் நடுங்கி தவி தவிக்க, அவளின்

பாவனையைப் பார்த்த விவேக் தன்னையும் அறியாமல் உருகி தவித்துப் போனான். அருகே வந்தான்.

அவள் எதிர்பாராத தருணத்தில், ஒரு கையை நீட்டி, அவளின் தலையை தன் நெஞ்சில் சாய்த்து அழுத்தி, பின்னந்தலையை வருடினான்.

இதயம் துடிக்கும் ஓசையில் தன் உயிரில் கலந்த இசையை உணர்ந்து, விலகத் தோன்றாமல், வானதி சாய்ந்து இருக்க அவளின் காதுகளில் மென்மையான குரலில் வசியம் செய்யும் பாவனையில் பேச ஆரம்பித்தான் விவேக்.

''என் இதயம் துடிக்கும் ஓசையை கேள் வானதி. இதை வேண்டாம் என்று உன்னால் சொல்ல முடியாது. உன் தவிப்புப் புரிகிறது. நான் விஜய் பேரைச் சொல்லி இருக்க வேண்டாம். ஆனால் அதைச் சொல்லாமல் இருக்க முடியாது'' என்றபோது விலக முயன்றவளை, பின்னங்கழுத்தில் லேசான அழுத்தம் கொடுத்து இறுக்கிக் கொண்டான்.

''ஷ்! ரெண்டு நிமிஷம் சும்மா இரு மதி. விஜய் என்ற பெயர் நம் வாழ்க்கையில் இரண்டறக் கலந்து விட்டது. என்னை தனியா விடு. என்று நீ நூறு ப்ளீஸ் போட்டு கண்ணீரோடு கெஞ்சிக் கேட்பதால், இப்ப போகிறேன். ஆனால் திரும்ப வருவேன். இன்று மட்டும் இல்லை. இனி எப்போதும் நீ தனியாக இருக்க முடியாது. உன் தனிமை கூட என்னோடு தான்'' என்று அவளின் நெற்றியில் மென்மையாக இதழ் ஒற்றி விட்டுச் சென்றான் விவேக்.

அவனின் தொடுகையில், பாவனையில், பேசிய வார்த்தைகளில், பலம் இழந்து கால்கள் தொய்ய, தன் உடலையே தூக்க முடியாமல் சிரமப்பட்டு நகர்ந்தவள் படுக்கையில் சென்று விழுந்தாள். கண்கள் கண்ணீரைப் பெருக்கும் வேலையைச் செய்ய, நினைவலைகள் தடம் புரண்டன. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பான இனிய வசந்த காலம் கண் முன்னால் விரிந்தது.



* * *

நான் மாடக்கூடல் என்று போற்றப்படும் மதுரை மாநகரின் ரயில் நிலையத்தில் அதிகாலை நேரத்தில், வந்து நின்ற ரயிலில் இருந்து தன் தந்தையுடன் இறங்கிய மதி பிளாட்பாரம் எங்கும் தன் கண்களை வீசி மனம் கவர்ந்தவனை தேடி, காணாமல் வாடினாள்.

இசையைத் தவிர வேறு உலகம் அறியாமல் வளர்ந்த அப்பாவி பெண். ஆறு வயதாக இருக்கும்போது வாய்ப்பாட்டு கற்றுக் கொள்ள ஆரம்பித்தாள். ஐந்து ஆண்டுகளாக சென்னையிலும் திருவையாற்றிலும் நடக்கும் இசை விழாக்களில், இரண்டாம் நிலை பாடகி வரிசையில் இடம் பெற்றவள்.

டிசம்பர் மாதத்தில் மட்டும் சென்னை சபாக்களில் இருபது கச்சேரிகளுக்கு குறையாமல் செய்பவள். திரைப்படங்களில் பின்னணி பாடும் வாய்ப்புகளும் வர ஆரம்பித்து இருக்கிறது. அத்தனை திறமையையும் தாண்டி, பெற்றோர் மீது அன்பும் மதிப்பும் வைத்து இருப்பவள். அப்பாவின் தங்கை மகனான விஜய் மீது அதீத காதலை மனதிற்குள் பொத்தி வைத்து இருப்பவள்.

''என்னப்பா நம்மைக் கூப்பிட மாமா வீட்டில் இருந்து யாரும் வரலையா?'' என்றவளின் தலையை வருடி, புன்னகை செய்தார் ஸ்ரீனிவாசன்.

''விஜய் வரேன் என்று நேற்று சொல்லி இருந்தான் மதி. ஆனால் கடைசி நேரத்தில் ஆபீஸ் வேலை வந்து விட்டதாம். நைட் பத்து மணி வரை தூத்துக்குடியில் இருந்து கிளம்ப முடியவில்லை என்று சொன்னான். மாமா அனுப்பிய கார் வெளியே இருக்கும். வா போகலாம்'' என்று தந்தை சமாதானப்படுத்த அவளின் முகம் தெளியவில்லை.

குனிந்த தலை நிமிராமல் வாய்க்குள் அத்தை மகனைத் திட்டி முனகியபடி நடந்து கொண்டு இருந்த வான்மதியின் தலையில், பின்னால் இருந்து முளைத்த இரு வலுவான கரங்கள் ஒரு கம்பளி ஸ்கார்பினை வைத்து, நாடியின் அருகே, இரண்டு முனையையும் இறுக்கிக் கட்டுவதை உணர்ந்து அவசரமாக திரும்பியவளின் முகம் பூவாக மலர்ந்தது.

''விஜய்...!'' என்று இதழ்கள் இனிமையாக முணுமுணுத்தது.

''திட்டி முடிச்சாச்சா?'' என்று சின்ன சிரிப்புடனும், கேலி கண் சிமிட்டலுடன் கேட்டபடி அவளின் தோளை அணைத்து, பக்கவாட்டில் அவளின் நெற்றியில் முட்டியது விஜய்.

அவளின் மனம் கவர்ந்த அத்தை மகன்! விஜய் ஆனந்த்!

விஜய் பிருந்தா - நந்தகோபால் தம்பதியினரின் ஒரே மகன். மல்லிகை சாகுபடி செய்து, ஓரளவிற்கு வசதியாக வாழும் விவசாயக் குடும்பம் மதுரையில் வசிக்க, அவன் தூத்துக்குடி துறைமுகத்தில், சரக்குகள் ஏற்றி இறக்கும், தனியார் நிறுவனத்தில் மனித வள மேம்பாட்டு



அதிகாரியாகப் பணியில் இருக்கிறான். எம்.பி.ஏ. பட்டதாரி.

மது வசிப்பது சென்னை என்றாலும், இப்போது தன் தந்தை பிறந்த ஊரில் அம்மன் கோவிலில் நடைபெறும் மார்கழி மாத சிறப்பு உற்சவத்தில் தன் திறமையை தெய்வத்தின் முன்னிலையில் சமர்ப்பிக்க வந்து இருப்பவள்.

சென்னையில் இருந்து மதுரைக்கு வந்து இருக்கும் தன் மாமன் மகள் மதுவை பார்ப்பதற்காகவே தூத்துக் குடியில் இருந்து இரவோடு இரவாக வந்த சேர்ந்து இருக்கிறான்.

''எப்ப வந்த?'' என்று இரண்டு வார்த்தைகளை அவன் கேட்டு முடிப்பதற்குள் அவளின் கண்கள் ஆயிரம் கவிதைகள் பாடி முடித்தன.

''உங்களை எவ்வளவு நேரமா தேடுறது? எங்கே போயிட்டீங்க...?''

''பனி எப்படிக் கொட்டுது? குளிர் தாக்கி தொண்டை வலித்தால் எப்படிப் பாட முடியும்? அதான் ஸ்கார்ப் வாங்க போனேன்...'' என்ற அத்தை மகனின் அன்பான குரலில் ஏற்கனவே உருகியவள் மேலும் கரைந்தாள். விழிகளால் அவனை விழுங்கி விடும் வேகம் வெளி வந்தது.

''என்ன அப்படி பார்க்கிற? வழியைப் பார்த்து நட மாமா ஏற்கனவே காருக்கு போயாச்சு...'' என்ற அவனின் கிசுகிசுப்பான பதிலைக் கேட்டதும், அப்பா சில நிமிடங்கள் முன்பு இவன் வர மாட்டான் என்று சொன்ன நினைவு வந்தது.

''அப்பா நேற்று இரவு போன் பண்ணியபோது, இரவு வர முடியாது என்று பொய் சொன்னீங்களாக்கும்?''

''பொ..ய்..யா? இல்லையே?''

''நேற்று நிறைய வேலை என்பதால் கிளம்ப முடியலை என்று அப்பாவிடம் சொன்னதாக சொன்னாரே?''

''அது உண்மை. நேற்று இரவு பதினோரு மணி வரை அலுவலகத்தில் இருந்து நான் கிளம்பவில்லை. அவர் போன் பண்ணும் போது நான் தூத்துக்குடியில் இருந்தேன். அதை தான் சொன்னேன்'' என்று பேச்சை நிறுத்தியவன் கண்கள் சொல்லாத கவிதைகள் நூறு படித்தது.

பேசிக்கொண்டே மிக மெதுவாக நடந்த போதும், ரயில் நிலையத்தின் பரபரப்பு குறைந்த பார்க்கிங் ஏரியாவுக்கு வந்து விட்டதால், அங்கே இருவரும் சிலையாக சில வினாடிகள் நின்றனர்.

''நைட் புல்லா தூங்காமல் கார் ஓட்டிட்டு வந்தீங்களா?'' என்று அந்த மார்கழி மாத அதிகாலை நேரத்தின் தெய்வீக அமைதியைக் கலைக்காமல் இசையாகவே வெளி வந்தது மதுவின் கேள்வி.

''ம்ம்.. தூக்கம் வருமா என்ன? நீ எப்படி இருக்கிறாய்?''

''ப்ச்! நல்லா இல்லை...'' என்று உதட்டைப் பிதுக்கி வானதி சொல்லும்போதே அவன் கண்கள் பதறியது.

''ஏன் என்ன ஆச்சு? யார் என்ன சொன்னா?'' என்று பதறிய அவன் குரலில் அவள் புன்னகை செய்தாள். கைகள் உயர்ந்து அவன் கன்னத்தில் தட்டியது.



''யாரும் எதுவும் சொல்லவில்லை. நல்லா இல்லை என்று சொன்னது இறந்த காலம். உங்களைப் பார்த்த நிமிஷத்தில் நல்லா ஆகிட்டேன்.''

''ஒரு நிமிஷம் துடித்துப் போய் விட்டேன் தெரியுமா?'' என்றவனிடம் இருந்து ஒரு பெருமூச்சு வெளியேற, அவனை இமைக்காமல் பார்த்தாள் மது.

''போகலாமா விஜய்...'' என ஸ்ரீனிவாசனின் குரல் கேட்டதும் இருவரும் தங்களின் சுய நினைவு அடைந்து காரை நோக்கி நகர்ந்தாலும், இருவரின் கண்களில் இருந்த காந்தமும், இதழ்களில் உறைந்து இருந்த புன்னகையும், பரஸ்பரம் அடுத்தவரை ஈர்க்க தவறவில்லை.

ரயில் நிலையத்தில் இருந்து வீடு வந்த சேர ஆன இருபது நிமிடங்களில் ஸ்ரீனிவாசன் கேட்ட கேள்விகளுக்கு வாய் தன் போக்கில் பதில் சொல்ல, கண்கள் கண்ணாடி வழியாக பின் சீட்டில் அமர்ந்து இருந்த மதியை விழுங்க முயன்று கொண்டு இருந்தன.

சுந்தரி கண்ணால் ஒரு சேதி

சொல்லடி இந்நாள் நல்ல சேதி.

என்னையே தந்தேன் உனக்காக

ஜென்மமே கொண்டேன் அதற்காக

நான் உன்னை நீங்க மாட்டேன்!

நீங்கினால் தூங்க மாட்டேன்.

சேர்ந்ததே நம் ஜீவனே.''

ஒருவருக்கு ஒருவர் என்று பிறந்த போதே பேசி வைத்து இருந்தாலும் பிள்ளைகளின் விருப்பமே முக்கியம் என்று ஒதுங்கி இருந்தார்கள். கடந்த மாதம் வரை அந்தப் பேச்சே இல்லை.

போன மாதம் விஜய்க்கு திருமணப் பேச்சை ஆரம்பித்தபோது, அவன் 'மாமாவிடம் மதுவை கேளுங்கம்மா' என்று சொல்லிவிட இரண்டு வீட்டிலும் சந்தோஷ அலைகள் பொங்கின. மார்கழி மாதம் கழிந்து தை பிறந்த உடனே மேளம் கொட்ட தயார்!

வாசலிலேயே இருவரும் நின்று இன்னும் கண்ணால் கவிதை படித்துக் கொண்டு இருக்க, கார் சப்தம் கேட்டதும், புன்னகை மலர்ந்த முகத்துடனும், விரிந்த கைகளுடனும் வாசலுக்கு ஓடி வந்த பிருந்தா தொண்டையைக் கனைக்க இருவரும் அவசரமாக நினைவுக்கு வந்தனர்.

''எப்பம்மா வந்தீங்க...?''

''ரொம்ப வழியுது. துடைச்சுக்கோ. அது நான் கேட்க வேண்டிய கேள்வி...'' சிரிப்புடன் சொல்ல இருவரும் மெல்ல அடி எடுத்து உள்ளே நடந்தனர்.

''மதி செல்லம்! உன்னை தான் வழி மேலே விழி வச்சு பார்த்துட்டு இருக்கேன். எப்படி இருக்க கண்ணு? அம்மா சுகமா? உன்னைப் பார்த்து ஏழெட்டு மாசம் இருக்காது? நடுவில் ஒரு தடவை அத்தையைப் பார்த்து போனால் என்னவாம்? இந்த திருவிழாவில் பாடச் சொல்லி மாமா வற்புறுத்தவில்லை என்றால் வந்து இருக்க மாட்டாய் தானே?'' என்று உரிமையுடன் கோபித்துக் கொள்ள அவள் மறுப்பாகத் தலை அசைத்தாள்.



''அப்படி எல்லாம் இல்லை அத்தை. நீங்க எல்லோரும் கண்ணுக்குள்ளேயே இருந்தீங்க. திருவிழா இல்லாவிட்டாலும், பாடுவதற்கு இந்த சான்ஸ் கிடைக்கவில்லை என்றாலும், வந்து இருப்பேன். நல்லா இருக்கீங்களா? மாமா எங்கே?''

''அங்கே கச்சேரிக்கு ஏற்பாடு பண்ணனும் இல்லை. அப்படியே கோவிலில் பூஜைக்கும் ரெடி பண்ணச் சொன்னேன். மாமா நேற்றே திருபுவனம் போய்ட்டாங்க. நீ முதலில் கை கால் கழுவிட்டு அப்பாவுக்கும் விஜய்க்கும் காபி கலந்து கொடு. நான் வாசலில் கோலம் போட்டுவிட்டு வருகிறேன்'' என்று அவர்களை வரவேற்று உள்ளே அனுப்பினார் யசோதா.

முகம் கழுவி விட்டு காபி கலக்க உள்ளே சென்றவளை பின் தொடர்ந்து சென்றான் விஜய். ''மதி... உனக்கு காபி போடத் தெரியுமா? தேவை இல்லாத ரிஸ்க் எடுக்க வேண்டாம். அம்மா வந்து விடட்டும்' என்று அக்கறையோடு சொல்லும் போதே ஸ்ரீனிவாசன் அருகே வந்தார்.

''சமையல் தெரியும் விஜய். ஆனால் பாட்டு தான் தெரியுமா என்று சந்தேகமா இருக்கு...'' என்று கேலி பேச, அவள் சிணுங்கினாள்.

''மாமா, அவள் காபி எப்படி இருந்தாலும் நான் சந்தோஷமா குடிப்பேன். உங்களுக்காக தான் அம்மா வரட்டும் என்று சொன்னேன். மதியைக் கிண்டல் பண்ணாதீங்க'' என்று வேகமாகச் சொல்ல அவர் பெருமையுடன் சிரித்தார்.,

''எத்தனை நாளைக்கு கூட இருப்ப? தூத்துக்குடியில் இருந்து ஒரு போன் வந்ததும் ஓடி போய்டுவ...''

"இனிமேல் நீங்க சென்னைக்குக் கிளம்பும் வரை நான் தூத்துக்குடிக்குப் போகலை. போதுமா?'' என்று உறுதி அளிக்க வான்மதியின் முகம் மலர்ந்தது.

"நிஜமாவா? பொய் சொல்லாதீங்க'' என்று சிணுங்கியவளின் தலை மேல் கை வைத்து, ''உன் மேல சத்தியமா. போதுமா?'' என்று சத்தியம் செய்த உடனே வானதியின் முகம் மேலும் விரிந்து பிரகாசித்தது.

# 11

மதுரையில் இருந்து முப்பது கிலோமீட்டர் தூரத்தில் இருக்கும் திருபுவனம் அருகே இருக்கும் கோவிலில் நடைபெறும் விழாவில் பாட அழைத்து இருப்பதால், வான்மதியுடன் யார் செல்வது என்ற கேள்வி பதில்களுடன், வீடு பரபரப்பாக இயங்கிக் கொண்டு இருந்தது.

''விஜய், எனக்கு என்ன சொல்றதுன்னு தெரியலை. நீயும் கூட போயிட்டு வா என்று சொல்லலாம் என்று பார்த்தால், மூன்று பேரா போக வேண்டாம் என்று அண்ணன் அபிப்ராயப்படுகிறார். அப்பா வேறே ஏற்கனவே அங்கே போய் விட்டார். அண்ணனை வர வேண்டாம் என்றோ. தனியா வேறே வண்டியில் வா என்றோ சொல்வது. சரியா இருக்குமா? அதனால் நீ...'' என்று நிறுத்த அம்மாவை பரிதாபமாகப் பார்த்தான் விஜய்.

''என்னம்மா சொல்றீங்க?'' என்றவனுக்கு அதிர்ச்சியில் தொண்டையில் இருந்து சப்தம் எழும்பவே



இல்லை. அவள் அருகில் அரை நாளைக் கழிக்க ஆவலுடன் திட்டமிட்டு கொண்டு இருந்த வேளையில் அம்மாவின் வார்த்தைகளைக் கேட்டு முகம் வாடியது.

விஜயின் அந்த வாட்டம் வானதிக்கு தாங்கவில்லை. தாழ்ந்த குரலில் அவர் பேசியது அவள் காதுகளிலும் விழுந்து இருந்தது. தந்தையை முறைத்தாள்.

''ஏன்பா விஜயைக் கோவில் கச்சேரிக்கு வரவேண்டாம் என்று சொன்னீங்க?''

''நான் விஜயை வரவேண்டாம் என்று சொல்வேனா? நான் அப்படிச் சொன்னதுக்கு ஒரு காரணம் இருக்குடா...''

''என்ன காரணம்? மூன்று பேரா ஒரு இடத்துக்குப் போகக் கூடாது என்ற மூட நம்பிக்கை தானே?''

''என் பொண்ணு புத்திசாலி என்று நினைத்தேனே? காதல் வந்து விட்டால், புத்திசாலித்தனம் காணாமல் போய்டுமா மதி?'' என்று சிரித்தபடி கேட்க விஜய், பிருந்தா இருவருமே அவர்களைத் திரும்பிப் பார்த்தனர்.

சிரிப்பை அவசரமாக அடக்கி, அவர்களிடம் ஒன்றும் இல்லை என்று தலை அசைத்து விட்டுத் திரும்பிக் குரலைத் தணித்து மகளிடம் ரகசியம் பேசினார்.

''நேற்று நைட் முழுக்க தூங்காமல் ஆறு மணி நேரம் வண்டி ஓட்டிட்டு வந்து இருக்கான். அத்துடன் இன்னும் இரண்டு மணி நேரம் ஓட்டணும். திரும்பி வர நடு ராத்திரி ஆகும் மதி. அதனால் தான் வேண்டாம் என்று சொன்னேன்...''

''என்னப்பா இது? விஜய் உடல்நலனில் அக்கறை இருந்தால் அதுக்காக இப்படியா சொல்றது? இந்த மாதிரி மூன்று பேர் நாலு பேர் என்று கதை பேசுவதை முதலில்

தூக்கி தூரப் போடுங்க. அவரை வேண்டாம் என்று இங்கே தனியா விட்டுட்டுப் போனால், அவர் நிம்மதியா ரெஸ்ட் எடுப்பார் என்று நம்புறீங்களாப்பா?'' என்று கேட்க அவர் திகைத்தார்.

''இங்கே தனியா இருந்து என்னைப் பற்றி நினைத்துக் கொண்டே இருப்பதை விட என் கூட இருந்தால் சந்தோஷமா இருப்பார். ஒரு டிரைவரைக் கூப்பிட்டுக் கொள்ளலாம். விஜய் வண்டி ஓட்ட வேண்டாம். மூட நம்பிக்கையை மனதில் வைத்து நீங்க சொன்ன கதைக்கும் பதில் சொன்ன மாதிரி ஆச்சு. விஜய்க்கு ரெஸ்ட் கொடுத்த மாதிரியும் ஆச்சு'' என்று சுலபமாக வழி சொன்ன மகளை பெருமையுடன் பார்த்தார்.

அடுத்த பதினைந்தாவது நிமிடம். இளம்பச்சை நிற உடலில், அடர் ரோஜா நிற பார்டரில் தங்க மயில்கள் அணிவகுத்து நிற்கும் பட்டுச் சேலையில் வெள்ளையும் சிவப்புக் கற்களும் பதித்த கல் ஜிமிக்கி, அதே மாடலில் செய்த கழுத்தை ஒட்டிய ஒற்றை நெக்லஸ், தலை நிறைய மல்லிகைச் சரம் வைக்கப்பட்டு, நடு நெற்றியில் கல் பதித்த டிசைனர் போட்டு என மின்னியவளின் கன்னத்தை வழித்து திருஷ்டி கழித்தார் பிருந்தா.

''ஹய்யோ என் கண்ணே பட்டு விடும் போல இருக்கே? என் தங்கம். இப்பவே மனையில் உட்கார்த்தி வச்சுடலாம் போல அவ்வளவு அழகா இருக்க ராசாத்தி. நடுவில் இந்த மார்கழி மாசம் மட்டும் இல்லை...'' என்றவரின் பேச்சில் இடை புகுந்தார் ஸ்ரீனிவாசன்.

''முகூர்த்தத்துக்கு இன்னும் ஒரு மாசம் கூட இல்லை. இன்னும் ஏன் புலம்புகிறாய்? மணி ஆச்சு? குங்குமம் வச்சு விடு. கிளம்புகிறோம்...''



''விஜய்...'' என்று அவசரமாக பிருந்தா குரல் கொடுக்க மாடியில் இருந்து இறங்கி வந்தவன், வான்மதியைப் பார்த்து சிலையாக நின்றான். இவள் அழகு என்று தெரியும். ஆனால் இவ்வளவு அ...ழ...கா..?

''டேய்! வாயை மூடுடா. பெரிய கிருஷ்ண பரமாத்மா என்று நினைப்பு. உலகமே உன் வாய்க்குள் தெரியுது. ரொம்ப ஜொள்ளு விடாமல் ஒழுங்கா கூட போயிட்டு வா. எங்க அண்ணன் முன்னாடி என் மானத்தை வாங்கிடாதே'' என்று அவன் காதில் பிருந்தா கேலி பேச அவன் கண்களை இமை தட்டி விழித்தான்.

''கிளம்பும்போது அத்தை உங்களிடம் என்னவோ காதில் சொன்னாங்களே? அது என்னது?'' என்று காரில் போகும்போது வானதி விசாரிக்க அவன் அசடு வழிய புன்னகை செய்தான்.

''என்ன விஜய் சொல்லுங்க...''

''அதை விடு. நான் படியில் இறங்கி வரும்போது அம்மா உன்னிடம் ஏதோ சொன்ன மாதிரி இருந்ததே? என்ன விஷயம்?'' என்று அவன் திருப்பி கேட்க அவள் முகம் இப்போது செவ்வானத்தின் வண்ணம் கொண்டது.

''அம்மா என்ன சொன்னாங்க... சொல்லு.. சொல்லு மதி...ப்ளீஸ்...'' என்றவன் மேலும் நெருங்கி அமர இருவரின் மூச்சுக் காற்றும் உரசி அனல் பறந்தது.

''விஜய் என்ன இது? அப்பா முன்னாடி இருக்காங்க. கொஞ்சம் தள்ளி உட்காருங்க ப்ளீஸ்...''

''உங்க அப்பா தூங்கி ஒரு மணி நேரம் ஆச்சு. நான் கேட்டதுக்கு பதில் சொல்லு...''

"உங்களையே வண்டி ஓட்ட விட்டு இருக்கணும். நீங்க என்னிடம் வம்பு பண்ணாமல் பாதையில் கவனமா இருந்து இருப்பீங்க. தப்பு பண்ணிட்டேன்'' என்று அவள் செல்லமாகச் சிணுங்க அவன் முகம் மேலும் பிரகாச மானது.

"வாவ்! நீ தான் டிரைவர் ஐடியா கொடுத்து மூன்று பேர் பயணத்தை நான்காக்கியதா? அப்ப உனக்கும் நான் வருவதில் ஆசை தானே? அப்புறம் இப்ப என்ன பிடிக் காத மாதிரி ஆக்டிங்?'' என்றவன் முகம் மேலும் கனிந்து குழைய அவளின் முகம் சிவந்தது.

"பிடிக்கும் விஜய்... ஆனால்... விஜய் ப்ளீஸ்... தள்ளி உட்காருங்க...'' என்று அவள் கெஞ்சுவதைக் கண்டதும் மனம் இன்றி சற்று தள்ளி அமர்ந்து கொஞ்சம் இடை வெளி விட்டவன் கரம் அவளின் கைகளைப் பற்றி தன் மடி மேல் வைத்துக் கொண்டது.

"நீ சொன்னதை நான் கேட்டு விட்டேன் இல்லையா? நான் கேட்டதற்கு பதில் சொல்லு. அம்மா என்ன சொன் னாங்க? எதுக்கு நீ அப்படி முகம் சிவந்தாய்?''

'நீங்க மட்டும் நான் கேட்டதற்கு பதில் சொன்னீங் களா? போங்க நான் சொல்ல மாட்டேன்...'' என்று சலுகையாக அவள் சிணுங்கும் போது அசைந்த அவளின் ஜிமிக்கிகள் அவனின் இதயத்தையும் அசைத்துப் பார்த்தது.

''அவங்க சொன்னது இருக்கட்டும். நீ இப்படி இவ்வளவு அழகா என் பக்கத்துல உட்கார்ந்து இருந்தால், நான் எப்படி நல்ல பையனா இருப்பது...? உன்னை என்னென்னவோ செய்யணும் போலத் தோன்றுதே?''



என்றபடி ஒற்றை விரலால் அவளின் காது வடிவினை அளந்து, அவளின் ஜிமிக்கியை விரல்களால் சுண்டி விட்டவன், குரலில் மயக்கம் இருந்தது.

அவனின் குரல், அவனின் அருகாமை, ஸ்பரிசம், எல்லாமே சேர்ந்து அவளுக்குள்ளும் ரசாயன மாற்றங் களை உண்டு பண்ண அவள் நெளிந்தாள்.

மின்சாரம் என் மீது பாய்கின்றதே!

உன் கண்கள் என் கண்ணை மேய்கின்றதே!

நீ உத்தரவிட்டால் முத்தம் தருவேன்

உதடுகள் வேர்க்கும் வரை!

உண்மையில் நானும் யோக்கியன் தானடி

உன்னைக் காணும் வரை!

காதல் தீயே... காதல் தீயே...

இருவரின் கண்களும் ஒன்றோடு ஒன்று கலந்து கதையும் கவிதையுமாக காவியம் பாடிக் கொண்டு இருக்க, அவனின் சட்டைப் பையில், மொபைல் அழைக்கும் ஒலி கேட்டு கண் இமை தட்டி விழித்தாள்.

''விஜய் போன் அடிக்குது...'' என்றவளின் குரல் கிசுகிசுப்பில் இருந்து வெளியே வர பிரம்ம பிரயத்தனம் செய்தது.

''அடிக்கட்டும்! டோன்ட் டிஸ்டர்ப் சொல்லிடு. இன்னும் நான் கேட்ட கேள்விக்கு நீ பதில் சொல்ல வில்லை...''

''நீங்க கூட தான் நான் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லலை...''

"பதிலுக்கு பதில் மடக்குவாயா?" என்று நெருங்கி அவளின் நெற்றியில் லேசாக முட்டி விலகி, "டேய் ஜொள்ளு பார்ட்டி, வாயை மூடு" என்பதை தான் அம்மா சொன்னாங்க. அவங்க என்னைக் கலாய்ச்சதைச் சொல்ல வேண்டாம் என்று பார்த்தால் விடுறியா? உன்னிடம் என்ன சொன்னாங்க? இப்ப சொல்லு" என்று விசாரிக்க, அவள் வெட்கத்துடன் முறுவலித்தாள்.

"அதையே தான் என்னிடமும் கொஞ்சம் மாற்றி சொன்னாங்க. இப்படியே மனையில் உட்கார வைத்து விடலாம் போல அழகா இருக்கிறாய் என்று..." என்று சொல்லி முடிக்கும் முன்பே அவன் இதழ்கள் அவள் கன்னத்தில் முத்திரை பதித்து நிமிர்ந்து இருந்தது.

"மை காட்! விஜய் பட்ட பகலில்... ஓடும் காரில்... இன்னும் ரெண்டு பேர் இருக்கும்போது..." என்று அவள் பதற அவன் கண் சிமிட்டினான்.

"நீ ரியாக்ஷன் காட்டாமல் இருந்தால் யாருக்கும் எதுவும் தெரியாது. நீ சொன்னதை கேட்ட பிறகு தான், அம்மா சொன்னது சரி என்று எனக்குக் கூடத் தோன்று கிறது. இப்ப கூட நாம் கோவிலுக்கு தான் போயிட்டு இருக்கோம். அங்கேயே கல்யாணம் பண்ணிக்கலாமா? உங்க அப்பாவும் என் அப்பாவும் அங்கேயே சாட்சிக்கு இருப்பாங்க" என்று ரகசியமாகக் கேட்ட வேளையில் மீண்டும் அலைபேசி ஒலித்தது.

"விஜய், விளையாடாதீங்க! போனை எடுத்துப் பேசுங்க. ஏதாவது அவசரமா இருக்கப் போகுது..." என்று அவன் முழங்கையில் மெலிதாகக் கிள்ளினாள் வான்மதி. போனை எரிச்சலுடன் எடுத்துப் பார்த்தவன், அது



அலுவலகத்தில் இருந்து என்றதும் ஒரு கணம் யோசித்தான். எடுத்து, "ஹலோ என்று சொன்னதும், நீண்ட நேரம் ஒலித்ததால், எதிர்முனை வைக்கப்பட்ட பீப் ஒலியே அவன் காதில் விழுந்தது.

எரிச்சலுடன் அவன் இணைப்பைத் துண்டித்த வேகத்தில், அந்த சிவப்பு பட்டனில் கூடுதல் வினாடிகள் அவன் விரல்கள் அழுந்த அலைபேசி, அணைந்து போனதை அவன் கவனிக்கவில்லை.

"கட் ஆகிடுச்சு.." என்ற முணுமுணுப்புடன் போனை பையில் போட, "கட் ஆனால் என்ன? யார் என்று பார்த்துப் பேசுங்க விஜய்" என்று தூண்டினாள் வானதி.

"அதை விடு, இன்றும் நாளையும், நானும் என் நேரமும் முழுக்க முழுக்க உனக்கு மட்டும் தான். எதுவா இருந்தாலும் நாளை இரவு உன்னை ரயிலில் ஏற்றி விட்ட பிறகு தான்..." என்று உற்சாகமாகச் சொன்னவன் குரலில் காதல் பொங்கி வழிய அவளின் கண்கள் மயங்கி கிறங்கியது.

"நீ என் உயிர். உனக்காக எதையும் தள்ளி வைப்பேன் என்று முகத்திற்கு நேரே சொல்லும் காதலனைக் கண்ட மயக்கமும் காதல் கர்வமும் அவள் மனம் எங்கும் நிறைய அவர்களின் பேச்சு வார்த்தை அடுத்த ஆறு மணி நேரத் திற்கு தடைகள் ஏதும் இன்றி, இனிதாகத் தொடர்ந்தது.

'சின்னஞ்சிறு பெண் போலே சிற்றாடை இடை உடுத்தி...' என்று அவள் மீனாட்சியை அழைத்துப் பாடும்போது இவன் கண்கள் கிறங்கியது.

'தீராத விளையாட்டுப் பிள்ளை...' என்று கண்ணனை அழைத்தால், இவன் எழுந்து வருவதாக ஜாடை செய்தான்.

'குறை ஒன்றும் இல்லை பாட; இவன் மனம் அன்பால் நிறைந்தது.

இத்தனை கலாட்டாக்களுக்கு இடையிலும் அவள் கச்சேரி முடிந்து வரும்போது அவனின் உடையை பார்த்து கண்கள் விரித்தாள் வான்மதி.

வீட்டில் இருந்து வரும் பொழுது, வெண்ணிற காட்டன் ஷர்ட்டும், ப்ளாக் கார்ட் ராய் ஜீன்சும், அணிந்து வந்தவன் உடை இப்போது பட்டு வேஷ்டி சட்டைக்கு மாறி இருந்தது.

"என்னடா மாப்பிள்ளை. எப்ப ட்ரெஸ் மாற்றினாய்...?" என்று ஆச்சரியமாக விசாரித்த ஸ்ரீனிவாசனின் குரலில் உற்சாகம் இருக்க அவன் வான்மதியைப் பார்த்து கண் சிமிட்டினான்.

"அம்மா கிளம்பும் போதே சொன்னாங்களே மாமா. இப்படியே மனையில் உட்கார வைத்து விடலாம் என்று. மனையில் மதி தனியா உட்கார்ந்தால் நல்லா இருக்காதே? அதான் அவளுக்கு ஜோடியா பொருத்தமா இருக்கணும் என்று அப்பா அவருக்கு எடுத்து வந்த பட்டு வேஷ்டியை ஆட்டையை போட்டு விட்டேன்" என்று சிரிப்புடன் சொல்லி மதியை மேலும் சிவக்க வைக்க, ஸ்ரீனிவாசனும், நந்தகோபாலும் சிரிப்பில் இணைந்தனர்.

கச்சேரி முடிந்து திருபுவனத்தில் இருந்து கிளம்பி வீடு வந்து சேரும்போது இரவு பதினோரு மணி ஆகி இருந்த போதும் அவர்களின் வருகைக்காக காத்திருந்தார் பிருந்தா. முதல் முதலாக, வெளியூரில், அதுவும் குலதெய்வம் இருக்கும் சொந்த ஊருக்கு வந்து சிறப்பாக



கச்சேரியை முடித்து வரும். வான்மதிக்கு திருஷ்டி கழிக்க, ஆரத்தி தட்டுடன் காத்திருந்தவரின் முகம் மேலும் பிரகாசம் ஆனது.

"என் தங்கம், இன்னிக்கு மாதிரியே என்னைக்கும் நீ சந்தோஷமா ஊர் மெச்ச பேரோடும் புகழோடும்..." என்று உணர்வுப் பூர்வமாக சொல்லியபடி ஆரத்தித் தட்டைச் சுற்றிக் கொண்டு இருக்க, அடுத்த பக்கத்தில் இருந்து இறங்கிய விஜய், சர்வ சாதாரணமாக வந்த அவளின் தோள் மீது கை போட்டு நிற்க, அவர் கண் இமைக்காமல் இருவரையும் பார்த்தார்.

பட்டுப் புடவையில் மருமகளும், பட்டு வேஷ்டி சட்டையில் மகனும் ஜோடியாக வந்து நிற்கும் காட்சியில் மெய் மறந்து நின்றவருக்கு, ஆலம் சுற்றி திருஷ்டி கழிக்க மறந்து விட்டது. ஒருவேளை அவர் மறக்காமல் இருந்து இருந்தால், எல்லாம் சுபமாக இருந்து இருக்குமோ என்னவோ?

## 12

காலையில் ஆறு மணிக்கு முகம் கழுவிவிட்டு அடுக்களைக்குள் நுழைந்த வான்மதியை, பார்த்ததும் வாஞ்சையுடன் கடிந்து கொண்டார் பிருந்தா.

"ஏன் மதி கண்ணு அதுக்குள்ளே எழுந்து விட்டாய்? இன்னும் கொஞ்ச நேரம் தூங்க வேண்டியதுதானே?

நைட் படுக்க பனிரெண்டு மணிக்கு மேல் ஆகி விட்டதே?''

''தூக்கம் வரலை அத்தை. இன்னிக்கு அழகர் கோவில் போகலாம் என்று விஜய் சொன்னாங்க. அதான் சீக்கிரம் எழுந்து விட்டேன். அத்தான் எழுந்தாச்சா அத்தை?''

''அவனுக்கு தான் காபி போட்டுக் கிட்டு இருக்கேன். அவன் நாலு மணிக்கே எழுந்து விட்டான் போல, அவன் தான் என்னை எழுப்பி விட்டான். இந்தா இதைக் கொண்டு போய் அவனுக்கும் மாமாக்கும் கொடு. தோட்டத்தில் இருக்காங்க. அப்படியே நீயும் எடுத்துக்கோ'' என்று தட்டில் மூன்று டம்ளர் காபியை வைத்து நீட்ட அதை வாங்கிக் கொண்டு நடந்தாள்.

எதிரில் வந்த மாமாவிடம், ''குட்மார்னிங் மாமா, காபி சாப்பிடுங்க. அத்தான் வரலையா மாமா?'' என்று காபியைக் கொடுத்தபடி விசாரித்தாள்.

''அவன் தோட்டத்திலேயே ஆபீஸ் வேலையா இருக்கான் மதி. கொண்டு போய் கொடு...''

அரவம் உணர்ந்து ஒரு புன்னகையுடன் கூடிய தலை அசைப்பில் வானதியை வரவேற்றவன். எதுவும் பேசாமல் கையில் இருந்த வேலையில் ஆழ்ந்தான்.

கணினி திரையை மேலாக பார்வையிட்டவள், அவன் ராஜினாமா கடிதத்தைத் தட்டச்சு செய்து கொண்டு இருப்பதைக் கண்டதும் வியப்பில் விழி விரித்தாள்.

''விஜய்! எதுக்கு இப்ப வேலையை ரிசைன் பண்ணப் போறீங்க?''

''ஏன் மதி. இந்த வேலை எனக்கு இல்லை என்றால், என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள மாட்டாயா?''



''எதுக்கும் எதுக்கும் முடிச்சுப் போடறீங்க? இந்த வேலை இல்லை என்றால் இன்னொரு வேலை தேடிக் கொள்ளலாம். வேலையே கிடைக்கவில்லை என்றாலும் நம் தோட்டத்தில் விவசாயம் பார்க்கலாம். அதுவும் இல்லை என்றால், நான் பாடுவதில் எனக்கு வரும் வருமானத்தில் குடும்பம் நடத்த முடியாதா என்ன?'' என்று அவள் இடைவெளியே இல்லாமல் கேள்விகளை அடுக்க, அவன் அவளை காதலோடு பார்த்தான்.

இவளுக்காக எதை வேண்டுமானாலும் செய்யலாமே? இந்த வேலையை துறப்பது தானா பெரிது? அவனே செய்து இருப்பான். ஆனால் சாதாரணமாக எதுவும் சொல்லாத அப்பாவே வாயை திறந்து சொல்லி விட்டார்.

''பாட்டில் வரும் வருமானமா? நேற்று அந்த கோவிலில் நடந்த கச்சேரிக்கு எவ்வளவு கொடுத்தாங்க? இரண்டாயிரம் ரூபாயா? அந்த கச்சேரிக்கு காரில் நாம் போய் வந்தோமே? அதுக்கு எவ்வளவு செலவு பண்ணினோம்? பெட்ரோலும் டிரைவர் பேட்டாவும் அதுக்கு மேலேயே ஆச்சு. தெரியுமா?'' என்று அவளை வம்பிழுக்க அவள் முகம் சிவந்தது.

''எனக்கு செலவு பண்ண கணக்கு பார்ப்பீங்களா விஜய்...''

''பார்க்க வேண்டாமா மதி? ஆற்றில் என்றாலும் அளந்து கொட்டணும். ஒரு வேளை எனக்கு சம்பாத்தியம் இல்லை என்றால் மிச்ச காலம் சமாளிக்க வேண்டாமா? அதுக்காக தான் சொன்னேன்...''

''என்னை என்ன இந்த மாதிரி கோவிலில் மட்டும் கச்சேரி பண்ணும் ஆள் என்று நினைத்தீங்களா? எனக்கு சினிமாவில் பாட சான்ஸ் கிடைத்து இருக்கு. ஏற்கனவே ரெகார்டிங் மூன்று பாட்டுக்கு முடிந்து விட்டது. தெரியுமா?''

''அப்படியா! எந்த மடையன் இந்த மாதிரி ரிஸ்க் எடுத்தது...?''

''வி..ஜ..ய்..!'' என்று அவள் பல்லைக் கடிக்க அவன் சப்தமாகச் சிரித்தான்.

''கூல் பேபி. எனக்குத் தெரியும். நேற்றே மாமா சொல்லிட்டாங்க. உன் எதிர்காலத்தை மனதில் வைத்து, நானும் சென்னைக்கே வந்து விடலாம் என்று முடிவு பண்ணி விட்டேன்.''

''நீங்க எனக்காக சென்னை வந்து விட்டால் அத்தையும் மாமாவும் இங்கே தனியாக இருக்க மாட்டாங்களா?''

''அவங்க இப்பவும் தனியா தானே இருக்காங்க. அதனால் தூத்துக்குடியில் இருப்பதற்கும் சென்னையில் இருப்பதற்கும் ஒரு வித்தியாசமும் இல்லை. போக அப்பாவுக்கு இங்கே நிறைய சொந்த பந்தங்கள் வரப் போக இருப்பாங்க. ஆனால் சென்னையில் மாமாவுக்கு அத்தைக்கோ உன்னை விட்டால் வேறு உறவு என்று சொல்லிக் கொள்ள யாரும் இல்லை. அதனால்...'' என்று அவன் சொல்லிக் கொண்டு இருக்கும்போதே அவசரமாக அவனை இறுக்கி அணைத்து கன்னத்தில் அழுத்தமாக முத்தமிட்டாள் வான்மதி.



''ஹேய், என்ன இது? திடீர்னு இப்படி சுனாமி மாதிரி தாக்குற. சொல்லிட்டு கொஞ்சும்மா...'' என்று சிரிக்க அவன் கன்னத்தை கிள்ளிவிட்டு அவன் தோளில் சாய்ந்து கொண்டவளின் கண்களில், எவ்வளவோ கட்டுப்படுத்த முயன்றும் ஈரம் கசிய ஆரம்பித்து இருந்தது.

''இப்ப இருக்கும் வேலையில் இருந்து விலக ஒரு மாதம் அறிவிப்பு கொடுக்கணும். அதுக்கு தான் இன்றே மெயில் அனுப்பினேன். நம் கல்யாணம் முடிவதற்குள் இன்னொரு வேலை சென்னையில் தேடிக் கொள்ளலாம். என் மேல் நம்பிக்கை இருக்கிறது அல்லவா?'' என்றவனின் கேள்விக்கு அவளிடம் இருந்து பதில் இல்லை. அவளின் கண்ணீரை முகத்தைப் பார்க்காமலேயே உணர முடிந்ததால் பேச்சை கேலிக்கு மாற்றினான்.

''உனக்கென்னம்மா எல்லாம் நீ நினைத்த மாதிரியே நடக்கிறது. ஆனால் வெட்கம் இல்லாமல் வீட்டோடு மாப்பிள்ளையாகப் போயிட்டேன் என்று என்னை என் பிரெண்ட்ஸ் எல்லாம் கேலி பேசுவாங்க.''

''உங்க பிரெண்ட்ஸ் சொல்றதையே கேட்டுட்டு இங்கேயே இருங்க. நீங்க வரவேண்டாம்'' என்று வேகமாக நிமிர்ந்தவளின் கண்கள் அவசரமாகத் துடைக்கப் பட்டு இருந்தது.

''பிரெண்ட்ஸ் சொல்றதைக் கேட்டுட்டு இங்கே இருந்தால் பெற்றவங்க பேச்சை கேட்கவில்லை என்ற பழிச் சொல் வருமே? அதை எப்படித் தடுப்பது? ஒரு நல்ல வழி சொல்லித் தாங்க பொண்டாட்டி'' என்று கேட்க அவனின் சீண்டல் புரிந்து சிரிப்பு வந்தது.

"என்னை என்ன இந்த மாதிரி கோவிலில் மட்டும் கச்சேரி பண்ணும் ஆள் என்று நினைத்தீங்களா? எனக்கு சினிமாவில் பாட சான்ஸ் கிடைத்து இருக்கு. ஏற்கனவே ரெகார்டிங் மூன்று பாட்டுக்கு முடிந்து விட்டது. தெரியுமா?"

"அப்படியா! எந்த மடையன் இந்த மாதிரி ரிஸ்க் எடுத்தது...?"

"வி..ஜ..ய்..!" என்று அவள் பல்லைக் கடிக்க அவன் சப்தமாகச் சிரித்தான்.

"கூல் பேபி. எனக்குத் தெரியும். நேற்றே மாமா சொல்லிட்டாங்க. உன் எதிர்காலத்தை மனதில் வைத்து, நானும் சென்னைக்கே வந்து விடலாம் என்று முடிவு பண்ணி விட்டேன்."

"நீங்க எனக்காக சென்னை வந்து விட்டால் அத்தையும் மாமாவும் இங்கே தனியாக இருக்க மாட்டாங்களா?"

"அவங்க இப்பவும் தனியா தானே இருக்காங்க. அதனால் தூத்துக்குடியில் இருப்பதற்கும் சென்னையில் இருப்பதற்கும் ஒரு வித்தியாசமும் இல்லை. போக அப்பாவுக்கு இங்கே நிறைய சொந்த பந்தங்கள் வரப் போக இருப்பாங்க. ஆனால் சென்னையில் மாமாவுக்கு அத்தைக்கோ உன்னை விட்டால் வேறு உறவு என்று சொல்லிக் கொள்ள யாரும் இல்லை. அதனால்..." என்று அவன் சொல்லிக் கொண்டு இருக்கும்போதே அவசரமாக அவனை இறுக்கி அணைத்து கன்னத்தில் அழுத்தமாக முத்தமிட்டாள் வான்மதி.



"ஹேய், என்ன இது? திடீர்னு இப்படி சுனாமி மாதிரி தாக்குற. சொல்லிட்டு கொஞ்சம்மா..." என்று சிரிக்க அவன் கன்னத்தை கிள்ளிவிட்டு அவன் தோளில் சாய்ந்து கொண்டவளின் கண்களில், எவ்வளவோ கட்டுப்படுத்த முயன்றும் ஈரம் கசிய ஆரம்பித்து இருந்தது.

"இப்ப இருக்கும் வேலையில் இருந்து விலக ஒரு மாதம் அறிவிப்பு கொடுக்கணும். அதுக்கு தான் இன்றே மெயில் அனுப்பினேன். நம் கல்யாணம் முடிவதற்குள் இன்னொரு வேலை சென்னையில் தேடிக் கொள்ளலாம். என் மேல் நம்பிக்கை இருக்கிறது அல்லவா?" என்றவனின் கேள்விக்கு அவளிடம் இருந்து பதில் இல்லை. அவளின் கண்ணீரை முகத்தைப் பார்க்காமலேயே உணர முடிந்ததால் பேச்சை கேலிக்கு மாற்றினான்.

"உனக்கென்னம்மா எல்லாம் நீ நினைத்த மாதிரியே நடக்கிறது. ஆனால் வெட்கம் இல்லாமல் வீட்டோடு மாப்பிள்ளையாகப் போயிட்டேன் என்று என்னை என் பிரெண்ட்ஸ் எல்லாம் கேலி பேசுவாங்க."

"உங்க பிரெண்ட்ஸ் சொல்றதையே கேட்டுட்டு இங்கேயே இருங்க. நீங்க வரவேண்டாம்" என்று வேகமாக நிமிர்ந்தவளின் கண்கள் அவசரமாகத் துடைக்கப் பட்டு இருந்தது.

"பிரெண்ட்ஸ் சொல்றதைக் கேட்டுட்டு இங்கே இருந்தால் பெற்றவங்க பேச்சை கேட்கவில்லை என்ற பழிச் சொல் வருமே? அதை எப்படித் தடுப்பது? ஒரு நல்ல வழி சொல்லித் தாங்க பொண்டாட்டி" என்று கேட்க அவனின் சீண்டல் புரிந்து சிரிப்பு வந்தது.

"ஏன் இப்படி எல்லாம் என்னைச் சீண்டி வேடிக்கைப் பார்க்கறீங்க?"

"உன்னைச் சீண்டாமல் வேறு யாரிடம் விளையாடுவது? உன்னைப் பார்த்தால் தான். உன்னிடம் மட்டும் தான், வம்பிழுக்க வேண்டும். சண்டை போட வேண்டும். உன்னைக் கோபமூட்டி உன் முகம் சிவப்பதைப் பார்த்துப் பார்த்துச் சிரிக்க வேண்டும். உன் கோபத்தை சமாதானம் செய்து ரசிக்க வேண்டும். இந்த மாதிரி எல்லாம் தோணுது தெரியுமா?" என்று தலை சாய்த்துக் கொஞ்சலாகப் பேசியது கணினியில் வீடியோ முறையில் பதிவாகியதை இருவருமே கவனிக்கவில்லை.

"இப்படியே பேசிக் கொண்டு இருந்தால் மணி ஆகிக் கொண்டே இருக்கும். இன்று என்னை அழகர் கோவில் கூட்டி போகிறேன் என்று சொன்னீங்க நினைவு இருக்கா?"

"மறந்து விட்டேன் பாரு. கம்ப ராமாயணத்தில், ராமரின் அழகை வர்ணிக்கும் போது, தோள் கண்டார் தோளே கண்டார் என்று சொல்வார். அது மாதிரி, உன்னோடு இருக்கும்போது அடுத்து செய்ய வேண்டிய வேலை நினைவுக்கே வர மாட்டேன் என்கிறது மதி..." என்று அவள் புறம் சரிந்து கொஞ்ச, அவனை வேகமாக தள்ளி விட்டாள்.

"இந்த ஐஸ் வைக்குற வேலையை வேறே எங்கேயாவது செய்யுங்க. என்னிடம் வேண்டாம்..."

"நான் சொல்வது ஐஸ் இல்லை மதி. உண்மை. நீ பக்கத்தில் இல்லை என்றாலும் கூட வேறே எந்த



வேலையை நான் செய்து கொண்டு இருந்தாலும், ஏதாவது ஒரு சின்ன விஷயம் உன்னை நினைவு படுத்தி விடும். ஆனால் நீ பக்கத்தில் இருக்கும்போது, வேறு எந்த வேலையுமே, அது எவ்வளவு முக்கியமாக இருந்தாலும் நினைவில் எட்டிப் பார்ப்பதில்லை தெரியுமா?"

"ஹய்யோ! விஜய், நீங்க விடுற ஜொள்ளில வீடே மிதக்குது. போதும், குளிக்கலாம் வாங்க..."

"ஹேய் மதி. நிஜமாவா சொல்ற?" என்று பளபளக்கும் விழிகளுடன் அவன் வேகமாக எழ, அவள் குழப்பத்துடன் பார்த்தாள்.

"எதுக்கு இவ்வளவு அவசரமும், சந்தோஷமும்?"

"குளிக்கலாம் வாங்க என்று சொன்னியே? நீயே குளிக்கப் படுத்துவது என்றால்..."

"ஏய் திருடா! நான் என்ன சொன்னால் நீங்க என்ன சொல்றீங்க? உங்களை..." என்று குச்சியை எடுத்து அவனை அடிக்கத் துரத்த,

"வேண்டாம் மதி. சொன்னால் கேளு. எதுவா இருந்தாலும் பேசித் தீர்த்துக் கொள்ளலாம். வன்முறையில் இறங்கக் கூடாது. நான் உன் செல்லம் இல்லை" என்று தாஜா செய்தபடி, அவன் பயந்தவன் போல இங்கும் அங்கும் ஓட,

அடுக்களையில் கை வேலையாக இருந்த பிருந்தா, ஹாலில் பேப்பர் படித்துக் கொண்டு இருந்த நந்த கோபால், மாடியில் அவர்களின் சப்தம் கேட்டே கண் விழித்த ஸ்ரீனிவாசன்.

அவர்களின் சந்தோஷம் பொங்கி வழிந்த அந்த விளையாட்டை அவரவர் இருந்த இடத்தில் இருந்தே ஜன்னல் வழியாகக் கண்டு ரசித்துக் கண்கள் பனித்தனர்.

* * *

அழகர் கோவில் மலை உச்சியில் இருக்கும் 'நூபுர கங்கை' என்று அழைக்கப்படும் சுனையில் இருந்து பெருக்கெடுத்து வரும் நீரில் கொஞ்ச நேரம் குளிக்கவில்லை என்று சொல்லிக் கொண்டே, உடைகளை நனைத்து விளையாடி விட்டு கீழே இறங்கி பழமுதிர் சோலையில் இருக்கும் முருகனை தரிசித்துவிட்டு, வெளியே இருந்த மண்டபத்தில் அமர்ந்து பேசிக் கொண்டு இருந்தனர்.

''ஏன் விஜய் இங்கே வரணும் என்று சொன்னீங்க? அப்படி என்ன இங்கே விசேஷம்?'' என்று விரல்களை நீவி சொடுக்கெடுத்தபடி விசாரிக்க அவன் புன்னகை செய்தான்.

''வீட்டில் இருந்தால் தனிமை கிடைக்காது தானே? இந்த மாதிரி தனிமையில், நெருக்கமா உட்கார்ந்து கதை பேசத்தான்...''

''ப்ச்! விளையாடாதீங்க விஜி. வீட்டுக்கு அருகேயே மீனாட்சி அம்மன் கோவில் இருக்கு. கோவில் வேண்டாம் என்றால் நம்ம மல்லிகை தோட்டம் இருக்கு. எல்லாத்துக்கும் மேலே வீட்டிலேயே நம் தனிமையைக் கெடுக்க யாரும் முயற்சி பண்ண மாட்டாங்க...''

''வேறே யாரும் முயற்சியே பண்ண வேண்டாம். நீ ஒரு ஆள் போதும். ஐயோ போன் அடிக்குது! ஹய்யோ! அத்தை சாமி கும்பிடுறாங்க! ஹய்யோ! மாமா சாப்பிடப்



போறாங்க! என்று நிமிஷத்துக்கு நூறு தடவை எழுந்திரிச்சு எழுந்திரிச்சு போயிட்டு இருப்ப. அதுக்கு தான் வெளியே கிளம்பி வந்தேன்...''

''சரி. ஆனால் இந்த இடம் குறிப்பாக ஏன்...?''

''இது முருகனின் ஆறு படை வீடுகளில் ஒன்று மதி...''

''எனக்குத் தெரியாத விஷயம் சொல்றீங்களே? முருகனை தான் பார்க்கணும். ஆறு படை வீட்டில் ஒன்றை தான் தரிசனம் செய்யணும் என்றால் மதுரையில் இருந்து எட்டு கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கும் திருப்பரங்குன்றத்தை விட்டுட்டு, 30 கிலோ மீட்டர் தூரம் தள்ளி, அதிலும் மலை மேலே இருக்கும் கோவிலுக்கு ஏன் வரணும் விஜய்?''

''ஏன் இங்கே வந்தது உனக்குப் பிடிக்கலையா?'' என்றவன் கேள்வியில் பதறிப் போனாள்.

''உங்களுடன் வரும் இடம் பிடிக்காமல் போகுமா? பிடிச்சு இருக்கு. ரொம்பப் பிடிச்சு இருக்கு'' என்று அவசரமாக ஒரு வேகத்துடன் ஆவல் கலந்து சொன்னவளின் கைகளைப் பற்றி கன்னத்தில் அழுத்திக் கொண்டான்.

''இது ஸ்பெஷலான இடம் மதி. எனக்கு ரொம்பப் பிடிக்கும். அப்பாவிடம், உன்னைக் கல்யாணம் பண்ணிக்கணும் என்று சொல்ல, இங்கே தான் அழைத்து வந்தேன்'' என்றவன் கண்களிலும் குரலிலும் காதல் பொங்கி வழிய அவள் முகம் சிவந்து கனிந்தது.

''இது முருகன் குழந்தையா 'சுட்ட பழமா? சுடாத பழமா?' என்று கேட்டு அவ்வைக்கு தமிழ் பாடம் நடத்தி

கர்வம் அடக்கிய இடம் தானே? கல்யாணம் பற்றி இங்கேயா பேசினீங்க?'' என்று கேட்க அவன் புன்னகை செய்தான்.

''பழமுதிர்சோலை, அவ்வைக்கு ஞானம் பிறந்த இடம் என்றாலும், கீழே இருக்கும் பெருமாள் கல்யாண பெருமாள், லஷ்மியே வைகுண்டத்தில் இருந்து இங்கே தேடி வந்து பெருமாளின் கைத்தலம் பற்றியதாக ஐதீகம் உண்டு. அதனால் தான் இங்கே பேசினேன்...''

''அதனால் இங்கேயே குடி இருக்கும் ஐடியா இருக்கா?''

''நான் என் மதியின் இதயத்தில் குடி இருந்தால் போதாதா?'' என்று கொஞ்சிக் குழையும் போது அவன் அலைபேசி அழைத்தது.

''மை காட்! விடமாட்டாங்களே?'' என்ற எரிச்சலுடன் இணைப்பைத் துண்டிக்க போன வேளையில் அவன் கைப் பற்றி தடுத்தாள் வான்மதி.

''ஆபீஸ் காலா விஜய்...?''

''ம்ம்ம்...''

''அப்ப பேசுங்க...''

''நான் லோட் இறக்க வேண்டாம் என்று மெனக் கெட்டு சொல்லி விட்டு வந்தேன். லீவு நாளில் இறக்கினால், இரண்டு மடங்கு கூலி கிடைக்கும் என்று ஆசையில் செயல்பட்டு, இப்ப பிரச்னை என்றதும் என் உயிரை வாங்க வருவாங்க. நாளைக்குப் போய் பார்த்துக் கொள்கிறேன்...''



''இது சரி இல்லை விஜய். என்ன விபரம் என்றே கேட்காமல் நீங்க முடிவெடுக்கக் கூடாது. ப்ளீஸ் பேசுங்க...''

''பேசினால் எனக்கு மனசு கேட்காது மதி. இன்னும் அரை நாள். அப்புறம் நீ கிளம்பிய பிறகு இரவும் பகலும் இந்த ஆபீஸ் வேலையை தானே கட்டிக் கொண்டு அழப் போகிறேன். இப்ப விடு...''

''நான் உங்க பக்கத்திலேயே இருக்கேன் விஜய். பேசுங்க...'' என்று சொன்னவள் பச்சை பட்டனை அழுக்கி அவன் காதில் வைக்க மனம் இன்றி பேச ஆரம் பித்தவன் முகம் கொஞ்சம் கொஞ்சமாக தீவிரம் அடைந்தது.

''ஓ மை காட்...!''

''.....''

''எந்த மருத்துவமனை?''

''.....''

''ட்ரீட்மெண்ட் ஆரம்பிச்சாச்சா?''

''.....''

''போலீசுக்குச் சொல்லியாச்சா?''

''.....''

''அவங்க பேமிலிக்கு...''

''.....''

''தொழிற்சங்க பிரதிநிதிகளை கொஞ்சம் அமைதியா இருக்கச் சொல்லுங்க...''

''.....''

"நோ நோ பயப்படாதீங்க. நான் இரவு எந்நேரம் ஆனாலும் வந்து விடுவேன். காலை ஆறு மணிக்கு அலுவலகத்தில் பேச்சு வார்த்தை வைத்துக் கொள்ளலாம். பதட்டம் தேவை இல்லை..."

"...."

"பேசுங்க முரளி. சமாளிங்க. நைட் நான் வந்து சேர்ந்து விடுவேன்..." என்று சமாளிக்கும்போதே மதி எதோ ஜாடை செய்வதை உணர்ந்து, "நான் இன்னும் கொஞ்ச நேரத்தில் திரும்பி கூப்பிடுகிறேன் முரளி" என்று போனை வைத்துவிட்டுத் திரும்பினான்.

"விஜய், அங்கே ஏதோ பிரச்னை போல இருக்கே? நீங்க கிளம்பணும் என்றால் கிளம்புங்க. எனக்காகப் பார்க்க வேண்டாம்..."

"உனக்காகப் பார்க்காமல் வேறே யாருக்காக பார்க்கச் சொல்கிறாய்? இது என் வேலையில் அன்றாடம் நடக்கும் பிரச்னை. சின்ன விபத்து உயிருக்கு ஆபத்து இல்லை. மருத்துவமனையில் சேர்த்தாச்சு. ஈ.எஸ்.ஐ. இருக்கு. கவலைப்படாதே..."

"இல்லை விஜய். நீங்க அங்கே இருந்து விலகப் போறீங்க. பிரச்னை இல்லாமல் நல்ல பெயருடன் வர வேண்டாமா?"

"மதி, உண்மையைச் சொன்னால் நான் கம்பெனிக்கு ஒரு மாச சம்பளத்தைப் பணமாகக் கொடுத்துக்கூட நோட்டீஸ் கொடுக்கலாம். ஆனால் அது நியாயம் இல்லை என்று தான் நான் ஒரு மாசம் அங்கே வேலையே பார்க்கப் போகிறேன். இதில் என் வசதி தான் முக்கியம்..."



"நான் ஒன்று சொன்னால் கேட்பீங்களா?"

"நீ சென்னைக்கு ரயில் ஏறும் வரை நான் உன்னுடன் தான் இருப்பேன். அதில் மாற்றம் இல்லை. உன்னை இங்கேயே விட்டுட்டு உடனே தூத்துக்குடி கிளம்பு என்பதைத் தவிர என்ன சொன்னாலும் கேட்கிறேன்" என்றதும் அவள் முகம் பிரகாசம் அடைந்தது.

"பேச்சு மாறக்கூடாது..."

"நிச்சயம் மாட்டேன். சொல்லு."

"அப்ப சரி. நாம் இரண்டு பேரும் உடனே தூத்துக்குடிக்கு உங்க காரில் கிளம்புகிறோம்..."

"என்ன உளறுகிறாய்? நீ சென்னைக்குப் போக வேண்டாமா? மாமா வீட்டுல இருக்காங்க. மறந்து விட்டாயா?"

"நான் எதையும் மறக்கவில்லை. நீங்க எனக்காக இவ்வளவு செய்யும்போது உங்களுக்காக நான் இதைச் செய்ய மாட்டேனா?"

"என்ன செய்யப் போகிறாய்?" என்று குழப்பத்துடன் கேட்க அவள் புன்னகையோடு விளக்கினாள்.

"எனக்கு பேர்ல சிடி எக்ஸ்பிரசில் தான் டிக்கெட் இருக்கு. அது மதுரைக்கு வர பத்து மணி ஆகும். அது வரைக்கும் நீங்க இங்கே இருந்தால் அங்கே போக விடிகாலை ஆகி விடும். அதுக்கு பதிலா நாம் இருவரும் இப்போதே கிளம்பினால், தூத்துக்குடிக்கு அஞ்சு மணிக்கு போய் சேர்ந்து விடலாம். என்னை அங்கேயே நீங்க ட்ரெயின் ஏற்றி விடுங்க..."

"இங்கே ஏற்றி விட்டால் பத்து மணி வரை என்னுடன் நீ இருப்பாய். அங்கே என்றால் ஆறு மணிக்கே ஏற்றி விட வேண்டும். முடியாது..."

"குழந்தை மாதிரி பிடிவாதம் பிடிக்கக்கூடாது. இங்கே கூடுதல் நேரம் இருந்தாலும் அத்தை மாமா அப்பா என்று எல்லோரும் சேர்ந்து தான் இருக்க வேண்டும். அங்கே என்றால் நாம் இருவர் மட்டும் தான். நீங்களே யோசிங்க..." என்று சொல்ல அவன் முகம் கனிந்தது.

தான் அவளுக்காகப் பார்த்தால், அவள் தனக்காகப் பார்க்கிறாள்! இவள் என்னுடையவள். இவளுக்காக என்ன வேண்டுமானாலும் செய்யலாம்.

**நான் பேச நினைப்பதெல்லாம் நீ பேச வேண்டும்.**

**நாளோடும் பொழுதோடும் உறவாட வேண்டும்.**

**நான் காணும் உலகங்கள் நீ காண வேண்டும்.**

**நீ காணும் பொருள் யாவும் நானாக வேண்டும்.**

"நான் ரயில் ஏறும் வரை நீங்க என்னுடன் இருக்க வேண்டும் என்பது தான் உங்க கண்டிஷன். இதுல அது நிறைவேறி விட்டது தானே? நீங்களும் சீக்கிரமே உங்க வேலையையும் பார்க்கலாம். நைட் பயணத்தையும் தவிர்க்கலாம்" என்று சொன்னவளை காதலுடன் பார்த்தான்.

**சொல் என்றும் மொழி என்றும் பொருள் என்றும் இல்லை.**

**பொருள் என்றும் இல்லை**

**சொல்லாத சொல்லுக்கு விலை ஏதும் இல்லை.**



**ஒன்றோடு ஒன்றாக ஒன்றாக உயிர் சேர்ந்த பின்னே**

**உயிர் சேர்ந்த பின்னே**

**உலகங்கள் நமை அன்றி வேறேதும் இல்லை.**

"இப்படிப் பார்த்தால் என்ன அர்த்தம்...? பதில் சொல்லுங்க விஜய்..." என்றவளின் குரல் அவன் பார்வையில் குழைந்து மெலிந்து இருந்தது.

"மனைவி சொல்லே மந்திரம் என்று அர்த்தம். நான் அதைத் தட்ட மாட்டேன் என்று அர்த்தம். இப்பவே நாம் கிளம்பலாம் என்று அர்த்தம்..." என்று அவன் சொல்லி முடிக்கும் முன்பு அவன் கன்னத்தில் அழுத்தமாக தன் முத்திரையை பதிக்க, அவளை தன்னோடு சேர்த்து சந்தோஷமாக அணைத்துக் கொண்டான் விஜய் ஆனந்த்.

## 13

அழகர் கோவிலில் தனிமையாக பொழுதை கழிக்க வேண்டும் என்று கிளம்பி வந்த விஜய் - வான்மதி இருவரின் திட்டமும் அடுத்த இரண்டு மணி நேரத்தில் முழுசாக மாறிப் போனது. வீட்டுக்கு அலைபேசியில் அழைத்து தகவல் சொன்னவர்கள், அடுத்த அரை மணி நேரத்தில் வீட்டுக்கு கூட செல்லாமலேயே தூத்துக்குடியை நோக்கி பயணம் செய்ய ஆரம்பித்தனர்.

மதுரை மாநகர எல்லை தாண்டும் வரை கவனத்தை சிதைக்கக் கூடாது என்ற எண்ணத்துடன் அமைதி யாக வந்த வான்மதி, போக்குவரத்து நெரிசலை தாண் டியதும் சரிந்து அமர்ந்து அவனைப் பார்த்து புன்னகை செய்தாள்.

''என்ன மதி?'' என்று கேட்டவனின் இதழ்களும் அனிச்சையாக விரிந்து, முகமே மலர்ந்தது.

''உங்க ஆபீசில் என்ன பிரச்னை விஜய்? யாருக்கு என்ன ஆச்சு? நீங்க ஏன் போனை எடுக்க அவ்வளவு யோசித்தீங்க?'' என்று விசாரித்ததும் அவளைப் பொய் யாக முறைத்தான்.

''நான் உன்னுடன் இருக்கணும் என்று ஆசைப்பட்டது. ஆபீஸ் வேலை பற்றி பேசுவதற்காக இல்லை. நம்மைப் பற்றி பேசி திருமணத்திற்குப் பிறகான நம் எதிர்காலம் குறித்து திட்டமிட! அதை முதலில் புரிஞ்சுக்கோ.''

''வர வர நீங்க ரொம்ப சுயநலமா யோசிக்க ஆரம் பித்து விட்டீர்கள். அவங்க ஹாஸ்பிடலில் இருப்பதா சொன்னீங்களே? அவங்களுக்கு ஏற்கனவே கல்யாணம் ஆகி குடும்பம் இருக்காதா? அவங்களைப் பற்றி எல்லாம் கவலைப் பட மாட்டீங்களா?''

''கிடைத்து இருக்கும் கொஞ்ச நேரத்தை யாரோ ஒருத்தருக்காக சண்டை போட்டு வீணாக்க வேண்டாம். சுருக்கமா சொல்கிறேன். நியூசிலாந்தில் இருந்து வந்த கப்பலில் ரோஸ் உட் கட்டைகள் வந்து இருக்கின்றன. அவற்றை இறக்கப் போன எங்க லோட் மேன் இரண்டு பேர் மயக்கமாகி ஏணியில் இருந்து விழுந்து விட் டார்கள்.''



''எப்படி மயக்கம் வந்து இருக்கும்? உயரம் அதிகமா? காயம் பலமா?'' என்று அவள் பதற அவன் சமாதானம் செய்தான்.

''அதெல்லாம் இல்லை. லேசான காயம். ஏன் மயக்கம் என்று தெரியவில்லை. குடித்து விட்டுப் பணிக்குச் சென்று இருக்கலாம். அலுவலகம் மூலமும், காவல் துறை மூலமும் தனி தனியாக விசாரணை நடக்கும். மருத்துவமனையில் சிகிச்சை நடைபெற்று வருகிறது. தொழிலாளருக்கு செலவு இல்லை. நீ அலு வலக கவலையை விட்டுட்டு நம்மளைப் பற்றி மட்டும் பேசு. போதுமா...?'' என்று விளக்கம் சொல்ல அவள் புன்னகை செய்தாள்.

''இன்னும் ஒரே ஒரு கேள்வி... ப்ளீஸ்...''

''வேண்டாம் என்று சொன்னால் விடப் போகிறாயா என்ன? கேளு.''

''அவங்க உயிருக்கு ஆபத்தில்லையே?''

''அதெல்லாம் இல்லை. லேசான மயக்கம். அவ் வளவு தான்...''

''பின்னே தொழிற்சங்க உறுப்பினர்கள்...'' என்று மீண்டும் ஆரம்பித்தவளின் வாயை தனது இடது கையால் மூடினான்.

''ஒரு கேள்வி சொன்னாய். முடிந்து விட்டது. இனி மேல் உனக்கு பதில் சொல்ல முடியாது...''

''ம்கூம்...'' என்று அவனுக்கு உதட்டைப் பிதுக்கி அழகு காட்டி விட்டு ஜன்னல் வழியாக சாலையோரம் இருந்த பனைமரங்களையும், காற்றாலை இயந்திரங்

களையும் ரசித்து பார்ப்பது போல அவனுக்கு முதுகு காட்டி திரும்பி அமர்ந்தாள் வான்மதி.

அவளே திரும்புவாள் என்று பொறுத்துப் பொறுத்து பார்த்த விஜயின் பொறுமை எல்லை கோட்டை தொட, ஐந்தாவது நிமிடம் கார் சாலையோரம் நின்றது.

"ஏன் காரை நிறுத்தி விட்டீங்க...?"

"நீ எதுக்காக என்னுடன் வந்தாய்?"

"உங்களுக்கு கம்பெனி கொடுக்க..."

"இது தான் நீ கம்பெனி கொடுக்குற அழகா...?"

"நீங்க தான் நான் கேட்கிற கேள்விக்கு பதில் சொல்ல மாட்டேங்கறீங்களே... சரி கார் ஓட்டுவதில் பிசியா இருக்கீங்க. தொந்தரவு பண்ண வேண்டாம் என்று தானே..." என்று சொல்லி முடிக்கும் முன்பே அவளை இழுத்து அணைத்து அவளின் இதழ்களில் முத்தமிட்டு இருந்தான்.

"விஜய்... நான்... என்ன இது..." என்று தெளிவான வார்த்தை வடிவம் எதுவும் இன்றி, சின்ன சின்னதாக, ஒலிச் சிதறல்களாக வெளிவந்த அந்த சப்தமும் சில வினாடிகளில் நின்று போனது.

யார் இந்த சாலை ஓரம் பூக்கள் வைத்தது?
காற்றில் எங்கெங்கும் வாசம் வீசுது!
யார் எந்தன் வார்த்தை மீது மௌனம் வைத்தது?
இன்று பேசாமல் கண்கள் பேசுது!



நகராமல் இந்த நொடி நீள
எந்தன் அடி நெஞ்சம் ஏங்குதே!
குளிராலும் கொஞ்சம் அனலாலும்,
இந்த நெருக்கம் தான் என்னைக் கொல்லுதே!
எந்தன் நாளானது இன்று வேறானது
வண்ணம் நூறானது வானிலே...

என்னதான் பிறந்தது முதல் அருகருகே பார்த்துப் பழகி இருந்தாலும், வளர்ந்த பிறகு, பெற்றவர்களின் அங்கீகாரம் கிடைத்த பின்பு, தனிமை கிடைத்ததும், ஏற்பட்ட இந்த முதல் முத்த பரிமாற்றம் அவர்களுக்குள் பல்வேறு ரசாயன மாற்றங்களை உருவாக்கி, புதியதொரு அனுபவத்தை, அறிமுகம் செய்து வைத்து இருக்க, இனிமையை ரசித்தபடி அமைதி நீண்டது.

நீண்ட முத்தத்தின் முடிவில், மூச்சுக்காக விலகிய பிறகும் இருவருக்கும் இடையே பேச்சு வரவில்லை. மதியை தன் மார்பில் சாய்த்து அவளின் உச்சியில் தன் கன்னம் பதித்து, அமைதியாக அணைத்திருந்தான் விஜய். வெகு நேரம் கழித்து, ஒரு நேஷனல் பெர்மிட் லாரியின் சப்தமான ஹாரன் கேட்டு மெல்ல விலகிய வான்மதி அவனைப் பார்த்து புன்னகை செய்தாள்.

"நேரம் ஆகலையா? போகலாம் விஜய்..."

"ம்ம். போகலாம்..." என்று மனம் இல்லாமல் காரைக் கிளப்பினான்.

"இன்று காலையில் நாலு மணிக்கு எழுந்து கொண்டீங்க என்று அத்தை சொன்னாங்க. என்ன விஷயம் விஜய்? ஏதாவது முக்கியமான வேலையா?" என்று

விசாரித்து, சில கணங்கள் இனிமையாகத் தொடர்ந்த அமைதியைக் கலைத்தாள் வான்மதி. அவளின் அந்தக் கேள்வியைக் கேட்டதும் கனவில் இருந்து விழித்தது போல விழிகளை விரித்தான் விஜய்.

"ஹேய் மதி! செல்லம்டி நீ. நான் மறந்தே போய் விட்டேன். நல்லவேளை ஞாபகப்படுத்தினாய். உனக்கு மெயில் அனுப்ப தெரியும் இல்லையா?"

"ம்ம்ம்... ஏன் கேட்கறீங்க?"

"சொல்றேன். என்னுடைய லாப் டாப் பின்னாடி இருக்கு. அதைக் கொஞ்சம் எடு" என்று சொன்னவன் குரலில் ஆர்வமும் வேகமும் இருந்தது.

"யாருக்கு மெயில் அனுப்பணும் விஜய்? என்ன விஷயம்?" என்று கேட்டபடி அதை எடுத்து உயிர்ப்பித்தாள்.

"நம் வீட்டுத் தோட்டத்தில், சிட்டுக்குருவி ஒன்று கூடு கட்டி முட்டை இட்டு இருந்தது. அது குஞ்சு பொறிப்பதை லைவ் வீடியோ எடுத்துத் தருகிறேன் என்று தொலைக்காட்சி சேனல் ஒன்றில் பணிபுரியும் என் நண்பனுக்கு வாக்களித்து இருந்தேன். அது பார்க்கத் தான் இன்று காலையில் எழுந்து விட்டேன். வீடியோ பதிவும் பண்ணி இருக்கிறேன். காலையில் அதுக்கு தான் ஐ பேட் சகிதம் தோட்டம் போனேன்."

"அவ்வளவு காலையிலா...?"

"குஞ்சு எப்போ பொரிக்கும் என்று அவன் தான் நேரக்கணக்கு சொல்லி இருந்தான். அதைக் கணக்கிட்டு, சென்றேன் காலையில் போகும் போதே ஏற்கனவே



இரண்டு குஞ்சுகள் வெளி வந்து இருந்தது. மூன்றாவது வெளியே வர முயன்று கொண்டு இருந்தது. அதை தான் வீடியோ எடுத்தேன்..."

'வாவ்! நிஜமாவா? அந்த வீடியோ கிளிப்பிங் எங்கே இருக்கு விஜய்?"

"டெஸ்க் டாப்பில் 'Bird hatch' என்ற பெயரில் ஒரு வீடியோ கிளிப் இருக்கு. அதை இணைத்து, வீ.என். என்ற பெயருக்கு முதலில் ஒரு மெயில் அனுப்பி விடு. நேற்றில் இருந்து ஒரு நூறு முறை நினைவு படுத்தி இருப்பான். அப்புறமா நீயும் பார்த்து ரசி..."

"யார் இந்த வீ என்?" என்று கேட்டபடி மெயிலை அனுப்பி முடித்தாள்.

"அம்மாக்கு ஆன்ட்டி ப்ரெண்ட் எனக்கு அவன் ப்ரண்ட். மும்பையில் இருக்கான். நீ பார்த்ததில்லை. கோயம்பத்தூரில் நான் எம்.பி.ஏ. படிக்கும்போது..." என்று அவன் விளக்கம் சொல்ல ஆரம்பிக்கும்போது அவசரமாக அவனின் வாயை தன் கையால் பொத்தினாள்.

"தேவை இல்லை. நாங்க உங்க ஆபீஸ் ஆட்கள் பற்றி கேட்டால் பதில் சொல்ல மாட்டேன் என்று என் வாயை மூடினீங்க இல்ல? இப்ப நீங்க உங்க ப்ரெண்ட் பற்றி சொன்னால் நாங்க மட்டும் கேட்கணுமா? முடியாது. நம்மைப் பற்றி மட்டும் பேசலாம்" என்று சொல்ல சிரித்தாலும் உடன் பட்டான்.

"இதை தான் நானும் எதிர்பார்க்கிறேன். சொல்லு, அடுத்து எப்போ மதுரைக்கு வருவாய்?"

''நான் எங்கே இனி வருவது? கல்யாணம் முடிஞ்சு தான். அதுக்கு முன்னாடி பார்க்கணும் என்றால் நீங்க தான் சென்னைக்கு வரணும்?''

''நான் வரமாட்டேன். நான் பிசி மேன். நீ தான் என்னைத் தேடி வரணும்...''

''உலகத்திலேயே காதலன் தான் எல்லா இடத்திலும் காதலியைத் தேடித் தேடிப் போவாங்க. இங்கே நம்ம விஷயத்துல எல்லாம் உல்டாவா நடக்குதே...''

''எல்லோரும் செய்வதையே நாமும் செய்தால் எப்படி? நம் காதல் ஸ்பெஷல் என்று எல்லாருக்கும் ப்ரூவ் பண்ண வேண்டாமா?''

''அதுக்காக...''

''அதுக்காக நீ தான் என்னை விடாமல் தேடி ப்ரூவ் பண்ணனும். இப்ப நீ மதுரைக்கு வந்தாய். நான் உன்னைத் தேடி வந்தேன் இல்லையா? அது மாதிரி தூத்துக்குடிக்கு ப்ளைட்டில் வந்தால், நான் ஏர்போட் டுக்கு உன்னைத் தேடி வருவேன். ஓகே?''

''நீங்க ஒன்றும் என்னைத் தேடி ஏர்போர்ட்டுக்கு வர வேண்டாம். தூத்துக்குடி வரை விமானத்தில் வர தெரிஞ்சவளுக்கு நீங்க இருக்கும் இடம் தேடி வரத் தெரியாதா? நானே வந்து விடுவேன்...''

''நான் வந்து அழைத்துச் செல்லும் வரை நீ இருக்க மாட்டியா?''

''முடியாது...''

''ஏன் முடியாது? நான் சொன்னால் சொன்ன பேச்சு கேட்க வேண்டாமா?''



''நான் சொல்வதை நீங்க கேட்டால் போதும்...''

''இரண்டு நாளா அதைத் தானே செய்து கொண்டு இருக்கிறேன்...''

''இரண்டு நாள் மட்டும் தானா...?''

''என் உயிர் இருக்கும் வரை அப்படி தான். போதுமா...''

''அது அந்த பயம் இருக்கணும்.''

இதே ரீதியில், இந்த உலகில் இருக்கும் மற்ற எல்லா விஷயங்களையும் பின்னே தள்ளி விட்டு அவர்கள் மட்டும் இந்த உலகில் இருப்பது போன்ற தனிமை உணர்வில் இனிமையில் திளைத்து ஒருவரை ஒருவர் சீண்டிச் சிரித்தவர்கள் நடுவில் உணவினைக்கூட மறந்தார்கள்.

தீர தீர ஆசை யாவும் பேசலாம்

மெல்ல தூரம் விலகிப் போகும் வரையில் தள்ளி நிற்கலாம்

என்னை நானும் உன்னை நீயும் தோற்கலாம்

இங்கு துன்பம் கூட இன்பம் என்று கண்டு கொள்ளலாம்

எந்தன் நெஞ்சானது இன்று பஞ்சானது.

அது பறந்தோடுது வானிலே!

பேச்சும் சிரிப்புமாக மாலை ஐந்து மணி அளவில் தூத்துக்குடிக்கு வந்து சேர்ந்தவர்கள் நேரே அவன் தங்கி இருந்த வீட்டுக்குச் சென்றனர்.

அங்கே இருந்த ஒற்றைப் படுக்கை அறையில், அவள் சிறுவயதில் பயன்படுத்தி இருந்த ரிப்பன், கிளிப்,

அவன் கிறுக்கி வைத்து இருந்த ஓவியங் எப்போதோ அவள் கிறுக்கி வைத்து இருந்த ஓவியங் களுக்காக ஏழு ஆண்டுகளுக்கு முன்பு வந்த ஆனந்த விகடன் இதழைப் பத்திரப்படுத்தி வைத்து இருந்த விதம், அவள் தன் கையால் வரைந்து அனுப்பி இருந்த முப்பதுக்கும் மேற்பட்ட வாழ்த்து அட்டைகள் ஆகிய வற்றை அவன் அடுக்கி வைத்து அன்றாடம் பார்த்து ரசிக்கிறான் என்பதை நேரில் கண்டவளுக்கு உள்ளம் நெகிழ்ந்து குழைந்து போனது.

"விஜய்..." என்று கொஞ்சலுடன் ஓடி வந்து தன் மேல் சரிந்தவளை ஆசையுடன் அணைத்துக் கொண்டான்.

"தனியா அதுவும் வீட்டில் இருக்கும்போது இப்படி எல்லாம் செய்தால் நான் என்ன செய்வேன்? என் நிலைமையைக் கொஞ்சம் யோசித்துப் பார்க்கணும் மதி" என்றவன் குரலே வெளியே வரவில்லை.

அவனின் குரலின் பாவனை புரிந்த பிறகே அவசர மாக விலக முயன்றவளால் முடியவில்லை. அவன் அணைப்பில் இருந்தவாறே, "ஆபீஸ் போகணுமா விஜய்? காபி போட்டு தரட்டுமா?" என்று விசாரிக்க அவன் மறுப்பாகத் தலை அசைத்தான்.

"முதல் கேள்விக்கா? இரண்டாம் கேள்விக்கா? எதுக்கு வேண்டாம் என்று பதில் சொல்றீங்க?" என்ற படி, தன் வேகத்தையும் கூட்டி விலக முயல, பெருமூச்சு ஒன்றை வெளியேற்றினான்.

"என்ன ஆச்சு விஜய்? இவ்வளவு பெரிய பெரு மூச்சு?" என்று அவன் கன்னம் வருட அவன் அவளை வேகமாக அணைத்து இறுக்கிக் கொண்டான்.



"விஜய்! என்ன இது! மணியாகுது. நான் கிளம்பணும். முகம் கழுவ வேண்டாமா? அங்கே ஸ்டேஷனில் மதுரை வரைக்கும் பயணம் செய்ய டிக்கெட் எடுக் கணும்..." என்று அவள் மெல்லிய குரலில் வேண்டு கோள் விடுக்க அவனின் அணைப்பு மேலும் இறு கியது.

"விஜய், இதோ இங்கே இருக்கும் சென்னைக்குப் போகிறேன். நினைத்தால் இரண்டு மணி நேரத்தில் பறந்து வரக் கூடிய தூரம் தானே? இப்படி பேசாமல் இருந்தால் நான் எப்படிக் கிளம்புவது?"

"ஒன்றும் பேசாதே. சும்மா கொஞ்ச நேரம் அப்படியே இரு..." என்றவன் அணைப்பும் விலகவில்லை பேச்சும் வரவில்லை.

"விஜய்... விஜிம்மா... ப்ளீஸ். என் செல்லம் இல்லை..."

"இல்லை..."

'அப்ப இங்கேயே தங்கி விடவா? நான் உங்க பெண்ணை விடுவதாக இல்லை. இங்கேயே வைத்துக் கொள்கிறேன் என்று உங்க மாமாக்கு போன் பண்ணி சொல்லிடுங்க" என்று சொன்னதும் அவசரமாக விலகினான்.

"அட! மாமாவிடம் மட்டும் நல்ல பையனா பேர் வாங்கணும். மாமா மகளிடம் அப்படி வாங்க வேண்டிய அவசியம் இல்லையா?" என்றதும் அவளை மீண்டும் தன் கை வளைவுக்குக் கொண்டு வந்தவன் புன்னகை செய்தான்.

''என்ன இருந்தாலும் மாமனாருக்கு மரியாதை வேண்டாமா?''

''அப்ப பெண்டாட்டிக்கு மட்டும் மரியாதை வேண் டாமா?''

''பெண்டாட்டிக்கு மரியாதை தேவை இல்லை. அன்பு, பாசம், காதல், இதெல்லாம் தான் இருக்கணும். அது எனக்கு நிறையவே இருக்கு. சரி நீ போய் முகம் கழுவிட்டு வா. நான் உனக்கு காபி போட்டு வைக் கிறேன்...''

''நான் போடுறேன்...''

''நானும் இல்லாமல் நீ தனியா நாலு மணி நேரம் ரயிலில் மதுரை வரை போகணும். மாமா அங்கே தான் ஏறுவார். ரிஸ்க் வேண்டாம். நானே போட்டு தரேன்'' என்று சொல்ல முதுகில் செல்லமாக ஒரு அடி கொடுத்து விட்டுச் சென்றாள்.

அவளுக்கு தேநீர் தயார் செய்து குடிக்க வைத்து, பிஸ்கட், தண்ணீர் பாட்டில், படிக்க பத்திரிகை என வாங்கிக் கொடுத்து, நூறு முறை ஜாக்கிரதை சொல்லிய பின்பும் அவளை தூத்துக்குடியில் இருந்து மதுரை வரை தனியே அனுப்ப மனமின்றி தன்னைத் தானே நொந்து கொண்டான் விஜய்.

''விஜய், நான் என்ன சின்னக் குழந்தையா? இங்கே இருந்து நாலு மணி நேரம். அதுவும் தூங்கும் நேரம் கூட இல்லை. கவலைப்படாமல் இருங்க...''

''நீ சொன்னாய் என்று பேக்கு மாதிரி உன்னையும் இங்கே தூத்துக்குடிக்கு கூட்டிட்டு வர சம்மதம் சொன்ன



என் புத்தியை செருப்பால் அடிக்கணும். உனக்கு தான் அறிவு இல்லை என்றால் எனக்கு எங்கே போச்சு?'' என்று தன்னைத் தானே நொந்து கொண்டவனைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

''விஜய்...''

''இந்த மாதிரி விஜய் விஜய் என்று கொஞ்சிக் கொஞ்சி தான் என்னை மயக்கி விட்டாய். இனிமேல் நீ என்னை விஜய் என்று கூப்பிடாதே...''

''அதுவும் சரி. எல்லோரும் உங்களை விஜய் என்று கூப்பிடுறாங்க. நானும் அப்படியே சொன்னால் எப்படி? இனிமேல் உங்களை நான் ஆனந்த் என்று சொல்கிறேன். நீங்க தான் என் வாழ்வில் ஆனந்தம்... ஓகே?'' என்று சொல்லிவிட்டு அவனின் கன்னத்தை இரண்டு விரல் களால் கொஞ்சி, இதழ்களில் ஒற்றிக் கொள்ள அவனின் கோபம் பறந்தோடியது.

''எங்கே அடிச்சால் எப்படி விழுவான் என்று தெரிந்து வைத்து இருக்கிறாய்.''

''ஐ லவ் யூ ஆனந்த்.''

''மீ டூ... ஆனால் இன்னும் ஒரு மாசம் இருக்கு. ஐ வில் மிஸ் யூ.''

''நான் எங்கே போகப் போகிறேன்? இங்கே தான் உங்க இதயத்தில் தான் இருப்பேன். தெரியாதா? என்னைப் பார்க்க வேண்டும் என்றால் கண்ணை மூடி, ஒரு வினாடி யோசித்தால் உங்க இதயத்தில் தெரிவேன். கிரீன் சிக்னல் விழுந்து விட்டது. நான் கிளம்பும்போது கடைசியா அமுத முகத்தையா பார்ப்பது சிரிக்கணும்!

ஸ்மைல் ப்ளீஸ் ஆனந்த்...'' என்று கன்னத்தைப் பிடித்துக் கொஞ்சலாகச் சொல்ல அவன் முறுவலித்தான்.

**கண் ஜாடையில் உன்னை அறிந்தேனடி**

**என் பாதையில் என்றும் உன் காலடி**

**நேற்று நான் பார்த்ததும், இன்று நீ பார்ப்பதும்...**

**நெஞ்சம் எதிர்பார்ப்பதும் ஏனடி...?**

''லவ் யூ பேபி... ஜாக்கிரதை...'' என்று கை அசைத்தவன் புன்னகை பூத்த முகம் அன்றில் இருந்து இன்று வரை அவள் மனதில் அழியாத ஓவியமாகப் பதிந்து இருக்கிறது. அதன் பிறகு அவள் அவனைப் பார்க்கவே இல்லை! பார்த்தது அவள் மனதில் பதிய வில்லை.

# 14

காலை பதினோரு மணி அளவில், வான்மதியுடன் தனியாகப் பேச மாடிக்குச் சென்ற விவேக் சில நிமி டங்களில் கீழே இறங்கி வந்ததும், ஹாலில் காத்திருந்த மூவரும் ஆவலுடன் அவன் முகத்தைப் பார்த்தார்கள்.

''இப்ப அவளுக்கு மூட் சரி இல்லை. நாலு மணிக்கு வருகிறேன் என்று சொல்லி விட்டு வந்து இருக்கிறேன். கொஞ்சம் விட்டுப் பிடிக்கலாம். அம்மா, நம் வீட்டுக்குப் போயிட்டு அப்புறமா வரலாம்...'' என்று விடைபெற்றுச்



செல்ல, பிருந்தாவும், கஸ்தூரியும் ஒருவரை ஒருவர் பார்த்து பெருமூச்சு விட்டனர்.

வாசல் வரை சென்ற விவேக் நின்று, ''அப்பப்போ பார்த்துக்கோங்க. ஆனால் அவளைத் தொந்தரவு பண்ணாமல் விட்டுடுங்க. கொஞ்ச நேரம் பேச்சுக் கொடுக்க வேண்டாம்...'' என்று சொல்ல கௌசல்யா சிரித்தார்.

''டேய் முந்திரி கொட்டை! அவங்க பெண்ணைப் பார்த்துக்க அவங்களுக்குத் தெரியாதா? வாடா?''

''தெரியும்மா. அதனால் தான் இதைக் குறிப்பா சொல்கிறேன். அவங்க அவளைக் கவனிக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் தொந்தரவு செய்துடப் போறாங்க.''

''மதியம் இரண்டு மணி வரை அவள் கீழே வர வில்லை என்றால் உணவு மட்டும் நான் கொண்டு போய் கொடுக்கிறேன் விவேக்'' என்று பிருந்தா உறுதி அளிக்க தலை அசைத்து விட்டுச் சென்றான்.

பிற்பகல் ஒன்றரை மணி அளவில் தான் சமைத்ததில், பாசிப் பருப்பு பாயாசம் மட்டும் எடுத்துக் கொண்டு வான்மதியின் வீட்டுக்கு வந்தார் கௌசல்யா.

''முதன் முதலாக பையன் வீட்டுக்கு வந்து முழு சமையல் செய்தேன். உங்க எல்லாரையும் வீட்டுக்குக் கூப்பிட ஆசை தான். இன்று சந்தர்ப்பம் சரியா இல்லை. அதனால் பாயாசம் மட்டும் எடுத்து வந்து இருக்கிறேன். சாப்பிடுங்க...'' என்று நீட்ட கண்ணில் நீருடன் வாங்கிக் கொண்டார் கஸ்தூரி.

''விஜய்க்கு இது ரொம்பப் பிடிக்கும்.''

''அவன் தான் வீட்டுக்கு வந்து கேட்டு வாங்கிச் சாப்பிட்டு இருக்கானே? விவேக்குக்கு முன்னால் பிடிக்காது. ஆனால் இப்ப ரொம்பப் பிடிக்கும். அவன் தான் இதைச் செய்யச் சொன்னான். வானதிக்கு சாப்பாடு எடுத்துட்டுப் போகலாமே?'' என்று சொல்ல கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்தார்.

* * *

பிருந்தா உணவுடன் மேலே வான்மதியை தேடிச் செல்ல, உணவு மேஜையில் அமர்ந்து கஸ்தூரியுடன் பேசிக் கொண்டு இருந்தார் கௌசல்யா.

''உங்களை இதற்கு முன்பு நான் நேரில் பார்த்ததில்லை. சில முறை தொலைபேசியில் பேசி இருக்கிறேன். உங்க பையனுக்கு வானதியைத் திருமணம் செய்து கொள்ள உங்களுக்கு முழு சம்மதம் தானே?'' என்று விசாரித்தார் கஸ்தூரி.

''ஏன் அண்ணி இப்படி கேட்கறீங்க. உங்களுக்கு இந்த சந்தேகம் ஏன் வந்தது?'' என்று பதறினார் கௌசல்யா.

''இந்த மாதிரி ஏற்கனவே திருமணம் நிச்சயமான பிறகு மணமகன் இறந்து விட்டால் ராசி இல்லாத பெண் என்று பழிக்க கேட்டு இருக்கேன். ஆனால் இந்த மாதிரி தேடி வந்து தன் மகனுக்குத் திருமணம் செய்து கொள்கிறேன் என்று சொல்லும் பெருந்தன்மை யாருக்கும் இருக்குமா என்று தெரியலை'' என்று சொல்லும்போதே கஸ்தூரியின் குரல் தழுதழுத்தது.

''என்ன அண்ணி இப்படிச் சொல்லிட்டீங்க? விவேக் இன்னிக்கு எனக்கு பிள்ளையா கண் முன்னாடி நடமாடிக் கொண்டு இருப்பதற்குக் காரணம் விஜய். நான் உங்க குடும்பத்துக்கு ரொம்பக் கடமைப்பட்டு இருக்கிறேன். தன் எதிர்காலமே சூன்யமாகி விட்டது என்ற நிலையிலும், பிருந்தா கேட்ட ஒரே ஒரு வார்த்தைக்காக விஜயின் உடல் உறுப்புகளை தானம் செய்ய ஒத்துக் கொண்டாளே? அவளைப் போய் அந்த மாதிரி எல்லாம் பேசினால், நாக்கு அழுகி விடும். நானும் எங்க வீட்டில் எல்லோரும், உங்க பெண்ணை கண்ணுக்குள் வைத்துப் பார்த்துக் கொள்வோம்'' என்று சொல்ல கண்ணில் நீருடன் தலை அசைத்தார்.



''உங்களுக்கு எப்படி நன்றி சொல்வது என்றே தெரியலை...''

''இன்னிக்கு நான் சொல்கிறேன். எழுதி வச்சுக்கோங்க. வரும் சித்திரைக்குள் விவேக் - வான்மதி கல்யாணம் ஜாம் ஜாம் என்று நடக்கும்'' என்று அழுத்தம் திருத்தமாக நம்பிக்கை அளிக்க புன்னகை செய்தார் கஸ்தூரி.

''நான் கேட்கறேன் என்று தப்பா நினைச்சுக்காதீங்க. ஒரு அக்கறையில் கேட்கிறேன். விவேக்குக்கு இப்ப உடல் நிலை எப்படி இருக்கு?'' என்று விசாரித்த கஸ்தூரியின் குரலில் தயக்கம் இருந்தது.

''உங்க பெண்ணை, கொடுக்கப் போறீங்க. அவளின் எதிர்காலம் நல்லா இருக்கணும் என்று நினைப்பதில் தப்பே இல்லை. இன்னொரு ஏமாற்றம் அந்தப் பெண்ணுக்கு கொடுக்கக் கூடாது. இயல்பான திருமண வாழ்க்கை வாழத் தகுதி உடையவன் என்ற நம்பிக்கை

எனக்கே வந்த பிறகு தான் கல்யாணம் பற்றிய பேச்சை எடுக்கணும் என்று விவேக்கும் சொல்லி இருந்தான். இந்த இரண்டு வருஷ இடைவெளியே அவன் சொல்லியது தான் அண்ணி'' என்று உறுதி அளிக்க, அவரைப் பார்த்துக் கை கூப்பினார் கஸ்தூரி.

''எனக்கு ரொம்ப நாளா ஒரு சந்தேகம்...''

''என்னைப் பற்றிய, விவேக் பற்றிய கேள்வி என்றால் என்னிடம் தாராளமாகக் கேட்கலாம். உங்களுக்கு நம்பிக்கை வர வைக்க வேண்டியது என் கடமை'' என்று கேட்க அவரின் தயக்கத்தை உதறி பேச்சை ஆரம்பித்தார் கஸ்தூரி.

''விவேக்குக்கு இந்த ப்ராப்ளம் இருப்பது, உங்களுக்கு முன்னாடியே தெரியுமா?''

''இருப்பது என்று நிகழ்காலத்தில் சொல்லத் தேவை இல்லை அண்ணி! இருந்தது. இப்ப அவன் நார்மல் மனிதன். இயல்பாக ஒரு வாழ்க்கையை வாழ நூறு சதவிகிதம் தகுதியானவன். அவனுக்கு 'Heart Murmur' இருப்பதை அவனுக்கு ஆறு வயது நடக்கும்போது நாங்க கண்டு பிடித்தோம். அவன் பத்தாவது படிக்கும்போது அவனுக்குத் தெரியும்...''

''பள்ளியில் படிக்கும்போது வித்தியாசமாக எதுவும் தெரியாதா?''

''ஓடி ஆடும் விளையாட்டுகளில் கலந்து கொள்ள முடியாது. மற்றபடி, சாதாரணமாக இருப்பான். பேச்சு போட்டிகளில் கலந்து கொண்டு பரிசுகள் எல்லாம் வாங்கி இருக்கிறான். ரொம்ப களைப்பாக உணர்ந்தால்



மயக்கம் வரும். மூச்சு வாங்கும். அந்த அளவுக்கு போகாமல் பார்த்துக் கொண்டோம்...''

''விவேக்கிற்கு இந்த ப்ரச்னை இருப்பது விஜய்க்கு தெரியுமா?''

''தெரியும் அண்ணி. விஜய் எம்.பி.ஏ. படிக்க கோவை வந்த பிறகு பழக்கம் நெருக்கமா ஆகி விட்டது. அவனுக்கு ஊரும் புதுசு என்பதோடு விவேக் இரண்டு ஆண்டுகள் கல்லூரியில் சீனியர் என்பதால், எங்க வீட்டுக்கு வருவான் விஜய். அப்ப அவனிடம் சொல்லி இருக்கிறேன்.''

''பொதுவா எங்க வீட்டில் எல்லோருமே கலகலப்பாக இருப்போம். நாங்க சோகமாக இருந்து, அது அவன் உடல் நலத்தை பாதிக்கக் கூடாது என்பதற்காகவே, விவேக்கிடம் வருத்தத்தைக் காட்ட மாட்டேன். கலகலப்பாக இருப்பதாகக் காட்டிக் கொள்வேன். இப்பவும் அது தொடர்கிறது'' என்று பெருமூச்சு விட்டவரை வருத்தத்தோடு பார்த்தார் கஸ்தூரி.

''விஜய் அங்கே படிக்கும்போது, எங்க வீட்டுக்கு வந்திருந்தான். சங்கடமான சூழலில், அவனிடம் என் மனச் சுமையை இறக்கி வைத்தேன். அப்ப அவன் சொன்ன பதில் இன்னமும் என் காதில் ஒலிக்கிறது. விஜய் மாதிரி ஒரு அபூர்வமான பிள்ளையைப் பார்ப்பதே அரிது'' என்று சொன்ன கௌசல்யாவின் கண்களில் அன்றைய நினைவில் இன்றும் கண்ணீர் சுரந்தது.

''எங்களுக்காக, நாங்க ஒரே பெண்ணை திருமணம் செய்து கொடுத்து விட்டு, தனிமையில் தவிக்கக் கூடாது

என்பதற்காகவும், அவளின் இசைக்கான எதிர்காலம் இங்கே இருக்கு என்ற காரணத்திற்காகவும், பிறந்து வளர்ந்த ஊரான மதுரையை விட்டு இங்கே வரவும், தூத்துக்குடியில் தான் பார்த்துக் கொண்டு இருந்த வேலையை ராஜினாமா செய்யவும் தயாராக இருந்தவன் அவன். அவனைப் பற்றி இன்னொரு ஆள் சொல்லியா நான் தெரிந்து கொள்ளணும்?'' என்ற கஸ்தூரியின் குரலில் பெருமிதமும் ஆதங்கமும் கலந்து ஒலித்தது.

''உண்மை தான் அண்ணி, விஜய் மாதிரி ஒரு பையன் இந்த உலகத்தில் பிறப்பது ரொம்ப அபூர்வம். அவன் சீக்கிரமே இந்த உலகத்தை விட்டுப் போனது கூட, ஆண்டவன் நல்லவர்களை தன்னிடம் சீக்கிரம் அழைத்துக் கொள்வான் என்ற ஒரே காரணத்தினால் தான் என்று நான் நினைக்கிறேன்'' என்று சொன்ன கௌசல்யாவின் கண்களில் இப்போது கண்ணீர் பெருகி கன்னத்தில் வடிய ஆரம்பிக்க கஸ்தூரி பதறினார்.

''முடிந்து போனதை நினைத்து இப்ப வருத்தப்பட்டு என்ன ஆகப் போகிறது? கண்ணை துடைச்சுக்கோங்க. உங்க பையனைப் பற்றி விஜய் ஏதோ சொன்னான் என்று சொன்னீங்களே. என்ன சொன்னான்?'' என்று கஸ்தூரி பேச்சை மாற்ற, கம்மிய குரலுடன் பேச்சைத் தொடர்ந்தார் கௌசல்யா.

''வீ.என்.கு. இந்த மாதிரி ஒரு ப்ராப்ளம் இருப்பதே காலேஜில் யாருக்குமே தெரியாது. அப்படி ஒரு ஆக்டிவான கலகலப்பான பையனுக்கு இந்த மாதிரி ஒரு மருத்துவ சிக்கல் இருப்பது நம்பவே முடியலை. இதை தீர்க்க என்னால் முடிந்தால் என்ன வேண்டுமானாலும் நான் செய்வேன் ஆன்ட்டி. கிட்னி மாதிரி இரண்டு இருந்து இருந்ததால், வீ.என்.காக அதில் ஒன்றை தானம் செய்து இருப்பேன். ஆனால் இது இதயமா போச்சே என்று சொன்னான்'' என்று சொல்லும் வேளையில் மீண்டும் குரல் கம்மி, வார்த்தைகள் தொண்டைக்குள் சிக்கியது.



''அவன் பேச்சை கேட்டு நானே ஆடிப் போயிட்டேன். அப்பதான், என்னிடம் எல்லோருக்கும் இருக்கும் அந்த ஒரு இதயம் கூட இப்ப என்னிடம் இல்லை என்று சொல்லி விட்டு வான்மதியைப் பற்றிச் சொன்னான் அண்ணி...'' என்று நிறுத்த கஸ்தூரியின் முகம் திகைப்பைக் காட்டியது.

அவன் வீட்டில் பெண் கேட்க சொன்னது வேலைக்குப் போன பின்பு தான். அதற்கு முன்னாலேயே இவரிடம் சொல்லி வைத்து இருக்கிறானா?

''மதி மேல் அவன் வைத்து இருக்கும் பாசத்தை என்னால் அவன் வார்த்தைகளிலேயே உணர முடிந்தது. அன்றில் இருந்து, மதியை நேரில் பார்க்காத போதே, அவள் தான் எனக்கு மருமகளாக வரக்கூடும் என்பது தெரியாத போதே, விஜயை பிடித்ததால், அவனுக்குப் பிடித்த மதியை எனக்குப் பிடிக்கும்'' என்று கௌசல்யா சொல்ல அதை கஸ்தூரி அங்கீகரித்தார்.

''அவளை அவன் அவ்வளவு விரும்பினான். பாவம் யார் கண் பட்டுதோ? இரண்டு பேருக்கும் சேர்ந்து வாழக் கொடுத்து வைக்கவில்லை...''

''மதியை விஜய்க்குப் பிடிக்கும். விஜயினால் தான், இன்று என் மகன் இன்று உயிருடன் இருக்கிறான். இந்தக்

கல்யாணத்தை எப்பாடு பட்டேனும் நடத்த நாங்க ஆசை பட இந்த இரண்டு காரணங்கள் போதாதா? விவேக்கும் வானதியும் இணைய வேண்டும் என்பது ஆண்டவன் கணக்கு. அது நிச்சயம் நடக்கும். அவன் அவளிடம் கொஞ்சம் கொஞ்சமாகப் பேசி கரைத்து விடுவான். நீங்க கவலைப் படாமல் இருங்க அண்ணி'' என்று நம்பிக்கை ஊட்டி விட்டுக் கிளம்பிச் சென்றார் கௌசல்யா.

* * *

''மதி மணி இரண்டாச்சு. சாப்பிடக் கூட வராமல் இங்கே தனியா என்ன செய்கிறாய்?'' என்று குரல் கொடுத்தபடி கதவு தட்டப்படும் ஓசை கேட்டு வான்மதி அவசரமாகக் கட்டிலில் இருந்து எழுந்து அமர்ந்து கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

''வாங்க அத்தை. கதவு திறந்து தான் இருக்கு'' என்று சொன்ன மருமகளின் குரல் கமறியதை உணர முடியாத அளவுக்குப் பிருந்தா அப்பாவி இல்லையே?

''அத்தைக்கு விருந்து சமைத்துப் போடுவாய் என்று நினைத்தால் இப்படி ரூமுக்குள் வந்து படுத்துக் கொண்டாயாக்கும்? நான் உனக்கு சமைத்து எடுத்து வந்து இருக்கிறேன். சாப்பிடு...''

மேலே வாதாடாமல் எழுந்து குளியல் அறைக்குச் சென்று கையைக் கழுவிக் கொண்டு சாப்பிட வந்து அமர்ந்தாள்.

அதிகம் பேச்சு வார்த்தை இன்றி அத்தை பிசைந்து கையில் போட்டதை சுவை அறியாமல் உண்டவள், சின்ன கப்பில் இருந்த அந்த பாசிபருப்பு பாயாசத்தைப்



பார்த்து அதிர்ந்தாள். நிமிர்ந்து அத்தையைப் பார்க்க அவரின் முகம் சாதாரணமாக இருந்தது.

''அத்தை இது நீங்களா வச்சீங்க...?''

''இல்லையே. அம்மா முதன் முதலில் எங்க வீட்டில் சமைப்பதால், எனக்கு ரொம்பப் பிடிச்ச பாயாசம் வைத் தாங்க என்று விவேக் கொடுத்து விட்டுச் சென்றான்...'' என்று சொல்ல அவள் கப்பை அருகே இருந்த சின்ன ஸ்டூலில் வைத்து விட்டு அவரின் மடியில் சரிந்து விம்ம ஆரம்பித்தாள்.

''நீங்க விவேக்கை இங்கே எதற்கு வர வைத்தீங்க அத்தை...?''

''விஜய்க்கு பிடிக்கும் எல்லாமே உனக்கும் பிடிக்கும். அவனுக்குப் பிடித்த பச்சை நிறம். ஜி.வீ. பிரகாஷ் இசை, காலிஃப்ளவர் பகோடா, அவ்வளவு ஏன், அவனை நினைத்து சில வினாடிகள் முன்பு கண் கலங்கிய இந்த பாசிபருப்பு பாயாசம் வரை, அவனுக்குப் பிடித்த எல் லாமே உனக்கும் பிடிக்குமா பிடிக்காதா? சொல்லு பார்ப் போம்...'' என்று சவால் விட்ட அத்தையை திகைப்புடன் பார்த்தாள். அவர் எங்கே வரக்கூடும் என்பது புரிந்த தாலேயே திகைப்பு விலகவில்லை. பதிலும் சொல்லப் பிடிக்கவில்லை.

''அதே மாதிரி அவனுக்கு ரொம்பப் பிடித்த விவேக்கை உனக்கும் பிடிக்கும் என்று நினைத்து, உனக்கு திரு மணம் செய்து வைக்கும் எண்ணத்தில் வர வைத்தேன் மதி. விஜய்க்கு பிடித்த விவேக்கை உனக்குப் பிடிக் காதா?'' என்று விசாரித்த பிருந்தாவை திகைப்புடன் பார்த்தாள் வான்மதி.

# 15

விஜய்க்கு நீ அழுதால் பிடிக்குமா? சந்தோஷமாக இருக்கணும். அதற்கு திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று சுற்றி வளைத்து, சொல்லக் கூடும் என்று எதிர்பார்த்து இருந்தாலும், 'விஜய்க்கு விவேக்கைப் பிடித்து இருந்தால் உனக்குப் பிடிக்காதா?' என்ற நேரடிக் கேள்வியை வான்மதி பிருந்தாவிடம் இருந்து கனவிலும் எதிர்பார்க்கவில்லை. அது அவளுக்கு செய்தியும் கூட!

''அத்தை நீங்க இப்ப என்ன சொன்னீங்க...?''

''ஏன் உனக்கு காது கேட்கலையா?''

''அத்தை ப்ளீஸ்! விஜய்க்கு, விவேக்கை முன்பே தெரியுமா? எப்படித் தெரியும்? அவர் நினைவி... ப்ச்! மருத்துவமனையில் இருக்கும்போது தானே அறிமுகம்? அப்படி இல்லையா?'' என்றவளின் குரலில் பதட்டம் இருந்தது.

''இல்லையே? விஜய்க்கு விவேக்கை இருபது வருடங்களுக்கு மேலாக தெரியுமே? அவனுக்கு மூணு நாலு வயசு இருக்கும்போது கௌசி குடும்பம் மதுரையில் நம்ம வீட்டுக்குப் பக்கத்துக்கு தெருவில் குடி இருந்தாங்க...''

'எனக்கு பிருந்தா பேபியும் தெரியும். பிருந்தா ஆன்ட்டியும் தெரியும். நீ பிறப்பதற்கு முன்பிருந்தே



ஆன்ட்டியை எனக்குத் தெரியும். இரண்டு ஆண்டு களுக்கு முன்னால் ஆன்ட்டி அம்மாவாவும் ஆனாங்க...'' என்ற விவேக்கின் வார்த்தைகள் காதில் ரீங்காரமிட்டது.

விவேக் சொல்வதெல்லாம் பொய் என்று நினைத்த தனக்குக் கிடைத்த முதல் பின்னடைவு!

''ஆனால் விஜய் இவரைப் பற்றி என்னிடம் சொன் னதே இல்லையே...?''

''சொல்லி இருப்பான் மதி. அவன் சொல்லாமல் இருக்க வாய்ப்பே இல்லை. நீ இது முக்கியம் இல்லை என்ற எண்ணத்தில் அதை கவனிக்காமல் விட்டு இருக்கலாம்...''

''இல்லை அத்தை... விவேக் என்ற ஒரு பெயரை நான் விஜய் வாயில் இருந்து கேட்டதே இல்லை. என்னால் அடிச்சுச் சொல்ல முடியும். விஜய் பேசியது எல்லாமே எனக்கு நினைவில் இருக்கு...''

''விஜய் அவனை பேர் சொல்ல மாட்டானே? சின்ன வயசில் அண்ணா சொல்லி இருப்பான். அதன் பிறகு வீ.என். என்று தான் சொல்வான்...''

''வீ.என்னா? அப்படி என்றால் மும்பையில் தொலைக் காட்சி சேனலில் வேலை பார்ப்பதாகச் சொன்னது விவேக்கையா...?''

இரண்டாம் பின்னடைவு! அவன் தொலைக்காட்சி சேனலில் வேலை செய்வதாக சொன்னதை காவல்துறை மூலம் விசாரித்து, அவர்கள் இல்லை என்று சொன்னது ஏன்?

வீ என் என்றால், விவேக் நாராயணன். இவனைப் பற்றி விஜய் சொல்லி இருக்கிறான். இவனுக்குத் தான்,

அந்தப் பறவை முட்டையில் இருந்து குஞ்சு வெளி வருவதை லைவ் வீடியோ எடுத்து அனுப்பியது. அதை அனுப்பியது கூட தான் தான்! தலை சுற்றி மயக்கம் வரும்போல இருந்தது.

''அத்தை நீங்க சொல்வது நிஜம்தானே?''

''உன்னிடம் பொய் சொல்ல வேண்டிய அவசியம் என்ன மதி? விஜய்க்கு விவேக்கை ரொம்ப பிடிக்கும். அவனுக்குப் பிறவியிலேயே இதயக் கோளாறு இருந் ததும் அவனுக்குத் தெரியும். கிட்னி மாதிரி இரண்டு இதயம் இருந்து இருந்தால், ஒன்றை தானம் கொடுக்க லாமே என்று என்னிடமே சொல்லி இருக்கிறான்'' என்று பிருந்தா கனிவுடன் சொல்ல, அவரின் வயிற்றைக் கட்டிக் கொண்டவளின் கண்களில் இருந்து கண்ணீர் வடிய ஆரம்பிக்க அவளின் தலையை ஆதரவாக வருடிக் கொடுத்தார். சில நிமிடங்கள் அழுதபடி படுத்து இருந்த வான்மதி அப்படியே மன உளைச்சலில் தூங்கி விட்டாள்.

''தில்லை இங்கே இல்லை பார்பி! அதுக்கு முன்னூறு கிலோ மீட்டர் தூரம் போகணும். தொல்லை... எ...ன்..னா..ல் உ..ன..க்..கு தொ..ல்..லை ஏ..து..ம் இ..ங்..கே இ..ல்..லை... சொல்லு பார்ப்போம்..'' என்று விவேக்கின் சிரிப்புடன் கூடிய செல்லக் குரலும், தொடர்ந்த மழலையில் பிருந்தாவின் குரலும் ஒலித் ததைக் கேட்டு கண் விழித்தாள் வான்மதி.

கதவை முழுசாகத் திறக்காமலேயே, மிக லேசாக கதவு திறந்து இருந்ததால் வந்த சின்ன இடைவெளி வெளியே ஹாலை நோட்டமிட்டாள்.



அவன் ஒற்றை சோபாவில் அமர்ந்து இருக்க, கைப் பிடியில் அமர்ந்து அவன் தோளில் சலுகையாகச் சாய்ந்து அவன் முகத்தில் விரல்களால் வருடியபடி, அவன் அவ்வப்போது சொன்ன சின்னச் சின்ன திருத்தங்களுடன் 'அம்மா இங்கே வா வா' பாடலைச் சொல்லிக் கொண்டு இருந்தாள்.

கதவின் பின்னே அவளின் அசைவை உணர்ந்து விட்ட விவேக், ''நீ இன்னும் பால் குடிக்கவில்லையே பார்பி. கீழே பாட்டியிடம் பால் வாங்கி குடித்து விட்டு வா'' என்று குழந்தையை அனுப்ப, அவள் அவசரமாக உள்ளே சென்று மீண்டும் கட்டிலில் படுத்துக் கண்களை மூடிக் கொண்டாள்.

அவன் கீழே போவானா? இங்கே உள்ளே வரு வானா? சில கணங்கள் நீண்ட அமைதிக்குப் பிறகு அறைக் கதவு தட்டப்படும் ஓசை கேட்டது.

கதவைத் திறந்த வினாடியில் இடது கையில் ட்ரேயைத் தூக்கிப் பிடித்தபடி, வலது கையால் கதவை தட்டியபடி நின்று இருந்தவனைப் பார்த்த உடனே, அன்று தூத்துக்குடியில் அவள் முகம் கழுவி உடையைச் சீர்படுத்திக் கொண்டு இருந்த அறையின் கதவைத் தட்டிய விஜய், நின்ற அந்த காட்சி நினைவில் வந்தது. பார்த்த விழிகள் பார்த்தபடி இருக்க பேச்சு வரவில்லை.

''குட் ஈவினிங்! நாலு மணிக்கே வந்து விட்டேன். நீ தூங்கிக் கொண்டு இருந்ததால் தொந்தரவு பண்ண வேண்டாம் என்று காத்திருந்தேன். அப்புறம் மணி ஆச்சு. ஏழு மணிக்கு அம்மாவை ரயில் ஏற்றி விட கிளம்பு வதற்கு முன்னாடி பேசணுமே என்று தட்டி விட்டேன்.''

''பரவாயில்லை... ஆனால்... நீங்க ஏன்... இங்கே டீ எடுத்துட்டு...''

''இது எங்க வீட்டுல இருந்து நான் போட்டு எடுத்து வந்த டீ! சமையல் அப்படி இப்படி இருந்தாலும் என் டீ ரொம்ப நல்லா இருக்கும். அம்மாவே என்னை டீ போடச் சொல்லி கேட்டு வாங்கிச் சாப்பிடுவாங்க. டீ எப்படி இருக்குமோ என்று பயப்படாமல் சீக்கிரம் வா'' என்று விரட்ட அவள் திகைப்புடன் திரும்பித் திரும்பிப் பார்த்தபடி சென்றாள்.

இவன் எவ்வளவு எரிச்சல் மூட்டினாலும், அவனை கடுமையாகப் பேச அவளால் நிச்சயம் முடியாது என்று தோன்றியது. ஹால் சோபாவில் இரண்டு கப்புகளில் தேநீரை ஊற்றி வைத்துக் கொண்டு விவேக் காத்திருக்க, சில நிமிடங்களில் வந்தவள் அருகே அமர்ந்து சுவைத் தாள். நன்றாக இருந்தது. அதை அவளின் முக பாவ னையில் உணர்ந்தான்.

''வேறே ஏதாவது சொல்ல வேண்டும் என்றால், மெதுவா யோசித்துச் சொல்லலாம் மதி. ஆனால் டீ நல்லா இருக்கு என்று சொல்லக் கூடவா யோசிக்கணும்?'' என்று கண் சிமிட்ட அவள் முறைத்தாள்.

''டீக்கு தேங்க்ஸ், நான் உங்களிடம் ஒரு முக்கியமான விஷயம் சொல்லணும். காலையில் பேச முடியலை. இப்ப...''

''அதுக்கு தான் நானும் வந்தேன். பீச் வரை ஒரு வாக் போயிட்டு வரலாமா?'' என்று கேட்க அவள் சில நிமி டங்களில் கிளம்பி அம்மாவிடமும் அத்தையிடமும் விடைபெற்று வந்தாள்.



''என்ன பேசணும்? இப்ப சொல்லு மதி.''

''முதலில் நான் உங்களிடம் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன் மிஸ்டர் விவேக்.''

''நீ மன்னிப்புக் கேட்பதற்கு ஏகப்பட்ட விஷயங்கள் லைனில் இருக்கு. அது இருக்கட்டும். இந்த மிஸ்டரை நீ விட மாட்டாயா?''

''சரி, இனிமேல் சொல்லவில்லை. உங்களை நேற் றும் இன்றும் உண்மை தெரியாமல் மரியாதை குறை வாக நடத்தியதற்கு சாரி...''

''அது தான் காலையிலேயே கேட்டாச்சே? அதெல் லாம் ஒரே மேட்டரே இல்லை. நம்மைப் பற்றி, நம் கல்யாணம் பற்றிய விஷயம் ஏதாவது இருந்தால் சொல்லு.'' என்று தூண்ட மௌனம் அவளைச் சூழ்ந்தது.

''ஓகே தான் சொல்ல வேண்டும் என்று அவசியம் இல்லை மதி. வேண்டாம் என்று கூட சொல்லலாம்'' என்று சொல்லி நிறுத்த அவள் அதிர்ச்சியுடன் பார்க்க அவன் கண் சிமிட்டினான்.

''என்ன வேகம்? என்ன வேகம்? மின்னல் தோற்றது போ...'' என்று சிரிக்க அவள் திகைப்புடன் பார்த்தாள்.

''உங்களை என்னால கல்யாணம் பண்ணிக்க முடி யாது என்றாவது நீ சொன்னால் தானே. நான் எவ்வளவு நல்லவன், வல்லவன் என்று உனக்கு விளக்கம் சொல்ல முடியும்? நீ பேசாமல் இருந்தால் என் அருமை பெருமை களை நான் எப்படி எடுத்துச் சொல்வது?'' என்று கேட்க அவள் மெலிதாகப் புன்னகை செய்தாள்.

''உன்னை கோபமாகப் பார்த்துவிட்டு, இந்த மாதிரி மென்னகையுடன் பார்ப்பது ஒரு இனிய கவிதை மாதிரி

இருக்கு. தேங்க்ஸ் மதி?'' என்று நிறுத்த, அவளின் அந்த சின்ன புன்னகை மறைந்தது.

''நம்ம கல்யாணம் நடப்பதற்கு வாய்ப்பு இல்லை விவேக். என்னை வற்புறுத்த வேண்டாமே ப்ளீஸ்...''

''கல்யாணம் வற்புறுத்தி செய்யும் விஷயம் இல்லை. ஆனால் ஏன் வேண்டாம் என்பதற்கு எனக்குக் காரணம் வேண்டுமே?''

''அது உங்களுக்கே தெரியும்...''

''தெரிந்தால் நான் ஏன் உன்னிடம் கேட்கிறேன் மதி? நிஜமாக தெரியலை...''

''நான் எங்க மாமா பையன் விஜயை நேசித்தேன்...''

''கரெக்ட்! நேசித்தாய். அதனால என்ன...?''

''இது விதண்டாவாதம். இப்பவும் என் மனதில் விஜயின் நினைவுகள் பசுமையாக இருக்கிறது. அதை என்னால் ஒருக்காலமும் மறக்க முடியாது விவேக்...'' என்று கடுகடுக்க அவன் முகத்தில் புன்னகை மலர்ந்தது.

''விஜய் இரண்டு வருடம் முன்பு எனக்கு ஒரு மெயில் அனுப்பி இருந்தானே? அதை அனுப்பியது நீதானே?'' என்று சம்பந்தமே இல்லாமல் புதிதாக பேச்சை மாற்ற அவள் ஒரு கணம் விழித்து விட்டு ஆமாம் என்று தலை அசைத்தாள்.

''அது உங்களுக்கு எப்படித் தெரியும்? விஜய் உங் களிடம் சொன்னாரா?''

''ம்ஹூம்! விஜய்க்கே நான் தான் சொன்னேன்...''

''என்ன உளறல் இது...?''



''அந்த மெயிலை அனுப்பியது நீதான் என்பது எனக்குத் தெரியும் என்று விஜய்மிடம் அன்று இரவே சொன்னேன். அவன் ஷாக் ஆகிட்டான் தெரியுமா?'' என்று கேலிச் சிரிப்புடனும் பாவனையுடனும் சொல்ல அவளின் முகம் விஜயைப் பற்றிய அந்த பேச்சில் மலர்ந்தது.

''எப்படிக் கண்டு பிடிச்சீங்க?''

''நீங்க ரெண்டு பேருமே ஒரே மாதிரி யோசிக்கிறீங்க. அவனும் இதையே தான் கேட்டான்...''

''பதிலை மட்டும் சொல்லிடாதீங்க.''

''விஜய் உன்னை விட புத்திசாலி'' என்று சொல்லி ஒரு இடைவெளி விட அவள் முக மலர்ச்சி குறையவே இல்லை. ரசனையோடு அவனையே, அவன் சொல்லப் போகும் பதிலுக்காக, பார்த்து இருக்க, அப்போது தான் அவனுக்கு 'அவள் தன்னைத் தானே நேசிப்பதைவிட விஜயை மனதில் உயர்வாக வைத்து பூஜிக்கிறாள்' என்ற உண்மை புரிந்தது. ஒரு கணம் சோர்ந்த மனதை சுறு சுறுப்பாக்கி, பேச்சைத் தொடர்ந்தான்.

''அன்னிக்கு மெயிலைப் பார்த்ததுமே இரண்டு விஷயம் கண்ணில் வித்தியாசமாகப் பட்டது. முதலில் என்னை அழைத்து இருந்த விதம். என்ன சொல்லி மெயிலை ஆரம்பித்து இருந்தாய் நினைவிருக்கா?''

''ம்ம். ஹாய்டா?'' என்று தயக்கத்துடன் சொல்ல, அவன் முகத்தில் புன்னகை விரிந்தது.

''அப்படி எழுதச் சொல்லி விஜய் சொன்னானா?''

''இல்லை. அவர் டிரைவ் பண்ணிட்டு இருந்தார். பறவை குஞ்சு பொரிக்கும் வீடியோவை அனுப்பச்

சொன்னார். சும்மா எப்படி அனுப்புவது என்று நான் இரண்டு வரி மெயில் தட்டினேன். உங்க பேரைச் சொல்லும்போது கண்ணில் நெருக்கமும் சந்தோஷமும் தெரிந்ததால் ப்ரெண்ட் என்று நினைத்து, ஹாய்டா என்று அடித்தேன். ஏன்...?''

''விஜய்க்கு நான் இரண்டு ஆண்டுகள் கல்லூரியில் சீனியர்.''

அவன் 'டா' போட்டு பேசமாட்டான் போல! ஆமாம் அன்று கூட முழு பேரையே சொல்லலையே? வீ.என். என்று தான் சொன்னான்.

''அந்த மெயில் இரண்டு ஆண்டுகளாக, இன் பாக்ஸில் பத்திரமா இருக்கு'' என்றவன் குரலில் ரசனை இருந்தது.

''முக்கியமான மெயில் என்றால் பத்திரமா வச்சு இருக்க மாட்டாங்களா? அதில் இந்த வீடியோ ஃபைல் இருக்கும் தானே?''

''அதை ஹார்ட் டிஸ்க்ல மாற்றினால் தானே டி.வி.யில் ரிலே பண்ண முடியும். அதுக்காக நான் மெயில் வைத்துக் கொள்ளவில்லை...''

''பின்னே?''

''அந்த வீடியோ ஃபைலில், பறவையின் ஜனனம் மட்டும் இல்லை'' என்று பேச்சை நிறுத்தியவன் கால் களும் நடப்பதை நிறுத்தி இருந்தது.

''நான் உன்னை முதன் முதலில் எங்கே எப்படிப் பார்த்தேன் என்று உன்னால் ஊகிக்க முடியுமா மதி?''



''தெரியலை. நீங்க ஏன் என்னை மதி மதி என்று சொல்றீங்க? என் பேர் வான்மதி. முழுசா சொல்லுங்க. இல்லை வானதி என்று சொல்லுங்க...''

''உன்னை மதி என்று நினைத்து, பார்த்து பழகி போச்சே மதி? திடீர் என்று அப்படி கூப்பிடாதே என்று சொன்னால் எப்படி? முகம் பார்த்துப் பேச முடிய வில்லை. இங்கே உட்காரலாம்'' என்று சொல்லிவிட்டு, மணலில் சரிந்து அமர்ந்தான்.

அருகே அமர்ந்தவள் எரிச்சலுடன் முகத்தை வேறு புறம் திருப்பிக் கொள்ள, ''நம் இருவருக்கும் ஏழாம் பொருத்தமாகவே இருக்கே? நேற்று முழுவதும் நீ கேள்வி கேட்டாய். நான் பதில் சொல்லாமல் சமாளித் தேன். இன்று நான் கேள்வி கேட்டால் நீ பதில் சொல்ல மாட்டேன் என்கிறாய்? கல்யாணம் ஆகாமலேயே கணவன் மனைவி எப்படி இருப்பாங்களோ, அப்படி இருக்கோம் மதி...''

''விவேக்! இந்த மாதிரி இனிமேல் பேசி என்னைத் தொந்தரவு பண்ணாதீங்க. அப்புறம் நான் உங்களுடன் சாதாரணமாகப் பேசவே யோசிக்க வேண்டி இருக்கும்'' என்று சொன்னவள் முகத்திலும், கண்களிலும் தீவிரம் இருந்தது. அந்தக் குரலின் நடுக்கத்தை உணர முடிந்த தால், தன் இரண்டு கைகளையும் தூக்கி சரணடைந் தான்.

''ஓகே, கல்யாணம் காதல் என்ற வார்த்தையை இனிமேல் நானாகப் பயன்படுத்த மாட்டேன். ஆனால் நான் உன்னை விட்டு விலகி விடுவேன் என்று நினைக் காதே. நான் கேட்கும் கேள்விக்கு பதிலாக நீ உண்மை

யாக உணர்வதை மறைக்காமல் சொல்வேன் என்று நீ ப்ராமிஸ் பண்ணு.''

''எனக்குப் பொய் சொல்ல வராது விவேக்...''

''அது தெரியும் வானதி. உண்மையைச் சொல்லணும். உடனே சொல்லணும். மழுப்பக் கூடாது என்பது தான் அதில் பொதிந்து இருக்கும் அர்த்தம்...''

அவன் வானதி என்று அழைத்ததும், திருமணம் பற்றி நான் பேச்சு எடுக்க மாட்டேன் என்று வாக்களித்ததும் அவளின் மனதைப் பெரிதும் குளிர வைத்து இருக்க, ''சரி, சொல்கிறேன்'' என்று மென்மையாக முணுமுணுத் தாள்.

''இப்ப என் முதல் கேள்விக்கு பதில் சொல்லு. உன்னை நான் முதன் முதலில் எங்கே எப்படிப் பார்த்து இருப்பேன் என்று உனக்குத் தெரியுமா?''

''ம்ஹூம்...!''

''ஊகித்துப் பாரேன்...''

''பிருந்தாவும் நானும் இருக்கும் போட்டோ உங்கள் மொபைலில் பார்த்ததாகச் சொன்னாளே? அவளுடைய பிறந்த நாளுக்கு நீங்களும் வந்து இருந்தீங்களா?'' என்று கேட்க அவன் மறுப்பாக தலை அசைத்தான்.

''நீங்க இங்கே எவ்வளவு நாளா சென்னையில் இருக் கீங்க என்றே தெரியாது. இதுல எப்படி ஊகம் பண் ணுவது? நீங்களே சொல்லுங்க.''

''நான் உன்னைப் பார்த்து இரண்டு ஆண்டுகள் ஆகிறது. முதன் முதலாக நீ அனுப்பிய மெயிலில் அந்தப் பறவையின் வீடியோ மட்டும் இல்லை. அதில்



நீயும் விஜயும் உங்க வீட்டுத் தோட்டத்தில் பேசிக் கொண்டு இருந்தது. ஐந்து நிமிடங்களுக்கு மேல் பதிவாகி இருந்தது. அதில் தான் உன்னைப் பார்த்தேன் வானதி'' என்று ரசனையோடு விவேக் சொல்ல, அதிர்ச்சி யுடன் பார்த்தாள் வானதி.

# 16

'இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நீ அனுப்பிய மெயிலில் இருந்த வீடியோ ஃபைலில் உன்னைப் பார்த்தேன்' என்று விவேக் சொன்ன, வாசகம் அவளுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது என்றால், அவன் முகத்தில் இருந்த ரசனை வானதியைக் குழப்பத்திற்கு உள்ளாக் கியது.

''நீங்க என்ன சொல்றீங்க...?'' வார்த்தைகள் தடு மாற்றத்துடன் வெளி வந்தது.

''மெயில் பார்த்ததும், 'யார் இந்த மதி?' என்ற ஆர்வம் எழுந்தது உண்மைதான். அதில் நான் உன்னை விஜ யுடன் சேர்த்து நான் பார்த்தேன். எப்போ உன்னை விஜ யுடன் பார்த்தேனோ, அப்ப வேறு எண்ணம் எதுவும் என் மனதில் எழவில்லை'' என்று சொல்லும் போதே 'அப்ப' என்ற வார்த்தைக்கு அவன் கொடுத்த அழுத்தம், அவளுக்கு தனியாகத் தெரிந்தது.

''ஹலோ மேடம் இப்படிப் பேசாமல் மௌனமாக இருந்தால் என்ன அர்த்தம்? இந்த இடத்தில், 'யார் இந்த

மதி?' என்ற கேள்வி எனக்கு ஏன் வந்தது என்று கேட்கணும் நீ?'' என்று கேள்வியை எடுத்துக் கொடுக்க அவள் புன்னகை என்ற பெயரில் இதழ்களை விரித்தாள்.

''ஹாய் டா, என்று ஆரம்பித்த நான், நட்புடன் வான்மதி என்று முடித்து இருந்தேனாக்கும்?''

''அட! பரவாயில்லையே? நீயும் புத்திசாலி என்று எண்ண வைத்து விட்டாயே?'' என்று சிரிக்க அவள் முகத்தில் அசடு வழிந்தது.

''நிஜமாவே அப்படி தான் எழுதி இருந்தேனா? நான் கிண்டலாகச் சொன்னேன்'' என்று கூச்சத்துடன் சொல்ல அவன் சிரித்தான். அவன் சிரிப்பும், இமைக்காத பார்வையும், அவளை ஏதோ செய்ய, ''அந்த வீடியோ-ல என்ன இருந்தது?'' என்று கேட்டவளின் குரலில் தவிப்பு இருந்தது.

''தோட்டத்தில் முட்டையில் இருந்து குஞ்சு வெளி வருவதைப் பதிவு செய்து முடிந்த பிறகு வீடியோ மோடில் இருந்ததை விஜய் நிறுத்தவில்லை என்று நினைக்கிறேன். நீங்க இருவரும் பேசியது முதலில் சப்தம் மட்டுமே பதிவாகி இருந்தது. அதன் பிறகு, ஐபேட் பொசிஷன் மாறியதில் வீடியோவும் பதிவாகி இருந்தது.''

''ம்ம்.''

''அந்த வீடியோ பார்க்கும்போதே உங்களின் உறவு புரிந்தது. அன்று இரவு, நான் விஜயுடன் பேசும்போதும், அவன் உன்னைப் பற்றி நிறைய சொன்னான் வானதி...''

''....''



''நீ சங்கடமாக உணர்கிறாய் என்று நினைக்கிறேன். விஜய் எனக்கு நல்ல நண்பன். அவனுடைய மனதிற்குப் பிடித்த அவன் திருமணம் செய்து கொள்ள நினைத்த பெண்ணை, வேறு மாதிரி ஒரு கண்ணோட்டத்தில் பார்க்கும் அளவுக்கு நான் மோசமானவன் இல்லை வானதி. சொல்லப் போனால், அந்த நேரம், எந்தப் பெண்ணையுமே திருமணம் செய்து கொள்ளும் உத்தேசம் எனக்கு இல்லை...'' என்று சொல்ல அவள் அவனைப் பார்த்த பார்வையில் குழப்பமும் கேள்வியும் இருந்தது.

''ஏன் அப்படி?''

''இப்படிக் கேட்டால் நான் என்ன பதில் சொல்லட்டும்? அப்போதைய என் ஹெல்த் கண்டிஷன் உனக்குத் தெரியாதா?''

''அ..து..க்..கு..ம் கல்யாணம் செய்து கொள்வதற்கும் என்ன தொடர்பு?'' என்று பலவீனமான குரலில் கேட்கும்போதே அவள் கண்களில் ஒரு கனிவும் பாராட்டும் வந்து சேர்ந்தது.

''என் ஆயுள் காலம் நிச்சயம் இல்லாதபோது, எதற்கு ஒரு பெண்ணின் வாழ்க்கையை வீணாக்க வேண்டும்'' என்று அவன் விளக்கம் சொல்ல, ''விவேக்'' என்று கிட்டத்தட்ட அலறினாள் வான்மதி.

கல்யாணம் செய்து கொள்ளப் போகிறோம் என்று பல ஆயிரம் கனவுகளோடு விட்டுப் பிரிந்த விஜயை, அதன் பிறகு மூன்றே தினங்களில் நினைவின்றி மருத்துவ மனை படுக்கையில் கண்டது நினைவில் வந்து கலங்கடித்தது.

"ஹேய்! எதுக்கு பயப்படுகிறாய்? நான் அன்றைய நினைப்பை சொன்னேன். இப்ப அப்படி இல்லை. நூறு வருஷம் நான் வாழ வேண்டும் என்று ஆண்டவனிடம் தினமும் வேண்டி கொள்கிறேன்" என்று சிரிப்புடன் சொன்னவன் கண்களையும் சிமிட்ட அவளின் பதட்டம் குறையவே இல்லை. இன்னும் வேகமான மூச்சுகளே வெளிவந்தன.

"வானதி. நெருப்பென்று சொன்னால் சுட்டு விடுமா?" என்று அவளின் கைப் பற்றி அழுத்த, அவள் மேலும் சில வேகமான மூச்சுக்களை வெளியேற்றி தன்னைத் தானே நிதானப்படுத்திக் கொண்டாள்.

"இருக்கட்டும் விவேக். விளையாட்டுக்காகக் கூட இனிமேல் இப்படி எல்லாம் பேச வேண்டாம் ப்ளீஸ்..." என்று பதட்டத்துடன் சொல்ல, அவன் கனிவுடன் அவளைப் பார்த்தான்.

அழகே அழகே! அழகின் அழகே நீயடி
உன் அருகே அருகே அழகாய் தொலைந்தேன் நானடி
ஐந்தே நிமிடம் ஐந்தே நிமிடம் தானடி
என் ஆசை நெஞ்சில் பற்றி கொண்டது தீயடி!
நான் என்ன என்னவோ கனவுகள் கண்டேன்
என்னை உன்னிடம் தந்திட வந்தேன்
வந்த வேகத்தில் தயக்கம் கொண்டேன்
நீ தூண்டில்காரனை தின்றிடும் மீனா?
வேட்டையாளனை வென்றிடும் மானா?
உன்னை நேசித்த காதலனா?



"நான் பேசுவது உங்க காதில் விழுதா? ஹலோ... விவேக்... ஹலோ..." என்று குரலை உயர்த்தியவள் அவன் முகத்தின் முன்னால் தன் கையை அசைக்க அவன் நினைவுக்கு வந்து புன்னகை செய்தான்.

"யா... சொல்லு..."

"இந்த மாதிரி அபத்தமா உணர வேண்டாம் என்று சொன்னேன்..."

"நீ ஒரு விஷயம் சொல்லி நான் முடியாது என்று சொல்வேனா? இனிமேல் அந்த மாதிரி பேசலை. உனக்கு ஒரு விஷயம் தெரியுமா? உன்னை கல்... ப்ச்! உன்னைப் பார்க்கவும் உன்னிடம் பேசவும், என்று என்னை மும்பையில் இருந்து கிளப்ப எங்க அம்மாவுக்கு இரண்டு வருஷம் ஆகி இருக்கு."

அவன் சொல்ல வந்து பேச்சை மாற்றியது புரிய, அவள் திகைப்புடன் அவனையே பார்த்தாள். அவளின் பார்வையை கவனிக்காதது போல அவன் பேச்சைத் தொடர்ந்தான்.

"சர்ஜரி முடிஞ்சு முதல் வருடம் பல்வேறு பரிசோதனைகள், செய்து, நான் முழுக்க முழுக்க நல்லா ஆகி விட்டேன் என்று மருத்துவர்கள் சொல்லிட்டாங்க. நான் இயல்பான திருமண வாழ்க்கைக்குத் தகுதி உடையவன் என்ற சர்ட்டிபிகேட் வந்த பிறகு தான் எங்க அம்மா நிம்மதியா மூச்சே விட்டாங்க. எங்க அம்மாவுக்கு திருப்தி வந்த பிறகும், நான் இன்னும் ஓராண்டு காத்திருந்தேன்..."

"......"

''என்ன பார்க்கிறாய்? அதற்கு முன்னாடி எங்க அம்மா செய்யக் கூடாது என்று தடை போட்டு வைத்து இருந்த பைக் ஓட்டுவதில் ஆரம்பித்து, மலை ஏறுவது உள்ளிட்ட கடினமான வாழ்க்கை முறைக்கு, போன ஆண்டு முழுவதும் என்னை நானே உட்படுத்தினேன். ஜம்முவில், ஒரு மாதம், ராஜஸ்தானில் ஒரு மாதம். டி.வி. நிறுவனத்தில் நானே கேட்டு வாங்கி சென்று விதம் விதமான தட்ப வெப்ப நிலையில் வசித்து பார்த்தேன். என் உடல்நிலை பற்றி என்னை நானே திருப்தி செய்து கொண்ட பிறகு தான் சென்னைக்கே வந்தேன் தெரியுமா? இங்கே வந்து இரண்டு வாரம் ஆகிறது.''

அவனின் பேச்சு போகும் திசையை உணர்ந்தவளுக்கு, அவன் திருமணத்தைப் பற்றி ஜாடையாகப் பேசுகிறான் என்பது நன்றாகவே புரிந்தது. ஆனால் தனது மறுப்பை எப்படி சொல்வது என்று புரியவில்லை.

பல பல கனவுகள் இருக்கு

அதை ஏன் சொல்லனும் உனக்கு?

மனம் விட்டுப் பேச நீயும் நண்பனா எனக்கு?

பார்த்ததும் பிடித்தது உனக்கு.

பழகிடத் தோணனும் எனக்கு

கானல் நீரில் மீனை தேடி அலைவது எதற்கு?

நீ காதல் கஜினியா? பகல் கனவில் பவனியா?

ஏன் துரத்தி வருகிறாய்? நெருங்க நினைக்கிறாய்?

அவன் ஆர்வத்துடன் பேசிக் கொண்டு இருக்க, மாலை மயங்கி இருட்டிக் கொண்டு வந்தது. இப்போது



சொல்ல முடியும் என்று தோன்றவும் இல்லை. கை திருப்பி மணி பார்த்தாள். ''அத்தை நைட் ஊருக்குப் போறேன் என்று சொன்னாங்க. அவங்களை ஸ்டேஷனில் கொண்டு போய் விடணும்'' என்று சொன்னதும் அவனும் கை திருப்பி மணி பார்த்தான்.

''நல்லவேளை நினைவு படுத்தினாய். அம்மாவும் ஊருக்குப் போறாங்க. நானும் கொஞ்ச நேரம் அவங்களிடம் பேசிக் கொண்டு இருக்கணும். நாம் மெதுவா பேசிக் கொள்ளலாம். வீட்டுக்குப் போகலாமா?'' என்று எழுந்து பின்புறம் ஆடையில் இருந்த மணலை இடது கையால் தட்டி விட்டபடியே வலது கையை அவளுக்கு நீட்டினான்.

''நான் சொல்ல வந்த விஷயத்தை இன்னும் சொல்லவே இல்லை வானதி. நான் தூத்துக்குடியில் விஜயை சந்தித்தபோது அவன் உனக்காக வாங்கிய பரிசு என்னிடம் இருக்கு. அத்துடன் அவன் பொருள் ஒன்றும் என்னிடம் இருக்கு. இது இரண்டையும் கொடுக்கணும் என்று நினைத்து தான் சென்னைக்கு வந்தேன்...''

''நோ நோ. அப்படிப் பார்க்காதே. இதயம் இல்லை. அதை உன்னிடம் எந்தக் காரணம் கொண்டும் கொடுக்கவும் முடியாது. அதில் தான் என் ஜீவனே இருக்கு'' என்று மேலும் சிரிக்க அவள் கட்டுப்பாட்டையும் மீறி சின்ன புன்னகை மலர்ந்தது.

''விஜயின் என்ன பொருள் உங்களிடம் இருக்கு?''

''அதை நாளை மாலை சொல்கிறேன்...''

''ஏதாவது க்ளூ கொடுங்களேன்...''

''முடிந்தால் நீயே கண்டு பிடி. ஆனால் அவன் கொடுத்த பரிசுக்கு வேண்டுமானால் க்ளூ

கொடுக்கிறேன். அது உன்னுடைய எதிர்கால கனவினை நனவாக்க இப்போதைக்கு நீ தடா போட்டு வைத்து இருக்கும் ஒரு வேலையைச் செய்ய வைக்க ஒரு தூண்டு கோலான பரிசு பை. நேரம் ஆச்சு...'' என்று சொல்லி விட்டு, அவளை விட வேகமாக நடந்து பீச் கூட்டத்தில் மறைந்து போனான் விவேக்.

* * *

எக்மோர் ரயில் நிலையத்தில் அத்தையை வழி அனுப்ப வந்த வான்மதி நடைமேடையில் நின்றபடி பேசிக் கொண்டு இருந்தாள்.

''மணி ஒன்பதரை ஆச்சு. நீ ஏன் இன்னமும் இங்கே நிற்கிறாய் மதி? நீ கிளம்பும்மா. வீட்டுக்குப் போக இன்னும் நேரம் ஆகும்'' என்று அவளைத் துரத்த முயன்ற பிருந்தாவுக்கு சாக்கு சொல்லிக் கொண்டு இருந்தாள்.

''ரயில் கிளம்பிய பிறகு போகிறேன் அத்தை. காலையில் தான் என்னிடம் தகவல் சொல்லாமல் திடுதிப் என்று வந்து நின்றீங்க. உங்களை வழி அனுப்புவதை விட முக்கியமான வேலை எதுவும் எனக்கு இல்லை. இப்படி அவசரமா கிளம்பணுமா? ரெண்டு நாள் இருந்து விட்டுப் போனால் என்ன?''

''நான் ஊருக்கு வந்ததே. நீ போனில் அழுததைத் தாங்க முடியாமல் மதி, மாமா தினயா சாப்பாட்டுக்கு திண்டாடுவார். போகணும் மதி.''

''அப்படி அவசரமாகக் கிளம்பி வராவிட்டால் தான் என்ன? கண்ணீர் போனால் பிள்ளை மிச்சம் என்று பக்கத்தில் இருக்கும் அம்மா சொல்வாங்க. ஆனால் நீங்க



ராத்திரியோட ராத்திரியா பதறி அடிச்சு ஓடி வந்து இருக்கீங்க...''

''நான், மாமா, உங்க அப்பா, எல்லோருமே உன்னை உள்ளங்கையில் வைத்து தாங்கியதால், உன்னைக் கண்டிக்க ஒரு ஆள் வேண்டும் என்று உங்க அம்மா கொஞ்சுவதில்லை. ஆனால் பாசம் இல்லாமல் இருக்காது மதி...''

''உங்க அண்ணியை ஒரு வார்த்தை சொல்ல விட மாட்டீங்களே? அவங்க என் அம்மாவும் கூட! எனக்குத் தெரியாதா? இவ்வளவு பாசம் வைக்க நான் என்ன அத்தை செய்தேன்?''

''என்ன பண்ணனும் கண்ணு? நீ என் அண்ணன் பொண்ணு, அது போதாதா? நீ மட்டும் என் மேல் பாசம் வைக்கலையா? பாரு மணி ஒன்பதரை ஆகுது. இந் நேரத்துக்கு மேலே நீ தனியா காரை ஓட்டிட்டுப் போகணும். வர வேண்டாம் என்று சொன்னால் நீ கேட்டியா? நான் மட்டும் உன்னை கண்டு கொள்ளாமல் இருக்க முடியுமா? சரி விவேக்கிடம் என்னவோ பேசணும் என்று சொன்னாயே? பேசியாச்சா?''

''இன்னும் இல்லை அத்தை. நீங்க ஊருக்குக் கிளம்புநீங்க அவங்க அம்மாவும் கிளம்புவதால் பேசவில்லை. நாளைக்குப் பேசலாம் என்று வந்து விட்டோம்'' என்றவளின் குரலில் சின்னதாக ஒரு தடுமாற்றம் இருந்தது.

அவருக்குத் தெரிய இருவரும் ஒரு மணி நேரம் தனியே இருந்தார்கள். போக வர நடந்த நேரத்தில் பேசவில்லை என்று வைத்துக் கொண்டாலுமே அரை மணி நேரம் மிச்சம் இருந்து இருக்கும். 'உன்னைப்

பிடிக்கவில்லை' என்பதை சொல்ல மருமகளுக்கு அரை மணி நேரம் போதவில்லை என்றால் என்ன அர்த்தம்?

'சரி, மதி ரயில் கிளம்புது. ஜாக்கிரதையா போ. காரை விரட்டாதே. வீடு போய் சேர்ந்த உடனே எனக்கு ஒரு போன் பண்ணி தகவல் சொல்லு. அது வரை நான் விழித்துக் கொண்டு இருப்பேன்'' என்று கன்னத்தை வருடி விடை கொடுக்க அவள் புன்னகை செய்தாள்.

'கிளம்பு மதி.' என்று பிருந்தா வான்மதியை வற்புறுத்தியும், ரயில் கிளம்பும் வரை அத்தையுடன் இருந்து விட்டுக் கிளம்ப, அங்கே சென்ட்ரல் ஸ்டேஷனில் நின்றபடி கௌசல்யாவிடம் பேசிக் கொண்டு இருந்தான் விவேக்.

''ஏன்டா இப்படி கால் மாற்றி மாற்றி நிற்கிறாய்? கால் வலிக்குதா? உள்ளே வந்து உட்காரேன்...''

''ஒன்பதே காலுக்குக் கிளம்ப வேண்டிய ரயில் கிளம்பாமல் என்ன பண்ணிக் கொண்டு இருக்கு? மணி ஒன்பது இருபத்தி ஐந்து ஆச்சு'' என்றவன் குரலில் எரிச்சல் இருந்தது.

''டேய்! பத்து நிமிஷம் அம்மாவுடன் கூட செலவழிக்கலாம் என்று சந்தோஷப் படாமல் சிடுசிடுவென்கிறாய்? என்ன விஷயம்?''

''அது சஸ்பென்ஸ்.''

''ஆமா! பெரிய சஸ்பென்ஸ். உன் கேர்ள் ப்ரெண்டை எக்மோரில் பிக் அப் பண்ணுகிறேன் என்று சொல்லி இருப்பாய். எனக்குத் தெரியாதா?''

''உங்களுக்கு என்னைத் தெரிந்த அளவுக்கு மதியைத் தெரியலை. ஆனால் நான் அவளை கரெக்ட்டா கணக்கு



பண்ணி வச்சு இருக்கேன். அவளை பிக் அப் பண்ண மாட்டேன். அவளை பிக் அப் பண்ண வைப்பேன்...''

''ஹய்யோ! அப்ப உன்னோட பைக்...''

''அதுக்கு சதீஷை வரச் சொல்லி இருக்கேன்...''

''ஒரு ஐபீஎஸ் ஆபீசரை இப்படி உனக்கு டிரைவரா, அதுவும் டூ வீலருக்கு டிரைவர் உத்தியோகம் பார்க்கிற லெவலுக்கு இறக்கி விட்டாயே? என்ன கொடுமைடா ஜாங்கிரி? ச்சே... சதீஷ்'' என்று அங்கலாய்க்க, ரயில் கிளம்புவதற்கான பச்சை விளக்கும் எரிய, அம்மாவின் கன்னத்தில் இரண்டு விரல்களால் அவசரமாகக் கிள்ளி கொஞ்சினான்.

''பைம்மா. காலையில் வீட்டுக்குப் போனதும் போன் பண்ணுங்க'' என்று விடை பெற்று ஓடி வந்தவன், பீச் ரோடில் லைட் ஹவுஸ் பக்கத்தில், ரோந்து பணியில் இருந்த சதீஷிடம் பைக்கை கண் காட்டி விட்டு, வண்டியில் சாய்ந்து நின்று இருந்தான். அவள் வீட்டுக்குப் போக பீச் ரோடில் வர வேண்டுமே? மவுண்ட் ரோடில் போய் விட்டால்... என்ற கவலை வந்தது.

மவுண்ட் ரோடில் இருக்கும் போக்குவரத்து நெரிசலின் மீது அதீத நம்பிக்கை வைத்து, கடவுளை வேண்டியபடி காத்திருக்க, தூரத்தில் அந்த நீல நிற சான்ட்ரோ வருவது கண்ணில் பட்டது. எஸ்! துள்ளி குதித்தான்.

கார் நெருங்கி வரும்போது, சாவியைத் திருகாமலேயே பைக்கை உதைத்து வண்டியை கிளப்ப முயற்சி செய்து கொண்டு இருக்க, பின்னால் வந்த அவளின் வாகனம், அருகே நின்றது.

# 17

தூரத்தில் வரும் போதே விவேக் சாலையோரம் நின்று தன் பைக்கை உதைத்துக் கொண்டு இருப்பதைப் பார்த்து விட்ட வான்மதியின் கால்கள் தன்னை அறியாம லேயே பிரேக்கை அழுத்தி, வேகத்தைக் குறைத்தது. காரை நிறுத்தி விட்டு இறங்கியவளைப் பார்த்துப் புன்னகைத்தான் விவேக்.

''ஹேய் வானதி! இந்நேரத்தில நீ எங்கே இங்கே...?''

''சொன்னேனே? அத்தையை பாண்டியனில் ஏற்றி விட்டுத் திரும்புகிறேன்.''

''ஆமால்ல. மறந்து விட்டேன். நான் சென்ட்ரல் ஸ்டேஷனில் அம்மாவை அனுப்பி விட்டு வருகிறேன்...''

''உங்களை மாதிரி எதையும் மறக்கும் ஆள் இல்லை நான். வண்டிக்கு என்ன ஆச்சு?''

''நானாவது வண்டி ரிப்பேர் ஆன டென்ஷனில், நீ நாலு மணி நேரம் முன்னாடி போகிற போக்கில் யார் காதிலும் விழாமல் முணுமுணுப்பாக சொன்ன ஒரு விஷ யத்தை மறந்தேன். எந்த டென்ஷனும் இல்லாமலேயே, கண் முன்னால் நடக்கும் ஒரு விஷயத்தைக் கூட அடுத்தவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்வாயா? பார்த்தால் தெரியலை. வண்டி ஸ்டார்ட் ஆகலை.''

''நடு வழியில் அர்த்த ராத்திரியில் நின்று கொண்டு இருக்கீங்களே என்று பாவப்பட்டு விசாரிக்க இறங்கின



எனக்கு வேண்டும்'' என்று சொல்லி விட்டுத் திரும்பிய வானதியை அவசரமாக அழைத்தான்.

''ஹலோ வானதி, நானும் வருகிறேன். இந்த நேரத்துக்கு மேலே இந்தப் பக்கம் பஸ் வராது. நான் வயசுப் பையன். ஊருக்குப் புதுசு வேறே. ஆட்டோவில் நான் எப்படி தனியா வருவது? நீயே என்னைப் பத்திரமா கூட்டிட்டுப் போய் வீட்டில் விட்டு விடு. ப்ளீஸ்'' என்று சிரிக்காமல் அவன் சொன்ன வேகத்தில் திரும்பிப் பார்த்தவளுக்கு தன்னையும் மீறி புன்னகை மலர்ந்தது.

''வாங்க. போகும் வழியில் யாராவது மெக்கானிக் கிற்கு போன் பண்ணி எடுத்துச் செல்லச் சொல்லலாம். உங்க பைக்...''

''அதை மெக்கானிக் பார்த்துக்குவார்...''

''நீங்க வண்டியைப் பூட்டி, சாவி எடுத்துட்டா, அவர் எப்படி கொண்டு போவார்?''

''இன்னொரு வண்டி கொண்டு வந்து 'டோ' பண்ணி தானே எடுத்துப் போவார். வா போகலாம்'' என்று சொல்லி விட்டு காரில் ஏற அவள் பைக்கை திரும்பித் திரும்பிப் பார்த்தபடி வந்து ஓட்டுனர் இருக்கையில் ஏறி அமர்ந்தாள்.

''நானே புது பைக்கை மறந்து விட்டேன். ஆனால், இன்னும் நீபைக்கை விட்டுப் பிரிந்து வரவில்லை போல இருக்கு வானதி?'' என்று வண்டி சிறிது தூரம் சென்ற பிறகு, சிரிப்புடன் கேட்கத் திரும்பிப் பார்த்து மறுப்பாக தலை அசைத்தாள் வானதி.

''நான் அதைப் பற்றி யோசிக்கலை...''

''அப்ப என்னைப் பற்றி யோசித்தாய் என்று சொல்லு'' என்று சிரிப்புடன் சொல்ல, அவள் ஆமோதிப்பாக தலை அசைத்தபடி அவனை ஒரு நொடி திரும்பிப் பார்த்து விட்டு சாலையில் மீண்டும் பார்வையை பதித்தாள்.

''என்னிடம் ஏதாவது கேட்கணுமா வானதி...?''

''ம்ம்ம்.''

''கேட்க வேண்டியது தானே? என்ன யோசனை?''

''நீங்க அ..ன்..னி..க்..கு விஜய் கூட இருந்தீங்களா?'' என்று தலையும் இல்லாமல் வாலும் இல்லாமல் கேட்டாலும் கூட அவளின் கேள்வி புரிந்தது. சொன்னவளின் குரலும் விஜயின் நினைவில் நடுங்க ஆரம்பித்து இருந்தது. கரங்கள் வாகனத்தைச் செலுத்த முடியாமல் நிறுத்தியது.

''வானதி, நான் டிரைவ் பண்ணட்டுமா...?'' என்று கேட்க அவள் தயக்கத்துடன் தலை அசைத்தாள்.

''சரி இந்தப் பக்கம் வா...'' என்று சொல்லிவிட்டு ஓட்டுனர் இருக்கையில் அமர்ந்ததும் அவளை கனிவோடு பார்த்தான்.

''விஜய் பற்றியே மாலையில் இருந்து நினைத்துக் கொண்டே இருந்தாயா?''

''மறந்தால் தானே நினைப்பதற்கு?'' என்று சொன்னவளின் குரலில் இருந்த காதலை உணர்ந்தவனுக்கு உள்ளே பயமாக இருந்தது.

''உடலில் உள்ள ரத்தம் எல்லாம் முகத்தில் வந்துவிட்ட மாதிரி ஜிவுஜிவுன்னு சிவந்து இருக்கே? இரண்டு வருஷம் ஆச்சு வானதி. நீ இன்னும் அந்த பாதிப்பில்



இருந்து வெளியே வர முயற்சி செய்த மாதிரிக் கூடத் தெரியலையே?''

''உங்களுக்கு வண்டி ஓட்டத் தெரியாதா? இன்னும் ஸ்டார்ட் பண்ணலை...?'' என்று கேட்டவளின் குரலில் நடுக்கம் மறைந்து அதட்டல் தோன்றி இருந்தது. அதைக் கேட்டதும் சின்ன தோள் குலுக்கலுடன் காரை உயிர்ப்பித்தான்.

''நீங்க மும்பையில் இருந்ததா விஜய் சொன்னாரே? அப்புறம் எப்படி அங்கே வந்தீங்க? விஜயை எங்கே பார்த்தீங்க? அப்ப என்ன நடந்தது?'' என்று வண்டி ஓட ஆரம்பித்ததும், விசாரித்தவளை பிரமிப்புடன் பார்த்தான்.

சில வினாடிகள் முன்பு அவளிடம் இருந்த நடுக்கம் மறைந்து கம்பீரம் வந்து சேர்ந்து இருந்தது. குரலை உயர்த்தாமலேயே, என் மனநிலை பற்றி நீ ரொம்ப உருக வேண்டாம். கேட்ட கேள்விக்குப் பதில் சொன்னால் மட்டும் போதும் என்ற தொனியில் அவன் கேள்விக்குப் பதில் சொல்லாமல் தவிர்த்த சாமர்த்தியம் புரிந்தது. பேச்சை தொடர்ந்தான்.

''நான் மும்பையில் பாரத் தர்ஷன் தொலைக்காட்சியில் வேலை செய்தது தெரியும் தானே?'' என்று ஆரம்பிக்கும்போதே முன்தினம் அவள் வாங்கிய மூக்குடைப்பு நினைவிற்கு வர அவள் இடைமிட்டாள்.

''விஜய் சொல்லி தெரியும். ஆனால் நேற்று காலையில் நான் காவல் துறை மூலமாக விசாரித்தபோது. நீங்க வேலை செய்ததை அவங்க ஏன் சொல்லவில்லை?''

''நான் வேலையை ராஜினாமா செய்து ஒரு மாதம் ஆகிறது. இப்ப அங்கே வேலை செய்யவில்லை?''

"கடந்த காலத்தில் வேலை செய்தீங்க என்று சொல்லி இருக்கலாமே?"

"சொல்லி இருக்கலாம். இவங்க என்ன சொல்லி விசாரித்தாங்களோ? சமீபத்திய சம்பள பட்டியல் வாங்கிப் பார்த்து இல்லை என்று வந்து இருக்கலாம். அதை விடு. என் வேலையை ராஜினாமா செய்தீங்க என்று கேட்பாய் என்று நினைத்தேனே வானதி?" என்றவன் குரலில் மிகுந்த எதிர்பார்ப்பு இருக்க அவள் திரும்பிப் பார்த்தாள்.

இவன் எதையோ வில்லங்கமாகச் சொல்லப் போகிறான் என்பது நன்றாகப் புரிந்ததாலேயே அவள் அந்தக் கேள்வியைக் கேட்க விரும்பவில்லை. அவளின் மௌனம் சொன்ன செய்தி நன்றாகவே புரிய, அவன் அந்தப் பேச்சை விடுவதாக இல்லை.

"நீ கேட்கா விட்டாலும், இந்த கேள்விக்கு நான் பதில் சொல்வேன். நேற்று நீ கேட்ட கேள்விக்கு பதில் சொல்லாதது பெரிய தப்பு என்று என் அம்மா இன்று பூராவும் அறுத்துத் தள்ளி விட்டாங்க. செம டோஸ் வேறே!" என்று உதட்டைப் பிதுக்கியவன் குரலில் விளையாட்டுத் தனம் இருந்தது.

"இந்த இருபத்தி எட்டு வருஷத்தில நான் இது வரைக்கும், எங்க அம்மாவிடம், இந்த மாதிரி திட்டு வாங்கியதே இல்லை. எ..ன்..னை..யே! நல்லா கவனி, வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் அகில உலக தலைவரான என்னையே பீல் பண்ணி சாரி சொல்ல வைச்சுட்டாங்க. அதனால், நான் ஏன் சென்னைக்கு வந்தேன் என்பதை சொல்லியே தீருவேன். எங்கே சோடா? எங்கே கலர்?" என்று மூச்சு வாங்க, குழப்பத்துடன் பார்த்தாள்.



இவன் என்ன சொல்லப் போகிறான்? உன்னைக் கல்யாணம் செய்து கொள்வதற்காக தான் மும்பை வேலையை விட்டுவிட்டு சென்னைக்கு வந்தேன் என்று சொல்லப் போகிறானா?

விஜய் அவங்க வீட்டுத் தோட்டத்தில் வைத்து தன் ராஜினாமா கடிதத்தைத் தட்டச்சு செய்தபடி, இதே வாசகத்தை சொன்னது நினைவில் ஆட, ஒரு சிலிர்ப்பு உடல் முழுவதும் ஓடியது.

"எங்க அம்மாவுக்கு ஆரம்பத்திலேயே நான் தனியாக மும்பை போவதில் இஷ்டம் இல்லை. இப்ப கல்யாணம் பண்ணி வைக்கணும் என்று வேறு முடிவு பண்ணிட்டாங்க. எவ்வளவு கலரா, அழகா, ஸ்லிம்மா இருந்தாலும், ஹிந்திக்கார பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள விடப் போவதில்லை. ஏன் என்று கேட்கிறாயா? எங்க அம்மாவுக்கு ஹிந்தி தெரியாதே! அப்புறம் எப்படி அவளுடன் சண்டை போடுவது? சண்டை போடாமல் எந்த மாமியாராலாவது இருக்க முடியுமா?"

"போதும் வாய்க்கு வந்தபடி உளறாதீங்க..."

"என்ன அப்படிச் சொல்லிட்ட? உன்னுடன் சண்டை போடுவாங்க என்று நினைத்து விட்டாயா? நான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கப் போகிறேன் என்று சொல்லவில்லை. நீ இல்லாவிட்டாலும் தமிழ் பெண்ணை தான் கல்யாணம் பண்ணிக்கணும். அதுக்கு ஏன் மும்பையில் இருப்பானேன்? அங்கே பார்க்குற வேலையை சென்னையில் பார்க்கலாம் என்று முடிவு பண்ணினேன். சென்னைக்கு வந்தேன். நேற்று நிலா டி.வி.யில் சேர்ந்தாச்சு."

"ஓ...!" என்று சொன்னவளுக்கு கொஞ்சம் ஆசு வாசமாக மூச்சு வந்தது.

"அவ்வளவு தானா? என்ன வானதி நீ? ஒரு கங்க் ராட்ஸ் கூட சொல்ல மாட்டியா? நேற்று மாலை அதுக்கு தான் உனக்கு ஸ்வீட் எடுத்துட்டு வந்தேன். நீ எடுத்துக் கொள்ளவில்லை..."

"சாரி... நேற்று..."

"ஆமா நீ என்ன சுருக்கமா பதில் சொல்வது எப்படி என்று எனக்கு கிளாஸ் எடுக்கிறாயா? என் பேச்சைக் குறைக்க உன்னால் முடியாது. சவால் விடுகிறேன். பார்க்கலாமா?"

"முருகா..."

"பாருடா! திரும்பவும் ஒரே வார்த்தை. இந்தியன் பீனல் கோடிலேயே ஒரு தப்புக்கு ஒரு சாரி சொன்னால் போதும் என்று சொல்லி இருக்காங்க. நீ என்னடா வென்றால் இதுவரைக்குமே எனக்குத் தெரிஞ்சு ஒரு நூற்றி எட்டு முறை சாரி சொல்லி இருப்பாய். அதை நானே கண்டு கொள்ளவில்லை. நீ ஏன் இவ்வளவு பீல் பண்ணுகிறாய்? சாரி சொல்றதுக்கு பதிலா கங்க்ராட்ஸ் சொன்னாலாவது பிரயோஜனம் உண்டு."

"ஹய்யோ! சென்னையில் புது வேலையில் சேர்ந்த தற்கு வாழ்த்துக்கள்! போதுமா? ஷப்பா! வாழ்த்துக்களை இப்படி வாயில் இருந்து தோண்டி எடுக்கும் ஆளை இப்போ தான் பார்க்கிறேன்..."

"இனி பார்த்துக் கொண்டே இருப்பாய். நான் சென் னையை விட்டுப் போவதாக இல்லை."



"உங்களுக்கும் வேண்டும் என்ற வார்த்தைகளை மட் டும் இப்படி வாயில் இருந்து பிடுங்கத் தெரியுது இல்ல? அதே மாதிரி அடுத்தவங்க கேட்கும் கேள்விக்கு பதில் சொல்லணும் என்ற எண்ணமும் இருக்கணும். நீங்க எப்போ, எதுக்கு தூத்துக்குடி வந்தீங்க என்று நான் கேட்ட கேள்விக்கு இன்னும் பதில் வரலை."

"என்ன நீ? நான் எதுக்கு சென்னை வந்தேன் என்று பீல் பண்ணி சொல்லிட்டு இருக்கும் போது நான் ஏன் தூத்துக்குடி வந்தேன் என்று நடுவில் திசை மாற்று கிறாய்? அப்படி எல்லாம் என்னை திசை மாற்ற முடியாது. நான் சொல்ல வந்ததை சொல்லியே தீருவேன். அம்மா கோவையில் செட்டில் ஆகி விட்டாங்க. அவங்க அந்த ஊரை விட்டு நகர மாட்டாங்க. எல்லா தொலைக்காட்சி நிறுவனங்களும் சென்னையில் இருக்கு. அம்மாவுக்கு தான் உதவியா இருக்க முடியலை. அட்லீஸ்ட் கல் யாணம் பண்ணிக்கிற பெண்ணுக்காவது வசதியா இருக்கட்டும் என்று தான் நான் சென்னையில் செட்டில் ஆகி விட்டேன். நான் சொல்ல வந்ததைச் சொல்லி முடிச்சாச்சு. இப்ப கேளு உன் சந்தேகத்தை..."

"நீங்க பேசி முடிப்பதற்கு முன்னால் வீடே வந்து சேர்ந்து விட்டது. இதில் நான் எங்கே கேள்வி கேட்பது?"

"இதுக்கு ஏன் டென்ஷன் ஆகிறாய்? எனக்கு தூக்கம் வரலை. என்னைக் கேள்வி கேட்கவும் வீட்டில் யாரும் இல்லை. உனக்கு தூக்கம் வரலை என்றால் இப்ப கூட எங்க வீட்டில் உட்கார்ந்து பேசலாம்" என்று சொல்ல அவள் அதிர்ச்சியுடன் பார்த்தாள். மணி இரவு பத்தரையைத் தாண்டி இருக்கும். இந்த நேரத்திலும் எவ்வளவு சாவதானமாக கூப்பிடுகிறான்?

''என்ன அப்படிப் பார்க்கிறாய்? நீ தனியாக எங்க வீட்டுக்கு வர மாட்டியோ? சரி, உங்க அம்மாவிடம் கேட்டுட்டு சொல்லு. நான் உங்க வீட்டுக்கு வருகிறேன்.''

சும்மாவே திருமணம் பற்றிய அம்மாவின் கேள்விகளுக்கு பதில் சொல்லி மாளாது. இப்படி அர்த்த ராத்திரியில் வீட்டுக்குக் கூட்டிச் சென்றால் வேறு வினையே வேண்டாம்!

''வேண்டாம்'' என்று அவசரமாக மறுப்பு சொல்ல அவன், சிரித்தான்.

''என்னை வேறு என்ன செய்யச் சொல்கிறாய்? நாளைக் காலையில் நான் ஆறு மணிக்கு பீச்சுக்கு வாக்கிங் போவேன். நீயும் வருகிறாயா?''

''இப்பவே போனில் பேசலாமே? நான் வீட்டுக்குப் போனதும், பத்து நிமிடம் கழித்து போன் பண்ணுகிறேன். உங்க நம்பர் தரீங்களா?'' என்று கேட்க அவளின் வேகம் புரிந்தது.

''காலம் காலமா, நீங்க மிஸ்ட் கால் தானே கொடுப்பீங்க? நானே சரியா பத்து நாப்பதுக்கு கால் பண்ணுகிறேன். வெயிட் பண்ணு'' என்று அவளின் வீட்டில் இறக்கி விட்டவன், கை அசைத்து விட்டு தன் வீட்டை நோக்கி நடந்தான். பத்து நிமிடங்களில் அவளை அழைக்கவும் செய்தான்.

''சொல்லுங்க விவேக்...'' என்றவளின் குரலில் வேகம், இருந்தது.

''வானதி, காரில் வரும்போது நீ கேட்ட உடனே பதில் சொல்லாததற்கு சாரி. நீ விஜய் பற்றி பேசும் போது எமோஷனலாக ஆகக் கூடும் என்று எதிர்பார்த்தேன்.



அதனால் நீ வீட்டுக்கு வந்த பிறகு தான் பேச வேண்டும் என்று நான் முடிவு பண்ணி இருந்தேன் வானதி. இப்பவும் நீ அழ மாட்டேன் என்று சொன்னால் தான் மேலே பேசுவேன். பேச்சின் நடுவில் நீ அழுகிறாய் என்பதை உணர்ந்தால் பேச்சை நிறுத்தி விடுவேன். இதற்கு நீ ஒத்துக் கொண்டால் தான் பேசலாம். என்ன சொல்கிறாய்?''

''முயற்சி செய்கிறேன்...''

''இது போதாது. எனக்கு உறுதிமொழி வேண்டும்...''

''டோன்ட் பீ ஸ்டுப்பிட் விவேக். உங்களிடம் அழவில்லை என்று சொல்லிவிட்டு நான் அழுதால் உங்களுக்கு எப்படித் தெரியும்? கேமரா செட் பண்ணி வைத்து இருக்கீங்களா?''

''கேமரா இல்லை பெண்ணே! கண்ணாடி வழியே லெப்ட்ல திரும்பி பாரு...'' என்று அவன் சவால் விட, அவள் அவசரமாக திரும்பி பார்த்தாள்.

''அங்கே பால்கனியில் ஈசி சேரில் சாய்ந்து அமர்ந்து கால்களைத் தூக்கி டீபாயில் போட்டபடி, கை அசைக்க அவள் அவசரமாக அறைக்குள் செல்ல முயல, அவன் சிரிப்பு அவளை தடுத்து நிறுத்தியது.

''இப்ப நீ தான் முட்டாள் மாதிரி அறைக்குள் ஓடுகிறாய். உன் உணர்வுகளை புரிந்து கொள்ள, உன்னைப் பார்க்க வேண்டும் என்ற அவசியம் எனக்கு இல்லை வானதி. உன் குரலில், உன் மூச்சுக் காற்றில், அவ்வளவு ஏன், உன் மௌனத்தில் கூட என்னால் உன் உணர்வுகளைப் புரிந்து கொள்ள முடியும். அங்கேயே உட்கார்...'' என்று அதட்டலாக அவன் சொல்ல அவன் குரலில்

இருந்த ஏதோ ஒன்று அவளை அங்கேயே அமர வைத்தது.

சில பெரிய மூச்சுக்களை எடுத்த பின்பு, ''தூத்துக்குடியில் அன்று விஜய்க்கு என்ன ஆனது? அங்கே நீங்க எப்படி வந்தீங்க? சொல்றீங்களா?'' என்று சாதாரணமாக விசாரிக்க வைத்தது.

''உனக்கு என்ன தெரியும்? நீ அதைச் சொல்லு மேற்கொண்டு விபரம் நான் சொல்கிறேன்...''

''துறைமுகத்தில் வேலை செய்த இரண்டு கூலி தொழிலாளிகள் இறந்து விட்டதால், அதை தொடர்ந்து நடந்த கலாட்டாவில், ஒரு வன்முறை கும்பலால் விஜய் தாக்கப்பட்டார் என்று தெரியும்'' என்றவளுக்கு குரல் தடுமாறியது.

''வானதி!'' என்று அவன் கண்டிப்பான குரலில் அதட்ட அவள் சமாளித்துக் கொண்டாள்.

''அந்தத் தொழிலாளர்கள் ஏன் இறந்தாங்க என்று தெரியாது. இறந்த தொழிலாளர்கள் அவர் நிறுவனத்தில் வேலை செய்யவில்லை என்றபோது இவரை ஏன் தாக்கினாங்க என்று தெரியாது. பட்ட பகலில் அவர் மீது தாக்குதல் நடந்த போது சுற்றிலும் இருந்தவர்கள் என்ன செய்தார்கள் என்று தெரியலை. அதுக்கும் மேலே என் விஜய் என்னை விட்டுவிட்டு எப்படிப் போனார் என்று தெரியலை'' என்று விம்மியவளால் தொடர முடியவில்லை.

''வானதி! கடந்த காலம் முடிந்து போனது. அதை மீண்டும் திருத்தி எழுத நமக்கு எந்த அதிகாரமும் இல்லை. வரும் காலத்தை சந்தோஷமாக மாற்றி



அமைக்க முயல்வது தான் புத்திசாலித்தனம். டி.வி.க்காக நான் நிறைய விசாரணை செய்து இருக்கிறேன். எனக்குத் தெரிந்த விஷயங்களை சொல்கிறேன்...'' என்று ஆரம்பிக்க அவனின் நினைவுகள் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு விஜயை சந்தித்த அந்த நாளுக்கு பயணம் செய்தது.

## 18

தூத்துக்குடிக்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வந்த காரணத்தைச் சொல்ல ஆரம்பித்த விவேக்கின் நினைவுகள், அந்த குறிப்பிட்ட நாளில் தன்னை வீட்டில் கண்டதும் மலர்ந்த விஜயின் முகம் நினைவில் வந்தது. அழைப்பு மணி அடிக்கும் ஓசை கேட்டு கதவைத் திறந்த விஜய், அங்கே விவேக்கைக் கண்டதும் இனிதாக அதிர்ந்தான்.

''அண்ணா! என்ன இந்நேரத்தில? சொல்லவே இல்லை.''

''உன்னிடம் முன்பே சொல்லி அப்பாயின்ட்மென்ட் வாங்கி விட்டு வரும் அளவுக்கு பெரிய ஆளாகி விட்டாயா விஜய்?''

''என்ன பேசறீங்க நீங்க? நான் இரண்டு நாட்களாக மதுரைக்குச் சென்று இருந்தேன். இப்ப தான் சில நிமிடங்கள் முன்பு தான் வீட்டுக்கு வந்தேன். நான் இல்லாத நேரம் நீங்க வந்து ஏமாறக் கூடாதே என்று தான் சொன்னேன்.''

"உன்னைப் பத்தி எனக்குத் தெரியாதா? கல்யாண தேதி வைத்த உடனே உன் முகத்தில் மாப்பிள்ளைகளை ஜொலிக்குது விஜய்."

"அதெல்லாம் இல்லைண்ணா. சும்மா கலாட்டா பண்ணாதீங்க. ஏற்கனவே சொல்லி இருக்கேனே? மதி, எங்க மாமா பொண்ணு. இப்ப தான் ரயிலில் வழி அனுப்பி விட்டு வருகிறேன்..."

"கல்யாணம் ஆவதற்கு முன்னால் தனியா உன்னைப் பார்க்க இங்கே வரைக்கும் வந்தாச்சா? மும்பை தான் மோசம் என்று நான் நினைத்துக் கொண்டு இருக்கிறேன். என்னடா இதெல்லாம்?"

"அண்ணா, ரெண்டு பேருமே ஒழுக்கமானவங்க. அவள் இங்கே வந்ததற்கு காரணமே வேறே..."

"மதியைப் பற்றி எனக்கு அவ்வளவா தெரியாது. ஆனால் உன்னைப் பற்றி எனக்கு நல்லா தெரியுமே? நீ சொல்வதை நான் நம்புகிறேன். உன்னுடைய மதி இங்கே எதற்கு வந்தாங்க என்று நான் ஒரு ஊகம் சொல்லட்டுமா? திருமணம் செய்து கொள்ள போகும் கணவன் மனைவியிடையே எந்த ரகசியமும் இருக்கக் கூடாது. ஈமெயில் ஐடி பாஸ்வேர்ட் உட்பட என்று இந்த உலகத்திற்கு எடுத்துக் காட்ட வந்தாங்க. கரெக்டா?" என்று கேலியாக விவேக் சொல்ல அவன் வாயைப் பிளந்தான்.

"அண்ணா! என்ன சொல்றீங்க...?"

"நான் சொல்றது இருக்கட்டும்? 'பேர்ட் ஹேட்ச் வீடியோ' எனக்கு மெயிலில் யார் அனுப்பியது?"



"மதி தான் அண்ணா! அது உங்களுக்கு எப்படி...?" என்று இழுத்தவன் அவசரமாக மொபைலில் அனுப்பிய மெயில்களை திறந்து பார்த்து விட்டு அசடு வழிந்தான்.

"அண்ணா சாரி. அப்பா நான் டிரைவ் பண்ணிட்டு இருந்தேன். நீங்க அவசரமா கேட்டதனால்..."

"இதுக்கு எதுக்கு சாரி? ஆனால் இனிமேல் மதியை உன் வேலையைச் செய்யச் சொல்லாதே..."

"ஏன்...?"

"நீ ஒவ்வொரு வேலையையும் கூடுதல் கவனத் துடன் செய்வாய். ஒரு தடவைக்கு நாலு தடவை செக் பண்ணுவாய். நல்லவேளை ஃபைலில் என்ன இருக்கு என்று நான் பார்த்து எடிட் பண்ணினேன். இல்லை என்றால் 'உங்க லவ் ஸ்டோரி' பாரத் தர்ஷன் தொலைக் காட்சியில் இந்தியா புல்லா ஒளிபரப்பாகி இருக்கும்" என்று கண் சிமிட்ட அவன் முகம் சிவந்தான்.

"என்னை கலாட்டா பண்ணினது போதும். என்ன சாப்பிடுறீங்க?"

"தமிழ்நாட்டுக்கு வந்த பிறகு தான். உன்னைப் பார்த்த பிறகு தான். ரத்த சம்பந்தம் இல்லாமலேயே இந்த மாதிரி உபசரிக்க முடியும் என்று தெரிந்து கொண்டேன் விஜய். முதலில் ஒரு நல்ல காபி" என்றதும் விஜய் அடுக் களைக்குள் செல்ல விவேக் பின் தொடர்ந்தான்.

"நைட் டின்னரும் இங்கே தானே அண்ணா?"

"இதென்ன கேள்வி? நான் தூத்துக்குடியில் இருந்து கிளம்பும் வரை இங்கே தான். அதுக்கு இன்னும் எத்தனை நாள் ஆகப் போகிறதோ?"

"எத்தனை நாள் ஆனாலும் நீங்க இங்கே இருக்கலாம். ஆனால் என்னால் ஒரு வாரத்திற்கு மேல் உங்களுடன் இருக்க முடியுமா தெரியலை. வேலையை ராஜினாமா பண்ணி விட்டேன்."

"கல்யாணத்தை ஒரு மாசத்தில் வைத்துக் கொண்டு வேலையை ராஜினாமா செய்கிறேன் என்கிறாய்."

"சொன்னால் நீங்க சிரிக்கக் கூடாது..."

"சிரிப்பு வந்தால் சிரிக்க தான் செய்வாங்க. நீ விஷயத்தைச் சொல்லு..."

"மதிக்கு சினிமாவில் பாட சான்ஸ் கிடைத்து இருக்கு. அத்துடன் அவள் மாமாவுக்கு ஒரே பெண் கல்யாணம் ஆகிய பின்பு, அவளை இங்கே வந்து இருக்க சொல்வது நியாயம் இல்லை. அதனால் எங்க அம்மா அப்பாவுக்கும் பயன் இல்லை. அத்தை மாமாவும் தனியா இருப்பாங்க. நான் சென்னைக்கு சென்று விட்டால் அவளின் இசை பயணமும் தொடரும். அத்தை மாமாவுக்கு ஆதரவா இருக்கும்" என்று விஜய் முடிக்க அவன் சப்தமாகச் சிரித்தான்.

"நீ நல்லவன் என்று தெரியும் விஜய். ஆனால் இவ்வ்வ்வளவு நல்லவன் என்று சத்தியமா தெரியாதுடா. ஒரே கல்லில் மூன்று மாங்காயா? நடத்து நடத்து."

"உங்களோடு பேசிட்டு இருந்தால் பொழுது போவதே தெரியாது. ஆன்ட்டி எப்படி இருக்காங்க. அண்ணா? பார்த்தீங்களா?"

"மும்பைக்கு போய் ஒரு வருடம் ஆகியும் தமிழ் நாட்டுக்கு வரவே இல்லை. உன்னைப் பார்க்காமல் கண்கள் பூத்து விட்டது. நீ நல்லா இருக்கிறாய் என்பதை கண்ணால் ஒரு முறை பார்த்துக் கொள்கிறேன் என்று நச்சரிக்க வர வச்சுட்டாங்க அம்மா. அங்கே இருந்து தான் வருகிறேன். நல்லா இருக்காங்க."



"அவங்க கவலை அவங்களுக்கு! அதென்ன இங்கே உடனே கிளம்பி வந்துட்டீங்க. அம்மா கூட இரண்டு நாள் இருந்து நல்லா விருந்து சாப்பாடு சாப்பிட்டு உடம்பை தேற்றிக் கொண்டு வந்து இருக்கலாம் இல்லை...?"

"உன்னை மாதிரி கம்பெனியில் வேலை செய்யறவங்க தான் பண்டிகைக்கு ஜாலியா லீவு எடுக்கலாம் விஜய். டி.வி. காரங்களுக்கு பண்டிகை நாள் என்றால் தான் கூடுதல் வேலை இருக்கும். இந்த கேசை பற்றி விசாரிச்சு நியூஸ் அப்டேட் கொடு. நடுவில் உங்க அம்மா அப்பாவைப் பார்த்துக்கோ என்று சொல்லிட்டார் எங்க எம்.டி." என்று விவேக் சொல்ல விஜயின் கண்ணில் ஒரு மின்னல் தோன்றி மறைந்தது.

"இக்கரைக்கு அக்கரை பச்சை. இன்னிக்கு ஆபீஸ் லீவு தான். என் வருங்கால மனைவியோடு ஒரு நாள் சந்தோஷமா தனியா செலவு பண்ண முடியலை அண்ணா. ஆனாலும் அவளை இங்கே இழுத்து அடித்து, இங்கே இருந்து ரயிலில் ஏற்றி அனுப்பி வைத்து இருக்கிறேன்..."

"மதிக்கு உன் மேலே ரொம்ப அன்பு என்று நினைக்கிறேன். ஹா! சொல்ல மறந்து விட்டேனே. வீடியோவில் குழந்தை மாதிரி கியூட்டா இருக்காங்க."

"நீங்க என்னை வா போ என்று பேசிட்டு, அவளை வாங்க போங்க என்று சொன்னால் சிரிப்பா வருது. சும்மா

ஒருமையில் பேசுங்க. வீடியோவில் காலையில் ஆறு மணிக்கு தூங்கி எழுந்து அப்படியே வந்து இருந்தாளே? அதையே கியூட் என்று சொன்னால், நேற்று கச்சேரியில் பார்த்து இருந்தால் என்ன சொல்லி இருப்பீங்களோ...?'' என்றபடி காபி கோப்பையை நீட்ட அவன் புன்னகை செய்தான்.

''அழகு அலங்காரத்தில் இல்லை விஜய். அதை விடு. கச்சேரி என்றால்?''

''அவள் கிளாசிகல் சிங்கர் அண்ணா! இப்ப திரைப் படத்தில் கூட பாட சான்ஸ் கிடைச்சு இருக்கு, அதான் கல்யாணம் முடிந்த பிறகு, அவள் சென்னையில் இருக்கட்டும் என்று நான் இங்கே என் வேலையை ராஜினாமா செய்கிறேன். சென்னைக்கு ஷிப்ட் ஆகி றேன்...''

''மதி இருக்கும் இடம் விஜய்க்கு அயோத்தியா? இவ்வளவு தூரம் உன் வேலைக்காக மதுரையில் இருந்து இங்கே வந்தாளே, அவங்களுக்கு என்ன பரிசு வாங்கிக் கொடுத்தாய்?'' என்று கேட்டதும் அவன் முகம் மலர்ந்தது.

''அதான் யோசித்துக் கொண்டு இருக்கிறேன். டிஜிட்டல் வாய்ஸ் ரெகார்டர் ரெகார்டிங் வசதியோடு வாங்கி தரலாம் என்று நினைத்தேன்.''

அவன் மனதிற்குள் விஜயுடன் நடத்திய சம்பாஷணை களை நினைவில் ஓட்டிக் கொண்டு இருக்க இங்கே வானதி பொறுமை இழந்து குரல் கொடுத்தாள்.

''ஹலோ விவேக்! என்ன ஆச்சு சத்தமே காணோம்? லைன் கட் ஆகிடுச்சா?''



''சாரி, நான் விஜயுடன் அன்று பேசியதை நினைத்துக் கொண்டு இருந்தேன். எனக்கே இப்ப சங்கடமா தான் இருக்கு. அவன் உன்னை அவ்வளவு நேசித்தான். அவனுடைய ஒவ்வொரு அசைவிலும் அது தெரிந்தது...''

''எனக்குத் தெரிந்த விஷயத்தைத் திருப்பிச் சொல்ல வேண்டாம் விவேக். தெரியாத விஷயமா சொல்லுங்க.''

''தெரியாத விஷயமா? நீ தூத்துக்குடியில் இருந்து கிளம்பிய அன்று மாலை நானும் விஜயும் உனக்கு பரிசு வாங்கப் போனது பற்றி தெரியுமா?''

''தெரியும்'' என்று உடனே சொன்னதும் அதிர்ந்தான் விவேக்.

''தெரியுமா? எப்படி தெரியும்? என்ன தெரியும்?''

''உன்னுடைய எதிர்கால இசை பயணத்துக்கு துணையா வர என் சார்பில் சின்ன பரிசு வாங்கி இருக்கேன். இதில் பாட்டு பாடி நீ பதிவு பண்ணனும். அதை நான் என் வாழ்நாள் முழுவதும் கேட்டுக்கிட்டே இருக்கணும் என்று கடையை விட்டு வெளியே வந்ததும் மெசேஜ் அனுப்பி இருந்தார்'' என்றதும், ''அவ்வளவு தானே?'' என்று ஆசுவாசப் பெருமூச்சை வெளியிட் டான்.

''நீங்க அங்கே எதற்கு வந்தீங்க என்று சொல்லவே இல்லை. ஹாஸ்பிடலில் என்ன நடந்தது சொல்லுங்க.''

''நான் அங்கே செல்வதற்கு மூன்று நாட்கள் முன்பு, பிலிப்பைன்ஸ் நாட்டில் இருந்து மரங்களை ஏற்றி வந்த கப்பல் ஒன்று, குஜராத் மாநிலத்திற்குச் செல்லும் வழியில், அந்த மரங்களின் ஒரு பகுதியை தூத்துக் குடியில் இருந்த ஒரு நிறுவனத்திற்கு இறக்கி வைக்க

வேண்டும். அந்தப் பணியில் ஈடுபட்டு இருந்த இரண்டு கூலித் தொழிலாளிகள் எதிர்பாராமல் இறந்து விட் டார்கள்..."

"அந்த கம்பெனியில் விஜய் வேலை செய்ய லையே?"

"தெரியும். அந்த சந்தேகத்திற்கு இடமான மரணங்கள் குறித்து விசாரித்து தொலைக்காட்சிக்கு தகவல் சொல்ல நான் அங்கே வந்தேன்."

"அது விபத்து இல்லையா?"

"அவர்கள் லோடு இறக்கிய அந்த மரம் பூச்சி அரிக்காமல் தடுப்பதற்காக அதன் மீது தெளிக்கப்பட்டு இருந்த ரசாயன மருந்தை அளவுக்கு அதிகமாக சுவா சித்ததால், மயக்கமடைந்து கீழே விழுந்து விட்டனர். அவர்களுக்கு தலையில் அடிபட்டு இரத்த சேதம் ஆகி, மருத்துவமனைக்குச் செல்வதற்கு முன்பே இறந்து விட்டனர்..."

"இது விபத்து இல்லாமல் அப்பாவி தொழிலாளர்கள் இருவரை கொல்ல திட்டமிட்ட சதி என்று சொல்வீங் களா?"

"மேலாகப் பார்த்தால் விபத்து மாதிரி தெரியும் வானதி. ஆனால் விசாரித்ததில் பல விஷயங்கள் தெரிய வரும். முதலில் இந்த கூலித் தொழிலாளர்களை நியமித்த நிறுவனம் போதுமான பாதுகாப்பு ஏற்பாடு களைச் செய்யவில்லை. இத்தகைய கட்டைகளை தொடுவதற்கு தேவையான முகமூடிகளோ கையுறை களோ வழங்கவில்லை. அது அந்த நிறுவனத்தின் தப்பு..."



"ஒருவேளை வழங்கி அவர்கள் அணியாமல் இருந்து இருக்கலாமே?"

"அப்படி அணியாமல் வந்து இருந்தால் அதையும் கண்காணிக்க வேண்டியது அவர்களின் பொறுப்பு தானே? அதில் கோட்டை விட்டது ஏன்? அதிகார வர்க் கத்திற்கும், அரசியல்வாதிகளுக்கும் கோடிக் கணக்கில் செலவு செய்பவர்கள், தொழிலாளர்களின் பாதுகாப்பிற் காக சில லட்சங்கள் செலவழிக்க கணக்கு பார்ப்பார்கள். பண பிசாசுகள்..."

"இப்படி எல்லாம் கூட நடக்குமா?"

"தொழில் நிறுவனங்கள் முக்கால் வாசி இப்படி தான் நடக்கிறது. அந்த கட்டைகளை ஏற்றி அனுப்பினவன் என்ன ஒழுங்கு? தடை செய்யப்பட்ட ரசாயனங்களை மலிவு விலை என்ற காரணத்திற்காகப் பயன்படுத்தி இருக்கிறான். இவற்றை எப்படிக் கையாள வேண்டும் என்ற கையேடுகளோ குறிப்போ, அந்த லோடில் இல்லை. இதுவும் சட்டப்படி தப்பு தான். அவர்களுக்கு இழப்பீட்டு தொகையாவது கிடைத்ததா என்றால் அதுவும் இல்லை. அவர்கள் நிறுவனத்தால் சேர்க்கப் பட்ட வர்கள் இல்லை என்று நிறுவனம் கை விரித்து விட்டது. பணிக்கு அமர்த்திய காண்ட்ராக்டரும் சில ஆயிரங்கள் மட்டுமே தர முன் வந்தார். இது தொழிலாளர்களுக்கு இடையே கொந்தளிப்பை ஏற்படுத்தி விட்டது."

"விவேக், தலையைச் சுற்றி மூக்கைத் தொடாமல், நேரடியாக விஜய்க்கும் இந்த கேசுக்கும் என்ன சம்பந்தம் என்று சொல்கிறீர்களா?" என்றவள் குரலில் பதட்டம் கூடி இதயம் வேகமாகத் துடிக்க ஆரம்பித்தது.

''இந்த நிறுவனத்தில் இப்படி நடக்கிறது என்று எனக்குத் தகவல் கொடுத்ததே விஜய் தான். விஜய்க்கு தேவை இல்லாத விஷயம். அவனால் அப்படி இருக்க முடியவில்லை. அவனை குறை சொல்ல ஒன்றும் இல்லை. அது தான் விஜயின் இயல்பு. அவனால் தான் நான் இன்று உயிரோடு உன் முன்னால் நின்று பேசிக் கொண்டு இருக்கிறேன் என்ற போது அவனை எப்படிக் குறை சொல்ல முடியும்?'' என்று பேசிக் கொண்டே போனவன் எதிர்முனையில் சப்தம் இல்லை என்பதை தாமதமாக உணர்ந்தான்.

''வானதி... வானதி... வான்மதி... என்ன ஆச்சு?'' என்ற பதறிய குரலுக்கும் அவளிடம் பதில் இல்லை. அவள் அழும் சப்தம் கூடக் கேட்கவில்லை. மயங்கி விட்டாளோ என்ற சந்தேகம் வந்தது. வினாடியில் துள்ளிக் குதித்து எழுந்தவன் வீட்டில் கதவை போகிற போக்கில் அடித்துச் சாத்தி விட்டு, ஓட்டமாக ஓடி வானதியின் வீட்டு அழைப்பு மணியை அழுத்த அவனுக்கு இரண்டு நிமிடங்கள் மட்டுமே பிடித்து இருந்தது.

## 19

அழைப்பு மணியை விடாமல் ஒரு விரலால் அழுத்திய விவேக், பொறுமை இன்றி கதவையும் வேகமாகத் தட்ட, திடுக்கிட்டு எழுந்த கஸ்தூரி, வேகமாக அறையில் இருந்து வெளியே வந்து பதட்டமாக கதவைத் திறந்தார்.



''என்ன ஆச்சு விவேக்? எதுக்கு இவ்வளவு அவசரம்?''

''தண்ணி எடுத்துட்டு வாங்க ஆன்ட்டி. மேலே வானதி மயங்கி விட்டாள் என்று நினைக்கிறேன்...''

''வீட்டிலேயே இருக்கும் எனக்குத் தெரியாமல் அடுத்த பிளாக்கில் உள்ள பிளாட்டில் வசிக்கும் உனக்கு எப்படி அது தெரியும் என்று அவர் நினைத்த கேள்வி வெளியே வரும் முன்பே அவன் மாடிக்குச் சென்று இருந்தான். அறையில் இருந்த தண்ணீர் குவளையுடன் பால்கனிக்கு வந்தவன், அவளின் முகத்தில் தண்ணீரை தெளிக்க, லேசாக அசைந்தாள்.

கன்னத்தில் லேசாகத் தட்டி, 'வானதி...' என்று மீண்டும் மீண்டும் அழைக்க, 'ம்ம்ம்...' என்று மெதுவாக முனகியபடி அவள் கண்களைத் திறந்தாள்.

அவள் கண் விழித்துப் பார்க்கும்போது பதட்டத்துடன் இருந்த விவேக்கின் முகமே வெகு அருகில் தெரிய, கண்களை மீண்டும் மூடியவள் தலை அவன் மார்பில் சாய்ந்து இருந்தது. அவள் கண்களை விழித்து பார்த்ததோடு மட்டும் இல்லாமல், தன் பிடியில் இருந்து விலகவில்லை என்பதே அவன் மனதை குளிர்விக்க, மீண்டும் பெயரைச் சொல்லி மென்மையாக அழைத்தான்.

''நீங்க எப்படி இங்கே வந்தீங்க...?'' என்று அவள் பலவீனமான குரலில் விசாரிக்கும்போது கஸ்தூரி உள்ளே நுழைந்தார்.

''வானதி, மயக்கமா இருந்தால் டாக்டரிடம் போயிட்டு வரலாமா?'' என்ற கஸ்தூரியின் கோரிக்கை முடியும் முன்பே மகளிடம் இருந்து மறுப்பு வந்தது.

''இல்லைம்மா. எனக்கு இப்ப மயக்கம் இல்லை. உங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்றால் நான் விவேக்குடன் கொஞ்ச நேரம் பேசணும்...'' என்று சொன்ன மகளை வியப்புடன் பார்த்தார். அதை வெளிக் காட்டாமல் தலை அசைத்து விட்டு மௌனமாக வெளியேறினார் கஸ்தூரி.

''விஜய் தான் உங்களை தூத்துக்குடிக்கு. இந்த கேசை விசாரிக்க என்று வர சொன்னதா? ஆனால் நாங்க தூத் துக்குடிக்கு வரும் போது நீங்க அங்கே வருவதா விவேக் சொல்லவே இல்லையே? நீங்க மும்பையில் இருப்ப தாகத் தானே என்னை மெயில் அனுப்பச் சொன்னார்?''

''பொய் சொல்ல வேண்டிய அவசியம் எனக்கு இல்லை. நான் சொல்வது எல்லாம் உண்மை வானதி...''

''அப்படி இல்லை...'' என்று ஆரம்பித்தவளை கை காட்டி தடுத்தான்.

''நான் கிறிஸ்துமஸ் முதல் புத்தாண்டு வரை விடுப்பு கேட்டு இருந்தேன். அதை முடித்து விட்டு, விசாரணை யில், இறங்கலாம் என்று ஒரு வாரம் கழித்து வருவதாக அவனிடம் சொல்லி இருந்தேன். ஆனால் எங்க எம்.டி. யிடம் விடுப்புக் கேட்கும் போது, இந்த விஷயத்தையும் சொன்னேன். பத்திரிகைகாரனுக்கு வேலை விடுப்பு இரண்டும் வேறு வேறு இல்லை. ரெண்டையும் முடித்து விட்டு வந்து சேர் என்றார். இவ்வளவு ஸ்கோப் உள்ள இந்த நியூசை சூட்டோடு சூடாகச் செய்ய வேண்டும் என்று சொல்லவே உடனே கிளம்பி வந்து சேர்ந்தேன்...''

''அந்த ட்ரிப்பில் நீங்க விஜயுடன் வீட்டில் தங்க வில்லையா?''



''விஜயுடன் தான் தங்கி இருந்தேன். ஷாப்பிங் முடித்துவிட்டு இருவருமே வீட்டுக்கு தான் சென்றோம். நைட் வெகு நேரம் பேசிட்டு இருந்தோம். அப்ப துறை முக தொழில் பற்றி, வெளியே தெரியாத விஷயங்கள் சொன்னான். அவன் பேர் வெளியே வராமல் நானாகக் கண்டு பிடிப்பது மாதிரி இருக்கட்டும், என்று அவன் சொல்லியது. இந்த தகவல்கள் எல்லாம்...''

''மீடியா காரங்களுக்கு பாதுகாப்பு அதிகம் என்று நினைத்துச் சொல்லி இருக்கலாம். ஆனால் அதுவே அவருக்கு எமனாகக் கூடும் என்று எதிர்பார்த்து இருக்க மாட்டார்...'' என்று சொல்லும் போதே அவளின் குரல் தடுமாறி, கண்களில் அருவி கொட்ட ஆரம்பித்தது.

''ஷ்! வானதி, இப்படி நீ உடைந்து அழுதால், நான் சொல்ல வருவதைச் சொல்ல முடியாது. அன்று இந்த கொடூரமான விஷயங்கள் மட்டும் இல்லை, மனதுக்கு இனிமை தரக்கூடிய எத்தனையோ நல்ல விஷயங்களும் பேசினோம் தெரியுமோ? எப்போதும் வாழ்வில் நடந்த நல்ல விஷயங்களை மறக்கவே கூடாது'' என்று அதட்டலாகச் சொல்லி, அவளின் முகத்தைத் துடைத்து விட்டான்.

''அன்று தான் உன்னைப் பற்றி நிறைய தெரிந்து கொண்டேன் உன் இசை வாழ்க்கை பற்றிச் சொன்னான். சென்னைக்கு அவன் இடம் பெயரப் போவதைப் பற்றிச் சொன்னான். உன் பெற்றோர்களைப் பார்த்துக் கொள்ள வேண்டிய அவசியம் பற்றிச் சொன்னான். உனக்கு சர்ப்ரைஸ் பரிசு கொடுக்க வாய்ஸ் ரெகார்டர் வாங்கி னான்.''

''என்ன சர்ப்ரைஸ்...?''

''அதை நான் சொன்னால் அவ்வளவு நல்லா இருக்காது வானதி. நீயே கேட்டு தெரிந்து கொள். நான் ஓடி வந்த அவசரத்தில் எடுத்து வரவில்லை. காலையில் டி.வி. நிலையத்திற்குச் செல்வதற்கு முன் வந்து நேரில் தருகிறேன்.''

''நீங்க என்ன சொன்னாலும் சரி, அந்த வாய்ஸ் ரெகார்டரை என்னால் பயன்படுத்த முடியவே முடியாது.''

''அதில் உனக்கு ஒரு செய்தி இருக்கிறது. என்ன செய்தி என்று தெரிந்து கொள்ளக் கூட அதைக் கேட்கக் கூட மாட்டாயா? அது தான் அவனின் கடைசிப் பேச்சு என்று தெரியாமலேயே அதை பதிவு பண்ணியதே நான் தான்'' என்றவன் குரலும் நடுங்கவே செய்தது.

அவன் நடுங்கிய குரலும், 'அவனது கடைசி பேச்சு' என்ற விவேக்கின் வாசகமும் சேர்ந்து அவளை வெடிக்க வைத்தது. இரண்டு ஆண்டுகளாக மனதிற்குள் வெளியே காட்டாமல், பொத்திப் பொத்தி வைத்து இருந்த ஆதங்கமும் சோகமும் கோபமாக மாறி வெடித்தது.

''பதிவு பண்ணிவிட்டு அவருக்கு ஒரு ஆபத்து வரும்போது அவரைக் காப்பாற்றக்கூட இல்லாமல் நீங்க எங்கே போயிட்டீங்க...?'' என்று ஆவேசமாக அவன் சட்டையைப் பிடித்து வேகமாக உலுக்கியவளின் கண்களில் இருந்து கண்ணீர் வழிய ஆரம்பிக்க, தோளில் சாய்த்து தலையை வருடிக் கொடுத்தான்.

அதுவரை தன் அழுகையை அடக்கி வைத்து இருந்தவள், அந்த அணைப்பில் தலை கோதலில் உடைந்து விம்மி சப்தமாக அரற்ற ஆரம்பித்தாள்!



''அவரை தனியா விட்டுட்டு எங்கே போயிட்டீங்க? நெருங்கிய நண்பன் என்று வாயால் சொன்னால் ஆச்சா? தோழன் என்றால் உயிர் கொடுக்க வேண்டாம். ஆனால் அவன் உயிருக்கு ஒரு ஆபத்து என்று வரும் போது அதை விளைவிப்பவர்களை விரட்டி அடிக்க கூடத் தோன்றாதா?''

''ஷ்! மதி.. இரண்டு வருஷம் கழித்து விட்டது எதுக்கு இந்த அழுகை?''

''இரண்டு வருஷம் ஆனால் விஜயை நான் மறந்து விடணுமா? என் விஜயை என்னால் மறக்க முடியுமா?'' என்று வேகமாக அதட்டியவளுக்கு தன் குரல், உணர்ச்சி வேகத்தில் அந்த இரவு நேரத்தில் உயர்ந்து ஒலிப்பதை உணரும் நிலையில் கூட இல்லை.

''வானதி! அழுது புரண்டாலும் மாண்டார் மீள்வது இல்லை என்பது தெரியாதா?''

''இன்னிக்கும் என் கூடவே இருக்க மாதிரி தானே இருக்கு. எனக்குப் பார்த்துப் பார்த்து, ஒவ்வொரு வேலையும் செய்தாரே? குடிக்க டீ போட்டு, ரயிலில் சாப்பிட சாப்பாடு, தண்ணி பாட்டில் வாங்கிக் கொடுத்து, என்னை தனியே அனுப்ப முடியாது என்று கண்ணில் கண்ணீர் விடாத குறையாக கெஞ்சிக் கொஞ்சிக் கொண்டு இருந்த ஒரு மனிதனை இரண்டு நாளில் மூளை சாவு அடைந்தான் என்று காட்டினால் அதை எப்படி என்னால் நம்ப முடியும்?'' என்று கதறி அழுதவளை தன்னோடு சேர்த்து இருக்க அணைத்துக் கொண்டான் விவேக்.

''வானதி... அழாதே! இரண்டு வருடம் முன்பு கூட நீ வாய் விட்டு அழலை என்று அம்மா சொன்னாங்களே? இப்ப எதுக்குடா இப்படி அழுகிறாய்?''

''அழாமல் என்ன செய்யச் சொல்றீங்க? சாகும் வயசா அவருக்கு...? நான் பார்த்த அன்பே உருவாக இருந்த ஒரு மனிதனைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறேன் என்று கனவு கண்டு கொண்டு இருந்த என்னிடம் அவர் இனிமேல் உனக்கு இல்லை என்று சொன்னால் எப்படி என்னால் நம்ப முடியும்?'' என்றவளின் கண்களில் அருவி பெருக அவன் பதறினான்.

''உன் கண்ணில் இருந்து ஒரு சொட்டு கண்ணீர் வரக்கூடாது என்று ஒரு ராத்திரியில் ஓராயிரம் தடவை சொன்னவன் குரல் இன்னும் என் காதில் ஒலிக்குதே? இப்ப நீ இப்படி கதறி கரைவதைப் பார்த்தால் அவன் மனம் தாங்குமா? தயவு செய்து அழுகையை கண்ட்ரோல் பண்ணிக்கோ'' அவனை மீறி இன்னும் ஏதேதோ பேச முயன்றவளின் தலையைத் தன் மார்பில் வைத்து அழுத்தினான்.

''நீ எதுவும் பேச வேண்டாம். உனக்கு ஏற்கனவே சொல்லியது தான். உன் உயிர் உன்னை விட்டு எங்கேயும் போகலை. இங்கே தான் இருக்கு அழக்கூடாது. மதி, விஜய் இறந்து விட்டான் என்று நிஜமாவே நினைக்கிறாயா? இல்லை, அவன் இதயம் இன்னும் துடித்துக் கொண்டு இருக்கிறது.''

'விஜயின் இதயம் அங்கே துடித்துக் கொண்டு இருக்கிறது...' என்ற விவேக்கின் வார்த்தை அவளுக்குள் ஏதேதோ மாயம் செய்தது. அதுவரை பொங்கிய



கண்ணீரும், விவேக் பேசுவதே அவள் காதுகளைத் தாண்டி உள்ளே செல்லாத நிலையும் அடியோடு மாறியது.

''விஜய் என்ற ஒரு மனிதன், ஆறு பேரின் உடலில் சிரஞ்சீவியாக வாழ்ந்து கொண்டு இருக்கிறான். இது பெருமைப்பட வேண்டிய விஷயம் மதி...'' என்ற அவனின் ஆறுதல் வார்த்தைகள் அவள் காதில் விழுந்து பெரிய கேவல் ஒன்று எழுந்தது.

''இந்த பெருமை நிகழக் காரணம் நீ. நீதான் உறுப்பு தானம் குறித்து அவனுக்கு சொன்னாயாம்! உன்னால் தான் ஆறு உயிர்கள் உடல் தானம் பெற்று வாழ்ந்து வருகின்றன...'' என்று சமாதானம் சொல்லியபடி, விம்மலுடன் கதறிக் கரைந்தவளின் தலையை வருட அவளின் அழுகை அழுகை கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து விசும்பலாக மாறியது.

பல நிமிடங்கள் அந்த ஆதரவான அணைப்பில் அமைதியாக இருந்தவள் விலக முயன்ற போதும் அவன் விடவில்லை.

''அப்படியே இரு வானதி. இரண்டு நாட்கள் முழுசாக இரவும் பகலும் நான் விஜயுடன் தான் கூடவே இருந்தேன் வானதி. வெட்டியாக ஹோட்டல் ரூமுக்கு ஏன் வாடகை செலுத்த வேண்டும் என்ற எண்ணத்தில், அறையைக் காலி செய்து விட்டு வருகிறேன் என்று கிளம்பினேன். மிஞ்சி மிஞ்சிப் போனால் ஒரு மணி நேரம் தான் அங்கே இல்லை. ஆனால் அதற்குள்...'' என்று ஆரம்பித்தவனால் மேலே பேச்சைத் தொடர முடியவில்லை.

# 20

விஜய்க்கு ஒரு ஆபத்து வரும் சூழ்நிலையில் அவனைத் தனியாக விட்டு விட்டு நான் போக வேண்டும் என்று நினைக்கவில்லை வானதி. ஒரு மணி நேரத்தில் திரும்பி வந்து விடலாம் என்று எண்ணி ஹோட்டல் அறைக்குச் சென்றேன். அங்கே அறையைக் காலி செய்ய கூடுதல் நேரமாகி விட்டது. அதற்குள் என்னென்னவோ நடந்து விட்டது என்று பெருமூச் செரிந்தான் விவேக்.

''விஜயைக் கொலை பண்ணும் அளவுக்கு அவர் களுக்கு வெறி வந்ததற்கு என்ன காரணம்? அவருக்கும் அந்த நிறுவனத்துக்கும் நேரடி தொடர்பு கூட இல் லையே?''

''நேரடி தொடர்பு இல்லை தான். ஆனால், அந்த இரண்டு நாட்களில் துறைமுக தொழிலில் நடைபெறும் நிழல் வியாபாரங்களை கவனித்து முதலாளிகளின் முகமூடியைக் கிழிக்க, நாங்க இருவரும் தூத்துக்குடி மருத்துவமனை, வருமான வரி அலுவலகம், தணிகைக யாளர் அலுவலகம், அவர்கள் அலுவலகத்திலேயே சில ஆவணங்கள், என்று ஆதாரங்களைத் தேடி தொலை காட்சியில் செய்தி வெளியிட ஏற்பாடு செய்து இருந் தோம்.''



''இரண்டே நாளில் அவ்வளவு ஆதாரங்கள் எப்படி கிடைத்தது?''

''சதீஷ் அங்கே அப்போ தான் ஏ.சி.பி.யாக சேர்ந்து இருந்தான் இளரத்தம். துடிப்பாக சாதிக்க வேண்டும் என்று வேலையில் சேர்ந்ததால், உடனுக்குடன் நட வடிக்கை மேற்கொள்ளப்பட்டது. காவல் துறை தொலைக் காட்சி நிருபர். ஆதாரங்கள் எங்கே என்ன உருவில் இருக்கு என்று விஜய் ஆராய்ந்து வைத்து இருந்த விபரங்கள் எல்லாம் சேர, இரண்டே நாட்களில் அவர்களின் ஆணிவேர் ஆட்டம் கண்டு விட்டது.''

''ஒரே நேரத்தில், வருமானவரி அலுவலர்களின் தலையீடு, தொழிலாளர் நலத் துறையின் விளக்கம் கோரும் அறிவிப்பு, அவர்களின் பக்கம் நிழலாக நின்ற அரசியல்வாதிகளின் கைவிரிப்பு, மறுபக்கம் உயிரிழந்த தொழிலாளர்களின் சார்பாக நஷ்ட ஈடு வழங்க கோரிய போராட்டம் என்று நான்கு பக்கத்தில் இருந்தும் முத லாளிகளுக்கு நெருக்குதல் வர எப்படி சமாளிப்பது என்பது தெரியாமல் திணறிப் போனார்கள்.''

''தனக்கு பண நஷ்டம் வந்தால் யாரை வேண்டு மானாலும் கொலை செய்து விடுவார்களா? இவர்கள் எல்லாம் மனிதர்கள் தானா?''

''உன் கேள்வி சரி தான்! அவர்கள் மனிதர்களே அல்ல. மனித உருவத்தில் இருக்கும் மனசாட்சியே இல்லாத மிருகங்கள் வானதி, அவர்களின் பிரச்னைக்கு காரணம் நாங்கள் இருவரும் தான் என்பதைக் கண்டு பிடிக்க அவர்களுக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை. இருவரையும் தீர்த்துக் கட்ட கூலிப் படையை ஏவி விட்டு இருக்க வேண்டும்.''

"போலீசில் உங்க ப்ரெண்ட். பத்திரிகை துறையில் நீங்க, என்று இரண்டு பேர் இருந்தும் அவரைக் காப் பாற்ற முடியவில்லை தானே?" என்றவளின் குரலில் பொருமல், ஆற்றாமை, அழுகை எல்லாமே இருந்தது.

"நான் இதற்கு என்ன பதில் சொல்வது? எங்களுக்கு நாலு பேரைத் தெரிந்து இருந்தால், அவர்களின் பணத்திற்கு நானூறு பேரை தெரிந்து வைத்து இருந்தது. பணம் பாதாளம் வரை பாயும் வானதி. அவன் தனியாக மாட்டிக் கொண்டது எனக்கும் அதிர்ச்சி தான். ஆனால் நான் இருந்தாலும் பெரிதாக எதுவும் சாதித்து இருக்க முடியுமா என்று தெரியவில்லை. ஆறு வயதில் இருதயக் கோளாறு இருக்கு என்று கண்டு பிடித்து இருந்தனர். அதிகம் வெயிட் தூக்கக் கூடாது. வேகமாக நடக்கக் கூடாது. வியர்க்கக் கூடாது. மூச்சு வாங்கும்படி வேலை செய்யக் கூடாது என்று ஏகப்பட்ட கட்டுப் பாடுகள் உண்டு. போன் பண்ணி உதவி கோரி இருக்க லாமே தவிர வேறு எதுவும் என்னால் செய்து இருக்க முடியாது வானதி..."

"ஆறு வயசில் இருந்து உங்களுக்கு இந்த பிரச்னை இருக்கிறது என்றால், அங்கே... அது தீவிரமடையக் காரணம்...?"

"தூத்துக்குடியில், இரத்த வெள்ளத்தில், தலையில் அடிபட்டு கிடந்த விஜயை அங்கே பார்த்த வினாடியில் என் இதயம் துடிப்பதை நிறுத்தி இருக்க வேண்டும் வானதி..." என்று சொல்லிவிட்டு அவன் சோபாவில் சரிந்து அமர்ந்து கண்களை மூடிக் கொள்ள, அந்த பாவனையை பார்த்தவளின் திகைப்பும் வருத்தமும் கூடியது.



"விவேக்..." என்று அழைத்தபடி, மென்மையாக அவனின் கையைப் பற்றி அழுந்த அவன் திடுக்கிட்டு கண் விழித்து அவளை வியப்புடன் பார்த்தான். அது வரை இருந்த மன அழுத்தம் பெரிதும் விலகி முகம் மலர்ந்தது. முதல் முறையாக அவளாக தன்னைத் தொடுகிறாள்!

"வானதி, உனக்குத் தெரியுமா? ஸ்ட்ரெயின் பண்ணிக் கொண்டால், இதயம் தன் வேலையை நிறுத்தி விடும் அபாயம் உண்டு. சாதாரணமாக இருந்தால் கால் வரை யின்றி பிரச்னை வர வாய்ப்பே இல்லை. நீங்க எவ்வளவு இலகுவாக வாழ்க்கையை எடுத்துக் கொள்கிறீர்கள் என் பதைப் பொறுத்ததே உங்கள் ஆயுள் என்று அம்மாவிடம் டாக்டர் சொல்லி விட்டார். அதனாலேயே அம்மா என் னைத் தனியாக மும்பைக்கு அனுப்ப ரொம்ப யோசித் தார்கள்."

அவனின் தெளிந்த முகமும், பேச்சும் வித்தியாசத்தை உணர்த்தினாலும், அதை என்ன என்று அவளால் இனம் கண்டறிய முடியவில்லை. ஒரு விதத்தில் அவனின் உற்சாகமான பேச்சு மனதின் காயத்துக்கு மருந்தாக அமைந்தது என்பதையும் அவளால் மறுக்க முடிய வில்லை.

"ஆனால் நான் பிடிவாதம் பிடித்தேன். இப்படியே என்னைப் பொத்திப் பொத்தி உங்கள் முந்தானைக்குள் முடிந்து வைத்து இருக்கப் போகிறீர்களா? ஆறிலும் சாவு நூறிலும் சாவு என்று கேள்விப் பட்டதில்லையா? மூன்று ஆண்டுகள் கழித்து திருமணம் செய்து கொள் வேன் என்ற காரட்டை முன்னிறுத்தி, மும்பை

வேலைக்கு அம்மாவிடம் சம்மதம் வாங்கினேன். இயல்பான வாழ்க்கை வாழ்ந்து இருந்தால் என் பிரச்னை வெளியே தெரியாமலேயே இருக்கக் கூடும். ஆனால் அங்கே விஜய்க்கு நேர்ந்த துன்பம் என் எதிரிக்கும் நிகழக் கூடாது'' என்றவன் குரல் தடுமாறியது.

''எனக்கு அங்கே விஜய் வீட்டிற்குள் நுழைந்தது தான் நினைவில் இருக்கு. அதன் பிறகு நடந்தது எதுவுமே எனக்குத் தெரியாது. அம்மா சொன்னது தான்...'' தன் கைப்பிடியில் இருந்த அவளின் கையை எடுத்து தன் கன்னத்தில் வைத்து அழுத்தி, அவளை நேராகப் பார்த்தான்.

''விஜயின் வீட்டிற்குள் அடியாட்கள் நுழைந்ததைப் பார்த்த அருகில் வசிப்பவர்கள் காவல் துறைக்கு சொல்லி இருக்க வேண்டும். நான்கு பேர் ஆயுதங் களுடன் வந்து பின்னால் இருந்து தாக்கி இருக்க வேண்டும். விஜயை மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் போதே அவனுக்கு நினைவில்லை'' என்று சொல்லும்போதே வான்மதியின் வேகமான விலகல் அவனை மேலே பேச விடாமல் தடுத்தது.

''இன்று எல்லாவற்றையும் முடித்து விடுகிறேன் வான்மதி. கொஞ்சம் சிரமமாக இருந்தாலும் தள்ளிப் போட வேண்டாம். நாளைய பொழுது, நம் வாழ்வில் புது விடியலாக வரவேண்டும்'' என்று சொல்லிய விவேக்கும் பின்னால் வந்து அவளின் அருகே நின்றான்.

''தலையில் பலமான அடி பட்டதால், 'He was declared Brain dead', ஏற்கனவே அவன் உறுப்பு தானம்



செய்ய சம்மதித்து எழுதிக் கொடுத்து இருந்ததால் பிருந்தா ஆன்ட்டியிடம் சம்மதம் கேட்டாங்க. ஆன்ட்டி உன்னிடம் கேட்க சொல்ல உங்க அப்பா உன்னிடம் வந்தாங்க. உனக்கு நினைவிருக்கா?'' என்று கேட்க அவள் மறுப்பாக தலை அசைத்தாள்.

''உங்க அப்பா கேட்டது உன் காதுகளைத் தாண்டி உள்ளே போனதாகவே தெரியவில்லை. பிருந்தா ஆன்ட்டியும், உங்க அம்மாவும் வந்து உன்னைப் பார்த் தார்களே தவிர, இருவராலும் உன் முகத்தைப் பார்த்து ஒரு வார்த்தை கூடப் பேச முடியவில்லை. கடைசியா அம்மா வந்து தான் உன்னிடம் சம்மதம் வாங்கி இருக்காங்க. அப்ப நீங்க என்ன பேசினீங்க என்று சதீஷ் என்னிடம் சொன்னான்...''

''சதீஷ்... டீ சி பி... அடையாறா?''

''ஆமா! அப்ப தான் சர்வீசுக்கு வந்த முதல் போஸ்டிங் அவனுக்கு. அங்கே ரொம்ப நல்ல பேர் அவனுக்கு. தூத்துக்குடி துறைமுக ஆக்சிடெண்ட் கேசில், தொழிலாளர்களுக்கு சாதகமா, எங்களுக்கும் நிறைய உதவி செய்தது அவன் தான். அப்ப தான் பழக்கம். நான் மும்பையில் வேலை செய்கிறேன் என்பதும், டி.வி. துறையில் இருக்கிறேன் என்பதும், ஆரம்ப கால அறி முகத்திற்கு உதவியது. அவன் தான் அம்மா பேசிய தையும் உன் ரியாக்ஷனையும் சொன்னான்...'' என்று இடைவெளி விட்டான்.

''எங்க அம்மா உன்னிடம் எனக்காக மடி ஏந்தினார்கள். இந்த இருபத்தி எட்டு ஆண்டுகளில் எங்க அம்மா கலங்கி கண்ணீர் விட்டு நான் பார்த்ததே இல்லை.

எப்போதும் தைரியமா இருப்பாங்க. கலகலப்பாகப்பேசி, என்னையும் எங்க அப்பாவையுமே வீட்டில் தேற்றுவது எங்க அம்மா தான். அவங்களே விஜயையும் என்னையும் அடுத்தடுத்த படுக்கையில் நினைவில்லாமல் படுக்க வைத்து இருப்பதைப் பார்க்க ஆடிப் போய்ட்டாங்க என்று சதீஷ் சொன்னான்.''

''இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் மட்டும் இல்லை... இப்பவும் இந்த நிமிடமும் என்னால் அதை... நம்ப முடியவில்லை தான். ஆனால்... அன்று... உங்க அம்மா... என்னிடம் வந்து... பேசியது... இன்னும்... என்னால்... மறக்க முடியவில்லை...'' என்று துண்டு துண்டாக வார்த்தைகள் சிதற சொன்னவளின் குரல் உணர்ச்சி பிழம்பாக இருந்தது.

அம்மா அப்பாவோ, பிருந்தா அத்தையோ, பேசிய ஆறுதல் வார்த்தைகளும் கண்ணீரும் கலங்கலாக நினைவில் இருந்தாலும், முதல் முறையாக பார்க்கும் ஒரு தாய் கண்ணீருடன், தன் மகனுக்காக தன்னை விட இருபத்தி ஐந்து வயது சிறிய பெண்ணின் காலில், விழத் தயாராக இருந்த அந்தக் காட்சி அவள் மனதில் பசுமரத்து ஆணி போல பதிந்து இருந்தது.

''அம்மாடி! விஜயும் விவேக்கும் எனக்கு இரண்டு கண் மாதிரி. ஒரு கண்ணை பிடுங்கி எடுத்துட்டு இன்னொரு கண்ணை மட்டும் காப்பாற்று என்று கேட்க மனசு வரலை. ஆனால் நீ மனசு வைத்தால் என் மகன் பிழைத்து வருவான். இது உன் கை இல்லை... காலா நினைத்து கேட்கறேன்...''



''ஹையோ... அம்மா எழுந்திரிங்க... ஏற்கனவே என்ன பாவம் செய்தேனோ, என்னை இந்த நிலையில் உட்கார்த்தி வச்சு இருக்கான் கடவுள். இதுல நீங்க வேறே வயசுல பெரியவங்க என் காலில் விழுந்து என் பாவக் கணக்கை இன்னும் கூட்டாதீங்க. இவங்க என்ன கேட்கறாங்களோ அதை செய்து கொடுத்துடுங்கப்பா'' என்று கண்ணீரோடு கை கூப்பி அழுதாள்.

சென்னையில் தகவல் கேட்ட வினாடியில் இருந்து அரக்கப் பறக்க தூத்துக்குடிக்கு விமானத்தில் பறந்து சென்ற பிறகு, அந்த ஒரு நாளில் அவள் பேசிய முதல் வாக்கியம் அதுதான்.

''ஆபரேஷன் தியேட்டர் எடுத்துட்டுப் போகப் போறாங்க மதி. நீ ஒரு தடவை அவனை பார்த்துட்டு வந்து விட்டால்...'' என்று அடுத்த சில நிமிடங்களில், வந்து நின்ற அம்மா அப்பா, அத்தை மாமாவின் குரல் அவளை அசைக்க முடியவில்லை.

''இல்லைப்பா. வேண்டாம். நான் விஜயை இந்த நிலையில பார்க்க மாட்டேன். என் மனசில் விஜய் இந்த மாதிரி கோலத்தில் பதிய வேண்டாம். என்னைத் தொந்தரவு பண்ணாதீங்க. நான் பார்க்கலை. நான் சென்னைக்கு கிளம்புகிறேன். என்னால் இங்கே இருக்க முடியலை'' என்று முகத்தை மூடிக் கொண்டு கதறிய வளை அதற்கு மேல் தொந்தரவு செய்ய யாருக்கும் தைரியம் இல்லை.

''விஜயை வீட்டுக்கு எடுத்துட்டுப் போய்...'' என்று ஆரம்பித்தவரை, ''அப்படி எல்லாம் சொல்லாதீங்கப்பா! விஜய்க்கு ஒண்ணும் ஆகாது. விஜய் என்னை விட்டு

எங்கும் போக மாட்டார். இங்கே தான் என் கூடவே இருப்பார்'' என்று அழுத்தம் திருத்தமாகச் சொன்னவள் தன் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

அதன் பிறகு அவள் அழவில்லை. ஆனால் அந்த மன இறுக்கம் இன்று வரை குறையவும் இல்லை. இப்போது தான், இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, விவேக்கின் வருகைக்குப் பிறகு, இந்த மூன்று நாட்களாக தான், சில முறை பிருந்தாவிடமும் பலமுறை விவேக்கின் முன்னிலையிலும் மனம் உடைந்து அழுது இருக்கிறாள்.

சென்னை போகிறேன் என்று சொன்னவளை உடனே அனுப்பவில்லை என்றாலும், கூடவே வைத்துக் கொண்டாலும் அவளும் விஜயைப் பார்க்கவில்லை. பார்க்கச் சொல்லி யாரும் அவளைக் கேட்டுக் கொள்ளவும் இல்லை. அதன் பிறகு காரியங்கள் வேகமாக நிறைவேறின!

"A donor can donate a heart, eyes, lungs, two kidneys, pancreas, liver" - அவனால் ஆறு நோயாளிகள் புது வாழ்வினை அடைய முடியும் என்று மருத்துவர்கள் சொன்னார்கள்.

அடுத்த இருபத்தி நான்கு மணி நேரத்தில் அதற்குரிய நோயாளிகளைக் கண்டு பிடித்து உரிய சிகிச்சைகளை செய்தனர். அதற்கடுத்த நான்கு மணி நேரத்தில் விஜயின் உடலை உறவினர்களிடம் ஒப்படைத்தார்கள்.

வீட்டுக்கு எடுத்து வந்தால் வான்மதியின் கண்ணில் படாமல் தவிர்க்க முடியாது, என்ற காரணத்திற்காக, தங்களின் சொந்த ஊருக்குக் கூட எடுத்து வராமல், 



தூத்துக்குடியிலேயே மகனின் உடலைத் தகனம் செய்யப் பெற்றவர்கள் ஒத்துக் கொண்டது, அவர்கள் வான்மதியின் மேல் வைத்த பிரியத்தின் உச்சக்கட்டம்!



## 21

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, விஜயின் இதயத்தை தனக்குப் பொருத்த, வானதியிடம் சம்மதம் பெற்ற நிகழ்வு நினைவிருக்கா என்ற கேள்வியில் தனக்குள் மூழ்கிப் போன வானதி அப்படியே பால்கனி தரையில் சரிந்து அமர்ந்து முட்டியில் முகம் புதைக்க அவளின் அருகே அமர்ந்தான் விவேக்.

''வானதி, தான் செயல் இழந்தாலும், தன்னைப் போல ஆறு மனிதர்களின் குறையை நீக்கி, அவர்களை இந்த உலகில் வாழ வைத்துக் கொண்டு இருக்கும் கொடை வள்ளல் அவன்! இந்த உலகத்தில் நடக்கும் எந்த விஷயமும் ஏன் அப்படி நடக்கிறது என்று துல்லியமா நம்மால் புரிந்து கொள்ள முடியாது. கடவுள் ஒரு கணக்குப் போட்டு வச்சு இருப்பான்'' என்று வேதாந்தம் பேசியவனை விலகி நின்று முறைத்தாள்.

''மனதொருமித்து மணந்து கொள்ள இருந்தவர்களைத் திட்டமிட்டுப் பிரிக்கணும் என்றா கடவுள் கணக்குப் போட்டு வைத்து இருந்தார்?'' என்று ஆத்திரமாகக் கேட்டவளை கனிவோடு பார்த்தான்.

''நான் அப்படி சொல்லவில்லை வானதி. விஜயை இறைவனுக்கு மிகவும் பிடித்து விட்டதால் தன்னிடம் சீக்கிரம் அழைத்துக் கொண்டான் என்று சொல்ல வருகிறேன். உன் இழப்பு மிக அதிகம். அதனை ஈடு செய்ய முடியும் என்று தோன்றவில்லை'' என்று உணர்வுப் பூர்வமாகச் சொல்லிக் கொண்டே போன விவேக் அவளின் வியந்த பார்வையைக் கண்டதும் ஒரு கணம் நிதானித்து என்ன பேசினோம் என்பதை மீண்டும் நினைவு கூர்ந்தான். புன்னகை மலர்ந்தது.

''Impossible, when expanded says I'm possible''. முயன்றே பார்க்காமல் முடியாது என்று எப்படிச் சொல்வது என்பதால் நானும் முயற்சி செய்கிறேன். ஜெயிப்பேன் என்று நம்பிக்கை இருக்கு. எனக்கும் அவனுக்கும் விட்ட குறை தொட்ட குறை ஏதாவது முன் ஜென்ம பந்தம் இருந்து இருக்க வேண்டும்...''

''இந்த சென்டிமென்ட் டயலாக் எல்லாம் இங்கே வேண்டாம்...''

''இது டயலாக் இல்லை. உண்மை. சம்பந்தமே இல்லாத எனக்கும் அவனுக்கும் டிஷ்யூ எப்படி ஒத்துப் போகும்? இருதய மாற்று அறுவை சிகிச்சை அவ்வளவு சீக்கிரம் செய்துவிட முடியாது. அதை விட இப்பவும் எனக்கு வியப்பூட்டும் ஒரு விஷயம். விஜய் மேலே உயிராக இருக்கும் நீ அவனின் உடலை கூறு போடும், இந்த உறுப்பு தானத்திற்கு ஒத்துக் கொண்டாய்?'' என்று கேட்டதும் அவள் நீண்ட பெருமூச்சை வெளியேற்றினாள்.



''அதைப் பற்றிப் பேசி என்ன ஆகப் போகிறது? விஜய் இப்போ இல்லை.''

''இன்னொரு முறை இப்படிச் சொல்லாதே வானதி. ஒரு மனிதன் உயிரோடு இருக்கிறானா இல்லையா என்பதை மருத்துவம் எப்படி முடிவு பண்ணுகிறது சொல் பார்ப்போம்...'' என்று கேட்க அவள் திகைத்து விழித்தாள்.

''என்ன சத்தமே காணோம்? சொல்லு...''

தாழ்ந்த கண்களைப் பார்த்து புன்னகை செய்தவன், ஒற்றை விரலால் அவள் நாடியைப் பிடித்து நிமிர்த்தி, ''ஒரு நிமிடத்திற்கு 72 முறை இதயம் விரிந்து சுருங்கும்போது, ரத்தம் இதயத்தில் இருந்து வெளியேறுவதை தான் நாடித் துடிப்பு காட்டும் அப்படி என்றால் என்ன அர்த்தம் வானதி?''

''விஜயின் இதயம் இன்னும் துடித்துக் கொண்டு இருக்கிறது. அவன் சாகவில்லை. இனி நீதான் முடிவெடுக்க வேண்டும்'' என்று சொல்லி மென்மையாக அவளின் கன்னத்தில் தட்டி விட்டு விவேக் வெளியேற, அவசரமாகத் தரையில் சரிந்து அமர்ந்து முட்டியில் முகம் புதைத்தாள்.

இரவு விடிய விடிய பேசிக் கொண்டு இருந்ததன் பலனாக, கீழ் வானத்தில் சூரியன் வருவதற்கான அறிகுறியாக வானம் இளஞ்சிவப்பு நிறத்தைப் பூசிக் கொள்ள ஆரம்பித்தது.

* * *

ஹால் சோபாவில், படுத்தபடி பழைய நினைவுகளில் மூழ்கி இருந்த கஸ்தூரி, மாடிப் படிகளில் காலடி

சப்தம் கேட்டு, ''விவேக்...'' என்று ஆர்வமாக எழ, அவரின் கால்களை தொட்டு வணங்கினான்.

''சீக்கிரம் எல்லாமே சரி ஆகி விடும் அத்தை. நம் பிக்கையோடு இருங்க...''

''எப்படி இருக்கிறாள்?'' என்ற இரண்டு வார்த்தை களை கேட்பதற்குள் தொண்டை அடைத்தது போல இருந்தது.

''இரண்டு வருடங்களாக மனதிற்குள் அடைத்து வைத்து இருந்த அழுத்தம் அழுகையாக வெளியே வந்து விட்டது என்று நினைக்கிறேன். நம்பிக்கையோடு இருங்க அத்தை'' என்று சொல்லி ஆன்ட்டியை கை விட்டு தன் நம்பிக்கையை சொல்லாமல் சொல்லிச் சென்றான்.

மகள் கிட்டத்தட்ட விவேக்குடன் ஆறு மணி நேரத்திற்கும் மேலாகப் பேசிக் கொண்டு இருந்திருக் கிறாள் என்ற சந்தோஷம் பிறந்தது. இவ்வளவு நேரம் நீண்ட உரையாடலில், மகள் உணர்ச்சிப் பிழம்பாகி தவித்து இருப்பாளே என்ற வருத்தமும் தோன்றவே செய்தது. விஜயின் மரண வீட்டில் கூட அவள் அழ வில்லை. இறுகிப் போய் அமர்ந்து இருந்தாள்.

விஜயின் மீது அன்பு வைத்து இருப்பதாகச் சொல்லிக் கொண்டவர்கள், அவனின் மரணத்திற்கு வான்மதியைக் காரணம் காட்டி குத்திப் பேசியதால், அவளின் அந்த அன்னிய தன்மை பரவாயில்லை என்று தோன்றியது. அதனாலேயே அவர்களின் மதுரை பயணம் நின்றது.



பிருந்தா அதை மனதில் கொள்ளாமல் மாசம் ஒரு முறை வந்து போவார். ஆறு மாதம் முன்பு வந்தபோது, ''நீ திருமணம் செய்து கொண்டே ஆக வேண்டும். இன்னும் எத்தனை நாள் இப்படியே இருக்கப் போகி றாய்?'' என்று அதட்டி உருட்டியதில் வானதி உடைந்து பொரிந்து தள்ளி விட்டாள்.

''நீங்க தான் விஜயை பெற்றீர்கள் என்பதே எனக்கு சந்தேகமா இருக்கு. உங்க பிள்ளையை நேசித்த ஒருத்தியை இன்னொருவனைக் கல்யாணம் பண்ணிக் கொள் என்று சொல்ல வாய் வருமா? இனிமேல் என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள சொல்லும் உத்தேசத்தில் இருந்தால் இந்த வீட்டு வாசல் படியை மிதிக்காதீங்க'' என்று பொரிந்து தள்ள அதையும் ஏற்று ஆறு மாதமாக இங்கே வராமல் இருந்து பார்த்தார் பிருந்தா.

வான்மதியுடன் நேரடியாகப் பேசுவது நின்று விட் டாலும் அவரின் வரன் தேடும் முயற்சி நிற்கவே இல்லை. தன் பேச்சு செய்யாத காரியத்தை தன் மௌனம் செய்யக் கூடும் என்று எதிர்பார்த்த பிருந்தாவின் நினைப்பு ஓரளவிற்கு நிறைவேறியது.

கோவையில் அந்த வரன் பேச ஆரம்பித்தபோதே, எப்போதும் பெற்றோரை மிரட்ட அவள் சொல்லும், ''மாப்பிள்ளை வீட்டினர் யாராவது இங்கே வந்தால் நான் இந்த வீட்டிலேயே இருக்க மாட்டேன்'' என்ற வானதியின் மிரட்டலை அப்பா கையில் எடுத்துக் கொண்டார்.

''பெண் பார்க்க சம்மதிக்கவில்லை என்றால் எங்களை நீ உயிரோடு பார்க்க முடியாது...'' என்று சத்தம் போட்ட

அடுத்த நாளே, அவர் இயற்கை எய்தி விட இங்கே அந்த வரன் பற்றிய பேச்சு அப்படியே நின்று போனது.

மீண்டும் பேச்சை ஆரம்பித்த போது சௌசல்யா "மாப்பிள்ளை குடும்பத்தினரின் சுயரூபத்தை தோலுரித்துக் காட்டியதோடு, தன் விருப்பத்தையும் கோடி காட்ட, மூன்று தெய்வங்களும் கூடிப் பேசின.

முப்பெரும் தேவியரின் ஆசியுடன் தெய்வ திருமகளை தன்னுடன் சேர்த்துக் கொள்ள, அவர்கள் உருவாக்கிய திட்டமே விவேக்கின் இந்த அதிரடி பிரவேசம்! அது மூன்றே நாளில் நல்ல பலனைக் கொடுத்துள்ளது என்று தான் சொல்ல வேண்டும்.

* * *

காலை ஒன்பது மணிக்கு விவேக் கையில் ஒரு பிளாஸ்டிக் கவருடன் வந்த போது வானதியின் முகத்தில் பளிச் என்று விளக்கெரிந்ததை கஸ்தூரி விவேக் இருவருமே கவனிக்கத் தவறவில்லை.

"வா விவேக் சாப்பிடுகிறாயா? அம்மா வீட்டுக்கு போயிட்டு போன் பண்ணினாங்களா?" என்று கஸ்தூரி வரவேற்றாலும் சின்னப் புன்னகையுடன் தலை அசைத்து வானதி வரவேற்றதே அவன் மனதில் பதிந்தது.

"பண்ணினாங்க ஆன்ட்டி. அம்மா நேற்று சாம்பாரும் தோசை மாவும் பிரிட்ஜில் வைத்து விட்டுப் போய் இருந்தாங்க. அதனால் நானே டிபன் பண்ணி சாப்பிட்டு விட்டேன். இதை வானதியிடம் கொடுக்க தான் வந்தேன்" என்று நின்றவாக்கில் அந்த கவரை அவளிடம்



கொடுத்துவிட்டு கிளம்ப, அவள் ஏமாற்றத்துடன் பார்த்தாள்.

வெளியே அவன் தன் பைக்கை உதைத்துக் கிளப்பிக் கொண்டு இருந்தது. கண்ணில் பட்டது. பைக் வந்து விட்டதா? இரவோடு இரவாக சரி செய்து எப்படி வந்து இருக்க முடியும்?

"சாப்பிடக் கூட நிற்காமல் அவசரமா வந்து கொடுத்து விட்டுச் செல்கிறான்? அப்படி அதில் என்ன இருக்கு?" என்று கஸ்தூரி விசாரித்த பிறகே, அவளின் பார்வை வெளியே இருந்து வீட்டுக்குள் திரும்பியது.

"விஜய் வாங்கிய வாய்ஸ் ரெகார்டர்..."

"அதை வேண்டாம் என்று நீ பிருந்தாவிடம் கொடுத்தது மாதிரி இருந்ததே? அது எப்படி விவேக்கிடம் வந்தது?"

"நீங்க எல்லோரும் சேர்ந்து அவரை என்னிடம் சமாதானத் தூதுவரா பேச்சு வார்த்தை நடத்த அனுப்பினீங்க இல்லையா? அப்ப உங்களிடம் இருந்த ஆயுதங்கள் எல்லாம் அவரிடம் வந்தது" என்று விட்டுப் படியேறினாள். அறைக்குள் சென்று கதவைப் பூட்டி, நடுங்கும் கரங்களால் கவரைப் பிரித்தாள்.

இளம்பச்சை நிறத்தில், பரிசு தாள் சுற்றிய அந்த பார்சலே முதலில் கண்ணில் பட்டது. அதைப் பார்த்த உடனே அது வாய்ஸ் ரெகார்டர் என்பது புரிய, அதை எடுத்து வைத்துவிட்டு உள்ளே பார்த்தவளின் கண்கள் வியப்பில் விரிந்தது. அது அவனுடைய பழைய போன்!

இது சுக்கு நூறாக நொறுங்கிக் கிடந்ததாகச் சொன்னார்களே? இதைப் பிறகு சரி செய்து இருக்க

வேண்டும். நிறைய கீறல்கள் கண்ணில் பட சில செல்லோ டேப் துண்டுகளும் ஒட்டப்பட்டு இருந்தது. அவனுடைய பொருள் என்பதே கூடுதல் உணர்ச்சியை தோற்றுவிக்க, நடுங்கும் கரங்களால் வருடினாள்.

செல்ல சண்டைகள் போட்டுப் பேசாமல் இருக்கும் சில நிமிடங்களில், அவன் இதில் நூறு சாரி சொல்லி குரலைப் பதிவு பண்ணி தனக்கு வாய்ஸ் மெசேஜ் அனுப்பி இருக்கிறான். இதில் தான் சர்ப்ரைஸ் செய்தி இருக்கு! அதில் என்ன சொல்லி இருக்கப் போகிறானோ? வேலை செய்கிறதா? தயக்கத்துடன் உயிர்ப்பித்தாள்!

வேலை செய்தது!

திருபுவனத்தில் நடந்த அந்த கச்சேரியில், இளம் பச்சை நிற பட்டுப் புடவையில் அவள் தம்புராவை மீட்டும் அந்தப் படம் ஸ்க்ரீன் சேவராக பதிவாகி இருந்தது. போனில் இருந்த செய்தியைக் கேட்க ஹெட் செட்டை மாட்ட, விஜயின் குரல் ஒலித்தது.

ஹாய் மதி!

எப்படி இருக்கிறாய்?

என்ன பார்க்கிறாய்? இரண்டு நாள் கூட ஆகலை? அதற்குள் மெசேஜா என்று தானே பார்க்கிறாய்? எல்லாம் இந்த வீ என் வேலை.

இந்த வீ என் இருக்காரே, அவரின் பிடிவாதம் வார்த்தையால் சொல்ல முடியாது. உனக்கு ரகசியமா டெக்ஸ்ட் மெசேஜ் அனுப்புவதை பார்த்து விட்டார். அதற்காக இந்த ரெகார்டிங்.



'அம்மா அப்பா ஆனாலும் சரி, அலுவலகம் ஆனாலும் சரி, ஆண்டவனே ஆனாலும் சரி, கேட்பதை கொடுத்தே ஆக வேண்டும். நினைத்ததை உடனே சாதிக்க வேண்டும் என்று வீம்பு பிடிக்கும் ரகம்...' என்ற விஜயின் குரலை மீறி ஒரு சிரிப்பு சப்தமும், அதை அடக்கும் முயற்சியும் கேட்க அவளின் கவனம் அந்த சிரிப்பு சப்தத்தில் பதிந்தது.

பெருமை தாங்கலை திட்டினால் சிரிப்பு வருது பாரு. உனக்கு நான் ஏதாவது அட்வைஸ் கொடுக்கணுமாம்!

உலகத்திலேயே ப்ரீயா கிடைப்பது இந்த அட்வைஸ் ஒன்று தான். அதிகமா அலட்சியப்படுத்த படுவதும் இதுதான் என்று சொன்னால் கேட்கவில்லை.

நீ சொல்லும் அட்வைசை எப்படி உன் மதி அலட்சியப் படுத்த முடியும் என்று செண்டிமெண்டா என்னை மடக்கிப் பேச வைத்து விட்டான் மதி.

அது தான் வீ என்!

வீ என் என்றால் விவேக் நாராயணன் என்று அவர் நினைத்துக் கொண்டு இருக்கிறார். ஆனால் அதன் உண்மையான பொருள் எனக்கு தான் தெரியும். சொல்லட்டுமா? என்று கேலியாகக் கேட்டு குரலைத் தாழ்த்தி, விடாகொண்டன் என்று அர்த்தம். என்று சொல்ல விவேக்கின் சிரிப்பு ஒலித்தது.

''உன் பியான்சியை பற்றி பேசச் சொன்னால் என்னைப் பற்றி பேசாதே விஜய்...'' என்ற விவேக்கின் குரல் இப்போது தெளிவாக ஒலிக்க அவளின் முகம் புன்னகையைப் பூசிக் கொண்டது.

''மதி, இது என்னுடைய விருப்பம் வேண்டுகோள். ஆசை எப்படி வேண்டுமானாலும் வைத்துக் கொள். நீ இசையில் சாதிக்கப் பிறந்தவள், உனக்கு வரும் வாய்ப்புகளை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள். என்ன தடை வந்தாலும், உன் இசைப் பயணத்தை விட்டு விடாதே!

'நானே நாளைக்கு ஏதாவது கோபத்தில் இனிமேல் பாடக் கூடாது என்று சொன்னாலும், அதை நீ கேட்கக் கூடாது அப்ப இந்த மெசேஜை என்னிடம் போட்டு காட்டு! ஓகே?

இந்த இசை பயணத்தில், என்னுடைய பரிசின் மூலமாக என்றும் உன்னுடன் தொடர்வேன். அது உன்னைப் பாட வைக்கும். பாடியதை எடிட் பண்ண வைக்கும். உன் திறமையை மேலும் மெருகேற்ற வைக்கும். இசையில் எவரெஸ்ட் சிகரத்தைத் தொட என்னுடைய வாழ்த்துக்கள்!

அவனின் பேச்சு முடிந்து இருந்தது! அந்த பேச்சை அவள் எத்தனை முறை கேட்டாள்? அவளுக்கே தெரியாது. அதில் ஒலித்த ஒவ்வொரு வாசகமும், சின்ன சிரிப்பு சப்தமும் அவளின் மனதில் பதிந்து போய் இருந்தது.

## 22

காலையில் ஒன்பதரை மணி அளவில் விவேக் கொடுத்த கவருடன் தன் அறைக்குச் சென்ற வானதி



யிடம் இருந்து பிற்பகல் இரண்டு மணி வரை சப்தமே இல்லை என்றதும் மேலே படி ஏறி வந்தார் கஸ்தூரி.

''இன்னும் சாப்பிட வராமல் அறையிலேயே என்ன செய்கிறாய் வானதி? குழந்தைகள் சப்தம் கூட கலைக்கவில்லை? வெளியே வரவே இல்லையே'' என்று விசாரித்தபடி உள்ளே வந்த அம்மாவைக் குற்ற உணர்வுடன் பார்த்தாள்.

''நான் ரூமிலேயே இருந்து விட்டேன். ஆயாம்மாவால் தனியா குழந்தைகளைப் பார்க்க முடியாதே? குழந்தைகள் சாப்பிட்டாங்களா?''

''இரண்டு மணி ஆகப் போகிறது. உனக்குப் பசிக்கவில்லை என்றால் சின்னக் குழந்தைகளும் சாப்பிடாமல் இருக்குமா? ஆயாம்மா சாப்பாடு கொடுத்துத் தூங்க வச்சுட்டாங்க'' என்று சொல்ல அவள் கட்டிலில் பரவிக் கிடந்த மொபைல் போன், வாய்ஸ் ரெகார்டர் எல்லாவற்றையும் எடுத்து தன் அலமாரியில் அடுக்கி வைத்து விட்டு அவரைப் பின் தொடர்ந்தாள். இறங்கி வந்த மகளுக்கு உணவினைப் பரிமாறிய கஸ்தூரி தானும் சாப்பிட அமரும் வரை எதுவுமே பேசவில்லை.

''என்னிடம் ஏதாவது கேட்கணுமா வானதி?''

''ம்ம்ம்...''

''கேளு...'' என்று அவர் அனுமதி கொடுத்து விட்டாலும், நினைப்பதை அவ்வளவு சுலபமாக அவளால் கேட்க முடியவில்லை.

ஒரு நெடிய மூச்சை வெளியேற்றி, தன்னை சமப்படுத்திக் கொண்டு, ''விவேக் இங்கே வருவதற்கு

முன்பே உங்களுக்கு நல்ல பழக்கம் தானே? அப்புறம் ஏன் என்னிடம் பொய் சொன்னீங்க?'' என்று விசாரித்தாள்.

''நான் விவேக்கை தூத்துக்குடி மருத்துவமனையில் நினைவில்லாமல் இருந்தபோது பார்த்ததுதான். அதற்கு பிறகு, மூன்று தினங்கள் முன்பு, நீ பார்ப்பதற்கு சில நிமிடங்கள் முன்புதான் பார்த்தேன். உன்னிடம் பொய் சொல்ல வேண்டிய அவசியம் எனக்கு இல்லை.''

''நீங்க சொல்வது நம்புற மாதிரியே இல்லையே? உங்களிடம் அனுமதி கேட்கலாமா, எடுத்த எடுப்பில் தன் தாயுடன் திருமணம் பேச வந்து இருக்கிறார்? அது அத்தைக்கு வேறே தெரிந்து இருக்கு?''

''விவேக் உன்னைக் கல்யாணம் செய்து கொள்ள விரும்புவதாக கௌசல்யா சொன்னதே பிருந்தாவின் மூலம் தான். பிருந்தா சொன்னதால் என்னால் ஓரளவிற்கு மேலே தட்டிப் பேச முடியவில்லையே தவிர. எனக்கு அதிலேயே அவ்வளவாக விருப்பம் கிடையாது'' என்று கஸ்தூரி உறுதியான குரலில் சொல்ல அவரை அதிர்ச்சியுடன் பார்த்தாள் வான்மதி.

''என்னம்மா சொல்றீங்க...?''

''உங்க அத்தை விவேக் நல்லவன் என்று படித்துப் படித்துச் சொன்னாலும், எனக்கு இதய மாற்று அறுவை சிகிச்சை செய்து கொண்ட ஒருவனை உனக்குக் கல்யாணம் செய்து வைக்க...'' என்றவர் தன் தயக்கத்திற்கு வார்த்தை வடிவம் கொடுக்கும் முன்பே, வாக்கியம் பாதியில் நின்றது.



அம்மாவின் பார்வையில் வித்தியாசத்தை உணர்ந்து திரும்பி பார்த்தவளுக்கும் அதிர்ச்சியே! அங்கே நின்று இருந்தது விவேக். கடவுளே! அவன் என்ன நினைப்பான்? ஏற்கனவே தன் உடல் நிலை குறித்து எவ்வளவு நீளமாக விளக்கம் சொன்னான்? அம்மா இப்படி ஒரு வார்த்தை சொல்லி இருக்க வேண்டாமோ?

அவனை திருமணம் செய்து கொள்ள முடியாது என்று தான் அவள் இரண்டு நாட்களாக நேரில் சொல்லிக் கொண்டு இருக்கிறாள் என்ற உண்மை அவளுக்குப் பிடிபடவில்லை. அவசரமாக முகத்தைச் சீர் செய்து எழுந்தாள்.

''காலையில் அவசரமா வேலை இருக்கு என்று கிளம்பிட்டீங்க. மோர்க் குழம்பும் மசால் வடையும் உங்களுக்குப் பிடிக்குமா? லஞ்ச் சாப்பிடலாம் வாங்க'' என்று உற்சாகத்துடன் வானதி வரவேற்க, கஸ்தூரியின் முகமோ குழப்பத்தில் இருக்க, விவேக் முகம் மாறாமல் வந்து அருகே அமர்ந்தான்.

''காலையில் அவசரமா போன வேலை முடிந்ததா விவேக்?'' என்று மீண்டும் அவளே பேச்சை தொடர்ந்தாள்.

''ஸ்பெஷல் வேலை எதுவும் இல்லை. வழக்கமான ரெகார்டிங் தான் முடிந்தது. நீ ஏன் இவ்வளவு நேரம் சாப்பிடாமல் இருந்தாய்?''

''அது... மேலே குழந்தைகளோடு இருந்தேன்...'' என்று சமாளித்தவளின் கண்கள் அம்மாவிடம் அவசரமாகப் பாய்ந்து மீள அதன் அர்த்தம் புரிந்தாலும் அதை விவேக் வெளியே காட்டிக் கொள்ளவில்லை.

அவனின் அந்த பதில் பேசாத அமைதி அவளைத் தவிப்புடன் திரும்பிப் பார்க்க வைத்தது. அவனை அவள் பார்த்த இந்த மூன்று நாட்களில், இந்த அமைதியும் கேட்ட கேள்விக்கு நேரடியான பதில் சொல்வதும் புதிது.

அமைதியாகவே உணவு வேளை கழிய அந்த அமைதி வான்மதியையும், கஸ்தூரியையும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கண்களால் பேசிக் கொள்ள வைத்தது. அவன் ஹாலுக்கு நகர்ந்த நேரம், வானதி அம்மாவை முறைத்தாள்.

''வழக்கமா நான் தான் யோசிக்காமல் எதையாவது பேசி விடுவேன். பகலில் பக்கம் பார்த்து பேசு. இரவில் அதுவும் பேசாதே என்று நீங்க சொல்வீங்க. பாவம் விவேக். ஏற்கனவே தன் உடல் நிலை பற்றி ரொம்ப வருத்தப்பட்டு இருப்பார். இதில் நீங்க வேறே...'' என்று கடுமையான குரலில் பேசிய வானதியை வியப்புடன் பார்த்தார்.

''இந்நேரத்தில் அவர் வருவார் என்று எனக்கு எப்படித் தெரியும் வானதி?'' என்று அவர் சொல்லும்போதே, மேலே ஒரு குழந்தையின் அழுகை சப்தம் கேட்க, வானதி மாடிக்கு அவசரமாக நகர்ந்தாள்.

''முதலில் அவரிடம் சாரி சொல்லுங்க...'' என்று அதட்டலாகச் சொல்லி விட்டு, அவசரமாக மேலே நகரவும், விவேக் உள்ளே வரவும் சரியாக இருந்தது.

''உங்களை சாரி சொல்லச் சொல்லி மிரட்டி விட்டுப் போகிறாளே! ஏன் எதுக்கு அத்தை?''

''அது வந்து... கொஞ்ச நேரம் முன்னால்... நான் உங்களுக்கு... நான் சொன்னதை...'' என்று விளக்க



ஆரம்பித்த கஸ்தூரியை அவனின் கண் சிமிட்டலும் புன்னகையும் தடுத்து நிறுத்தியது.

''பரவாயில்லை அத்தை விடுங்க. ஆமா, நீங்க ஏன் இவ்வளவு டென்ஷனா இருக்கீங்க?''

''ஏன் அப்படிக் கேட்கறீங்க?''

''அத்தை, என்னை நீங்க வாங்க போங்க என்று சொல்ல வேண்டாம். பிருந்தாம்மா மாதிரி, எங்க அம்மா மாதிரி, வா போ என்று பேர் சொல்லியே கூப்பிடலாம்.''

''அது அது... எப்படி...?''

''பிருந்தாம்மா அவங்க பையனா என்னை ஏற்றுக் கொண்டு ரொம்ப நாளாச்சு. நீங்க ஏன் என்னை உங்க மருமகனா பார்க்கறீங்க? மகனா பாருங்க. ஒருமை பேச்சு தன்னால் வரும்...''

''அது வந்து...''

''இருதய அறுவை சிகிச்சை செய்த பையனை எப்படி தன் பெண்ணுக்குக் கல்யாணம் பண்ணி வைப்பது என்ற பயம் உங்க மனசில் இருப்பது எனக்குப் புரியுது அத்தை. அதில் தப்பில்லை...''

''முன்பு எனக்கு அந்த சந்தேகம் இருந்தது உண்மை. ஆனால் இப்ப இல்லை.''

''கொஞ்ச நேரம் முன்னால் வானதியிடம்...''

''அது மனசில் இருந்து வந்த வார்த்தை இல்லை. அவள் மனதில் இருப்பதை அறிவதற்காக போட்ட தூண்டில் அது. அதை உங்களிடம் எப்படிச் சொல்வது என்று தான் யோசித்துக் கொண்டு இருந்தேன்...''

''உங்களுக்கு சந்தேகம் இல்லை என்றாலும், விளக்க வேண்டியது என் கடமை. அறுவை சிகிச்சை முடிந்த பிறகு கடந்த இரண்டு ஆண்டுகளில் நான் என்னைப் பல விதமான சோதனைகளுக்கு ஆட்படுத்தி இருக்கிறேன்'' என்று விளக்க, ஆரம்பித்ததும் அவரின் முகம் தீவிரம் காட்டியது.

''நான் இயல்பான தாம்பத்திய வாழ்க்கைக்கு தகுதி உடையவன் தானா என்பதையும் என்னால் ஒரு வாரிசாக அடுத்த தலைமுறையை உருவாக்க முடியும் என்பதையும் பரிசோதித்து தெரிந்து கொண்டேன்'' என்ற அவனின் வாக்கியத்தில், கஸ்தூரி வெளிப்படையாக அதிர்ந்தார்.

''ஹையோ! நான் சொன்னது நேரடி ஆண் பெண் உறவில்லை. ஸ்பெர்ம் டொனேஷன் கேள்விப்பட்டு இருக்கீங்களா? என்னுடைய விந்தணுவில் உருவான குழந்தை யார் வயிற்றில் வளர்ந்தது. என்ன குழந்தை என்பது கூட எனக்குத் தெரியாது. என்னுடைய விந்தணு ஒரு குழந்தையை உருவாக்கும் வல்லமை படைத்தது என்பதை மருத்துவ ரீதியாக உறுதி செய்யப்பட்டு இருக்கு என்று சொல்ல வந்தேன். போதுமா?'' என்று சொல்ல, அவரின் முகம் சிவந்தாலும் அவன் சொன்ன செய்தியில் மனம் குளிர்ந்ததும் நிஜம்! கௌசல்யா கூட இவ்வளவு விபரமாகச் சொன்னது இல்லையே?

''இதை எல்லாம் ஏன் என்னிடம் இப்போ சொல்நீங்க? வானதியிடம் சொன்னாலாவது...''

''வானதியிடமும் சொல்ல வேண்டும் அத்தை. உங்க மனம் நிறைவதும் முக்கியம். இதய மாற்று அறுவை



சிகிச்சை பண்ணிக் கொண்டவர்களுக்கு ஆயுள் குறைவு. பத்து பனிரெண்டு வருடங்கள் தான் உயிருடன் இருப்பாங்க என்று குழப்பி விட்டு இருக்கலாம்...'' என்று அவன் ஆரம்பிக்க கஸ்தூரியின் முகம் ஒரு கணம் இருண்டு இயல்பு நிலைக்கு வந்தது.

''அத்தை, ஆறிலும் சாவு நூறிலும் சாவு என்று சொல்லி நான் தப்பித்துக் கொள்ள விரும்பவில்லை. அறிவியல் என்ன சொல்கிறது என்று காட்டுகிறேன். இது எண்பதுகளின் ஆரம்பத்தில் ஆஸ்த்ரேலியாவில் இதய மாற்று அறுவை சிகிச்சை செய்து கொண்ட 14 வயது பெண். 32 ஆண்டுகளை தாண்டி இன்று வரை உயிருடன் நலமாக வாழ்ந்து வருகிறார் என்ற அறிவியல் உண்மையை விளக்கும் தமிழ் கட்டுரை'' என்று ஒரு கற்றை காகிதத்தை நீட்ட அதை அவர் வாங்கவில்லை.

''நீயும் நூறு வயசு வரை இருப்ப விவேக்'' என்று வேகமாக இடையிட்டுச் சொல்ல, ''இருப்பேன் என்ற நம்பிக்கை எனக்கும் இருக்கு...'' என்று நம்பிக்கையுடன் சொல்லி புன்னகை செய்தான்.

''இறைவன் எல்லா இடங்களிலும் இருக்க முடியாது என்பதற்காக தாயை படைத்தான். ஒரு தாய்க்கே இறைவனின் சக்தி உண்டு என்றால், மூன்று தாய்க்கு ஒரே மகனாக இருக்கும் எனக்கு எவ்வளவு ஆசீர்வாதங்களும் வாழ்த்துக்களும் கிடைக்கும்? உங்க ஆசீர்வாதங்களும் ப்ரார்த்தனைகளுமே, என்னை நூறு ஆண்டுகள் வாழ வைக்கும்'' என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்ல கஸ்தூரி கண்ணீரோடு அங்கீகரித்தார்.

கண்களைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்தபோது, விவேக்கின் பின்னால் நின்று இருந்த வானதியின் கண்களிலும் கண்ணீர் நிறைந்து இருந்தது. அவளின் முக மாற்றத்தைக் கண்டு திரும்பியவன் வானதியின் கலங்கிய கண்களைக் கண்டு புன்னகை செய்தான்.

"உன்னிடம் பேசுவதற்காக தான் அலுவலகத்தில் அனுமதி சொல்லி விட்டு வந்தேன். விஜய் போனில் பேசி இருந்ததைக் கேட்டாயா?" என்று கேட்டவன் கண்கள் அவளின் முகத்தை ஊடுருவி மனதை பார்வை யிட்டது.

"ம்ம்ம், கேட்டேன்."

"அதில் விஜய் சொல்லி இருப்பதைப் பற்றி என்ன முடிவு எடுத்தாய்...?"

"என்ன திடீர் என்று இந்தக் கேள்வி?" என்றவளின் குரலில் தடுமாற்றம் இருந்தது. இவ்வளவு சீக்கிரம் இந்தப் பேச்சு துவங்கும் என்பதை அவள் எதிர்பார்க்க வில்லை.

"காரணம் இருக்கு. நேற்று முன் தினம் மாலை உன்னிடம் இரண்டு நல்ல செய்தி சொல்ல, இனிப்புகளுடன் வந்தேனே நினைவிருக்கா?"

"உங்க வேலை நியமனம் ஒன்று."

"இன்னொரு நியூஸ் உன் சம்பந்தப்பட்ட செய்தி. ஆனால் விஜயின் ஆசை குறித்து நீ உன் முடிவைச் சொன்னால் தான். அது ஸ்வீட் நியூஸா இல்லையா என்று சொல்ல முடியும்..."

"விவேக், அம்மா உங்க மனதைக் காயப்படுத்தி இருந்தால் அதற்காக நான் மன்னிப்புக் கேட்கிறேன்"



என்று விவேக்கின் கேள்விக்கு பதில் சொல்லாமல், பேச்சை மாற்றச் சொன்னவளின் குரலில் உண்மையான வருத்தம் இருந்தது.

"அவங்க உண்மையைத் தானே சொன்னாங்க? என்ன உடல் நிலை அது தான். ஒரு பெண்ணைப் பெற்றவங்க, தன் பெண்ணை முழு ஆரோக்கியத்துடன் இருக்கும் ஒரு ஆண் மகனுக்குத் திருமணம் செய்து கொடுக்க நினைப்பதை நான் எப்படித் தப்பாக நினைக்க முடியும்? உங்க அம்மாவை நான் மன்னிக்க வேண்டும் என்று விரும்பினால், நான் சொல்வதை நீ கேட்பாயா?"

"என்ன... என்னது...?"

"என்னைக் கல்யாணம் பண்ணிக்கோ என்று கேட்க மாட்டேன். அதைத் தவிர வேறு எதாவது என்றால் ஓகே தானே...?"

உள்ளுக்குள் என்ன கேட்கப் போகிறானோ என்ற பயம் இருந்ததால் திகைப்புடன் விழித்தாள்.

"இசை உலகில் உன் காலடியை மீண்டும் எடுத்து வைக்க சந்தர்ப்பத்தைக் கண்டு பிடித்து விட்டேன். எங்க நிலா டி.வி.யில், 'சூப்பர் சிங்கர்' நிகழ்ச்சிக்கான இறுதிப் போட்டி வரும் இருபத்தி எட்டாம் தேதி, நடக்கப் போகிறது. அதில் சிறப்பு விருந்தினரா கலந்து கொள்ள, உன்னை அழைக்க டி.வி.யில் பேசினேன். ஒத்துக் கொண்டாங்க. நீ ஓகே சொன்னால், அதில் இருந்தே உன் இசை பயணத்தை ஆரம்பிக்கலாம்" என்று சொல்ல வான்மதியின் முகம் சிவந்து உணர்ச்சிப் பிழம்பாகிக் கொதித்தது.

# 23

'உன் இசை பயணம் மீண்டும் தொடர வேண்டும். அதற்கான ஏற்பாடுகளை நான் செய்து விட்டேன். நீ ஓகே சொல்வது மட்டும் தான் பாக்கி...' என்று ஆர்வத் துடன் சொன்ன தன் வார்த்தைகளில் வான்மதியின் முகம் ஜிவு ஜிவு என்று சிவந்ததைக் கண்டதும் திகைத்துப் போனான் விவேக்.

இன்று காலையில் விஜய் பேசியதாக ஒரு செய்தியை கொடுத்து விட்டு, அதை அவள் ஜீரணிக்க அவகாசம் கொடுக்காமல் இவ்வளவு சீக்கிரம் பேசி இருக்க வேண்டாமோ என்று ஒரு கணம் தோன்றியது. அடுத்த கணமே அவனின் வழக்கமான துள்ளலும் அலட்சியமும் வந்து விட்டது.

'ஆறிய கஞ்சி பழங்கஞ்சி' சூட்டோடு சூடாக வேலையை முடிக்க வேண்டும் என்ற எண்ணம் அந்தத் தயக்கத்தை மீறி விட்டது.

''என்ன வானதி, பதிலே காணோம்? நான் சொன்னது உன் காதில் விழுந்ததா?''

''நீங்க அத்தைக்குத் தெரிந்தவர், விஜயின் நண்பர் என்ற காரணத்தினால் நாங்க கொடுக்கும் மரியாதையை நீங்க உங்களுக்கு சாதகமா எடுத்துக்காதீங்க.''

''விஜய் என்னுடைய நண்பன். நீ பாடணும் என்பது அவன் ஆசை. அதை நிறைவேற்றுவது என் கடமை



என்று நான் நினைக்கிறேன். அதனால் எனக்குத் தெரிந்தவர்களிடம் சொல்லி முயற்சி செய்தேன்...''

''நான் இரண்டு வருஷமா பாடவே இல்லை. அதற்குக் காரணம் என்ன என்று உங்களுக்குத் தெரியுமா? அதைத் தெரிந்து கொள்ள முயற்சி செய்தீர்களா? அதைச் செய்யாமல்..''

''ஒரு நிமிஷம். உன்னிடம் காரணம் கேட்கவில்லை என்று தான் உனக்குத் தெரியும். ஆனால் காரணத்தை அறிய நான் முயற்சி செய்யவில்லை என்று நீ எப்படிச் சொல்கிறாய்?'' என்று இடையிட அவள் முகத்தில் கோப சிவப்பு மேலும் கூடியது.

வீட்டிலேயே ஒன்றுக்கு இரண்டாக எதிரிகளை வைத்துக் கொண்டு வெளியில் இருப்பவனிடம் என்ன விவாதம் செய்வது என்ற எரிச்சல் வந்தது.

''உங்களுக்குக் காரணம் தெரிந்ததாகவே இருக்கட்டும். ஆனால் இசை சம்பந்தப்பட்ட ஒரு பொது நிகழ்ச்சியில் எனக்கு பாடும் ஐடியா இருக்கா இல்லையா என்று தெரியாமலேயே நீங்களாகப் பேசி நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்வது மிக அதிகம்'' என்று வானதி சொல்ல, அவன் புன்னகை செய்தான்.

''நீ இவ்வளவு கோபப் படும் அளவுக்கு இப்ப என்ன நடந்து விட்டது என்று எனக்கு தெரியலை. ஒருவேளை, இதைக் காரணம் காட்டி நான் உன்னை நம் கல்யாணத்துக்கு கட்டாயப்படுத்தக் கூடும் என்று எதிர்பார்த்தால்...''

''ஷட் அப்!'' என்ற அவளின் அதட்டல் இடையிட்டது.

''அய்யய்ய! நீ என்ன இவ்வளவு டென்ஷன் ஆகிறாய்? நம் கல்யாணம் நடப்பதும் நடக்காமல் போவதும் வேறு விஷயம். அதையும் இதையும், சம்பந்தப் படுத்திக் குழப்பிக் கொள்ளாதே. அவனுக்கு வேண்டியவர்கள் எனக்கும் வேண்டியவர்கள். அதற்காக தான் இந்த வேலை செய்கிறேன். புரிந்ததா?'' என்று சொல்ல அவளின் முகத்தில் திகைப்பு வந்தது.

''நீ உடனே நீ பதில் சொல்ல வேண்டாம். நைட் யோசி, நாளைக் காலை ஒன்பது மணிக்கு நான் அலு வலகம் போகும் போது வருகிறேன். அப்ப சொல்லு'' என்று கன்னத்தில் தட்டி விட்டு வெளியேறினான் விவேக்.

அவன் கண்களில் இருந்து மறைந்த பிறகும் வெகு நேரம் அவன் சென்ற திசையையே பார்த்துக் கொண்டு இருந்த வான்மதியின் உள்ளம் உளைக்கலனாக கொதித்தது. இவன் கை சொடுக்கினால், அந்த அசை வில் ஆடும் கைப்பாவை நான் என்று நினைத்துக் கொண்டு இருக்கின்றானா? இவனுக்கு வார்த்தையில் சொன்னால் புரியாது. நான் யார்? என் மனதில் என்ன இருக்கிறது என்று உச்சந்தலையில் அறைந்து புரிய வைக்கிறேன் என்று மனதிற்குள் சூளுரைத்தாள் வான்மதி.

மறுநாள் காலை ஒன்பது மணிக்கு அவன் சொன்ன நேரம் விவேக் வந்தபோது, வரவேற்றது கஸ்தூரியே!

''குட்மார்னிங் அத்தை. வானதி எங்கே? சாப்பிட் டாளா?'' என்று விசாரித்தபடி வந்த விவேக்கை, கஸ்தூரியின் பதில் அதிர வைத்தது.



''வானதி அவங்க அத்தை வீட்டுக்குப் போய் இருக்கிறாளே? தெரியாதா?''

''என்ன சொல்றீங்க? எப்ப போனாள்? ஏன் என்னிடம் சொல்லவில்லை?''

''இன்று காலையில் ஏழு மணி ரயிலில் தான் கிளம்பிச் சென்றாள். நான் உனக்குத் தெரியும் என்று நினைத்தேனே'' என்று சொல்லும் போதே அவன் கை திருப்பி மணி பார்த்தான். அவன் மனதில் ஓடிய எண்ணங்களை ஊகிக்க முடிந்ததால், ''இல்லை விவேக். நீ பின்னாடியே போக வேண்டாம்...'' என்று அவசரமாகச் சொன்னார் கஸ்தூரி.

''இன்று சூப்பர் சிங்கர் நிகழ்ச்சிக்கு அவள் வருவாளா இல்லையா என்பது குறித்த முடிவை சொல்லச் சொல்லி இருந்தேன். நான் அலுவலகத்திலும் இவளின் வரு கையை உறுதி செய்யணுமே?'' என்று கவலையோடு இழுக்க அவனைப் பரிதாபமாகப் பார்த்தார்.

''விவேக், நான் ஒன்று சொன்னால் தப்பாக எடுத்துக் கொள்ள மாட்டாயே?''

''என்னை நம்பி இவ்வளவு தூரம் உங்க வீட்டிற்குள் உங்க பெண்ணுடன் இரவு முழுவதும் தனியாக இருக்க அனுமதித்து இருக்கீங்க. உங்களைத் தப்பாக நினைப் பேனா? சொல்லுங்க.''

''ஒருவேளை, வானதி உன்னைக் கல்யாணம் செய்து கொள்ள முடியாது என்று முடிவாகச் சொல்லி விட்டால் என்ன செய்வாய்?'' என்று தயக்கத்துடன் கேட்க அவன் முகம் ஒரு கணம் வாடி சீரானது.

''அப்படிச் சொல்ல வாய்ப்பு இல்லை என்று என் உள் மனசு சொல்கிறது. இதுவரைக்கும் உள் மனது சொன்னது பொய்யாகப் போனதில்லை. நம்பிக்கை தான் வாழ்க்கை! நல்லதே நடக்கும் என்று எதிர்பார்க்கலாமே?'' என்றவன் குரலில் உறுதி இருந்தது.

''உன்னை மாதிரியே அவளும் பிடிவாதக்காரி விவேக். ஒருவேளை சொல்லி விட்டால், என்ன செய்யப் போகிறாய்?''

''இந்த உலகத்தில் இரண்டு பேர் கல்யாணம் பண்ணிக் கொள்ளாமல் இருந்து விட்டால், பூமி தன் சுழற்சியை நிறுத்திக் கொள்ளப் போகிறதா என்ன?'' என்று தோளைக் குலுக்கிச் சொல்ல, ''விவேக்!...'' என்று அதட்டினார் கஸ்தூரி.

''உங்க அம்மா நிலை பற்றிக் கொஞ்சம் நினைத்துப் பார்த்தாயா?''

''எங்க அம்மா மட்டும் இல்லை. பிருந்தாம்மாவோடு உங்க நிலைமையையும் சேர்த்து யோசித்ததால் தான் இந்த முடிவு. ஏற்கனவே என் உடல்நிலை பற்றித் தெரிந்ததால், எடுத்த முடிவு தான். நடுவில் சலனப்பட்டாலும் தேர் மீண்டும் நிலைக்கு வந்து விட்டது என்று நினைத்து, திருமணம் பற்றி பேசுவதை மறந்து விடுவேன் அத்தை'' என்று சொல்ல அவர் மேலும் அதிர்ந்தார்.

''பயப்படாதீங்க! கல்யாணம் மட்டும் தான் பண்ணிக்க மாட்டேன். அதற்காக மனசு உடைந்து தேவதாஸ் ஆகி விடுவேன் என்று நினைக்க வேண்டாம். சென்னையை விட்டுப் போக மாட்டேன். உங்க பெண்ணுக்கு



நல்ல தோழனாக, உங்கள் காலத்திற்குப் பின்னாலும் நல்ல காவலனாக இங்கே தான் இருப்பேன். திருப்தியா...'' என்று அழுத்தமாகச் சொல்ல கஸ்தூரியின் கண்கள் பனித்தது.

''உன் நல்ல மனசுக்கு ஒரு குறையும் வராது விவேக். சீக்கிரமே வானதியும் உன்னைப் புரிந்து ஏற்றுக் கொள்வாள்.''

''அப்படி நினைத்து நாம் கையைக் கட்டிக் கொண்டு இருக்க முடியாது அத்தை. தனக்குத்தானே உதவி செய்யாதவனுக்கு கடவுள் கூட ஹெல்ப் பண்ண மாட்டார். இப்ப ப்ரோக்ராமுக்கு அவளைக் கூட்டிப் போது தான் முதலில் செய்ய வேண்டும். மதுரையில் இருந்து எப்ப திரும்பி வருவேன் என்று சொன்னாளா?''

''இல்லையே? எப்படியும் ஒரு வாரம் பத்து நாளைக்கு மேல் அவளால் அங்கே இருக்க முடியாது. திரும்பி வந்து விடுவாள் என்று நினைத்தேன்...''

''அதன் பிறகு இரண்டு நாள் தானே இருக்கும்? அப்ப நான் நாளை மதுரைக்கு கிளம்புகிறேன்...'' என்று அறிவிக்க கஸ்தூரி மறுப்பாக தலை அசைத்தார்.

''அவள் தனியாக அங்கே இருந்து யோசிக்கட்டும் என்று தான் அனுப்பி வைத்தேன். உடனே நீயும் பின்னாடியே போனால் எதிர்பார்த்த பலன் கிடைக்காது விவேக்...''

''அதுவும் சரிதான். ஆனால் நான் இங்கே அலுவலகத்தில் சம்மதம் சொல்ல வேண்டுமே...?''

''சம்மதம் என்று சொல்லி விடு. நல்லதே நடக்கும் என்று எதிர்பார்ப்போம்...''

"ஒருவேளை அவள் கடைசி வரை வராமல் இருந்து விட்டால்...?"

"கொஞ்ச முன்னாடி நம்பிக்கை பற்றி ஏதோ சொன்ன மாதிரி இருந்ததே?"

"அத்தை, கல்யாணம் என்பது என் பெர்சனல் விஷயம். இது டி.வி.யின் கௌரவப் பிரச்னை அல்லவா? அதில் ரிஸ்க் எடுப்பது சரியா வராதே."

"கடவுள் மேலே பாரத்தை போட்டு சரி என்று சொல்லி விடு விவேக். ஆண்டவன் நல்லவங்களை சோதித்தாலும் கைவிட மாட்டான். வானதி நிச்சயம் ப்ரோக்ராமுக்கு வந்து விடுவாள். அப்படி வரவில்லை என்றால், முதல் நாள் நாமே போய் குண்டு கட்டாக காரில் கையைக் காலை கட்டித் தூக்கி வந்து விடுவோம்" என்று நம்பிக்கையுடன் கஸ்தூரி உறுதி அளிக்க, அவன் சந்தோஷமாக அலுவலகம் சென்று 'சூப்பர் சிங்கர்' இறுதிப் போட்டி நடைபெறும் விழாவில் வானதியின் பங்கேற்பை உறுதி செய்தான் விவேக்.

* * *

வான்மதியின் ரயிலில் இருந்து இறங்கி இரண்டு அடி எடுத்து வைப்பதற்கு முன்பே, வாஞ்சையுடன் ஒலித்த, "மதி கண்ணு..." என்ற பிருந்தா அத்தையின் அழைப்பில் வியப்புடன் நின்று திரும்பிப் பார்த்தாள்.

"அத்தை நீங்க ஏன் இங்கே? ப்ச்! வெயிலில் உங்களை அலைய வைக்க வேண்டாம் என்று தானே நானே தகவல் சொல்லாமல் கிளம்பி வந்தேன். அதற்குள் உங்களுக்கு போன் போட்டுச் சொல்லியாச்சா? இந்த



அம்மாவை..." என்று பல்லைக் கடித்தாலும், தாவி வந்து அவரை அணைத்துக் கொண்டாள்.

"உன்னைக் கூப்பிட வர முடியாமல் வீட்டில் என்ன வெட்டி முறிக்கிறேன்? நான் போன் பண்ணினாலே, ஆமா, இல்லை, பார்க்கலாம் என்று வார்த்தைகளை முத்து போல எண்ணி எண்ணி பேசுற ஆளு உங்க அம்மா. உங்க அம்மா தான் எனக்கு வேலை இல்லாமல் போன் பண்ணிச் சொல்றாங்களாக்கும்? மணி இரண்டரை ஆச்சு உனக்காக ஸ்பெஷலா சேப்பங்கிழங்கு வறுத்து, கூட்டாஞ்சோறு பண்ணி வச்சு இருக்கேன்..."

அம்மா போன் பண்ணவில்லை என்றால் பிறகு அத்தைக்கு எப்படித் தகவல் தெரிந்தது? அனிச்சையாக, விவேக்கின் முகம் மனக்கண்ணில் தோன்ற அவளே வெலவெலத்து போனாள்! இதென்ன, இவளைப் பற்றி நினைக்கக்கூடாது என்று தானே வெளியூருக்கு வந்தாள்? இங்கே வந்த பிறகும் அழைக்காமலே அவன் நினைவு வருவது சரி இல்லையே?

இது ஒன்றும் அவனால் வர முடியாத அடுத்த கிரகம் இல்லை தான். ஆனாலும் காலையில் ஒரு முறை, மதியம் ஒருமுறை என்று நான்கு மணி நேரத்திற்கு ஒரு முறை எட்டிப் பார்த்து சும்மா குட்டையைக் குழப்ப முடியாதே?

"மதி கண்ணு உனக்கு உடம்பு சரி இல்லையா?"

"ஏ...ன் அத்தை அப்படிக் கேட்கறீங்க?"

"இல்லை நான் கூட்டாஞ்சோறு என்று சொன்னதற்கு சிரிச்சுட்டு, அத்தை அது கூட்டாஞ்சோறு இல்லை விஜிடபிள் பிரியாணி என்று என்னைத் திருத்தி

இருக்கணுமே நீ? வேறே ஏதோ ரோசனையில் இருக்கி யாக்கும்?''

''ஆமா! இல்லை அத்தை. நீங்க தனியா எப்படி வந்தீங்க? மாமா தோப்புக்குப் போய் இருப்பாங்களே?'' என்று தடுமாறி, சமாளித்து இயல்பான விசாரணையை முடித்தாள்.

''உங்க மாமாவை எதிர்பார்த்து நான் ஒவ்வொரு காரியமும் செய்யணும் என்றால் அது அடுத்த சென்மத்துல தான் நடக்கும். வீட்டுக்குப் பக்கத்துல ஒரு வாடகைக்கு கார் விடுற ஆபீஸ் இருக்கு இல்ல. போன் பண்ணினால் அஞ்சு நிமிஷத்துல வீட்டு வாசலில் கார் வந்து நிக்கப் போகுது. நீ வா.''

ரயில் நிலையத்தில் இருந்து பதினைந்து நிமிடங் களில் வீடு வந்து சேர்ந்து, தன்னை உட்கார வைத்து, ஊர் கதை பேசியபடி, உள்ளங்கையில் சாதம் கொடுத்துச் சாப்பிட வைத்து, முடியும் வேளையில், 'உனக்குப் பிடிக்கும் என்று சேமியா பாயாசம் பண்ணி இருக்கேன். டம்ளரில் தரட்டுமா?'' என்று ஆசையாகக் கேட்க மீண்டும் விவேக்கின் முகம் தோன்றியது.

முன்தினம் விஜய்க்கு பிடிக்கும் என்று பருப்பு பாயாசம் பண்ணி கௌசல்யா கொண்டு வந்து கொடுத்த தாக சொன்ன தகவல் நினைவில் வந்தது. தனக்குப் பிடிக்கும் என்று அத்தை செய்வதற்கும், விஜய்க்குப் பிடிக்கும் என்று கௌசல்யா செய்வதற்கும் என்ன சம்பந்தம்? இப்போ எதற்கு அந்த நினைவு வந்தது? இந்த ம் நினைவுகளில் இருந்து எப்போது விடுதலை பிறக்கும்?



''எனக்கு பாயாசம் வேண்டாம்...'' என்று வெளியே காண்பிக்க முடியாத கோபத்தை பாயாசத்தில் காட்டி விட்டு அவரின் மடியில் படுத்துக் கொள்ள அவளின் தலையை வருடினார் பிருந்தா.

அன்று மட்டும் இல்லை அடுத்து வந்த பனிரெண்டு நாட்களும், அவள் என்ன செய்தாலும், எதுவுமே செய்யாவிட்டாலும், பிருந்தா அத்தை மட்டும் இல்லை, வாசுதேவனும் கூட, ஏன் என்று ஒரு வார்த்தை கேட்க வில்லை.

அவள் செய்த, செய்யாத எல்லாவற்றிற்குமே அனு சரணையாக இருந்தார்கள். வயிறு வாடாமல் பார்த்துக் கொண்டார்கள்! எள் என்னும் முன்பு எண்ணெயாக நின்றார்கள்.

நீ எங்களுக்கு முக்கியம் என்று அவர்களின் ஒவ்வொரு அசைவிலும் சொல்லாமல் சொன்னார்கள்.

அந்த பனிரெண்டு நாட்களில், அவள் மதுரைக்கு வந்து சேர்ந்த உடனே தானாக போன் பண்ணி அம்மா விற்கு சொன்ன தகவல் தவிர அவரும் அழைக்க வில்லை. முதல் நான்கு ஐந்து நாட்கள் அம்மா போன் பண்ணாமல் இருப்பது வசதியாகவே இருந்தாலும், அடுத்தடுத்த நாட்களில் அந்நிய தன்மையை உணர ஆம்பித்தாள்.

அம்மாவுக்கு தன் மேல் அக்கறை இல்லையோ என்ற சந்தேகம் தேவை இல்லாமல் வந்தது. திருமணப் பேச்சு வார்த்தை நடக்கிறதே? ஏன் போகிறாய்? எப்போ வருகிறாய்? என்று கேள்வியே கேட்காமல் ஒரு தாயால் இருக்க முடியுமா?

ஒருவன் தினமும், இல்லை ஒரு நாளைக்கு நான்கு தடவை வீட்டுக்கு வருகிறானே? அவனுக்கு ஒரு பதில் சொல்ல வேண்டும் என்று தோன்றாதோ? ஒன்று அவனைக் கல்யாணம் செய்து கொள் என்று தன்னிடம் சொல்ல வேண்டும். இல்லை என்றால் இங்கே வராதே. வயசு பெண் இருக்கும் இடத்திற்கு நீ இப்படி வந்து சென்றால் அவள் பெயர் கெட்டு விடும் என்று அவனைத் தடுத்து நிறுத்த வேண்டும். இரண்டும் செய்யாமல் இருந்தால் என்ன அர்த்தம்? மனசுக்குள் குடைச்சல் விடாமல் தொடர்ந்தது.

அவனும் தான் என்ன ஆனான்? தன்னை மறந்து விட்டானா? ச்சே ச்சே மறந்து இருக்க மாட்டான்! அவனிடம் சொல்லாமல் வந்துவிட்டதால் கோபமாக இருப்பானோ? ஏன் சொல்ல வேண்டும்? அவனுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? ஒன்றுமே இல்லையா?

கேள்விகளும் பதிலும் மாறி மாறி மனதில் தோன்றி, அவளின் மனமே அவளை சித்திரவதை செய்ய, சுடும் வாணலியில் இருந்து எரியும் அடுப்பில் தானாக குதித்து விட்டதைப் போன்ற ஒரு உணர்வு தோன்றி அவளை இரவும் பகலும் வதைக்க ஆரம்பித்தது. அந்த வாதனைக்கு ஒரு முடிவும் வந்தது.

சூப்பர் சிங்கர் பந்தயத்தின் இறுதிப் போட்டிக்கு முந்தைய தினம் அதிகாலை, அழைப்பு மணி ஒலிக்க, வேகமாக எழுந்து வந்து பார்த்தவளுக்கு, வாசலில் தோளில் மாட்டிய ஒரு பையுடன் நின்று இருந்த விவேக்கை பார்த்த மாத்திரத்தில், தோள்களில் சிறகு



முளைத்தது! வானில் பறக்கிறாளோ என்ற சந்தேகம் வந்தது. மனதில் மகிழ்ச்சி மின்னல் வேகத்தில் பரவியது.

## 24

சென்னையில் இருக்கும் வரை வான்மதிக்குக் கோலம் போடுவது ஒரு பெரிய வேலையாகத் தோன்றியதில்லை. வேலைக்கு இருக்கும் ஆட்கள், வாசல் தெளித்து விட்டு, ஒரு ஸ்டாரை போடுவதுடன் முடித்து விடுவார்கள்.

‘என்ன செய்து பொழுதை போக்குவது?’ என்ற எண்ணம் ஒரு பக்கம், மார்கழி மாதத்தில் அதிகாலை நேரத்தில், வெளிகாற்றில் ஓசோன் வாயு இருக்கும். அதை சுவாசிப்பது உடல் நலத்திற்கு நன்மை என்ற அறிவியல் விளக்கம் ஒரு புறம். பெரிது பெரிதாக போட்டி போட்டுக் கொண்டு வாசலில் கோலம் போடும் இள வயதுப் பெண்களின் திறமை பார்த்து அவர்களை மிஞ்சிக் காட்ட வேண்டும் என்ற ஆவல் இன்னொரு பக்கம், எல்லாம் சேர்ந்து வானதியைப் பார்க்க, அத்தை வீட்டு வாசலில் கோலம் போட ஆரம்பித்தாள்.

அன்றும் வண்ணம் தீட்டுவதற்குத் தேவையான வண்ணப் பொடிகளை கலந்து கொண்டு இருந்த வானதி, வாசலில் அழைப்பு மணி ஒலித்த உடனே தனக்கு கோலம் போடுவதில் துணை புரியும் பக்கத்து

வீட்டுப் பெண் வந்து இருக்கிறாளோ என்ற எண்ணத்தில் வந்து கதவைத் திறக்க, வாசலில் நின்ற விவேக்கைக் கண்டதும் விழி விரித்தாள்.

“நீங்களா...? நீங்க எப்படி இந்நேரத்தில் இங்கே...?”

“வெளியே குளிர் நடுக்குது. வீட்டுக்கு வந்தவங்களை, வாங்க உட்காருங்க காபி சாப்பிடுங்க என்று சொல்வாயா? வாசலிலேயே நிற்க வைத்து விசாரணை கமிஷன் வைப்பாயா?” என்று அவளின் தோளைப் பற்றி நகர்த்தி விட்டு உள்ளே நுழைந்தான் விவேக்.

“ஹேய் விவேக் வா, வா, ரயில் சரியான நேரத்திற்கு வந்ததா? நைட் தூங்கினாயா? சூடா காபி எடுத்துட்டு வரேன். நீ போய் முகம் கழுவிட்டு வா” என்று உற்சாகமாக வரவேற்ற பிருந்தாவைப் பார்த்ததும் வானதிக்கு சுருக் என்று இருந்தது.

“நீ எங்கே இங்கே வந்தாய்?” என்று கேட்க இது தன் வீடு இல்லை. இந்த வீட்டில் அவன் வளர்ப்பு பிள்ளை, தனக்கு எவ்வளவு உரிமை இந்த வீட்டில் இருக்கோ, அந்த அளவுக்கு அவனுக்கும் இங்கே உரிமை இருக்கு என்ற உண்மை உரைக்க அவளின் முகம் வாடியது.

மேற்கொண்டு ஒன்றும் பேசாமல் வாளியில் நீரும். கோல மாவு டப்பாவையும் எடுத்துக் கொண்டு அவள் வாசலுக்கு நகர, விவேக் பிருந்தாவிடம் அவள் எப்படி இருக்கிறாள்?” என்று ஜாடையிலேயே விசாரித்தான்.

“ஒன்றும் சொல்லிக் கொள்வது மாதிரி இல்லை. கஷ்டம் தான்...” என்று சின்னக் குரலில் சொன்ன பிருந்தாவிடம், 'நான் பார்த்துக் கொள்கிறேன்' என்று



கண்களை மூடித் திறந்து, தன் நெஞ்சில் கை வைத்து அழுத்தி நம்பிக்கை ஊட்ட அவர் புன்னகை செய்தார்.

அடுத்த சில நிமிடங்களில் ஒரு கையில் காபி கோப்பையும், அடுத்த கையில் ஒரு பிளாஸ்டிக் நாற்காலியுடன் வெளியே வந்தவன், அவள் கோலம் போடுவதைப் பார்த்தபடி, அமர்ந்து காபியை ரசித்துக் குடிக்க ஆரம்பித்தான்.

அவன் தன்னை பார்க்கிறான் என்பதே அவளின் கைவிரல்களில் சின்ன நடுக்கத்தை உருவாக்க, அவளின் இழைகள் நேராக வர மறுத்தது.

“நீ கோலம் போடு. நான் கலர் கொடுக்கிறேன்...” என்று முணுமுணுப்பாகச் சொல்லி விட்டுப் பக்கத்து வீட்டுப் பெண்ணிடம் தன் கையில் இருந்த கோல மாவு டப்பாவைக் கொடுக்க அவன் புன்னகை விரிந்தது.

அவள் மனதில் நடக்கக் கூடிய போராட்டத்தை அவன் உணர்ந்தே இருந்தான். ஆனாலும் தன்னை வாசலில் கண்டதும் மலர்ச்சி அவனின் நம்பிக்கையை உயிர்ப்போடு வைத்து இருந்தது. அடுத்த சில நிமிடங்களில், தான் கண்ட மலர்ச்சி தன் கற்பனையோ என்று என்னும் அளவுக்குக் காணாமல் போய் இருந்ததுடன், முகத்தில் கூடி இருக்கும் கடுகடுப்பு கவலை அளித்தது.

தான் முதன் முதலாக லைவ் ப்ரோக்ராம் தமிழில் தொகுத்து வழங்கப் போவது தெரிந்தால், 'எனக்காக இந்த உதவி செய்' என்று கேட்டால் ஒருவேளை வரலாம். அவளைக் கூட்டிக் கொண்டு தான் இந்த

இடத்தை விட்டுச் செல்ல வேண்டும். யோசனையை முடித்தவன் பேச்சை ஆரம்பித்தான்.

''உனக்கு முன்னாடியே கோலம் போடத் தெரியுமா? இங்கே வந்து இந்தப் பெண்ணிடம் கற்றுக் கொண்டாயா?'' என்று விசாரிக்க, அவள் அவனை முறைத்து விட்டுத் தோட்டத்திற்கு சென்று 'அந்த கல் பெஞ்சில்' அமர்ந்தாள்.

பின் தொடர்ந்து வந்த விவேக்கும் அவளின் அருகே அமர்ந்து, 'அதென்ன கேட்ட கேள்விக்கு பதில் சொல்லும் பழக்கமே உனக்கு இல்லையா? சென்னையில் இருந்தும் அப்படித்தான் சொல்லாமல் கொள்ளாமல் ஓடி வந்து விட்டாய்?'' என்று விசாரிக்க அவள் கை காட்டி நிறுத்தினாள்.

''எங்க அத்தை வீட்டுக்கு வருவதை நான் ஏன் உங்களிடம் சொல்லணும்?''

''ரொம்பக் கோபமாக இருக்கிறாய் போல? என்னைப் பார்த்த முதல் வினாடி உன் முகத்தில் வந்த ஆயிரம் வாட்ஸ் பிரகாசம் சில நிமிடங்களில் காணாமல் போய் விட்டதே வானதி?''

''இப்ப என்ன வேண்டும் உங்களுக்கு?''

''உனக்கு லக்கி ப்ரைஸ் அடிச்சாச்சு விவேக். என்ன வேண்டும் என்று மேடமே மனசு வந்து கேட்டுட்டாங்க. எது கேட்டாலும் தந்து விடுவாயா வானதி?'' என்றவன் குரலில் கேலி நிரம்பி வழிந்தது.

''நீங்க இங்கே என்ன வேலையா வந்தீங்களோ அதை மட்டும் பாருங்க. என்னை வம்பு வளர்ப்பது அதில்



இல்லை என்று நினைக்கிறேன்...'' என்று அழ முயன்றவளின் கையைப் பற்றி அமர வைத்தான்.

''நான் பார்க்க வந்த வேலையைத் தான் கவனிக்கிறேன். உட்கார் மதி.''

''என்னை மதி சொல்லாதீங்க...''

''சரி சொல்லலை. ஆமா நீ என்ன லூசா? என்னவோ ஏழு கடல் தாண்டி, ஏழு மலை தாண்டி செவ்வாய் கிரகத்தில் இருக்கிற மாதிரி மதுரைக்கு ஓடி வந்து விட்டால், எல்லா பிரச்னையும் காணாமல் போய் விடுமா? நீ எங்கே போனாலும், உன்னைத் தேடி வரணும் என்று நான் நினைத்து விட்டால், உன்னால் தடுத்து நிறுத்த முடியாது வானதி.''

''அத்தையைப் பார்க்க வந்தீங்களா? என்னுடன் வம்புப் பேச வந்தீங்களா?''

''நான் கேட்ட கேள்விக்கு பதிலே சொல்லாமல் ஓடி வந்து பிருந்தாம்மா வீட்டில் சீராடிக் கொண்டு இருக்கும். அவங்க மருமகள் வான்மதியிடம் சில விஷயங்கள் பேச வந்தேன்.''

''மௌனம் பல விஷயங்களைச் சொல்லும். நீங்களாகப் புரிந்து கொண்டு நாகரீகமாக ஒதுங்கி விடுவீர்கள் என்று நினைத்தேன். நீங்க விடாமல் இப்படிப் பின் தொடர்ந்து வந்து இருக்கிறீர்கள்?''

''நான் ஏன் ஒதுங்கணும்? மறுப்பு இருந்தால் தெரிவித்து இருப்பாயே? நான் உன் மௌனத்தை சம்மதம் என்று மொழி பெயர்த்தேன். காரிலா? விமானத்திலா? இரவு ரயிலிலா? எப்ப எப்படிக் கிளம்பலாம்?''

"கொஞ்சம் சீரியஸா பேசறீங்களா? எனக்கு பாட இன்ட்ரெஸ்ட் இல்லை..."

"ஏன்..."

"இந்தக் கேள்விக்கு நான் பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை..."

"உனக்கு என் மேல் கோபம் இருக்கா வானதி...?"

"உங்க மேலே கோபப்பட எனக்கு என்ன உரிமை இருக்கு?"

"அப்ப கோபம் இருக்கு. உன்னிடம் ஒரு விஷயம் சொல்ல வேண்டும்."

"நான் மீண்டும் பாட வருவதற்கும் நம் கல்யாணத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பது தானே?"

"நீ வருவாய் என்று நம்பி, நிறுவனத்தில் நாளைய நிகழ்ச்சியில் கலந்து கொள்வாய் என்று சொல்லி விட்டேன். ஆனால் நீ இங்கே வந்து உட்கார்ந்து கொண்டாய். அதான் உன்னை அழைத்துச் செல்ல வந்து இருக்கிறேன்..."

"நான் சொல்லாமல் உங்களை யார் சம்மதம் சொல்லச் சொன்னது?"

"அது இப்போது முக்கியம் அல்ல! நாளைக்கு ப்ரோக்ராமுக்கு நீ வருகிறாயா இல்லையா என்பது பற்றி தான் இங்கே பேசிட்டு இருக்கோம்."

"முடியாது..." என்று உடனடியாக அழுத்தமான குரலிலும் மறுப்பைச் சொல்ல அவன் முகத்தில் அது வரை இருந்த விளையாட்டு பாவனை மறைந்தது.



"நாளை நடக்கும் அந்த இறுதிப் போட்டிக்கான தொகுப்பாளர் நான் தான். ஏற்கனவே அனுபவம் இருக்கிறது என்றாலும் தமிழில் இது தான் முதல் முறை. அந்த நிகழ்ச்சியில் நீ சிறப்பு விருந்தினராக வரணும் என்பது என் ஆசை. வருவதும் வராததும் உன் இஷ்டம். ஆனால் நீ இல்லாமல் நான் நிகழ்ச்சிக்கு போகப் போவதில்லை" என்றவனை இடைமிட்டாள்.

"இதென்ன உளறல்? அது உங்க வேலை. உங்களுக்கு இஷ்டம் இருந்தால் போங்க. இல்லாவிட்டால் இருங்க. எனக்கென்ன நஷ்டம்?" என்று சொல்லிவிட்டு வானதி எழுந்து செல்ல, அவளைக் கை பற்றி நிறுத்தினான்.

"ஒரு நிமிஷம் நான் சொல்வதை முழுசா கேட்டுட்டு போ நாளை மாலை ஆறு மணிக்கு அங்கே நிகழ்ச்சி துவங்கும். நாலரை மணிக்காவது அங்கே இருக்க வேண்டும். உனக்கு மூன்று சாய்ஸ் இருக்கு. இன்று இரவு ரயிலில் டிக்கெட் இருக்கு. நாளைக் காலை எட்டரை மணி ப்ளைட்டில் டிக்கெட் இருக்கு. அதையும் விட்டால், அதிக பட்சம், ஒன்பது மணிக்கு காரில் கிளம்பலாம். இதில் எதை நீ தேர்வு செய்கிறாய் என்பது உன் இஷ்டம்."

"வேலைக்கு சேர்ந்து ஒரு வாரம் ஆகலை. உங்களை நம்பி லைவ் ப்ரோக்ராம் கொடுத்தால் நீங்க பொறுப்பில்லாமல் பேசிட்டு இருக்கீங்க. இதனால் உங்க எதிர்கால வாழ்க்கையே பாதிக்கலாம். அது உங்க நினைவில் இருக்கா?"

"பாதிக்கும். ஆனால் அதைப் பற்றி நான் கவலைப் படப் போவதில்லை. எனக்கு என் வாழ்க்கை தான்

முக்கியம். டி.வி. காம்பியரர் இல்லாவிட்டால் இந்த உலகத்தில் வேறே வேலையே இல்லையா? நீ இல்லாமல் நான் போகப் போவதில்லை. என்னுடைய போனும் உன் அறையில் தான் இருக்கப் போகிறது'' என்று சொன்னவன் அப்படியே கடை பிடித்தான்.

'சாம்பார் சாதம் பண்ணுங்க. அதுக்கு அரிசி வடகம் பொரிங்க'' என்று பிருந்தாவுடன் பிரியமாகப் பேசினான்.

''சாயங்காலம் டிபனுக்கு என்ன வேண்டும்?'' என்று விசாரித்த பிருந்தாவுக்கு, ''வெங்காய பக்கோடா பண்ணுங்க'' என்று உரிமையாகக் கேட்டான்.

''உனக்கு என்ன ஸ்வீட் வேண்டும் சொல்லு?''

''ஸ்வீட் என்றால் கௌசிம்மா தான்! விதம் விதமா பண்றாங்க. உங்களுக்கு சரியா வராது...''

''டேய்! நீ சின்ன பிள்ளையாக இருந்தபோது உங்க அம்மாவுக்கு சமைக்க கற்றுக் கொடுத்ததே நான் தெரியுமா?''

''அதெல்லாம் எனக்குத் தெரியாது. நேற்று என்பது முடிந்த கதை. இன்றை பற்றி மட்டும் பேசுங்க'' என்றவன் கண்கள் ஓரப் பார்வையை வானதியை ஆராய்ந்தது. அவள் எதுவும் பேசவில்லை.

மாலை டிபனை ருசித்தபடி டி.வி.யில் போட்ட கர்ணன் படத்தை பிருந்தாவுடன் அமர்ந்து ரசித்தான். கர்ணன் இறக்கும் வேளையில் பிருந்தா கண்கலங்க, வானதியைப் பார்த்தான். அவள் கண்களும் கலங்கி இருந்தது. அவர்கள் இருவரையும் அந்த கற்பனை



உலகில் சஞ்சரிக்க விட்டு, தானே சென்று அடுக்களையில் தோசை ஊற்றி எடுத்து வந்து பிருந்தாவைச் சாப்பிட வைத்தான்.

''வானதி நீ எப்போ சாப்பிடுகிறாய்? உனக்கும் ஊற்றட்டுமா?'' என்று விசாரிக்க அவள் கண்கள் கடிகாரத்தைப் பார்த்தது.

எட்டு மணி ஆகப் போகிறது, என்ற நிலையிலும், பத்து மணிக்கு ரயில் இருக்கு கிளம்ப வேண்டாமா?'' என்று ஒரு வார்த்தை பார்வையாலோ ஜாடையாலோ கேட்கவே இல்லை.

ஊருக்குப் பயணப்படுவதை தவிர மற்ற எல்லா கதைகளுடன் பேசித் தீர்த்தான். மல்லிகை உற்பத்தியை லாப நஷ்டக் கணக்கு பற்றி மாமாவிடம் விசாரித்தான்.

சமையல், டி.வி. நிகழ்ச்சிகள், தமிழ் தொடர் கதைகளின் வில்லிகள், பற்றி அத்தையிடம் விவாதம் நடத்தினான்.

வீட்டில் இருந்த வேலைக்கார பாட்டியுடன் திண்ணையில் உட்கார்ந்து மீனாட்சி அம்மன் கோவில், சித்திரைத் திருவிழா, வைகை நதி உருவான வரலாறு ஆகியவை பற்றி கேட்டுக் கொண்டு இருக்க, மணி ஒன்பதைத் தாண்டியது. அவளுக்கு பதட்டம் கூடியது.

ஏற்கனவே மாலை நான்கு மணியில் இருந்து இந்த நிமிடம் வரை அலுவலகத்தில் இருந்து மூன்று அழைப்புகள், கௌசல்யாவிடம் இருந்து இரண்டு முறை, கஸ்தூரியிடம் இருந்து இரண்டு அழைப்புகள், என்று ஏழு மிஸ்ட் கால்கள் இருந்தன.

அந்த அழைப்பு வரும்போது அவள் எடுத்து வந்து அவன் இருக்கும் இடத்தில் வைத்து இருந்து பார்த்தாள், அவன் அந்த போனைத் திரும்பிப் பார்க்கவும் இல்லை, எடுத்துப் பேச முயலவும் இல்லை.

மணி பத்தை நெருங்கும் போது கவலை கூடியது. வழக்கம் போல சாப்பிட்டு விட்டு படுத்த பிறகும் கண்கள் கொட்டக் கொட்ட விழித்து இருந்தது. கதவு தட்டும் ஓசை கேட்க அவள் 'யாரு...' என்றதும் நான் தான் என்ற விவேக்கின் குரல் கேட்டு எழுந்தாள்.

''என்ன இந்நேரத்திலா? ஊருக்குப் போகலாமா என்று கேட்க வந்து இருப்பானோ? என்ன பதில் சொல்வது?'' என்ற தயக்கத்துடன் கதவைத் திறக்க, அங்கே அவன் கையில் ஒரு டம்ளர் பாலுடன் நின்று இருந்தான்.

''நீங்க ஏன்... இதை எல்லாம் எடுத்துட்டு வந்தீங்க...?''

''பாவம் பிருந்தாம்மா, நீயே கொஞ்ச நேரம் அங்கே எங்களோடு பேசிட்டு இருந்துட்டு இதையும் குடிச்சுட்டு வந்து இருக்கலாம். இங்கே ஏதோ புதையல் இருக்கிற மாதிரியும், அதை காக்கி பூதம் மாதிரியும் ஓடி வந்துட்ட'' என்று அவள் கையில் டம்ளரை திணித்தவன் அதற்கு மேல் ஒரு வினாடி கூட நில்லாமல் விரைந்து விட்டான்.

விஜய் தனக்கு செய்தது போலவே இவனும் தனக்கு எல்லாமே பார்த்துப் பார்த்துச் செய்கிறான்?

இந்த பால் கொண்டு வரும் சமாசாரம் மட்டுமில்லை...!

மும்பை வேலையை சென்னைக்கு மாற்றிக் கொண்டு வந்தது...



சென்னையில் தன் வீட்டுக்கு அருகே ஒரு பிளாட் வாங்கியது...

பிருந்தா அத்தையையும் தன் அம்மாவையும் சேர்த்து தனக்கு மூன்று அம்மா என்று சொன்னது...

விஜய் செய்த எல்லாவற்றையுமே இவனும் செய்ய நினைப்பதின் நோக்கம், விஜய்க்கு செலுத்தும் நன்றி மட்டுமா? அந்த செல்போனில் பதிவு பண்ணிய பேச்சு?

அதற்கு என்ன விளக்கம் சொல்லப் போகிறான்? என்று நினைக்கும்போதே அவளின் அலைபேசிக்கு அத்தை வீட்டில் இருந்து அழைப்பு வர வேகமாக எடுத்துப் பார்த்தவளின் விழிகள் விரிந்தது. அவனாகத் தான் இருக்க வேண்டும் எதற்கு அழைக்கிறான்?

## 25

கீழே ஹாலில் இருக்கும் தொலைபேசியில் இருந்து, அழைக்கிறான் என்பது தெரிந்ததாலேயே, அவளின் பதட்டம் கூடியது. போனை எடுத்து, ''ஹலோ...'' என்று சொல்வதற்குள் மூச்சு வாங்கியது.

''சாரி, நான் தான் தூங்கி விட்டாயா?''

''ராத்திரி பத்தரை மணிக்கு இதென்ன கேள்வி?''

''கேள்வி கேட்டால் பதிலைச் சொல்லு...''

''ஆமா.''

''உன்னிடம் பத்து நிமிஷம் பேசணும். அர்ஜெண்ட். கீழே தோட்டத்துக்கு வா'' என்றவன் குரலில் அவசரம்

இருக்க அவளின் வாய் தானாக சரி என்ற வார்த்தையை உதிர்த்தது.

அடுத்த சில வினாடிகளில் அவள் படிகளில் இறங்கும்போதே அவன் வாசலை கடந்து தோட்டத்திற்குள் செல்வது தெரிந்தது. அவனைப் பின் தொடர்ந்து சென்று, காலையில் அமர்ந்து இருந்த பெஞ்சில் அமர்ந்தபடி, "என்ன ஆச்சு?" என்று விசாரித்தாள்.

"கொஞ்ச நேரம் முன்னாடி அம்மா போன் பண்ணி இருந்தாங்க..."

"கௌசிம்மாவா...?" என்ற அவளின் கேள்வியில் வியப்பு வந்து மறைந்தது. அவளும் தன் தாயை அம்மா என்று சொல்வது சந்தோஷம் தந்தது.

"ஆமா..."

"என்ன விஷயம்?"

"அம்மா கோவையில் இருந்து இங்கே வந்து கொண்டு இருக்காங்க" என்று நிறுத்த அவனின் பதட்டத்திற்கான காரணம் புரிய ஆரம்பித்தது.

"நாளைய லைவ் ப்ரோக்ராமில் நிறைய பாடகர்கள், இசை அமைப்பாளர்கள் நிகழ்ச்சிக்கு வருவாங்க என்று சொல்லி இருந்தேன். அதைப் பார்க்க ஆசைப்பட்டு உடனே கிளம்பிட்டாங்க. எனக்கு போன் பண்ணி நான் எடுக்கவில்லை. என்றதும், உங்க அம்மாவிடம் பேசி, சென்னை ப்ரோக்ராமை கட் பண்ணி விட்டு இங்கே இருந்து சென்னை போகலாம் என்று வந்து கொண்டு இருக்காங்க. அதான் எனக்கு என்ன செய்வது என்று புரியலை."



"இதுக்கு நான் என்ன செய்யணும்...?"

"இந்த ப்ரோக்ராம் போவதாக இருந்தால் இரண்டு பேரும் சேர்ந்து தான் போகிறோம் என்று உனக்கு எத்தனை முறை சொல்வது?"

"நீங்க தேவை இல்லாமல் பிடிவாதம் பிடிக்கிறீங்க."

"பிடிவாதம் பிடிப்பது நான் இல்லை. நீதான்..."

"நீங்க இந்த ப்ரோக்ராமை தொகுத்து வழங்க போவதற்கும், நான் வருவதற்கும் என்ன தொடர்பு இருக்கு? உங்களிடம் நான் வருவதாக வாக்குக் கொடுக்கவே இல்லை. நீங்களாக ஒரு கமிட்மென்ட் கொடுத்து விட்டு என்னைக் கட்டாயப்படுத்துவதில் நியாயமே இல்லை."

"நாங்களா முடிவு பண்ணி செய்தது தான் வானதி. ஆனால் எனக்காக, என்னை முன்னிறுத்திக் கேட்கிறேன். நாளைக்கு என்னுடன் வருகிறாயா?"

"விஜய் சொன்னதையே கேட்கவில்லை என்றால் இனி நான் வேறு யார் சொல்லிக் கேட்கப் போகிறேன்? யாருக்காகவும் நான் வருவதாக இல்லை."

"உனக்கு மகா பாரதம் தெரியுமா?"

"ப்ச்! இதென்ன கேள்வி! நம் நாட்டில் இருக்கும் பழம் பெரும் இதிகாசம் அது. அதை தெரியாமல் யாராவது இருப்பாங்களா?"

"எனக்கு இரண்டு வருஷம் முன்பு தான் தெரியும். ஹார்ட் சர்ஜரி முடிந்து, இரண்டு மாதம் ஹாஸ்பிடலில் படுத்து இருக்கும்போது தான் படித்தேன். அதில உனக்கு பிடித்த கதாபாத்திரம் எது?" என்ற அவனின் கேள்வி முடியும் முன்பே, சில மணி நேரம் முன்பு பார்த்து இருந்த

திரைப்படம் அவளின் ஆதங்கத்தைக் கிளப்பி விட்டு இருந்ததால், பதில் பாய்ந்து வந்தது.

"கர்ணன்! பெற்றவளால் கைவிடப்பட்டு, இறைவனால் பலமுறை வஞ்சிக்கப்பட்ட பாவாத்மா. அவன் திறமைக்குரிய மரியாதை கடைசி வரை அவனுக்குக் கிடைக்கவே இல்லை."

"சூப்பர், எனக்கும் அந்த பாத்திரம் பிடிக்கும்..."

"இப்ப எதுக்கு அதைக் கேட்டீங்க?"

"காரணம் இருக்கு. உனக்கும் எனக்கும் மட்டும் இல்லை. பாரதத்தின் நாயகியான பாஞ்சாலிக்குமே பிடித்த பாத்திரம் கர்ணன்..."

"என்ன உளறல் இது? நாளைக்கு நடக்க வேண்டிய வேலையைப் பற்றி பேசாமல் இந்நேரத்தில் இந்த இடத்தில், பேச வேண்டிய விஷயமா இது?"

"நான் உளறவில்லை. பாரதத்தில் வனவாசத்தில் பாண்டவர்கள் வனத்தில் இருந்தபோது, முனிவருக்கான பழம் ஒன்றை மரத்திலிருந்து பறித்து விடுகிறார்கள். அது 12 வருடத்துக்கு ஒரு முறை மட்டும் பழுக்கும் அபூர்வமான பழம். தவத்தில் இருக்கும் முனிவர் அதை மட்டும் தான் சாப்பிடுவார். அவர் வந்து பார்த்து விட்டுப் பழம் இல்லை என்றால், அவரின் கோபத்திற்கு ஆளாக வேண்டுமே. என்ற பயத்தில், அதில் இருந்து தப்பிக்க, கண்ணனை சரணடைவார்கள். அது போல நானும் இப்போ வேறு வழி இன்றி உன்னைச் சரணடைந்து இருக்கிறேன்" என்று இடைவெளி விட்டான்.

"மரத்தில் இருந்து பறித்த அந்தப் பழத்தை மறுபடி ஒட்ட வைக்க வேண்டும் என்றால் அதற்கு



ஒவ்வொருவரும் வெளியே அதுவரை சொல்லாமல், தங்களின் மனதில் புதைத்து வைத்து இருக்கும் இரகசியத்தைச் சொல்ல வேண்டும் என்று கிருஷ்ணர் சொல்வார். அதில் திரௌபதி அந்த இடத்தில், தன் ரகசியம் என்று சொன்னது இது கர்ணன் குந்தி மைந்தனாக இருக்கும் பட்சத்தில், அவனும் தனக்குக் கணவனாக இருப்பான் என்று நினைத்ததுண்டு என்று சொன்னாள்" என்று சொல்ல அவளின் முகத்தில் எந்த பிரதிபலிப்பும் இல்லை.

உணர்ச்சி துடைத்த கற்சிலையாக வெளியே தோற்றம் இருந்தாலும் உள்ளுக்குள் எரிமலை கொந்தளித்து விட்டுக் கொண்டு இருந்தது. பாஞ்சாலி தன் ரகசியத்தை வெளியே சொன்னதைப் போல இவனும் உண்மை சொல்லப் போகிறானா? அந்த தைரியம் இருக்கிறதா?

"இதை எதுக்கு இப்ப என்னிடம் சொல்றீங்க?"

"நானும் என் அடி மனசில் ஒளிந்து இருக்கும் ஒரு ரகசியத்தை இப்ப உன்னிடம் சொல்லப் போகிறேன். இப்ப எனக்கும் ஒரு முக்கியமான காரியம் ஆக வேண்டும்" என்று சொல்ல அவனை கேள்வியாகப் பார்த்தாள் வானதி. அந்த மங்கலான வெளிச்சத்திலும் அவளின் முகத்தில் பிரகாசம் கூடியதை அவனால் உணர முடிந்தது.

"நான் உன்னிடம் வள்ளுவரை மனதில் வைத்து உன் நன்மைக்காக, என்று வேறு யாருக்கும் எந்த இடைஞ்சலையும் நஷ்டத்தையும் தராத சின்னப் பொய் சொல்லி இருக்கிறேன். ஆனாலும் என் மனது உறுத்துகிறது" என்று பேச ஆரம்பித்தவனைப் பனித்த கண்களோடு பார்த்தாள் வானதி.

"இப்ப எதுக்கு இந்த ஒப்புதல் வாக்குமூலம்...''

"நான் உன்னிடம் கொடுத்த போனில் இருந்தது விஜய் பேசியது இல்லை...'' என்று அவள் முகத்தைப் பார்க்க முடியாமல் தலை கவிழ்ந்து முணுமுணுப்பாகச் சொன்ன வாக்கியம் முடியும் முன்பே தெரியும்...'' என்று அவள் வாயில் இருந்து வந்த அந்த ஒற்றை வார்த்தை அவனின் அதிர்ச்சியின் எல்லையைத் தொட வைத்தது.

"தெரியுமா? எப்படி?'' என்று அவன் கேட்க நினைத்த வார்த்தைகளுக்கு ஒலி வடிவம் பிறக்கவில்லை. அவன் அதிர்ச்சியைப் பார்த்து புன்னகையுடன் பேச ஆரம்பித்தவளின் குரலில் தெளிவும் பெருமிதமும் இருந்தது.

"உங்களுக்கு விஜயை எவ்வளவு நாள் தெரியும்? அதிக பட்சம் இரண்டு ஆண்டுகள். அதுவும் ஒரே வகுப்பு இல்லை. சில நாட்கள் சில மணி நேரங்கள் பார்த்துப் பழகி இருப்பீங்களா? ஆனால் எனக்கு விஜயை கிட்டத்தட்ட 25 ஆண்டுகள் தெரியும். அவரை நான் விரும்பி இருக்கிறேன். அணு அணுவாக ரசித்து இருக்கிறேன். அப்படி இருக்கும்போது அவர் பேசியதாக சொன்ன ஒரு குரலை, அவருடையதா இல்லையா என்று கூட கண்டறிய முடியாத முட்டாள் என்றா என்னை நினைத்தீங்க?''

"இல்லை... அப்படி இல்லை.... நான் வந்து... சாரி வானதி...'' என்று விளக்கம் சொல்ல ஆரம்பித்தவன் வாழ்க்கையில் முதன் முறையாக வார்த்தைகளைத் தொலைத்து மௌனமாகி, மன்னிப்பு மட்டும் கோரி நின்றான் விவேக்.

"இந்த உண்மையை நீங்க எப்போ சொல்வீங்க என்று எதிர்பார்த்து நான் காத்திருந்தேன். முதலில் போனில்



விஜயின் குரலைக் கேட்டபோது வந்தது சந்தோஷம். ஆனால் மீண்டும் மீண்டும் கேட்டதும் அதில் இருந்த முரண்பாடுகள் புரிந்தது.''

"நான் நிறைய ஹோம் வொர்க் பண்ணி நீயும் அவனும் இருந்த அந்த வீடியோவை, ஆயிரம் முறை பார்த்து அவன் குரலைக் கேட்டுப் பழகிப் பேசச் சொன்னேன். என்னால் வித்தியாசம் கண்டு பிடிக்க முடியவில்லை. நீ எப்படிக் கண்டு பிடித்தாய்?'' என்றவன் அதிர்ச்சியில் இருந்து மீண்டு இருந்தான்.

"அவரின் உயிர் துடிக்கும் ஓசையை உணர்ந்து இருக்கிறேன். மிமிக்ரி செய்யும் யாரோ ஒருவன் பேசிய பேச்சில் இருக்கும் வித்தியாசத்தை என்னால் உணர முடியாவிட்டால், என்ன பயன்?'' என்று அவள் கேட்க, அவன் சில கணங்கள் உறைந்து நின்றான்.

"நீ விஜயை இன்னும் மறக்கவில்லையா வானதி...''

"என்றுமே மறக்க முடியும் என்று தோன்றவில்லை விவேக்...''

"அப்ப நாளைய ப்ரொக்ராம்...?''

"எப்ப நீங்க விஜய் பின்னால் ஒளிந்து கொள்ளாமல், உங்க தேவைக்காக என்னிடம் கோரிக்கை வைத்தீங்களோ, அப்பவே அதை ஏற்றுக் கொள்ள முடிவு பண்ணி விட்டேன்.''

"வானதி...'' என்றவன் குரலில் குதூகலம் வந்தது.

"உன் திறமை வீணாகப் போகக் கூடாது என்று விஜய் மட்டும் இல்லை நானும் நினைக்கிறேன். அது மேலும் வளர என்னால் ஆன எல்லா உதவியும் நிச்சயம் செய்வேன். நான் ஏற்கனவே சொன்ன மாதிரி நம்

கல்யாணத்திற்கும் சம்பந்தம் இல்லை. அதற்காக நான் அந்தப் பேச்சை விட்டு விடுவேன் என்று அர்த்தம் இல்லை'' என்று வேகமாக பேச அவள் முகம் இருண்டது.

''விவேக்! நான் உங்களுக்குப் பொருத்தமானவள் இல்லை. நீங்க ஒரு நல்ல பெண்ணைப் பார்த்து...'' என்று அவள் தடுமாற, அவளின் உதட்டில் ஒற்றை விரலை வைத்து, மறுப்பாக தலை அசைத்து பேச்சை நிறுத்தினான்.

''ஷ்! வானதி. இந்தப் பேச்சை விடு. முதலில் எனக்கும் கல்யாணம் செய்து கொள்வதில் இஷ்டம் இல்லாமல் தான் இருந்தேன். அதன் பிறகு என்னென்னவோ நடந்து விட்டது. இனி எனக்குக் கல்யாணம் என்று ஒன்று நடந்தால் அது உன்னுடன் தான். இதை உன்னை மிரட்டுவதற்காகச் சொல்லவில்லை. உன்னை மிரட்ட வேண்டிய அவசியம் எனக்கு இல்லை...''

''நான் விஜயுடன் வாழ்ந்து கொண்டு இருக்கிறேன் விவேக்...''

''அது கனவு வானதி. நீ அதை கனவு என்று உணர்ந்து என்று மீண்டு வருகிறாயோ, அதுவரை நான் உனக்காகக் காத்திருப்பேன். நாளை விமானத்தில் போகலாம் என்று நினைத்தேன். அம்மாவும் வருவதால், பிருந்தா அம்மாவையும் கூட்டிட்டு நாளைக்கு அதிகாலை காரில் சென்னைக்குக் கிளம்பலாமா?'' என்று கேட்க அவனது வாக்குறுதியில் அவள் கண்கள் நீரில் மின்னினாலும், இதழ்களில் புன்னகையும் சேர்ந்தே மலர, தலை அசைத்தாள்.

''ஆரிய கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணு விவேக்...''

''யாரையும் கெடுத்து என் காரியம் சாதிக்க நினைக்க மாட்டேன். என் ஆசை எல்லாம் வின் வின் (win - win)



மாதிரி தான் இருக்கும். நீ தூங்க போ. நான் அம்மா வரும் வரை காத்திருப்பேன்'' என்று சொல்ல அவள் தலை அசைத்து விட்டு மாடிக்குச் சென்றாள்.

சந்தோஷப் பெருமூச்சு ஒன்றை வெளியேற்றி தான் அமர்ந்து இருந்த பெஞ்சில் கால் நீட்டி படுத்து கண்களை மூடி சில நிமிடங்கள் அந்த வீட்டுக்குள் சென்றவன் அவசரமாக அம்மாவை அழைத்தான்.

அது நள்ளிரவு நேரம் என்பதை மறந்து, ''அம்மா! வானதி நாளைக்கு சென்னைக்கு நம்மோடு வர ஒத்துக் கொண்டாள். நாளைக்கு அவளும் பொது மேடையில் இசை தொடர்பான நிகழ்ச்சியில் பங்கேற்கப் போகிறாள். அந்த நிகழ்ச்சியை நான் தொகுத்து வழங்கப் போகிறேன். ஐ ஆம் சோ ஹேப்பி...'' என்று விவேக் போட்ட உற்சாகக் கூச்சலில் பக்கத்து அறையில் படுத்து இருந்த பிருந்தாவும் எழுந்து வந்து விட்டார்.

''நிஜமாவா சொல்கிறாய்? உடனே அவங்க அம்மாவுக்கு சொல்லுடா. பாவம் அங்கே தனியா உட்கார்ந்து வருத்தப்பட்டுக் கொண்டு இருப்பாங்க...'' என்று எதிர் முனையில் கௌசல்யா குதூகலிக்க, அந்த செய்தி தந்த சந்தோஷத்தில், விவேக்கின் கன்னத்தில் பளிச் என்று ஒரு முத்தம் வைத்தார் பிருந்தா.

## 26

விவேக் கௌசிம்மாவை போனில் அழைத்த அந்த உற்சாக ஒலி, மேலே விஜயின் அறையில் படுத்துத்

தூங்குவதாக பாவனை செய்து கொண்டு இருந்த வானதியின் காதுகளில் விழுந்தது. அவன் தன் அம்மா விடம் உற்சாகமாக தகவல் பகிர்ந்து கொண்டது காதில் விழுந்த பிறகே, தான் இங்கே வந்த பிறகு அம்மாவிடம் பேசாதது வானதிக்கு உரைத்தது.

அவசரமாக அலைபேசியைத் தேடி எடுத்து அம்மாவை வீட்டு இணைப்பில் அழைத்தாள். போனை எடுத்ததும் கஸ்தூரி சொன்ன ''சொல்லு விவேக்...'' என்ற வார்த்தையைக் கேட்டதும் அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

தன்னைப் பெற்ற தாய் கூட அவன் அழைப்பை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார். தன்னிடம் பேசவில்லை. எல்லோர் மனதையும் அவன் கவர்ந்து இருக்கிறான் என்ற உண்மை சுட்டது. அவன் நல்லவன் தான்! ஆனால் தன் மனமே அல்லவா தனக்கு எதிராக வேலை செய்கிறது?

வான்மதியின் அமைதி கஸ்தூரியை சுதாரிக்க வைத்தது. விவேக் இல்லை போல இருக்கே? அவனாக இருந்தால் நிமிஷத்திற்கு எண்பது வார்த்தைகள் என்ற கணக்கில் கொட்டித் தீர்த்து இருப்பான்.

''வானதி...'' என்று தயக்கத்துடன் கேட்க, 'ம்ம்ம்..' என்ற மகளின் முணுமுணுப்பு காதில் விழுந்தது. அதில் இருந்த வருத்தம் புரிந்தது.

''நீ இந்த நேரம் பேசுவாய் என்று நான் எதிர்பார்க்க வில்லை. விவேக் பத்து மணிக்கு மேலே கூப்பிடுகிறேன் என்று சொல்லி இருந்தான். சாரி வானதி.''

''நான் தான் உங்களிடம் இந்த பத்து நாளா பேசாத துக்கு சாரி சொல்ல வேண்டும்.''



''ஆரம்பத்தில் இருந்தே உனக்கு அப்பா, அத்தை எல்லாம் ரொம்ப செல்லம் கொடுத்ததனால், நான் உன்னிடம் கண்டிப்பு காட்டிப் பழகி விட்டேன். திடீர் என்று என்னால் இறங்கி வந்து உன்னுடன் பேச முடியலை. ஆனால் உனக்கு ஒரு நல்லது நடக்கணும் என்று நானும் பிருந்தாவும் ஆசைப்படுகிறோம் வானதி. விவேக்கின் எண்ணமும் அது தான்.''

''நான் அத்தை, விவேக், கௌசிம்மா நாலு பேரும் நாளைக் காலை ஆறு மணிக்கு கிளம்பி, ஒன்று அல்லது இரண்டு மணிக்கு சென்னை வந்து விடுவோம். மதிய சாப்பாடு அங்கே ஏற்பாடு பண்ணிடுங்க. அதை சொல லத்தான் கூப்பிட்டேன்.''

''வானதி... நீ... நீ சொல்றது நிஜமா...? நாளைக்கு சாயங்காலம் அந்த ப்ரோக்ராமில் கலந்து கொள்ள சம்மதம் சொல்லி விட்டாயா?''

''ப்ரோக்ராமுக்கு மட்டும் சம்மதம் சொல்லி விட் டேன். அப்படியே நீங்களும் விழாவுக்கு வாங்க என்று சொல்லத்தான் போன் பண்ணினேன். வச்சுடட்டுமா?'' என்று கேட்டு அவரின் அனுமதியை எதிர்பார்க்காமல் வைத்தும் விட்டாள்.

அடுத்த கஸ்தூரி என்ன கேட்கக் கூடும் என்பதை ஊகித்து இணைப்பைத் துண்டித்த வான்மதிக்கு அம் மாவை எண்ணிக் கவலையாக இருந்தது. ஒரு தாயாகத் தனக்கு எவ்வளவோ செய்து இருக்கும் அவருக்கு தான் என்ன திரும்பி செய்யப் போகிறோம்? இரவு முழுவதும் யோசனை நீண்டது.

* * *

நள்ளிரவில் வீடு வந்து சேர்ந்த கௌசல்யாவை வரவேற்க வாசலில் காத்திருந்த விவேக்கைப் பார்த்ததும் "என்டா, இன்னும் தூங்காமல் விழித்து இருக்கிறாய்?" என்று மகனை கட்டிக் கொண்டார்.

"உங்களைப் பார்க்கத்தான். உங்க மருமகள் மனம் மாறி என் பக்கம் முதல் அடி எடுத்து வைத்து இருக்கிறாள் என்ற சந்தோஷத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்ளாமல் எனக்கு எப்படித் தூக்கம் வரும்?" என்று சொன்னவனின் இரண்டு கன்னங்களையும் பற்றி இழுத்து நெற்றியில் முத்தமிட்டார் கௌசல்யா.

"ஷப்பா! உங்களுக்காக குனிந்து குனிந்து எனக்கு முதுகு வலி வந்தது தான் மிச்சம். அதென்ன நெற்றியில் கிஸ் பண்ணனும் என்று உங்களுக்கு வேண்டுதல்? பிருந்தாம்மா மாதிரி கன்னத்தில் கிஸ் பண்ண வேண்டியது தானே?" என்று கேலியாகச் சொல்ல அப்போது தான் அவர் பிருந்தாவைப் பற்றிய நினைவு வந்து திரும்பினார்.

"ஹய்யோ, நான் உங்களைப் பார்க்கவே இல்லை. பையனைப் பார்த்த சந்தோஷத்தில் ஒன்றுமே பரியலை..."

"பரவாயில்லை. உன் பையனே அப்படி தான் இருக்கான். தாயைப் போல பிள்ளை. உள்ளே வா..." என்று அழைத்துப் போனார்.

உள்ளே சென்றாலும் மூவரும் தூங்கவே இல்லை. மறுநாளைய நிகழ்ச்சிகள் குறித்து, அடுத்து தொடர்ந்து நடக்கக் கூடிய திருமண ஏற்பாடுகள் குறித்த' பேசிய வண்ணம் பொழுதும் விடிந்தது.



அடுத்த நாள் காலை ஐந்து மணிக்கு வான்மதியின் அறையில் ஆஜர் ஆகி இருந்தார் கௌசல்யா.

"வானதி, நீ இன்று டி.வி.யில் நேரடி ஒளிபரப்பில் வருகிறாய் என்று உனக்காக நான் கோவையில் இருந்து ஸ்பெஷலா ஒரு பட்டுப் புடவை வாங்கி வந்து இருக்கிறேன். பிடிச்சு இருக்கா பாரு" என்று அது பரிசத்திற்கான பரிசு என்பதைச் சொல்லாமலேயே, பார்சலை நீட்டிய வேளையில் வானதியின் அன்றைய காலைப் பொழுது புலர்ந்தது.

அவரின் பரிசான, கிளி பச்சை நிறத்தில் மெருன் வண்ண அடர் கரை இட்ட ஜரிகை பட்டுப் புடவை, அதற்குப் பொருத்தமான சிவப்பு கல் டாலர் கோர்த்த கழுத்தை ஒட்டிய சங்கிலி, அணிந்து அழகு தேவதையாக மாடிப் படிகளில் இறங்கி வந்த அதே நேரம் கீழே இருந்த அறையில் இருந்து வெண்பட்டு வேஷ்டியில், வெண் பட்டு சட்டையில், பட்டு அங்கவஸ்திரத்துடன் சந்தனக் கீற்றுடன் வெளியே வந்த விவேக்கைப் பார்த்து திகைத்தாள் வானதி.

"என்ன அப்படிப் பார்க்கிறாய்? இது தான் மாலையில் எனக்கான காஸ்டியூம் சரியா நிற்கிறதா என்று இப்பவே ஒத்திகை பார்த்துக்கறேன். பயண நேரம் சமாளித்து விட்டால், ஒரு கான்பிடன்ஸ் வரும் இல்லையா? பயப்படாதே. உள்ளே பெர்முடாஸ் போட்டு இருக்கிறேன்" என்று கண சிமிட்டினான்.

"ஹய்யோ... உங்களை..." என்ற சின்ன உதட்டுச் சுழிப்புடன் விலகிச் சென்ற வானதியின் முகத்தில் வெறுப்பின் சாயலோ, கோபமோ இல்லை என்பது அங்கே இருந்த அனைவருக்குமே புரிந்தது.

கிளம்புவதற்கு முன்பு கௌசல்யாவின் இருபுறமும் விவேக்கும் வானதியையும் உட்கார வைத்த பிருந்தா, அவர்களுக்கு உப்பும் மிளகாயும் வைத்து சுற்றி பின்னால் எரிந்து கொண்டு இருந்த வெந்நீர் அடுப்பில் போட்டு திருஷ்டி கழித்த வேளையில் நான்கு பேரின் கண்களுமே பனித்தது.

* * *

சென்னையில் நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்த விழா மேடையின் பின் புறத்தில் இருந்த அறையில், விவேக்கும் வான்மதியும் ஒரே சோபாவில் அமர்ந்து பேசிக் கொண்டு இருக்க, அவளின் முகத்தில் பதட்டம் தெரிந்தது.

''மேடையில் பாடி ரொம்ப நாளாச்சு. டென்ஷனா தான் இருக்கு. நீங்க சொல்லிட்டீங்க என்பதற்காக வந்து விட்டேன்'' என்றவளின் கை பற்றி அழுத்தினான்.

''வானதி. இது நீ கலந்து கொள்ளும் போட்டி இல்லை. போட்டியாளர்களின் வெற்றி தோல்வியை நீ நிர்ணயம் செய்யப் போவதும் இல்லை. நீ சிறப்பு விருந்தினர். பாடுறவங்களைப் பற்றி உன் அபிப்ராயம் கேட்பாங்க. உனக்கு மனதில் தோன்றியதில் ஒண்ணு ரெண்டு விஷயத்தைப் பாராட்டுதலா சொல்லு. முடிந்தால் சில ஆலோசனைகளை சொல்லு. அது போதும்'' என்று ஆறுதல் உரைக்க அவள் கொஞ்சம் தெளிந்தாள்.

''ம்ம்ம்... ஓகே...'' என்றவளின் குரலில் நேரடி ஒளிபரப்பு என்பதால் இன்னும் பதட்டம் கொஞ்சம் மிச்சம் இருந்தது.

''ஹேய்! நீ இவ்வளவு டென்ஷனா இருந்தால் நானே பேசும்போது நடுவில் உன்னைப் பாட அழைப்பேன்'' என்று மிரட்ட அவள் புன்னகை செய்தாள்.



''என்னை மிரட்டி பணிய வைக்க முடியாது விவேக். நீங்க என்னைப் பாடச் சொன்னால், நான் உங்களைக் கம்பெனி கொடுக்கச் சொல்வேன்...'' என்று பதில் கொடுக்க அவன் மெச்சுதலாக அவளைப் பார்க்கும் போதே மேடையில் சக அறிவிப்பாளரின் குரலில் நிகழ்ச்சி துவங்கும் ஒலி கேட்டது.

''நிகழ்ச்சி ஆரமபித்து விட்டது. ரெண்டு நிமிஷத்தில் நான் மேடைக்குப் போய் விடுவேன். நான் போய் ஜட்ஜஸ் அறிமுகம் கொடுத்து முடித்த பிறகு, உன்னை அழைப்பேன். நிதானமாக நடந்து வா. முகத்தில் ஸ்மைல் இருக்கட்டும். ஆல் தி பெஸ்ட்...'' என்று அவன் அவளிடம் கட்டை விரலைத் தூக்கிக் காட்டி அவசரமாக சொல்லிவிட்டு எழுந்தான்.

வணக்கம்! வந்தனம்! நமஸ்காரம்! சுஸ்வாகதம்! சூப்பர் சிங்கர் நிகழ்ச்சியின் இந்த பிரும்மாண்டமான இறுதி போட்டியின் நேரடி ஒளிபரப்பிற்கு உங்களை அன்புடன் வரவேற்கிறோம்.

இன்றைய நிகழ்ச்சியில் நேயர்களுக்கு இரண்டு சர்ப்ரைஸ் காத்திருக்கு! என்ன என்று யோசிக்கிறீங்களா?

முதல் சர்ப்ரைசை நான் அறிமுகப்படுத்துகிறேன்.

அடுத்த சர்ப்ரைசை அவர் அறிமுகப் படுத்துவார்.

மும்பையில் இரண்டு ஆண்டுகள், பிரபல நியூஸ் சேனலில் தொடர்ந்து ஒன்பது மணி செய்தி விவாதத்தை ஆங்கிலத்தில் பிரமாதமா நடத்தி, தமிழர்களின் பெருமையை அங்கே நிலைநாட்டிய பிரபல செய்தி தொகுப்பாளர் மிஸ்டர் விவேகானந்தன், சமீபத்தில் நமது தொலைக்காட்சியில் இணைந்துள்ளார். அவருடன்

இணைந்து இந்த இசை நிகழ்ச்சியை தொகுத்து வழங்குவதில் சந்தோஷம் எனக்கு!

வெல்கம் மிஸ்டர் ஆனந்த்...! என்ற அந்த அறிவிப் பாளரின் அழைப்பு வானதிக்குள் மின் அதிர்வுகளை ஏற்படுத்தியது...

'ஆனந்த்...!'

விவேக் செல்வதற்கு முன்பு நின்று திரும்பி, அவளை பார்த்து சின்ன கண் சிமிட்டலுடன் கை அசைத்து விட்டு முன்னால் மேடைக்கு செல்ல அவள் உறைந்து இருந்தாள்.

''ஆனந்த்... சொல்லுங்க... பொதுவா எல்லோரும் ஆங்கில, ஹிந்தி தொலைக்காட்சிகளில் பணி புரிந்தால் ஃபீ அதிகமா இருக்குமே என்று இங்கே இருந்து வாய்ப்பு தேடி வடக்கே செல்ல ஆசை இருக்கும். ஆனால் நீங்க, எப்படி அங்கே இருந்து இங்கே வந்தீங்க?''

''இது சூப்பர் சிங்கர் இறுதி போட்டி தானே? என்னை பேட்டி எடுக்கும் நிகழ்ச்சி இல்லையே? நாம் நம் நீதிபதிகளையும் சிறப்பு விருந்தினரையும் அழைக்க லாமே...?'' என்று அந்த கேள்விக்கு பதில் சொல்லாமல் தவிர்க்க முயல, அவள் விடுவதாக இல்லை.

''பதில் சொல்லுங்க சார். அப்படி என்ன இங்கே சென் னையில் உங்களை ஈர்த்தது என்று ரெண்டே வரியில் சுருக்கமா சொல்லுங்க.''

''தமிழ் தான் என் மூச்சு, தமிழ் தான் என் பேச்சு என்று எல்லாம் சொல்வேன் என்று எதிர்பார்த்தால் அது தப்பு. நான் தமிழன். எங்க அம்மா அப்பா. இன்னும் என் நலம் நாடும் பலருடன், நான் விரும்புற சிலரும் இங்கே



இருக்காங்க. அதுக்காக வந்தேன். இங்கே என்னை பற்றிய பேச்சு எதற்கு? மேடையை அலங்கரிக்க வந்த நிலவை பற்றி பேசலாமா?''

''கட்டாயம்! நீங்களே அறிமுகப்படுத்துங்க அந்த இசை தாரகையை...''

''இசை நிலவை அழைக்க பாட்டாவே பாடி விட லாமா மித்ரா...?''

''பாடலாம். ஆனால் பாட போவது யாரு ஆனந்த்?''

''நான்தான்...?'' என்று சொல்லிவிட்டு இசை குழு வினருக்கு கை காட்ட, இசை ஒலிக்க ஆரம்பித்தது.

''வெண்ணிலவே வெண்ணிலவே விண்ணை தாண்டி வருவாயா...?

விளையாட ஜோடி தேவை...

இந்த பூலோகத்தில் யாரும் பார்க்கும் முன்னே

உன்னை அதிகாலை அனுப்பி வைப்பேன்...

என்று ஆரம்பித்து அதே டியூனில் தொடர்ந்து

வான்மதியே வான்மதியே....

ஆடிட்டோரியம் வருவாயா...

உனக்காக காத்திருக்கிறோம்...''

என்று இசையால் வரவேற்ற பின்பு, உற்சாக பேச்சுக்கு உடனே மாறினான்.

உங்க வருகையால் இந்த இசை அரங்கம் மேலும் மேலும் அழகு பெறுகிறது! கர்நாடக இசையில் ஆரம் பித்து, திரை உலகில் மின்னி, சிறிய இடைவெளிக்கு பிறகு சின்ன திரையில் தோன்ற வருகை தந்து இருக்கும்

இசை நிலவை இந்த அரங்கம் தன் பலத்த கரகோஷத்தால் வரவேற்கிறது.

வெல்கம் மிஸ் வான்மதி...! என்ற விவேக்கின் உற்சாகம் பொங்கி வழிந்த அந்த குரலில், மனப்பூர்வமான வாழ்த்துக்களுடன் கூடிய வரவேற்பு, அவளின் மனதில் நிறைந்து கண்களில் ஈரமாக கசிய ஆரம்பித்தது.

நடுங்கும் கால்களுடன் மெல்ல அடி எடுத்து மேடையில் நுழைந்த வான்மதியை, பலத்த கை தட்டலுடன் அந்த மேடை வரவேற்க, இரண்டாம் வரிசையில் அமர்ந்து இருந்த மூன்று தாய்மார்களின் கண்களிலும் தாரை தாரையாக கண்ணீர் பெருகி வழிந்தது.

## 27

பிரும்மாண்டமான அந்த மேடையில், தொலைக்காட்சி மூலமாக தமிழகத்தின் அனைத்து வீடுகளின் வரவேற்பறைக்கும் சென்று விட்ட வான்மதியின் சின்ன திரை பிரவேசம், அவளின் இசை பயணத்தில் ஒரு நல்ல திருப்பு முனையாக அமைந்தது.

இசை விழாக்களில், சபா கச்சேரிகளில் ஏற்கனவே பாடி இருந்த அனுபவம் நிறையவே அவளுக்கு இருந்த போதிலும், தொலைக்காட்சி நிகழ்ச்சியில் ஒரு நேரடி ஒளிபரப்பில் கலந்து கொண்டு வெற்றிகரமாக நிகழ்ச்சியை முடித்து விட்டு மேடையில் இருந்து இறங்கிய



விவேகானந்தனையும் வான்மதியையும் கௌசல்யாவும் பிருந்தாவும் கட்டி அணைத்து கொள்ள, கஸ்தூரி கண்களில் வழிந்த நீரை துடைத்து கொண்டார்.

''நாங்க வீட்டுக்கு முன்னால் போகிறோம். ஒரு பதினைந்து நிமிடம் கழித்து வீட்டுக்கு வாங்க'' என்று கஸ்தூரி சொல்ல கௌசல்யாவும் பிருந்தாவும் அதை ஆமோதிக்க, விவேக் வானதியை பார்த்து புன்னகை செய்தான்.

''போகும் வழியில் பீச்சில் பத்து நிமிஷம் நின்று விட்டு போகலாமா வானதி. இங்கே கூட்டத்தில் வேண்டாம்...'' என்று சொல்ல அவளுக்கும் அது பிடித்தே இருந்தது. மூன்று தாய்மார்களின் கண்ணில் தெரிந்த கண்ணீரும், முகத்தில் தெரிந்த பிரகாசமும் அவளை உலுக்கி இருந்தது. அவனிடம் தனியாக பேச வேண்டும் போல இருந்தது.

கடற்கரையில் இறங்கி மணலில் நடக்கும்போது, ''என்னுடைய முதல் லைவ் ப்ரோக்ராம் அட்டகாசமா முடிநததுக்கு, நீ வந்தது தான் முதல் முக்கிய காரணம். தாங்க்ஸ் வானதி'' என்று சொல்ல அவள் அமைதியாக நடந்தாள்.

மித்ரா, அவனை ஆயிரம் முறை மேடையில் ஆனந்த் என்று அழைத்தது அவளுக்குள் மின் அதிர்வுகளை உருவாக்கி இருந்தது. அந்த அதிர்ச்சி இன்னும் விலகவில்லை. அவள் சிந்தனையில் இருந்தாலும், அவன் பேச்சு இடைவெளியின்றி தொடர்ந்தது.

''போட்டியில் கலந்து கொண்டவர்கள் பாடிய மூன்று பாட்டுமே எனக்கு ரொம்ப பிடித்து இருந்தது. அப்படியே என் மனசில் இருந்ததை சொல்லியது தெரியுமா?'' என்று உற்சாகமாக சொன்னவனை கேள்வியாக பார்த்தாள்.

''ஒரு பொய்யாவது சொல் கண்ணே... உன் காதல் நான்தான் என்று ''அது என் மனசில் இருக்கும் எண்ணம் இல்லையா?'' என்று அவன் வேகமாக இடையிட அவள் திகைப்புடன் பார்த்தாள்.

''உண்மையை சொன்னால் என் காரக்டருக்கு இந்த மாதிரி சோக பாட்டு ஒத்து வராது என்பது வேறே விஷயம். ஆனால் அதில் சொல்ல வந்த விஷயம் எனக்கு பிடிச்சது. அடுத்த பாட்டு 'தங்க தாமரை மகளே' தான் சூப்பர். செமையா பாடினான் இல்லை அந்த பையன்...''

''சுருதி சுமார் தான். அதனால் தான் அவன் இரண்டாம் இடம் பிடித்தான்...''

''அட சுருதியை விட்டு தள்ளு. பாவனை சூப்பர். அப்படியே உருகி உருகி பாடினான் தெரியுமா? ஆனால் முதலிடம் பிடித்த 'ஒரு பாதி கதவு நீயடி மறு பாதி கதவு நானடி' பாடல் கிளாஸ். உனக்கு பிடித்ததா?'' என்றவன் கண்கள் அவளை ஊடுருவியது.

அவள் வாய் வார்த்தைகளால் பதில் சொல்லவில்லை என்றாலும் கண்ணில் தெரிந்த மின்னல், 'அவளுக்கு பிடித்தது' என்று பதில் சொன்னது.

''என்ன ரொம்ப அமைதியாக வருகிறாய்? உனக்கு சந்தோஷமா இல்லையா? ப்ரோக்ராமில் கூட ரொம்ப கம்மியா பேசின மாதிரி இருந்தது. உன்னைத் தொந்தரவு செய்கிறேனா?''

''உங்களை ஏன் அந்த மித்ரா ஆனந்த் என்று கூப்பிட்டாள்?''



''மும்பையில் விவேக் நாராயணன் என்று சொல்லி பழக்கம். தமிழில் சிம்பிளா இருக்கட்டும் என்று அப்படி கூப்பிட சொன்னேன். என்ன ஆச்சு?''

''நான் விஜயை அப்படி கூப்பிடுவேன்...'' என்று சொல்ல அவன் நடையை நிறுத்தி விட்டு பார்த்தான்.

''இனிமேல் அப்படி கூப்பிட வேண்டாம் என்று சொல்லி விடட்டுமா? உனக்கு பிடிக்காத எதுவும் நான் செய்ய மாட்டேன்.''

''நாம் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறோம் என்று எல்லோரும் ரொம்ப எதிர்பார்ப்புடன் காத்திருக் கிறாங்க....''

''ஓகே... நீ சம்மதம் சொன்னால் உடனே பண்ணிக் கலாம்...''

''ப்ச்! அதில் எனக்கு இஷ்டம் இல்லை என்று எத்தனை முறை சொல்வது?''

''கல்யாணத்தில் இஷ்டம் இல்லையா? என்னை கல்யாணம் செய்து கொள்வதில் இஷ்டம் இல்லையா?''

''கல்யாணத்தில் இஷ்டம் இல்லை.''

''அதற்கான காரணத்தை நான் தெரிந்து கொள்ள லாமா?''

''என்னால் இயல்பாக யாருடனும் மனம் ஒன்றித் திருமண வாழ்க்கை வாழ முடியும் என்று தோன்ற வில்லை.''

''யூ மீன் தாம்பத்திய உறவு கொள்ளத் தயக்கமா இருக்கு. கரெக்டா..?'' என்று நேரடியாக கேட்டவன்

முகத்தை பார்க்காமல் வேறு புறம் திரும்பி 'ஆமாம்' என்று சொல்ல அவன் தோளை குலுக்கினான்.

"வெல், என்னை தவிர வேறே யாரா இருந்தாலும் இந்த கண்டிஷனுக்கு ஒத்துக்க மாட்டாங்க. என்னை விட உனக்கு பெட்டர் மணமகனே கிடையாது. நாம் நண்பர்களாக இருப்போம். கொஞ்சம் முன்னாடி அதை தானே நான் சொன்னேன். உனக்கு பிடிக்காத எதுவுமே எனக்கும் வேண்டாம். அதில் கணவன் மனைவி உறவும் சேர்ந்தது தான். இப்ப கல்யாணத்துக்கு ஓகே சொல்லிடலாமா?" என்று கேட்க அவள் திகைத்தாள்.

"இன்னும் என்ன யோசனை வானதி...?"

"நான் கொஞ்சம் யோசிக்கணும்..."

"நான் நல்லவனா இல்லையா என்பதைப் பற்றியா?"

"ச்சே ச்சே... அதெல்லாம் இல்லை..."

"அப்ப டவுட் எங்க அம்மா மேலேயா? நான் முன்னாடி ஹிந்தி பொண்ணு மருமகளாக வந்தால் சண்டை போட பாஷை தெரியாது என்று எங்க அம்மாவைப் பற்றிச் சொன்னது சும்மா ஜோக் வானதி. எங்க அம்மா சண்டை எல்லாம் போட மாட்டாங்க..."

"கடவுளே, அதெல்லாம் எனக்கு சந்தேகம் இல்லை. என்னால் உங்களுக்கு நல்ல மனைவியா... உங்க அம்மா அப்பாவுக்கு நல்ல மருமகளா இருக்க முடியுமா என்று தான் யோசிக்கிறேன். அம்மா இங்கே தனியா..."

"உங்க அம்மா இங்கே தனியா இருப்பாங்க என்ற கவலையே வேண்டாம். எங்க அம்மா அப்பா நம்மளை கோவைக்கு வர சொல்ல மாட்டாங்க. நாம் இங்கேயே



சென்னையிலேயே உங்க அம்மா பக்கத்திலேயே இருந்து அவங்களை பார்த்துக்கலாம். டோன்ட் வொரி."

"அதில்லை விவேக். எனக்கு என் மனசை சரி பண்ணிக்க ஒரு மூன்று மாதம் அவகாசம் தரக் கூடாதா?"

"தரலாமே! தப்பில்லை. மூன்று மாதம் கழித்து கல்யாணம் பண்ணிக் கொள்ளலாமா?"

"மூன்று மாதம் கழித்து என் முடிவை சொல்கிறேன் என்று சொன்னேன்" என்று அவள் திருத்த அவன் தோளை குலுக்கினான்.

"இன்று டிசம்பர் 27 மார்ச் மாதம் 27 ஆம் தேதி வரை நான் உன்னை கல்யாணம் பண்ணிக்கோ என்று தொந்தரவு பண்ண மாட்டேன். அது வரை சந்தோஷமா இரு. இப்ப கிளம்பலாமா?" என்று எழுந்து பின்புறம் ஒட்டி இருந்த மணலை தட்டி விட அவளும் எழுந்தாள்.

* * *

டிசம்பர் 28

காலை ஆறு மணி!

வீட்டில் இருந்து கிளம்பி கடற்கரை வரை மெதுவாக நடந்து விட்டு வரலாம் என்று வான்மதி கிளம்பிய ஐந்தாவது நிமிடம் கௌசல்யா, விவேக்கை அடித்து எழுப்பினார்.

"டேய்! வானதி வாக்கிங் போறா, நீயும் கிளம்பி போடா சோம்பேறி" என்று அடித்து பிடித்து தள்ளி விட அடுத்த சில நிமிடங்களில் வந்து அவளுடன் ஓடி வந்து சேர்ந்தான் விவேக்.

''ஹாய்! என்ன ஜாகிங்கா?''

''இதுக்கு பேர் ஜாகிங்கா...?''

''சரி விடு. பிரிஸ்க் வாக்கிங்...''

''நீங்க எங்கே இங்கே...?''

''என்ன இப்படி கேட்டு விட்டாய்? தினமும் அதிகாலையில் நான் தான் சேவலை எழுப்பி 'பொழுது விடிந்து விட்டது' என்று கூவ சொல்வேன் தெரியுமா?''

''இந்த ரீல் எல்லாம் போதும். நேற்று காரில் வரும் போது உங்க அம்மா உங்க தூக்கம் பற்றி கதை கதையா சொன்னது எனக்கு இன்னும் மறக்கவில்லை.''

''நாங்க சொன்னால் ரீல். அதையே கவிஞர்கள் எழுதி பாட்டா பாடினால், சூப்பர் என்று சொல்வீங்க. நேற்று டிவியில் அஜித் கூட 'அதிகாலையில் சேவலை எழுப்பி அதை கூவென்று சொல்கிறேன்' என்று பாடினாரே'' என்ற அவன் வாக்கியம் முடியும் முன்பே அவளின் நடை நின்று இருந்தது.

''ஹேய் என்ன ஆச்சு...?'' என்று பதட்டத்துடன் கேட்க அவள் அங்கேயே சரிந்து அமர்ந்தாள்.

''என்ன வானதி. நான் ஏதாவது தப்பா சொல் விட்டேனா? இது ஜஸ்ட் ஜோக். எதுக்கு கண் கலங்குது?''

''அந்த படம் பார்த்தீங்களா...?''

''இல்லை, நான் பொதுவா படம் பாரப்பதில்லை. பாட்டு தான் கேட்பேன். ஏன் கேட்கிறாய்?''



''அந்த படத்தில்... அஜித்... செத்துடுவார்...'' என்று சொன்னவளின் குரலில் கண்ணீர் இருக்க அவன் செய்வதறியாது திகைத்தான்.

அங்கே சுற்றி இங்கே சுற்றி விஜயிடமே வந்து பேச்சு நிற்கிறதே...?

* * *

டிசம்பர் 31

மாலை நான்கு மணி!

வீட்டில் இருக்கும் தொலைபேசி அழைக்க, எடுத்தாள் வான்மதி. பேசியது விவேக்.

''என்ன விவேக், அம்மாவை கூப்பிடட்டுமா?''

''எதுக்கு அம்மா, நான் உன்னிடம் தான் பேசணும். இன்று இரவு டிவி ஸ்டேஷனில், புத்தாண்டு கொண் டாட்டாங்கள் நடைபெறும். நீ வருகிறாயா?''

''இல்லை, நான் வரலை. ஆங்கில புத்தாண்டை ஏன் நாம் கொண்டாடணும்? தமிழ் கலாச்சாரத்திற்கு இது எல்லாம் தேவையா?'' என்று அவள் வேகத்துடன் கோபமாக பேச அவன் வியப்படைந்தான்.

''ஹேய் ஏன் இவ்வளவு கோபம் வானதி. கொண் டாட்டத்துக்காக மட்டும் சொல்லவில்லை. நிறைய வீஐபீ-க்களின் அறிமுகம் கிடைக்கும்...''

''இல்லை சாரி...'' என்று சொல்லிவிட்டு போனை வைத்து விட விவேக்கின் முகம் வாடியது. மீண்டும் அழைக்க இம்முறை எடுத்தது கஸ்தூரி.

''ஏன் அத்தை வானதி டல்லா இருக்கா? புத்தாண்டு விழா கொண்டாட்டத்திற்கு...''

''என்ன விவேக். இன்று விஜய் மறைந்த தினம் இல்லையா? இன்னிக்கு எப்படி அவள் வருவாள்'' என்று அவர் கேட்க அவன் குழம்பினான்.

''அது ஜனவரி 4 இல்லையா?''

''இது திதி படி வந்த நாள். தேதி மாறி மாறி வரும்....''

''மறுபடியும் விஜயா?'' என்ற எண்ணம் தாக்க லேசாக வாடிய முகத்தையும், மனதையும் அவசரமாக சீர் செய்தான் விவேக்.

* * *

ஜனவரி 13

மாலை ஆறு மணி!

''ஹாய் வானதி..!'' என்று உற்சாக அழைப்புடன் உள்ளே வந்த விவேக்கை புன்னகையுடன் வரவேற்றாள்.

''என்ன இவ்வளவு சந்தோஷம்?''

''பின்னே, நாளைக்கு தமிழர் திருநாள் இல்லையா? ஆங்கில புத்தாண்டை நாம் ஏன் கொண்டாடணும் என்று லாஜிக்கலா விவாதம் பண்ணினாய். அப்ப என்னிடம் மறுத்து பேச வழி இல்லை. ஆனால் இன்னிக்கு நீ என்னை ஏமாற்ற முடியாது. இன்னிக்கு நைட் டின்னர் நாம போகிறோம். பொங்கலை கொண்டாட போகி றோம். எட்டு மணிக்கு ரெடியா இரு...''

''விவேக்... ஒரு நிமிஷம் நில்லுங்க... நான் சொல் றதை... கொஞ்சம் கேளுங்க...''

''சாரி, டாபிக் க்ளோஸ்ட். பை. எட்டு மணி'' என்று சொல்லிவிட்டு பறந்து விட்டான்.



உயர்தர நட்சத்திர ஹோட்டலில் உணவுக்காக காத்திருக்கும் போது, ''நான் உங்களிடம் ஒரு விஷயம் கேட்கணும் என்று ரொம்ப நாளா நினைச்சு கிட்டே இருந்தேன்'' என்று சிரிப்புடன் பேச்சை ஆரம்பித்தவான் மதியை வியப்புடன் பார்த்தான்.

முதலில் வெளியே வருவதற்கே தயங்கியவள், தன்னுடன் வந்ததே சந்தோஷம்! அதிலும் நல்லதாக ஆடை அணிந்து, மெல்லிய ஒப்பனையுடன் பளிச் என்று கிளம்பியது மேலும் ஆச்சரியம்!

பைக்கில் வா என்று அழைத்த போதே, என் காரை வேண்டுமானால் எடுத்து கொள்ளலாம் என்று அவள் சொல்வதை எதிர்பார்த்து காத்திருக்க, அவள் மறு பேச்சின்றி ஏறி கொண்டதும் அதிசயம்.

இப்போது எல்லாவற்றிற்கும் மேலே சிகரம் வைத்தது போல சிரிப்புடன் சகஜமாக உரையாடலை அவளாக துவக்குவது, உலக அதிசயமே!

''கேளு...'' என்று அனுமதி கொடுத்தவன் குரலில் சந்தோஷம் பொங்கி வழிந்து கொண்டு இருந்தது.

''பொய் சொல்றவங்களுக்கு போஜனம் கிடைக்காது என்று ஒரு பழமொழி இருக்கு தெரியுமா? அதை பற்றி நீங்க என்ன நினைக்கறீங்க?''

''ஹா! ஹா! பழமொழி தானே? அது இந்த காலத் திற்கு ஒத்து வராது. அதை பற்றி எல்லாம் கவலை பட கூடாது என்று நினைக்கிறேன்...'' என்று மேலும் கண் சிமிட்டி சிரிக்க அவளும் அந்த சிரிப்பில் கலந்து கொண்டாள்.

''இப்படி ஏதாவது பதில் தான் சொல்வீங்க என்று எதிர்பார்த்தேன். இல்லை என்றால் இவ்வளவு சரளமா, கொஞ்சம் கூட தயங்காமல் அடுத்தடுத்து பொய் சொல்லி கொண்டே போக முடியுமா...?''

''அடுத்தடுத்து என்ன பொய் சொன்னேன்? நினைவில்லையே?''என்றவன் கண்களில் யோசனை வந்தது. இவள் எதை சொல்கிறாள்?

''அதானே ஒரு பொய் சொல்லி இருந்தால் நினைவில் வைத்து இருக்க முடியும்? இப்ப நான் சொன்னதைப் பற்றி...'' என்று நிறுத்தியவளின் முகத்தில் புன்னகை மேலும் விரிந்தது.

''அதுவா...? மேடம் காரில் லிப்ட் கிடைக்கணும் என்றால் என்ன வேண்டுமானால் செய்யலாம். இதெல்லாம் மேட்டரா? இதை எல்லாம் பொய் கணக்கில் சேர்ப்பாயா? சரியா போச்சு போ...'' கண்சிமிட்டி பெரிதாக சிரித்தவனின் சிரிப்பு அவளையும் தொற்றி கொண்டது.

பொய் சொல்லப் போறேன். பொய் சொல்லப் போறேன்

நீ ரொம்ப அழகியடி

பொய் சொல்லப் போறேன் பொய் சொல்லப் போறேன்

நான் கொஞ்சம் அசிங்கமடி

சின்னஞ்சிறு சிலையை சிரிக்க வைத்து

உறங்கும் நிலவை எழுப்பி வைத்து

அழகின் மின்னல் கண்ணில் அடிக்க



ஆசை வெள்ளம் நெஞ்சில் அடிக்க

என்னில் நானே மூழ்கிப் போனேன்

சின்ன கண்மணி சிரித்த சிரிப்பினிலே

* * *

பிப்ரவரி 2

இரவு பதினோரு மணி அளவில் சதீஷ் தவனின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு தாமதமாக உள்ளே வந்து தன் அறையில் விளக்கை போட்ட அடுத்த வினாடி, விவேக்கின் அலைபேசி அழைத்தது. எடுத்து பார்த்தவன் அதிர்ந்தான். வான்மதி!

அவளாக முதல் முறை அழைக்கிறாள். இந்நேரத்தில் என்ன? ஏதேனும் அவசரமா? பாய்ந்து எடுத்து, 'வானதி' என்று பதட்டத்துடன் சொன்னான்.

''வந்துட்டீங்களா? என்ன ஆச்சு? ஏன் இவ்வளவு நேரம்? வர லேட் ஆகும் என்று ஒரு வார்த்தை போன் பண்ண கூடாதா? இவ்வளவு நேரமா அறையில் லைட் எரியலையே என்று பார்த்துப் பார்த்து பயந்து போய் விட்டேன்'' என்று அவ்னின் 'வானதி' என்ற ஒற்றை வார்த்தைக்கு அடுத்தடுத்து கேள்விகளை கலக்கத்துடன் அடுக்கிய வானதியின் குரல் கேட்டு விவேக் துள்ளி குதிக்காத குறை.

எஸ்! எஸ்! தன்னை தேடி இருக்கிறாள். தான் வர தாமதம் ஆனதில் தன்ல ன காணாமல் வாடி இருக்கிறாள்! ஹுர்ரே!

''என் வானதி, என்னை தேடினாயா? ஏதாவது சொல்ல வேண்டுமா?''

''ஏதாவது சொல்ல வேண்டும் என்றால் தான் உங்களைத் தேட வேண்டுமா? தனியா இருக்கீங்க. நேரத்துக்கு வரீங்களா? சாப்பிட்டீங்களா? பத்திரமா இருக்கீங்களா என்று தெரிந்து கொள்ளக் கூடாதா? எங்கே போய் இருந்தீங்க?'' என்றவளின் குரலில் இன்னும் கோபம் இருந்தது.

''சாப்பிட்டாச்சு வானதி. க்ராண்டான கல்யாண சாப்பாடு. சதீஷ் கல்யாண ரிசப்ஷன். உனக்கும் பத்திரிகை வந்து இருக்குமே? நீ ஏன் வரலை...?''

''ஓ! ஆமா...ஆனால் அது... நாளைக்கு தானே கல்யாணம்...'' என்று இழுக்கும் போதே அவனுடைய நண்பன் என்ற முறையில் முன்தினம் போனது பெரிய தவறா என்ற கேள்வியும் எழுந்தது.

''கல்யாணம் நாளைக்கு தான். ஆனால் இன்று மாப்பிள்ளை அழைப்பு இருந்தது. பிரெண்ட்ஸ் பேச்சிலர் பார்ட்டி இன்று உண்டே? அதான் கொஞ்சம் லேட் ஆகிடுச்சு.''

''மை காட்! குடிச்சுட்டு வண்டி ஓட்டிட்டு வந்தீங்களா?'' என்றவளின் குரலில் உச்ச பட்ச அதிர்ச்சியும் அதட்டலும் இருக்க அவன் மேலும் திகைத்தான்.

ஆஹா! மேடம் இப்படி போட்டு தாக்குறாங்க...?

''வானதி என்ன ஆச்சு? ஏன் இவ்வளவு டென்ஷன்?''

''கேள்வி கேட்டால் பதில் சொல்லாமல் எதிர் கேள்வி கேட்டால் என்ன அர்த்தம்? ஏற்கனவே நான் இழந்ததெல்லாம் போதாதா? இனிமேல் யாரையும் இழக்க நான் விரும்பவில்லை. முதலில் பதில் சொல்லுங்க. குடிச்சுட்டு வண்டி ஓட்டிட்டு வந்தீங்களா?'' என்று ஆங்காரமாக கேட்டவளின் கோபத்தில் தன்னை இழந்தான். அவளின் அக்கறையில் கரைந்தான்.



''வானதி! ரிலாக்ஸ். உனக்கு ஒரு விஷயம் சொல்லட்டுமா? நான் இன்று பார்ட்டியில் மட்டுமில்லை. எப்போதுமே எதுவுமே பீர் கூட குடிக்க மாட்டேன்...''

''என் திருப்திக்காக பொய் சொல்றீங்களா?'' என்றவளின் குரலில் இன்னும் நடுக்கம் மிச்சம் இருந்தது.

''இல்லை வானதி. என்னை நம்பு. அதற்கு என் உடல்நிலை இடம் கொடுக்காது. எங்க அம்மாவுக்கு நான் ப்ராமிஸ் பண்ணி கொடுத்து இருக்கிறேன். போதுமா? எனக்கு ஒன்றும் ஆகாது. என்னை நம்பு வானதி. என்னையும் உன்னையும் பிரிக்க அந்த ஆண்டவனுக்கே மனசு வராது. டோன்ட் வொரி...'' என்று ஆறுதல் சொல்ல அவள் மனம் கொஞ்சம் கொஞ்சமாக இயல்புக்கு மீண்டது.



## 28

பிப்ரவரி 14

மாலை நான்கு மணி.

தோட்டத்தில் செடிகளுக்கு தண்ணீர் ஊற்றி கொண்டு இருக்கையில் பெரிய இரும்பு கதவு திறக்கும்

ஓசை கேட்டு திரும்பி பார்த்த வானதி, அங்கே நின்ற வெளியே செல்ல தயாராக வந்து நின்ற விவேக்கை கண்டு புன்னகை செய்தாள்.

''வாங்க வாங்க... என்ன இந்த நேரத்தில்...?''

''இங்கே வருவதற்கு நேரம் என்ன? காலம் என்ன? ஆமா இப்ப நீ ப்ரீயா?''

''எங்கே போகிறோம்? என்ன விஷயம் சொல்லுங்க.''

''எங்கே போகிறோம் என்று சொன்னால் தான்வரு வியா? பதிலுக்கு பதில் கேள்வி கேட்டுக் கொண்டே இருக்காமல் கிளம்பும் வேலையை பாரு...'' என்று கையில் இருந்த ஹோஸ் பைப்பை பிடுங்கி, குழாயை மூடினான்.

''எங்கே போகிறோம் என்று கேட்டால் பதில் சொல்ல மாட்டீங்களா?''

''எங்கே போகிறோம் என்று சொல்லா விட்டால் என்னுடன் ஒரு இடத்துக்கு நீ வரமாட்டியா?'' என்ற அவ னின் கேள்வி முடிவதற்குள் அவள் பதிலே சொல்லாமல் மேலே தன் அறைக்கு செல்ல ஆரம்பிக்க, விவேக்கின் முகத்தில் புன்னகை மலர்ந்தது.

அடுத்த பதினைந்து நிமிடங்களில் அவள் கிளம்பி தயாராக வர, கஸ்தூரி இடையே கொடுத்த சிற்றுண் டியையும் காபியையும் ருசித்தபடி, புன்னகையுடன் காத்திருந்தான்.

''அத்தை, நாங்க ரெண்டு பேரும் கிளம்புகிறோம். இரவு உணவுக்கு வருவது சிரமம் என்று நினைக்கிறேன். வெளியே பார்த்து கொள்கிறோம்...'' என்று விடை



பெற்று வந்தவன் கையில் அவர்களின் கார் சாவி இருந்தது.

''ஏன் உங்க பைக் என்ன ஆச்சு?''

''நாலு பேர் ஒரு இடத்துக்கு போகிறோம். அதற்கு பைக் சரிப்படாது'' என்று சொல்லியபடி காரை கிளப்ப அவள் முகத்தில் வியப்பும் கேள்வியும் இருந்தது.

''எல்லாம் விபரமா சொல்லிடணுமா? சஸ்பென்ஸ் தாங்க மாட்டாயா? உன்னை பார்த்தால் கையில் இருந்த பிஸ்கட்டை பறி கொடுத்த நிலையில் அழ தயாரா இருக்கிற குழந்தை மாதிரி இருக்கு. நானே சொல்லி விடுகிறேன்...'' என்று கேலி செய்ய அவள் முகத்தில் யோசனை மாறி சிரிப்பு வந்தது.

''கல்யாணம் ஆன பிறகு வரும் முதல் வேலண் டைன்ஸ் டே என்பதால் சதீஷ் ஆபீசுக்கு லீவு போட்டு விட்டு, சினிமா டின்னர் என்று பெரிசா ப்ளான் போட்டு இருந்தான். அவர்களுக்கு இடையே ஒரு சின்ன ஊடல். இப்ப வெளியே கிளம்ப மறுக்கிறாள். அதனால், நம்ம நாலு பேரும் சேர்ந்து ஏற்கன்வே திட்ட மிட்ட மாதிரி, நாம் அவங்க வீட்டுக்கு இப்ப போனால் அதிகம் விவாதம் இல்லாமல் கிளம்பி விடுவாள். சதீஷுக்கு நம் மால் முடிந்த சின்ன உதவி...'' என்று அவள் முகத் தையே பார்க்காமல் சாலையை பார்த்தபடி சாதாரணமாக சொல்லி முடிக்க அவள் அவனையே பார்த்துக் கொண்டு இருந்தாள்.

அவன் விலாவாரியாக சதீஷ் - ஸ்ரேயா, ஊடல் பற்றி சொல்லி இருந்ததற்கு நேர் மாறாக அவர்கள் வீட்டுக்கு

போன போது வெளியே கிளம்ப தயாராகவே இருந்தார்கள்.

எக்ஸ்பிரஸ் அவென்யூவில் ஆங்கில படம் பார்த்து விட்டு ஏழரை மணிக்கு வெளியே வந்தார்கள். அங்கே இருந்த கடைகளில் ஐஸ்க்ரீம் வாங்கி சுவைத்தபடி கடைகளை பார்வையிட்டார்கள்.

'உனக்கு என் பரிசு' என்று தனி தனியாக சதீஷ் விவேக்கிடமும், ஸ்ரேயா வானதியிடமும் ஒரே மாதிரியான இரண்டு சின்ன ஆட்டின் வடிவங்கள் பின்பிணைந்து இருந்த இடத்தில் ஒற்றை வெள்ளை கல் பதிக்கப்பட்டு இருந்த மோதிரங்களை பரிசளித்தார்கள்.

''ஹையோ இவ்வளவு காஸ்ட்லியான பரிசு எதற்கு?'' என்று வானதி தயங்கிய போது, 'இது பிளாட்டினம் இல்லை. ஒயிட் மெட்டல், முன்னூறு ரூபாய் தான். பயப்படாமல் வாங்கிக்கோ...'' என்று வற்புறுத்த தயக்கத்துடன் வாங்கி கொண்டாள் வானதி.

விவேக்கை வானதியின் கண்களும் வானதியை விவேக்கின் கண்களும் அன்றைய மாலை பொழுது முழுவதும், க்ண்டு ரசிக்க தடையில்லை.

**கண்கள் இரண்டால், உன் கண்கள் இரண்டால்...**

**என்னை கட்டி இழுத்தாய்... இழுத்தாய்...**

**போதாதென சின்ன சிரிப்பில் உன் கள்ள சிரிப்பில்**

**தள்ளி விட்டு தள்ளி விட்டு மூடி மறைத்தாய்**

**பேச எண்ணி சில நாள் அருகில் வருவேன்**

**பின்பு பார்வை போதும் என நான்**



**நினைத்தேன் நகர்வேன்**

**கண்கள் எழுதும் இரு கண்கள் எழுதும்**

**ஒரு வண்ண கவிதை காதல் தானா?**

**ஒரு வார்த்தை இல்லையே? இதில் ஓசை இல்லையே?**

**இருளிலும் படித்திட முடிகிறதே**

* * *

பிப்ரவரி 28

''நாளை எனக்கு அரை நாள் தான் அலுவலகம். பிற்பகல் இரண்டு மணிக்கு வந்து விடுவேன். எனக்காக நீ ஒரு உதவி செய்யணும் வானதி. நாளைக்கு நீ ப்ரீயா? நாம் ஷாப்பிங் பண்ண போகிறோம்...'' என்ற கேள்வியுடன் உள்ளே வந்த விவேக்கை புன்னகையுடன் வரவேற்றாள் வானதி.

''ஷாப்பிங்கா? என்ன வாங்க போகிறோம்? யாருக்கு...? என்ன விசேஷம்...?''

''ஆஹா! ஒரு வாக்கியம் சொன்னால் அதுக்கு ஒன்பது கேள்வி கேட்பாயா?''

''ஒன்று இரண்டு கூட தெரியாத உங்களுக்கு எல்லாம் டிவி ஸ்டேஷனில் யார் வேலை கொடுத்தது. நான் நாலு கேள்வி தான் கேட்டேன்...'' என்று இயல்பாக பதிலுக்கு பதில் வாயடித்தவளை செல்லமாக முறைத்தான்.

''நீ என்ன கணித மேதை ராமானுஜத்தின் நேரடி வாரிசா? இப்படி கணக்கு போடுகிறாய்?''

''ஒழுங்கா பதில் சொல்லுங்க. என்ன விசேஷம்? எதுக்கு ஷாப்பிங்?''

''அடுத்த மாசம் நாலாம் தேதி அம்மாவுக்கு முப்பதாவது கல்யாண நாள் வருது. அதை செலிபரேட் பண்ணலாம் என்று பார்க்கிறேன். அதுக்கு மண்டபம் புக் பண்ணவது, உடைகள் வாங்க, பரிசு பொருட்கள் வாங்க, இதுக்கு எல் லாம் துணைக்கு ஒரு ஆள் வேண்டும்...'' என்று கேட்ட வனை பார்த்து புன்னகையுடன் தலை அசைத்தாள்.

''அதில் எனக்கும் உடை பரிசு வாங்க வேண்டி இருக்குமே?'' என்றவளின் கண்களில் கேலி இருந்தது.

''உனக்கு இல்லாமலா? நல்லா கிரண்டா. அம்மாக்கு வாங்குவதை விட கிராண்டா கூட பட்டுப் புடவை எடுத்துக்கோ. எனக்கு ஆட்சேபணையே இல்லை...'' என்று நிதானமாக சொல்லி, சிறிது இடைவெளி விட்ட பின், ''பில் உங்க அம்மாவிடம் கொடுத்து விடுகிறேன். ஓகே?''என்று கேலியாக மாற்றி கண் சிமிட்ட அளவின் புன்னகையும் விரிந்தது.

* * *

மார்ச் 14

பிற்பகல் உணவு இடைவெளியை நெருங்கும் நேரம் விவேக்கின் அலைபேசி அழைக்க புன்னகையோடு எடுத்தான்.

''எஸ் மதி... சொல்லு...''

''சாப்பிட்டாச்சா?''

''இன்னும் இல்லையே... என்ன விஷயம்? எனக்காக ஸ்பெஷல் டிஷ் எதுவும் வீட்டில் வெயிட்டிங் என்றால் உடனே கிளம்பி ஓடோடி வந்து விடுகிறேன்...''



''ம்ம்ம். மஷ்ரூம் ப்ரைட் ரைஸ் பண்ணினேன். உங்களுக்கு பிடிக்குமா?''

''பிடிக்குமாவா...? ஒரு வெட்டு வெட்டுவேன். இன்னும் இருபது நிமிஷத்தில் அங்கே இருப்பேன்...''

''ஹையோ... உங்க வேலை முடிந்து விட்டதா..? நான் அதை கெடுத்து விட்டேன் என்று இருக்க வேண்டாம்.''

''வேலை முடிந்தாச்சு. நானே கிளம்பி கொண்டு தான் இருந்தேன். ஹோட்டலில் சாப்பிட்டு விட்டு வந்து இருப் பேன். நீ போன் பண்ணியதால் நேரே வருகிறேன். இன் னிக்கு சாயங்காலம் நாரத கான சபா மேனேஜர் பார்க்க வரு கிறேன் என்று சொல்லி இருந்தோமே? மறந்து விட்டதா?''

ஆஹா! ஏப்ரல் 14 தமிழ் புத்தாண்டு தினத்திற்கான மங்கள இசை நிகழ்ச்சிக்காக அவள் பாடுவதற்கான ஒளிப் பதிவு அங்கே இன்னும் மூன்று தினங்களில் நடைபெற உள்ளது. அது சம்பந்தமாக தனக்கு தேவையானவற்றை சரி பார்க்க அழைத்து செல்வதாக சொல்லி இருந்தான். தன்னுடைய நிகழ்ச்சியை அவன் நினைவு வைத்திருக்க தான் மறந்து விட்டோமே? சின்னதாக கூச்சம் வந்தது.

* * *

மார்ச் 28

அன்று காலை பொழுது விடியும் போதே வானதிக்கு பரபரப்பாக இருந்தது. இன்றோடு அவனிடம் கேட்ட கால அவகாசம் முடிகிறது. இன்று அவனுக்கு பதில் சொல்ல வேண்டும். அவனாக கேட்க மாட்டான்.

இந்த மூன்று மாதமாக ஜாடை மாடையாக திருமணம் பற்றி பேசி இருந்தாலும் நேரடியாகவோ வற்புறுத்தும்

வகையிலோ எதுவும் பேசியதில்லை. இனியும் பேச மாட்டான்.

ஆனால் தான் என்ன முடிவு சொல்வது? கல்யாணம் பண்ணி கொள்ளாமலேயே இருக்க முடியுமா? அம்மா கவலை படுவார்கள்...!

அம்மாவுக்காக அத்தைக்காக என்று கல்யாணம் பண்ணி கொள்வது என்று முடிவெடுத்தாலும் இவனைத் தவிர வேறு யாரையும் திருமணம் செய்து கொள்வது தற்கொலைக்கு சமம்.

இவனாவது விஜயை அறிந்தவன். அவனுடைய நண்பன். அவனுடைய இதயத்தை சுமப்பவன்.

கடந்த நான்கு மாதங்களில், தன்னை பல முறை தனிமையில் சந்தித்து இருந்தாலும், தான் மன வருத்தத்தில் உடைந்து அழத போது அணைத்து முத்தமிட்டு இருந்தாலும் கூட, தன்னிடம் இன்று வரை கண்ணியம் காப்பவன்!

வார்த்தைகளில் மட்டுமல்ல செயலிலும், இவனை மறுக்க காரணம் என்ன? இவன் விஜய் இல்லை என்பதை தவிர வேறு ஒன்றுமே இல்லை...

பெயர் கூட அவனுடையது போலவே வீயில் ஆரம்பித்து, ஆனந்த் என்று முடிகிறது. இவனும் தன் நலம் நாடுகிறான். தன்னை விரும்புகிறான். தன் தாயை மதிக்கிறான். தன் வேலையை இங்கே மாற்றி கொண்டான்.

திருமணம் செய்து கொண்டாலும் தனக்கு அவகாசம் கேட்டால் நிச்சயம் தருவான். இன்னும் மறுக்க



வேண்டுமா..? சம்மதம் சொல்லிவிட்டால் என்ன? என்ற எண்ணம் வருகையில் அறை கதவு தட்டப்படும் ஓசை கேட்டது.

கதவை திறந்தவள் அங்கே நின்ற விவேக்கை பார்த்து திகைத்தாள். விவேக்கின் கையில் இருந்த பெரிய சிவப்பு ரோஜா பூங்கொத்தும் அவள் கண்களையும் கருத்தையும் கவர்ந்தது.

''உள்ளே வரலாமா?'' என்று கேட்க அவள் தயக்கத்துடன் விலகி வழி விட்டாள்.

''இவ்வளவு பெரிய பூங்கொத்து எதுக்கு? இன்று என்ன விசேஷம்?''

''விசேஷம் இருந்தால் மட்டும் பூங்கொத்து கொடுக்கணும் என்று யார் சொன்னது? நான் சந்தோஷமா இருக்கும்போது, எனக்கு பிடித்தவர்களுக்கு பூ கொடுப்பேன். அது என் இஷ்டம். என்னை யார் கேட்பது?''

''ஓகே, இப்ப நீங்க சந்தோஷமா இருப்பதற்கு என்ன காரணம் என்று நான் கேட்கலாமா?''

''தாராளமாக கேட்கலாம். ஆனால் பதில் சொல்வதும் சொல்லாமல் இருப்பதும் என் இஷ்டம்...'' என்று சொல்ல அவளையும் மீறி புன்னகை வந்தது. அவனின் கலகலப்பான பேச்சு ஈர்த்தது. புன்னகை மலர்ந்தது. சொல்ல போகும் நல்ல செய்தியை பூங்கொத்தோடு சொல்ல பொழுது புலரும் முன்பே வந்துவிட்டான்.

''இப்ப என்ன விஷயமா வந்து இருக்கீங்க?''

அவளின் படுக்கையில் இயல்பாக அமர்ந்தவன், ''உன்னிடம் ஒரு விஷயம் காட்டி ஒப்புதல் வாங்க

வந்தேன்...'' என்று சொல்ல அவள் இதய துடிப்பு கூடியது.

''என்ன உங்க கல்யாண பத்திரிகை மாடலா?'' என்று இயல்பாக இருப்பதை போல காட்டி கொண்டு விசாரிக்க அவன் பதட்டமே இல்லாமல், ''நைஸ் கெஸ்'' என்று சிலாகித்தான்.

அவன் குரலில் இருந்த கேலியும், அசால்ட்டான தோள் குலுக்கலும், 'தான் சொன்னது சரி இல்லையோ? தான் அதிகம் எதிர்பார்த்து விட்டோமா?' என்று ஒரு வினாடி அவளை திகைக்க வைத்தது. கடந்த மூன்று மாதங்களில் நடந்த பல நிகழ்வுகள் வினாடிக்குள் கண் முன்பு தோன்றி அவளை அடுத்த வினாடியே சிலிர்க்க வைத்தது.

''உங்க பாராட்டுக்கு நன்றி'' என்று புன்னகையுடன் தீர்மானமாக சொன்ன அவளின் வாக்கியத்தை கேட் டதும் அவன் பார்வையில் மெச்சுதல் வந்தது.

''அப்ப ஒப்புதல் கொடுக்க தயாரா...?'' என்று கேட்டபடி நாலைந்து மாடல் பத்திரிகைகளை எடுத்து நீட்ட அவளின் முகம் வியப்பை காட்டியது.

''கல்யாணம் ஏப்ரல் நான்காம் தேதியா? பெண் ணிடம் திருமணத்திற்கு சம்மதம் வாங்கியாச்சா?'' என்று கேட்க அவன் சிரித்தான்.

''அதை தானே கேட்டு கொண்டு இருக்கிறேன்...''

''ஓவர் கான்பிடன்ஸ் உடம்புக்கு ஆகாது மிஸ்டர்.''

''கான்பிடன்ஸ் மனசுக்கு அவசிய தேவை. அது மட்டும் இல்லை என்றால் நீயும் நானும் எத்தனையோ



கண்டங்களை தாண்டி இந்த அறையில் இப்படி அமர்ந்து பேசி கொண்டு இருக்க முடியாது...'' என்றவனின் குரலில் கவலை இருக்க அவள் புன்னகை செய்தாள்.

''அதெல்லாம் தாண்டி வந்தாச்சு ஆனந்த். இனிமேல் எந்த கண்டமும் நம்மை நெருங்க யோசிக்கும்...'' என்றவளின் 'ஆனந்த்' என்ற அழைப்பும், குரலில் இருந்த கனிவும் அவனை உருக்கியது.

''அந்த நம்பிக்கை உனக்கு இருந்தால் போதும். அப்ப கல்யாணத்திற்கு ஓகே தானே?'' என்று கேட்டவனை பார்த்து பதில் சொல்லாமல் புன்னகைத்தாள்.

''எந்த தைரியத்தில் இவ்வளவு வேலைகளை செய்தீங்க. உங்களுக்கு ரொம்ப தைரியம். ஒருவேளை நான் கடைசி வரை ஒத்து கொள்ளவில்லை என்றால் என்ன செய்து இருப்பீங்க?'' என்றவளிடம் இடது கையை நீட்டினான்.

கேட்ட கேள்விக்கு பதில் சொல்லாமல் கையை நீட்டியவனை பார்த்தாள், சின்ன தயக்கத்திற்கு பிறகு அவன் கையில் தன் வலது கையை வைத்து வானதி அழுத்த அதை பற்றி தன் கன்னத்தில் வைத்து கொண்டான்.

''கடவுள் மேலே வைத்த நம்பிக்கையை தவிர வேறு எந்த தைரியமும் இல்லை மதி. உனக்கு எப்போது நம் கல்யாணம் பிக்ஸ் பண்ணிட்டாங்க என்ற சந்தேகம் வந்தது?'' என்று புன்னகையுடன் கேட்க அவள் இதழ் களும் புன்னகையை பிரதிபலித்தது.

''பிப்ரவரி இரண்டாம் தேதி நள்ளிரவில் உங்களிடம் பேசிய பிறகு சந்தேகம் வந்தது. கன்பர்ம் ஆனது பிப்ரவரி

14'' என்று அவள் சொன்ன விதத்தில் அவன் முகம் விகசித்தது.

''என்னுடைய கணக்கு தப்பவில்லை...''

''நான் கல்யாணம் பற்றி கண்டு பிடித்து விட்டேன் என்பதை நீங்க ஊகித்தீங்களாக்கும்.''

''பொதுவாக ஊகித்ததை சொல்லவில்லை மதி. எந்த தருணத்தில் நீ கண்டு பிடித்து இருக்க கூடும் என்பதை நேரத்துடன் கணிப்பது ஸ்பெஷல் இல்லையா?''

''ஆமா! கல்யாணம் ஆகி பத்து நாள் ஆகும் கணவன் மனைவியிடையே ஊடல் என்று நீங்க சொல்வதே அதிசயம். இதில் பிளாட்டினம் மோதிரத்தை ஒயிட் மெட்டல் என்று சொல்லி பரிசு வேறு. அடுத்த பத்து தினங்களில் என்னையே கடைக்கு அழைத்து சென்று புடவை பர்சேஸ். இதை கூட ஊகிக்க முடியாது என்றா நினைத்தீர்கள்?''

''இல்லை மதி நான் அப்படி நினைக்கவில்லை. நீதான் என்னை அப்படி நினைத்து விட்டாய். ஒரு முறை விஜய் பேசிய கேசட் விஷயத்தில் நீ கண்டு பிடித்ததை உணராமல் ஏமாந்தேன் என்பதை வைத்து இம்முறையும் நான் கண்டு பிடிக்கவில்லை என்று எண்ணி விட்டாய். இந்த முறை என்னால் ஊகிக்க முடிந்தது. அந்த தைரியத்தில் தான், நீ திருமணத்திற்கு சம்மதம் என்று சொல்லாமலேயே கல்யாண மண்டபம் வரை பிக்ஸ் பண்ணி இருக்கேன். உனக்கு ஓகே தானே?''

''இதை இப்ப கேட்க கூடாது. ஏப்ரல் மூன்றாம் தேதி மண்டபத்திற்கு கிளம்பும் போது கேட்க வேண்டும்...''



''அதுக்கு இன்னும் அஞ்சு நாட்கள் இருக்கே? அவ்வளவு நாள் ஏன் தள்ளி போட வேண்டும்? இன்னும் என்ன கேள்வி? முடிவை இப்போதே சொல்லி விடுகிறேன். ஐ லவ் யூ மதி. என்னை திருமணம் செய்து கொள்கிறாயா? நான் என் பரிசை கொண்டு வந்து இருக்கிறேன். நான் போட வேண்டிய மோதிரத்தை தருகிறாயா?'' என்று கேட்டபடி பாண்ட் பாக்கெட்டில் இருந்த மோதிரத்தை எடுத்தான்.

சின்ன தயக்கத்துடன் அலமாரியின் மேல் தட்டில் வைத்து இருந்த அந்த மோதிரத்தை எடுத்து அவனிடம் நீட்டியவளின் கைகள் லேசாக நடுங்கவே செய்தது.

''ரிலாக்ஸ் மதி, எதுவா இருந்தாலும் பார்த்து கொள்ளலாம். நமக்காக மட்டும் இல்லாமல், நம்மை சார்ந்தவர்களின் சந்தோஷத்திற்காக இந்த கல்யாண பந்தத்தில் அடி எடுத்து வைக்கலாம் மதி. இந்த முடிவிற்காக நீ வருத்தப்படும் படி நேராது. ஐ ப்ராமிஸ்.''

''அந்த நம்பிக்கை எனக்கும் இருக்கு ஆனந்த்...''

''அது போதும் மதி!'' என்றவன் அவள் கையைப் பற்றி அந்த மோதிரத்தை அணிவிக்க, அவன் விரல்களில் அவளும் மோதிரம் அணிவித்த நொடியில் அவளையும் மீறி ஒரு துளி கண்ணீர் பட்டு தெரித்தது.

''ஷ் மதி!'' என்ற செல்ல கண்டிப்புடன் அவளை இழுத்து விவேக் மென்மையாக மார்பில் சாய்த்து கொள்ள, அவன் இதயம் துடிக்கும் ஓசையில் அவள் மனம் அமைதி அடைய ஆரம்பித்தது.

நீ என்பதே நான் தானடி

நான் என்பதே நாம் தானடி.

ஒரு பாதி கதவு நீயடி

மறு பாதி கதவு நானடி

பார்த்துக் கொண்டே பிரிந்திருந்தோம்

சேர்த்து வைக்க காத்திருந்தோம்

இதயம் ஒன்றாகிப் போனதே

கதவு இல்லாமல் ஆனதே

இனிமேல் நம் வீட்டிலே

பூங்காற்று தான் தினம் வீசுமே...

சம்சார சாகரத்தில், அலைகள் போல மனதில் சின்னச் சின்ன சலனங்கள் அவ்வப்போது வந்து சென்றாலும், அன்பெனும் தோணியில் ஏறியதால், அவர்களின் வாழ்க்கை பயணம் இனிதே தொடரும்.

இனி எல்லாம் சுகமே!